

# பூந்துணர்

## நறவம் - 10

வெளியீடு
பூநகரி பிரதேச கலாசார பேரவை
பிரதேச செயலகம், பூநகரி

# பூந்துணர்

## நறவம் - 10

வெளியீடு:
பூநகரி பிரதேச கலாசார பேரவை
பிரதேச செயலகம், பூநகரி.
2020

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| சஞ்சிகையின் பெயர் | : | பூந்துணர், நறவம் – 10 |
| நூல் வகை | : | ஆண்டிதழ் |
| பதிப்புரிமை | : | பூநகரி பிரதேச கலாசார பேரவை,<br>பிரதேச செயலகம்,<br>பூநகரி. |
| முதலாவது பதிப்பு | : | மார்கழி 2020 |
| தாள் வகை | : | Art Paper |
| பிரதிகள் | : | 150 |
| அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | -XXX- 150 |
| வெளியீடு | : | பூநகரி பிரதேச கலாசார பேரவை,<br>பிரதேச செயலகம்,<br>பூநகரி. |
| அச்சுப்பதிப்பு | : | ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ்,<br>555, நாவலர் வீதி,<br>யாழ்ப்பாணம். |





Rise to Serve
நிறைதரு பணிபுரி
Divisional Secretariat
பிரதேச செயலகம் பூநகரி

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராடும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ழமும்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம் போல் உலக வழக்கழிந்து ஒழிந்து சிதையாமல்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

– பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை



# பிரதேச கீதம் - பூநகரி

சந்தம்: தனனதன தனனதன தனன தான
தானதன தானதன தானா!

## பல்லவி

பசுமை பொங்கி பசிதுரத்தும் வயலும் – தெங்கு
பனைகள் அரண் அமைக்க நீளும் கடலும்
சிந்துநடை கலை மலியும் தலமும் – கொண்ட
சந்ததமும் பூநகரியில் புகழ் ஒளிதரும்

## அனுபல்லவி

வாழிய பூநகரி வளமுடன் வாழிய
வையகம் போற்ற வளர்ந்தெம்மை ஆளுக!

## சரணங்கள்

சோழர்குலக் குறநிலமாம் அன்று எங்கள்
தொல்பெருமை சொல்லும் கோட்டை இன்று
வாழும் கல்வி... கேள்வி ஞானம் வென்று தமிழ்
வாசல் வயல் கடலெழில் இன்றும் உண்டு

(வாழிய)

பரம்பரை மரபும் வழிபாடும் – பார்வை
பார்த்தல், கைமருந்து, கிராம வாழ்வும்
இறங்குதுறை கேந்திர முக்கியம் – கொண்ட
இயற்கையோடு இணைந்தெம் வாழ்வும் நிமிரும்

(வாழிய)

பூநகரி மொட்டைக் கறுப்பன் என்றால் – இன்று
பொன்மலையாய் குவியும் மணல் கண்டால்
ஊரின் புகழ்... உலகறியும் தன்னால் – நாங்கள்
உயர முயன்றுழைத்திடுவோம் இந்நாள்.

(வாழிய)

– கவிஞர் இ.த.ஜெயசீலன்

# மலர்க்குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும் :**

- திரு.சி.ச.கிருஷ்ணேந்திரன்
  கலாசார பேரவை தலைவர்
  பிரதேச செயலகம், பூநகரி.

- திருமதி.சர்மிளா சுசிகுமார்
  கலாசார உத்தியோகத்தர்
  பிரதேச செயலம், பூநகரி.

**பிரதம ஆசிரியர் :**

- திருமதி.பா.கிரிஜா
  உதவி பிரதேச செயலாளர்
  பிரதேச செயலகம், பூநகரி.

**இணையாசிரியர்கள் :**

- திரு.கோ.கோகிலரதன்
  (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

- திரு.கா.குலசேகரம்
  (ஓய்வுநிலை அதிபர்)



# இம்மலரின் இதழ்களாக...

பக்கம்

## வாழ்த்தியல்

01. கிளிநொச்சி மாவட்ட செயலாளரின் வாழ்த்துச் செய்தி I

02. வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சு செயலரின் வாழ்த்துச் செய்தி II

03. பூநகரி பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி III

04. பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி IV

05. பூநகரி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரின் வாழ்த்துச்செய்தி V

## வாழ்வியல்

06. தாய்சேய் நல அடிப்படை விடயங்களை விளங்கிக் கொள்வதன் மூலம் ஆரோக்கியமான எதிர் கால சந்ததியை உருவாக்கலாம். 1

07. சவால்களைச் சாதனைகளாக்க இளையோரை வலுப்படுத்துவோம். 5

08. சிறுவர் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான ஆசிரியர்களின் வகிபாகம். 11

09. தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும். 20

10. இலக்கியங்கள் காட்டும் மனித வாழ்வு. 26

11. எல்லோரிடமும் குறை உண்டு. 30

12. தொழில் சார் மன அழுத்தம். 33

13. பால் உற்பத்திக்கான பாசுந்தீவனங்கள். 39

14. பரத நாட்டியத்தில் மன்மதனின் பஞ்ச பாணங்கள். 43

15. வாழ்வே நாட்டியம். 45

16. கத்தோலிக்க சமய இசைக்கலை. 47

## வரலாற்றியல்

17. சுற்றுலாத்தலமாக மாறிவரும் சங்குப்பிட்டி - கௌதாரிமுனை கடற்கரையும் வன்னேரிக்குளமும். 50

18. பூநகரியில் அழிந்து செல்லும் வரலாற்றுப் பொக்கிஷம் அரசபுர கட்டட அழிபாடு ஓர் வரலாற்றுப் பார்வை. 52

## ஆய்வியல்


19. ஒரு முத்து. 55

20. பூநகரியில் சிறிய / நடுத்தர பாற்பண்ணையாளர் எதிர் கொள்ளும் பிரச்சனையும் அதற்கான தீர்வுகளும். 61

21. இலங்கையின் அரச பல்கலைக் கழகங்களில் பகிடி வதையும் அதன் கொடிய எதிர் விளைவுகளும் (சட்டரீதியான அனுகுமுறை). 65

22. மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலுக்கு..... 73

23. கிராமமட்ட சிறுவர் அபிவிருத்திக் குழவின் முக்கியத்துவமும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் தேவைப்பாடும். 80

24. திராவிட மொழிக்குடும்பத்தில் தமிழ்..... 85

25. மூன்றம் நிலைக் கல்வியும் பூநகரிப் பிரதேசமும். 88

26. பல்லவர்காலப் பக்திப் பாடல்களில் ஆழ்வார்களின் பக்தியனுபவம். 93

27. பூநகரி பிரதேச கரையோர மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளும் அவற்றை தீர்ப்பதற்கான பரிந்துரைகளும். 98

28. பொருளாதாரத்தில் நிதியியல் இடையீடுகளின் பங்களிப்பு. 106


## ஆக்கவியல்


29. யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி நோக்கி (நகைச்சுவைக்காக). 117

30. காரைக்கால் அம்மையார் சரிதம் (வில்லிசை). 121

31. உடைந்து போன கண்ணாடி. 128

32. அவள் என் தோழி. 132

33. மதுவாகிப் போன மானமிது. 136

34. அன்பின் ஆழமறியா அன்னைக்காக. 137

35. கிறிஸ்தவர்களின் மாணிக்கம். 138

36. ஆலமரம். 139

37. அன்றும் இன்றும். 146

38. தோற்றத்தில் உண்மையில்லை 147

# பூந்துணர் வாசகர்களுடன்....

அன்பான பூந்துணர் வாசகர்களே உங்கள் அனைவரையும் இவ் வருடமும் பூந்துணர் வாயிலாக சந்திப்பதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றோம். கொவிட் - 19 எனும் ஒரு பெரும் குழப்பத்தில் உலகமே திணறும் இத்தருணத்திலும். பூந்துணர் மலர்ந்து மணம் வீசுவது உண்மையில் மேன்மையை உண்டுபண்ணுவதாய் உள்ளது. இன்னொருபுறம். இம்மலர் இணைய வழியில் உலாவருவதும். இதன் இன்னொரு வளர்ச்சி நிலை தான்.

இச்சஞ்சிகை ஐந்து வகுதிகளாக வரண்முறை செய்யப்பட்டுள்ளது. அதாவது வாழ்த்தியல், வாழ்வியல், வரலாற்றியல், ஆய்வியல், ஆக்கவியல் ஆகியனவாக அவை அமைகின்றன. இந்நூல் வரவுபற்றி பேசும் இயலாக வாழ்த்தியல் அமைகிறது. பூநகரிப் பிரதேசத்தின் வாழ்வியல்சார் அம்சங்கள் அதன் பண்பாட்டின் பரிமளிப்பு என்பன வாழ்வியலாக வகுக்கப்பட்டுள்ளது. பூநகரிப் பிரதேசம் பாரம்பரிய செழுமைமிக்க பண்பாட்டின் கருவூலங்களைக் கொண்ட ஒரு தொன்மை மிக்க பூமி என்பதால் அதனைத் தாங்கி வரலாற்றியல் வடிவமைக்கப்பட்டுள்ளது. பூநகரியும் சரி பூநகரியைக் கடந்தும் சரி ஆய்வியல் நோக்கில் ஆய்விற்குரிய விடயப்பரப்புக்கள் அனைத்தையும் உள்வாங்கி ஆய்வியல் என்ற பகுதி உருப்பெற்றுள்ளது. நிறைவாக இந்நூலை அலங்கரிக்கும் வகுதி ஆக்கவியல். இது பூநகரிப் பிரதேசத்தின் படைப்பாளிகளின் ஆக்கங்களை கருவூலமாகக் கொண்டு பரிமளிக்கிறது. மொத்தத்தில் இம்மலர் பூநகரி பிரதேசம் சார்ந்த எழுத்தாளர்களையே அதிகம் கொண்டதாக காணப்படுகின்றது.

இம் மலரின் அட்டைப்படம் பூநகரியின் பழமையும் செழுமையும் மிக்க இடமான கௌதாரி முனையின் மணல் மேட்டினை அடையாளப்படுத்துகிறது. அம் மணல் மேட்டின் அமைவு, அதன் அழகு, அதன் இயைபு, அம்மணல் மேட்டின் மேல் கோலோச்சி நிற்கும் பனைமரங்கள் உண்மையில் அழகோவியமாக அமைந்த தன்மைதான் கௌதாரி முனையில் காட்சி தருகிறது. இலங்கை வளங்களைப் பொறுத்தவரை மணல் பெருக்கெடுக்கும் பகுதியாக வடமராட்சியில் மணற்காடும், கிளிநொச்சியில் பூநகரியின் மணித்தலையும், இலங்கையில் இயற்கை அழகின் மணல் கொழிக்கும் வாழிடங்களாக வடக்கில் காட்சி தருகின்றது. இதனை தெற்கிலும் இரண்டு பிரதேசங்களில் காண முடிகின்றது. எனவே பழமை எழில் கொஞ்சும் பிரதேசமான கௌதாரி முனையை வரலாற்று ரீதியாகவும், பண்பாட்டியல் ரீதியாகவும், அழகியல் ரீதியாகவும், வளநிலை ரீதியாகவும் பார்க்க முடிகின்றது. இதுவே இம்மலரின் அட்டைப் படமாக இம்மலரை அலங்கரிக்கிறது.

பூநகரி பிரதேசத்தின் பண்பாடு, சிறப்பு இவ்விரண்டையும் பதிவு செய்து வெளிப்படுத்துகின்ற ஒரு முயற்சியின் அடையாளமே இப் பூந்துணர். இம்மலர் மலர்வதற்கு உரமும் உணர்வும் ஊட்டிய மதிப்பிற்குரிய பிரதேச செயலர் திரு.சி.ச.கிருஷ்ணேந்திரன் மற்றும் உதவி பிரதேச செயலர் பா.கிரிஜா, கலாசார உத்தியோகத்தர் திருமதி.சு.சர்மிளா, அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் இந்நூலிற்கு ஆக்கங்களை நல்கியோர் இந்நூலினை செவ்வை பார்த்துத்தந்த திரு.திருமதி.பரா.ரதீஸ் தம்பதியிர்கும் எல்லாவற்றிற்கும் மேலாக இந்நூலை அழகாக அச்சிட்டுத்தந்த ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ் ஆகிய அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள்.

**அன்புடன் மலர்க்குழு**



கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச்செய்தி

எமது மாவட்டத்தின் தொன்மைக் கலைகளின் ஆவணமாகவும், புதிதாக முகிழ்ந்துவரும் எழுத்தாக்கக் கலைஞர்களின் ஆக்க இலக்கியக் களமாகவும் ஒருங்கு சேரக் களம் அமைத்துவரும் பிரதேச பண்பாட்டு மலர்களை வருடாந்தம் வெளியீடு செய்யும் நடைமுறை மீள் குடியேற்றம் நடைபெற்ற காலத்திலிருந்து ஆரம்பித்து, அதன் தொடராகக் கடந்த பத்து ஆண்டுகளில் பூநகரிப் பிரதேச கலாசாரப் பேரவையினர், "பூந்துணர்" என்ற வருடாந்த சஞ்சிகையினைத் தொடர்ந்து வெளியிட்டு வந்திருப்பது கண்டு நான் மிக மிக உவகையடைகின்றேன். இலத்திரனியல் ஊடகங்களினால் நிரப்பப்பட்டுள்ள இன்றைய சூழலில் ஆவணமயமாக்கம் என்பது கடினமாகியுள்ளது. கலாசார வரன் முறைகளின் நிலைப்படுத்தலும் சிரமமாகியுள்ளது. அச்சூடகத்தின் பெறுமதியும் குறைவடைந்து வருகிறது. எனினும், இவ்வாறான பிரதேச மலர்கள் இன்னமும் நம்பிக்கையுடன் செயற்பட்டு, ஆக்கஇலக்கியங்களை வாசகருக்கு ஆவணமாகக் கொண்டு சேர்ப்பது பாராட்டுக்குரியது. பூநகரியின் தொன்மை வரலாற்றையும், கலை, பண்பாட்டு அம்சங்களையும், கலைஞர்களின் முயற்சிகளையும் படைப்பாக்கம் செய்யும் "பூந்துணர் நறவம்" இதழ் 10 இற்கு என் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நான் நிறைவடைகின்றேன். இதற்காக உழைத்த பிரதேச செயலர் மற்றும் பண்பாட்டுப் பேரவயினருக்கு எனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன்.

**திருமதி. றூபவதி கேதீஸ்வரன்**
**மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்**
**கிளிநொச்சி மாவட்டம்.**



# வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின்

# வாழ்த்துச்செய்தி

பூநகரி பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் 'பூந்துணர்' பிரதேச மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பூநகரி பிரதேசத்தின் கலை, இலக்கியம், பண்பாடு, தொல்லியல், புவியியல் மற்றும் மக்களின் வாழ்க்கைமுறை ஆகியவற்றை ஆவணப்படுத்தும் விதமாக இம் மலரானது அமைந்துள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

கூட்டுணர்வுடனான வாழ்வில் மக்கள் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளனர். இதனால் சமூகத்தை சார்ந்தே வாழவேண்டிய கடப்பாடு மனிதர்களுக்கு உரியதாகும். பாரம்பரிய வாழ்வுமுறை என்பது மக்களின் வாழ்வியல் அம்சங்களின் சிறப்புக்களுக்கான காரணகாரியத்துடன் அமைந்து வாழ்க்கைக் கட்டமைப்பில் ஆழவேரூன்றிய தன்மைகளில் பின்பற்றப்பட்டு வந்தன. ஆனால் காலத்தின் மாற்றத்தில் அதன் தன்மைகளில் விலகல் ஏற்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றதுடன் இன்றைய கோவிட்-19 வைரஸ் காரணமாக மீண்டும் எமது தமிழர் பாரம் பரியங்களை கடைப்பிடிப்பதற்கும் அதன் முக்கியத்துவத்தையும் அதனை உணரும் தருணத்தையும் இன்றைய சூழ்நிலை அமைத்துக் கொடுத்துள்ளதனையும் காண முடிகின்றது. குறித்த விடயங்களை உள்ளடக்கியதாகவும் எமது பாரம் பரியங்களின் முக்கியத்துவத்தையும் உள்ளடக்கிய ஆக்கங்களை இந்நூல் தாங்கி வெளிவருவது பாராட்டத்தக்கதாகும். குறித்த விடயங்களை வெளிப்படுத்தி அதனை பலரும் அறியச்செய்யும் முயற்சியாக இம்மலர் அமையும் என நம்புகின்றேன். இன்றைய காலத்தின் தேவையாக எமது பண்பாடும் எங்களின் தொன்மங்களும் நமது தலைமுறையினருக்கு எடுத்துச் சொல்லவேண்டிய கடப்பாடு கொண்டது. இப்பிரதேசமானது சிறந்த வளங்களைக் கொண்டு காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தின் பண்பாட்டு அம்சங்கள், வரலாறு, தொல்லியல், புவியியல் நிலமைகள், மற்றும் கலையம்சங்கள் ஆவணப்படுத்தப்படுவது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலர், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. இ. இளங்கோவன்**
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடமாகாணம்.



# பிரதேச செயலாளரிடமிருந்து...

பத்து ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவந்து சாதனை படைத்துள்ள பூந்துணர் இதழின் வாழ்த்துச்செய்தியின் ஊடாக சந்திப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

ஆண்டிதழ் ஒன்றினை வடிவமைத்து வெளியிடுவதிலுள்ள சவாலை அனைவரும் அறிவர். ஆண்டு தோறும் வடிவமைப்பில், கனதியில், ஆக்கங்களின் தரத்தில், புதுப்பொலிவோடும், பரிணாம வளர்ச்சியோடும் பூநகரி பிரதேச கலாசார பேரவையின் வெளியீடான பூந்துணர் மிளிர்கின்றது.

தொன்மையான வரலாற்றினையும், கிராமியமனம்கமழும் பண்பாட்டு விழுமியங்களையும், எதிர்கால சந்ததியினருக்காக ஆவணப்படுத்துவது காலம் நமக்கிட்ட கட்டளையாகும். பிரதேச வெளியீடொன்றில் உள்ளூர் படைப்பாளர்களுக்கு வழங்கப்படும் சந்தர்ப்பம். மற்றும் துறைசார் வல்லுநர்களின் அறிவு, பரிமாற்றம் என்பவற்றை சரியான முறையில் செயற்படுத்துவது எமது பொறுப்பாகும். அந்தவகையில் இம் மலரை வடிவமைக்க மலர்குழு அதிக சிரத்தை எடுத்துள்ளது.

உலகளாவிய கொவிட்-19 தொற்று காலத்திலும் இப்பணியை பலத்த சவால்களுக்கு மத்தியில் முன்னெடுத்த மலர்குழுவினர் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். தொடர்ச்சியாக இம் மலரின் உருவாக்கத்தில் பங்கெடுத்து வரும் எமது கலாசார பேரவை உறுப்பினர் திரு.கா.குலசேகரம் அவர்களின் பங்களிப்பு இங்கே சிறப்பாக சுட்டிக்காட்டப்படவேண்டிய தொன்றாகும்.

மேலும் இவ்வாண்டு இம்மலரினை இணையத்தளமூடாகவும் வெளியீடு செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது. அம்முயற்சி வெற்றிபெறவும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

நிறைவாக பூந்துணர் வெளியீட்டிற்கு தொடர்ச்சியாக ஆக்கமும் ஊக்கமும் தந்த உங்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்த்திய நன்றிகள் உரித்தாகட்டும்.

**திரு.சி.ச.கிருஷ்ணேந்திரன்**
பிரதேச செயலரும், கலாசாராப் பேரவைத் தலைவரும்
பிரதேச செயலகம்
பூநகரி.



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள
உதவிப் பணிப்பாளரின்

# வாழ்த்துச்செய்தி

பூநகரி பிரதேச செயலகத்தால் வெளிவரும் பிரதேச மலரான "பூந்துணர் நறவம்-10" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு நாட்டினுடைய கலை, கலாசார பண்பாடுகளை பிரதேச ரீதியான தனித்துவங்களினூடாகவே இனங்காண முடிகிறது. எனவே இதற்கு பிரதேச ரீதியான கலைப்பண்பாட்டுக்களம் பிரதானமாகிறது. அந்தவகையில் பூநகரி பிரதேச செயலகத்தின் விடாமுயற்சியும், அர்ப்பணிப்பும் ஊடாக தொடர்ச்சியாக பத்தாவது மலராக இப் "பூந்துணர் நறவம்-10" வெளிவந்துள்ளது.

இம் மலருக்கான தனிச்சிறப்பு ஒன்று உண்டு. பூநகரி பிரதேச வளம் சார் நடைமுறைகள் செயற்பாடுகளையும், கலை பண்பாட்டு வளர்ச்சிகளையும் தொடர்ச்சியாக ஒரு தசாப்த நிகழ்வாக இம் மலர் பதிவு செய்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் பல இலக்கிய வசதிகளையும் எழுத்தாளர்களையும், இளங்கலைஞர்களையும், கல்வியலாளர்களையும், புத்திஜீவிகளையும் உருவாக்கிய சிறப்பானது இப்பூநகரி பிரதேசத்தினை சாரும். அந்தவகையில் கலை இலக்கியவாதிகளை இனங்காண்பதற்கு இப் "பூந்துணர் நறவம்-10" மலருக்கு பெரும் பங்கு உண்டு.

இந்த வகையில் இம்முறையும் பூநகரி பிரதேச வளச்சிறப்புக்களையும், கலை பண்பாட்டு, விழுமியங்களையும், நம்பிக்கை ஐதீக மரபுகள் சார்ந்த சடங்குகளையும், பிரதேச இடப்பெயர் சார் பதிவுகளையும், தொல்லியல், ஆன்மீகம், வரலாறு, சித்த மருத்துவம், நாடோடிகள் வாழ்வியல் நடைமுறைகள் என பல பண்பாட்டு அம்சங்களை தாங்கி வெளிவருகிறது.

எனவே "பூந்துணர் நறவம்-10" மலர் தொடர்ச்சியாக இம்முறையும் வெளிவருவதற்கு அயராது உழைத்த பூநகரி பிரதேச செயலர், கலாசார பேரவையினர் மற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுஜீவா சிவதாஸ்,
உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.



## கலாசார உத்தியோகத்தரின்

# வாழ்த்துச்செய்தி

பூநகரி மண்ணின் பெருமைகளை அறைகூவும் மலராக வருடாவருடம் பூநகரி கலாசார பேரவையால் வெளியிடப்படும் "பூந்துணர் நறவம்" மலர் இவ்வருடம் பத்தாவது இதழாக பிரசவிப்பதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கலை, கலாசாரம், பண்பாடு, நாகரீகம் என்பவை ஒரு சமுதாயம் அதன் குடும்ப சமூக விழுமியங்களுக்கு வழங்கும் முக்கியத்துவத்தைப் பறைசாற்றுகின்றன. நமது முன்னோர்கள், மூத்தோர்கள் வகுத்துத்தந்த வாழ்க்கை முறைகள் உடல்உள ரீதியான ஆரோக்கியத்திற்கான வழிமுறைகள். அவற்றை நாம் செயற்பாடு ரீதியாக மட்டுமன்றி அவற்றின் உள்நோக்கங்களையும், உன்னதத்தன்மையையும் உணர்ந்து பேணுதல் எமது கடமையாகும்.

ஒரு இனத்தின் கனவுகளையும், நினைவுகளையும், வாழ்வியல் அம்சங்களையும், கலைகலாசார பண்பாட்டு விழுமியங்களையும் தூக்கி நிறுத்துவதில் இலக்கியங்களுக்கு பெரும்பங்குண்டு. அத்தகைய முயற்சியில் காலத்திற்குகாலம் வெளிவரும் "பூந்துணர் நறவம்" மலர் மருதநிலத்தையும், கடல்வளத்தையும், கொண்டமைந்த பூநகரி பிரதேசத்தின் வாழ்வியல் அம்சங்களை சீராகவும், செம்மையாகவும் தன்னகத்தே கொண்டு காத்திரமான படைப்புக்களை கனதியாக எடுத்துச் சொல்வதில் "பூந்துணர் நறவம 10" சிறப்பிடம் பெறுகிறது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள கலாசார செயற்றிட்டத்தின் கீழ் இப்பூந்துணர் நறவம் – 10 நூலை உருவாக்கும் பணிக்கு ஊன்று கோலாக இருந்த எமது பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், வடிவமைத்த ஸ்ரீ மாருதி அச்சகத்தினர், பூந்துணர் மலர்க்குழுவினர், அனைவருக்கும் எனது நன்றிகளைத்தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இப் பூந்துணர் மலர் பல நறவங்களைக் காண எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. சர்மிளா சுசிகுமார்**
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
பூநகரி

# தாய் சேய் நல அடிப்படை விடயங்களை விளக்கிக் கொள்வதன் மூலம் ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்கலாம்.



Dr.P.மதியரசி
**ஆயுள்வேத வைத்திய நிலையம்,**
**பூநகரி.**

## கருத்தரிக்க தயாராதல்

ஆரோக்கியமான மனித சமூதாயம் உருவாக அவன் கருவில் உருவாவதற்கு முன் பெற்றோர், சமுதாயம் கரிசனை செலுத்த வேண்டும். அதற்காக ஒரு தாயை வளரிளம் பருவத்திலிருந்தே நாம் உருவாக்குவது பற்றிச்சிந்திக்க வேண்டும்.

வளரும் பருவ பெண்களில் பிரதானமாகக்காணப்படும் அனீமியா எனப்படும் குருதிச்சோகை, உடற்திணிவு சுட்டென் (BMI) பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டும். வளரிளம் பிள்ளைகளில் தீவிர வளர்ச்சியும் விருத்தியும் சேர்ந்தே நிகழ்வதால் அவர்களுக்கான போசாக்கு மிகவும் அவசியமாகின்றது.

இதற்காக இரும்புச்சத்து, விற்றமின் C, வகை நிறைந்த உணவுகளை நாளாந்த உணவுகளுடன் உள்ளெடுக்க வேண்டும். அதே போல் புரத உணவுகளையும், மரக்கறி வகைகளையும் போதிய நீரையும் உள்ளெடுப்பதோடு உடற் பயிற்சியினையும் தொடர்ந்து மேற் கொள்ள வேண்டும். இதனால் குருதியில் போதிய ஈமோகுளோபினும், உயரத்துக்கேற்ப உடல் நிறையும் காணப்படும்.

ஒரு பெண் கருக்கட்ட தகுதியான வயது 20 வயதிற்கும் 35 வயதிற்கும் இடையிலேயே காணப்படும் இந்நிலையில் 20 வயதிலிருந்து கருக்கட்ட தயாரான பெண் 18.5ற்கு மேற்பட்டதும் 23 ற்கு உட்பட்டதுமான உடற் திணிவு சுட்டெண்ணையும் 12mg/dl ற்கு குறையாத ஈமோ குளோபினையும் கொண்டிருக்க வேண்டும்.

உடலும் உள்ளமும் ஒரு தாய்க்கு கருக்கட்ட தயாரான நிலையில் உள்ள போதே ஆரோக்கியமான குழந்தையை அவளால் பெற்றெடுக்க முடியும்.

போலிக்கமிலம் எனும் விற்றமின் B வகைக்குரிய போசணை தாயில் இருப்பது மிக அவசியமானதாகும். போலிக்கமிலம் ஒரு கிழமைக்கு மேல் தாயின் உடலில் தங்கியிருப்பதில்லை அத்துடன் கருவில் மூளை, முண்ணான் சரியான வளர்ச்சி விருத்திக்கு

போலிக்கமிலம் அவசியமாகின்றது. எனவே கரு உருவாக 3 மாதங்களிற்கு முன்னர் தாயில் போலிக்கமிலச்சத்து இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். இதற்கான துளிர் இலைகள், நிலக்கடலை, வாழைப்பழம், கறிமிளகாய் போன்ற இயற்கை உணவுகளை தொடர்ந்து உள்ளெடுத்து வருவதும், போலிக்கமில மாத்திரைகளை பயன்படுத்துவதும் கர்ப்பமாவதற்கு முன்னரே ருபெல்லா தடுப்பூசியைப்பெற்றுக்கொள்ளும் போது சிறந்த பலனை ஏற்படுத்தும்.

## கருத்தரித்தல்

புதிதாக திருமணம் முடித்தவர்கள் போலிக்கமில வில்லைகளை உள்ளெடுத்தும், கர்ப்பத்தை 8 வாரங்களுக்குள் அவர்கள் வசிக்கும் குடும்பநல உத்தியோகத்தரிடம் பதிவு செய்து சேவைகளை பெற்றுக்கொள்வதும் மிகவும் அவசியமான விடயமாகும்.

அதே போல குழந்தைகளை பெறும் எதிர்பார்ப்புடன் இருப்பவர்கள் தொடர்ந்து போலிக்கமில வில்லைகளை உள்ளெடுக்க வேண்டும். குறிப்பாக கரு உருவாகி முதல் 3 மாதங்களில் கருவின் மூளை, முண்ணான் வடிவமைப்பு நிறைவு பெறுகின்றது அந்தக்காலத்தில் தாயில் போலிக்கமிலம் காணப்படாதுவிடின் குழந்தைக்கு, மூளை முண்ணான் விருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும். இதைத்தவிர்க்கவே போலிக்கமிலப்பாவனை வலியுறுத்தப்படுகிறது. கர்பமடைந்த தாயின் கருப்பையினுள் 280 நாட்கள் சிசு பூரண வளர்ச்சி அடைந்தபின் பிரசவம் நிகழ்கின்றது. கர்ப்பம் தரித்ததாயின் உடல் நிறையானது கர்ப்பகாலத்தில் 8-12 Kgவரை அதிகரிக்க வேண்டும். அவ்வாறு அதிகரிக்கும் போதே கருப்பையினுள் குழந்தையும் பூரண வளர்ச்சி பெறும். பூரண வளர்ச்சி பெற்ற குழந்தை 3300g நிறைக்கு குறையாது பிறக்க கூடியதாக இருக்கும் இருந்தபோதிலும் இலங்கையில் 2.5Kgக்கு குறைவாக பிறக்கும் குழந்தைகளே நிறை குறைந்து பிறப்புக்களாக கணிக்கப்படுகின்றனர்.

## தாய்ப்பாலூட்டல்

பிறந்த குழந்தை தாயிடமிருந்து பாலை குடிப்பதற்கான உரிமை உண்டு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். குழந்தை பிறந்து 1/2 மணித்தியாலம் முதல் 1 மணித்தியாலத்தினுள் தாய்ப்பால் ஊட்டப்பட வேண்டும். இது தாய்க்கும் பிள்ளைக்குமான சிறந்த பிணைப்பையும் குழந்தை இலகுவாக தாயிடமிருந்து பாலைக்குடிப்பதற்கும் உதவுகிறது.

தாயில் குழந்தைக்கு தேவையான பால் எப்போதும் சுரக்கும். மிக அரிதாக சில மருத்துவ காரணங்கள் தவிர அனைத்து தாய்மாரிலும் தமது பிள்ளைக்கான பாலை சுரக்கும் திறன் காணப்படுகின்றது. தாயின் மார்பகங்களின் பருமன் எந்த விதத்திலும் பால் சுரப்பில் செல்வாக்கு செலுத்துவதில்லை. ஆரம்பத்தில் 3 முதல் 4 நாட்கள் வரை மார்பகங்களால் சுரக்கப்படும் பால் நிறமற்றதாக காணப்படும் இந்த நாட்களில் குழந்தையின் நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கும் முக்கிய கூறுகளைக்கொண்ட பாலே தாயின் மார்பகத்திலிருந்து சுரக்கப்படுகிறது. குழந்தைக்கு தேவையான அனைத்து போசாக்கும் தாய்ப்பாலில் பூரணமாக அடங்கியுள்ளது. வெளியிலிருந்து

ஆறுமாத காலத்தினுள் நீரோ, வேறு பானங்களோ வழங்கத் தேவையில்லை. ஏனெனில் போதியளவு நீர் பாலில் அடங்கியுள்ளது. நாம் வெளியிலிருந்து நீரோ பானமோ வழங்கும் போது குழந்தைக்கு நோய் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

தாயில் ஆரம்பத்தில் ஒரு நாளைக்கு 200ML பாலே சுரக்கும். அத்துடன் குழந்தை உடனடியாக முலைக்காம்பிலிருந்து பாலை உறிஞ்சும் திறன் குறைவாகவே இருக்கும். எனவே பசி காரணமாக குழந்தை அழுகின்ற போதெல்லாம் தாய்ப்பாலை ஊட்டுவதன் மூலம் பால் சுரப்பு அதிகரிக்கவும், குழந்தை மார்பகத்துடன் சிறந்த இணைப்பை பெறும் திறனும் கிடைக்கின்றது. மார்பகத்தில் முலைக்காம்பானது குழந்தையின் வாயினால் பற்றி உறிஞ்ச முடியாதளவு உள்ளிளுக்கப்பட்டிருப்பதும் குழந்தை பால் காணாமையால் பசி ஏற்பட்டு அழும். எனவே கர்ப்ப காலத்திலேயே முலைக்காம்பின் தன்மையை இனங்கண்டு வைத்திய ஆலோசனையை பெற்றுக்கொள்வது சிறந்தது

பால் குடித்தபின் பிள்ளை சத்தி எடுப்பதை அவதானிப்பீர்கள். இதற்கு காரணம் பாலை குடிக்கும் போது காற்றும் சேர்ந்து பிள்ளையால் விழுங்கப்படுவதால். காற்று வெளியேற முற்படுகின்ற போது அதனுடன் குடித்த பாலும் சத்தியாக வருவதுண்டு எனவே பால் கொடுத்தபின் பிள்ளையின் வயிற்றுப்பகுதி தாயின் தோளில் படக் கூடியவாறு அணைத்து முதுகை தடவி விடுவதன் மூலம் காற்றை மட்டும் வெளியேற்றி விட முடியும்.

தாய் வேலைக்கு செல்வதாக இருந்தாலும் தாய்ப்பாலை குழந்தைக்கு வழங்க முடியும். இதற்காக சரியான முறைப்படி சுத்தப்படுத்திய பின் மார்பகங்களிலிருந்து தாய்ப்பாலை கறந்து 6 மணித்தியாலங்கள் சாதாரணமாக வைத்தும், 24 மணித்தியாலங்கள் குளிரூட்டியில் வைத்தும், பாதுகாத்து பாலூட்டும் கிண்ணம் மூலம் குழந்தைக்கு ஊட்ட முடியும்.

தாய்ப்பாலை தவிர்த்து மாப்பாலை வழங்குகின்ற போது பிள்ளை தாய்ப்பாலை குடிப்பதை நிறுத்தி விடும் இதனால் குழந்தையின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைய தொற்றா நோய்கள் ஏற்படுகின்றது. அத்துடன் அதிகரித்த உடல் நிறையும் ஏற்படுகின்றது. இது பிள்ளைகளில் தொற்றா நோய்கள் உருவாக காரணியாக அமைகின்றது. குழந்தைக்கு பிறந்தது முதல் 6 மாதம் வரை தனித் தாய்ப்பால் ஊட்டுதல் வேண்டும். எனினும் 6 மாத முடிவில் துணை உணவுகளுடன் தாய்ப்பாலையும் 2 வயது வரை ஊட்டுதல் பாதுகாப்பானது.

### மேலதிக உணவு ஊட்டல்

6 மாதம் முடிந்ததும் மேலதிக உணவு ஊட்ட ஆரம்பிக்கவேண்டும் ஏனெனில் தாயின் பால் மட்டும் இந்தக்காலத்தின் பின் பிள்ளையின் வளர்ச்சி, விருத்திக்கு போதுமானதாக இருக்காது. எனவே ஆண், பெண் பிள்ளைகள் என்ற வேறுபாடுகளின்றி 6 மாதம் முடிய தாய்ப்பாலுடன் வீட்டில் தயாரிக்கும் மேலதிக உணவூட்டலை ஆரம்பிக்க வேண்டும்.

முதலில் உணவினை வழங்கும் போது தாய்ப்பாலுடன் சேர்த்து கெட்டியான திரவத்தன்மையான உணவாக வழங்க வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு புதிய உணவாக அறிமுகம் செய்ய வேண்டும். உணவை கரண்டியின் மூலம் ஊட்டுவதோடு கொதித்தாறிய

நீரையே அருந்தக் கொடுக்க வேண்டும். முட்டை முதல் மஞ்சள் கருவையும் பின் வெண் கருவையும் அறிமுகப்படுத்தலாம். முட்டை மந்தம் என்பது பிழையான எண்ணக்கருவாகும்.

பிள்ளைகளுக்கு எல்லா வகையான உணவுகளையும் வழங்கலாம். எனினும் சுவை நரம்புகள் தொழிற்பட ஆரம்பிக்கும் காலத்திலிருந்து ஒரு வயது வரை உப்பு, சீனியை தவிர்க்க வேண்டும். உணவுடன் எண்ணெய்யை சேர்ப்பது உணவின் போசணையை அதிகரிக்கும். குழந்தைகளுக்கு பிரதானமாக காலை, மதியம், இரவு என பிரதான உணவு வேளைகளையும் இடையே சிறு உணவு வேளைகள் இரண்டையும் வழக்கப்படுத்தல் சிறந்தது.

பிள்ளைகளுக்கு எல்லா வகையான பழங்களையும் கொடுக்க வேண்டும். வாழைப்பழம், பப்பாசி, கொய்யா என உள்ளூரில் கிடைக்கும் பழங்களை வழங்கலாம்.

பிள்ளைகளின் மூளை விருத்தி, புத்திக்கூர்மையை அதிகரிக்க 5 வயதிற்குள் போதிய தூண்டல்களை வழங்க வேண்டும். அவர்களுடன் நேரம் ஒதுக்கி கதைத்தல், புதிய இடங்கள் சூழல்களை அனுபவிக்க கூட்டிச் செல்லல், என்பவற்றை மேற்கொள்ளலாம். குழந்தை வளர்ச்சி பதிவேட்டில் (CHDR) காணப்படும் படிநிலை மாற்றங்களை அவதானிப்பதோடு ஆரம்பபிள்ளைப் பருவ விருத்தி செயற்பாட்டு ஊக்குவிப்புக்களை வழங்கவேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் தாய் சேய் அடிப்படை விடயங்களை விளங்கி கொள்வதன் மூலம் ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உருவாக்க முடியும்.



# சவால்களை சாதனைகளாக்க இளையோரை வலுப்படுத்துவோம்.



திரு.சு.வீரசுதாகரன்
தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி
வலயக்கல்விப்பணிமனை,
கிளிநொச்சி.

“சமூகத்தில் இருந்து தனிமனிதனையோ, தனிமனிதனிலிருந்து சமூகத்தையோ பிரித்துவிட முடியாது”

நாளைய உலகின் தலைவர்கள், நவீன உலகின் தூண்கள், மனித வர்க்கத்தின் எதிர்கால நாயகர்கள். உலகின் மூலை முடுக்கெல்லாம் நுணுகி ஆராய்ந்து, உலகின் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய தன்மை கொண்டவர்கள் என்று வர்ணிக்கப்படுவோர் யார்? அவர்கள் தான் இன்றைய இளையோர். இவர்களை நம்பித்தான் இவ்வுலகே நம்பிக்கையுடன் காத்துக் கிடக்கின்றது. கணத்துக்குக் கணம் மாறும் இவ்வுலகினைத் தம் கைகளுக்குள் அடக்கித் தம் ஆட்சியை நிலைநாட்டக் கூடிய வருங்கால விஞ்ஞானிகள் இவர்கள் என்று, அந்த உலகே வழிமேல் விழிவைத்துக் காத்து நிற்கின்றது.

அந்தளவு எதிர்பார்ப்புக்கும் நம்பிக்கைக்கும் உள்ளாகும் அளவுக்கு இளைய தலைமுறையினருக்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏன்? எதற்காக அவர்கள் மீது இவ்வளவு நம்பிக்கை, எதிர்பார்ப்பு இன்றைய உலகினால் உணரப்படுகின்றது. அவ்வாறாயின், இன்றைய உலகிலே நிகழ்காலத்தில் இளையோர் முக்கியமற்றவர்களா? வருங்காலம் மட்டுமே அவர்களுக்கானதா? நிகழ்காலம் என்பது இளைய சமூகத்துக்கு முக்கியமற்றதா? என்ற பல வினாக்களுக்கு விடையறிந்து கொண்டால், இன்றைய இளைஞரையும், யுவதிகளையும் கொண்டமைந்த இளைய சமுதாயம் தொடர்பான உண்மைநிலை வெளிப்படும்.

மனித வாழ்க்கை வட்டத்தில் குழந்தைகளாகிப் பின் சிறுவர்களாகித் தம் மனதிலே அடக்கிவைத்துள்ள ஆசைகளைக் கிளர்ந்தெழச் செய்யும் வயதான கட்டிளமைப் பருவத்தை அடைந்து, குறும்புகளையும் வக்கிரங்களையும் மனதளவில் உண்டாக்கி, அதைச் செயலிலே செய்யத் துடிக்கும் மனநிலையில் கட்டுக்கடங்காத நிலை கொண்டு, அடக்கப்பட்ட சமூகமாக சுதந்திரத்தைப் பெறத்துடிக்கும், அல்லது அதற்காகப் போராடும் ஒரு வயதுக் கூட்டமாகவே, இளையோரைத் தற்கால சமூகம் காணுகின்றது. அவ்வாறே சமூகமும் கண்ணோக்குகின்றது. அத்துடன், இன்றைய இளைய சமூகம் நாளைய உலகுக்கான உள்ளீடு என்பதையும் இன்றைய சமூகம் உணர்ந்துள்ளது. எனவே தான், இன்றைய இளையோர் மீது அளவு கடந்த

நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் சமூகம் கொண்டுள்ளது. ஏனெனில் சமூகத்தில் இருந்து தனிமனிதனையோ, அல்லது தனிமனிதனிலிருந்து சமூகத்தையோ பிரித்து விட முடியாது என்ற அசைக்க முடியாத கருத்து வேரூன்றியுள்ளது. மனிதன் ஒரு சமூகப் பிராணி என்ற வகையில் சமூகம் இவ்வாறான விடயங்களில் கூடிய அக்கறை கொண்டுள்ளமை யதார்த்தமானது.

இந்நிலையில் சமூகத்தின் எதிர்பார்ப்புக்கமைய இன்றைய இளையோரின் போக்குகள் அல்லது நடைமுறைகளில் இடைவெளிகள் தோன்றும் போது தான், இளையோர் மீதான முரண்பாடுகள் சமூகத்தினால் தோற்றுவிக்கப்படுகின்றன. இவ்வாறான முரண்பாடுகளின் வெளிப்பாடே ஏதோ ஒரு வகையான சவால்களாக உருவெடுத்து, இன்றைய இளையோரை மனமுரண்பாடுகள், மற்றும் நெறிப்பிறழ்வுகளுக்கு உள்ளாக்குவதுடன், அவர்களின் எதிர்கால எதிர்பார்ப்புக்களில் தன்னம்பிக்கையை இழக்கவைத்துப் பல ஏற்றுக் கொள்ள முடியாத விளைவுகளை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

இதற்கு யார் மீது குற்றம் சொல்ல முடியும்? இதற்கு யார் காரணம்? என்ற ஆராய்வுக்கான முடிவு சமூகத்துக்கும், இன்றைய இளையோர்களுக்கும் இடையிலான இடைவெளியின் வெளிப்பாடே என்றால் அது மறுக்கப்பட முடியாது. குடும்பம் சார்பாக இளையோருக்கான இடைவெளிகள், சமூகத்துக்கும் இளையோர்களுக்கும், இளையோர்களுக்கிடையில் காணப்படும் இடைவெளிகள் என்பவற்றின் உச்சக்கட்டமே இன்றைய இளையோர் எதிர்கொள்ளும் சவால்கள் என்பதை, இன்றைய சமூகம் எந்தளவு ஏற்றுக் கொள்ளும் என்பதற்கப்பால், இதுவே உண்மை நிலை என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

அந்த வகையில், இன்றைய இளையோர் எதிர் நோக்கும் சமூகத்தால், அறிந்தும் அறியாததுமான சவால்கள் எவ்வாறு தோற்றம் பெறுகின்றன? என்பதையும், அதற்கான மூலகாரணம் என்ன? என்பதையும் அறிய விளைவோமாயின் அதற்கான பிரதான காரணமாக அமைவது, இக்கால சமூகம் தனக்கென ஆக்கிக் கொண்ட அல்லது உருவாக்கிக் கொண்ட எதிர்பார்ப்புக்கள், ஆசைகள் மற்றும் இலட்சியங்களை இன்றைய இளையோர் அச்சொட்டாக செய்து முடிப்பார்களா? என்ற சந்தேகம் வரும் போது, அவர்களின் இலக்குத் திசைமாறிச் செல்லும் போதும், அல்லது இளையோர் அவற்றைப் புறக்கணிக்கும் போதும், சமூகம் இன்றைய இளையோர் மீது முரண்பாடுகளை ஏற்படுத்துகிறது.

இதனால், இளையோர் பல விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி நிலை ஏற்படுகின்றது. இந்நிலை வீடுகளில் ஆரம்பித்து வீதிவரை பரந்து, பின் முழு சமூகத்திலும் நிலையெடுத்துக் கொள்கிறது மறுபக்கமாகப் பார்ப்போமானால், இளையோர்களுக்கென்று பல விருப்புகள், கனவுகள், ஆசைகள் காணப்படும். அவர்களின் நிலையில் அவர்கள் எதற்கும் கட்டுப்படாத, சுதந்திரப் பறவைகள் என்ற நினைவில் திளைத்து நிற்பவர்கள். அதேவேளை, எதையும் ஆராய்ந்து அறிந்து மெய்பொருள் காணும் நிலையிலும் அவர்கள் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை என்பதும் உண்மை.

ஆகவே, இந்நிலையில் முரண்பாடுகள் ஏற்பட்டு, அவை இன்றைய இளையோர்களுக்குச் சவால்களாகத் தோற்றம் பெற்று, இவ்வுலகில் அதிலும் குறிப்பாக, எமது சமூகத்தில் பூதாகரமான பிரச்சினைகளாக விஸ்வரூபமெடுத்து நிற்கின்றன. அப்படியானால், இவற்றை யார் தீர்த்து வைப்பது? இதற்கான வழிகளை யார் சமைப்பது? யார் தமது இலட்சியங்களையும், ஆசைகளையும், விருப்புக்களையும் தியாகம் செய்து கொள்வது? என்ற நிலை தோன்றும்.

எனவே தான், இளையோர் தீண்டத்தகாதவர்கள் அல்ல, அவர்கள் பட்டை தீட்டப்பட வேண்டியவர்கள் அவர்கள் செதுக்கப்பட வேண்டியவர்கள் வடிவமைக்கப்பட வேண்டியவர்கள் என்ற கருத்து அறிஞர்களால் முன்வைக்கப்படுகின்றது. அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறைவுபட வேண்டும் அவர்கள் அவற்றைச் சுலபமாக வெற்றி கொள்ளக்கூடிய வகையில் வழிப்படுத்தப்பட வேண்டும் எதிர்காலம் பற்றிய நம்பிக்கை அவர்களுக்கு ஊட்டப்பட வேண்டும். சந்தர்ப்பங்களும் பாதைகளும் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். சுருக்கமாகக் கூறினால் அவர்கள் ஒவ்வொரு நிலையிலும் தட்டிக்கொடுக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

அந்த வகையில் இவற்றை எல்லாம் யாரால் செய்ய முடியும்? எவ்வாறு செய்ய முடியும்? எங்கு செய்ய முடியும், என்ற நிலை தோன்றும் போது அதற்கான ஒரே பதிலாகக் கூறுவதனால் குடும்பத்தால் முடியும், பாடசாலையினால் முடியும். சமூகத்தின் ஊக்குவிப்பால் முடியும் என்பதே நியாயமானது ஏனெனில், ஒரு குழந்தை கருவறை முதல் கல்லறை வரை கற்கவேண்டும் என்று கல்வியியலாளர் கூறினார்களே தவிர ஒரு மனிதனுக்கு கருவறைக்கு முன்பே பல சவால்கள் ஆரம்பித்து, குழந்தை முதல் முதுமையடைந்து கல்லறை செல்லும் வரை பிரச்சினைகளும், அதன் மூலம் பல்வேறுபட்ட சவால்களும் இருக்கும் என்ற யதார்த்தத்தை எவரும் சொல்லி வைக்க வில்லை அது மனித வாழ்க்கையின் அனுபவங்களினூடாகக் கண்டுணரப்பட்டு எதிர் கொள்ளப்பட வேண்டியதாகவே கருதப்படுகிறது.

அந்தவகையிலே குழந்தை பிறந்து கட்டிளமைப் பராயத்தை அடையும் வரை ஏற்படும் பெரும்பாலான சவால்களையும், அதனூடான பிரச்சினைகளையும் எதிர் கொள்ள, அவர்களின் பெற்றோர், அல்லது குடும்ப உறுப்பினர் முன்னிற்பார்கள், துணை செய்வார்கள். ஆனால், அது போன்ற நிலைமைகள் பிற்காலப் பருவத்தில் இருப்பதில்லை என்பதே உண்மை இதில் பல வாதப்பிரதிவாதங்கள் உண்டாகலாம். ஏனென்றால், பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை, அவர்களே புரிந்து, வெற்றி கொண்டு, வெளிவரச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படாமல், அனல் வீசும் கட்டிளமைப்பருவத்தில் அவர்களின் சவால்களை, அவர்களே எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவதால், அவர்களின் நிலை அளவுக்கு மீறிய காற்றடித்த பலூன் போலாகி விடுகிறது. இங்குதான் குடும்பத்துக்கும் இளையோருக்குமிடையிலான இடைவெளி ஆரம்பிக்கின்றது. இதுவே அவர்களுக்கான முதல் சவாலாக நோக்கப்படுகிறது.

பிள்ளைகளின் கல்வி தொர்பான எதிர்பார்ப்பு முதல், அவர்களது வருங்காலம் வரையான சகல விடயங்களும் குடும்பத்தால் நிர்ணயிக்கப்பட்டுச் செல்லும் போது, அதற்கு ஒத்திசைவான வழிச்செல்கை இளையோரால் மேற் கொள்ளப்படாத நிலையில், குடும்ப முரண்பாடுகள்

தோன்றும். இதுவே இளையோரின் நெறிப்பிறழ்வு, மனமுறிவு, பதகளிப்பு என்று தொடங்கி இன்று, எம் சமூகத்தில் ஏற்பட்டுள்ள தற்கொலைக் கலாசாரம் வரையும் சென்றுள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒரு பிள்ளையின் அல்லது இளையோரின் மனநிலையையும் விருப்பு வெறுப்புக்களையும் புரிந்து கொள்ளும் முதற்கட்டம் அவனது குடும்பமே ஆகும் ஒரு குடும்பத்தால் இதை நிறைவேற்றாவிட்டால், அப்பிள்ளைக்கான வடிகால் என்பது சந்தேகமானதாகவே அமையும்.

மேலும், இளைய சமூகத்தின் மீது தாக்கம் செலுத்தும், அவர்களின் மேல் சவால்களை அள்ளிவீசும் ஒரு இடமாகப் பாடசாலை அமைந்துள்ளது. பாடசாலைக்கு வரும் அனைவரும், கல்வியில் சிறந்தவராக வரவேண்டுமென்று மட்டுமே எதிர்பார்க்கும் பாடசாலை, மாணவர்களிடத்தே பல்வேறு திறன்கள் காணப்படுவதைக் கண்டுகொள்ளத் தவறிவிடுகின்றன. இதன் விளைவு, கற்றுக்கொண்ட கல்விக்கும், தொழிலுலகுக்குமிடையே உள்ள வேறுபாடுகளால், இளையோர் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டங்கள், சமூக பிரச்சினைகள் என்பவை தோன்றக் காரணமாகின்றன. இதுவே, இன்று இளையோர் பலர் கணத்துக்குக் கணம் எதிர் கொள்ளும் மிகப்பெரும் சவாலாக அமைந்து விடுகின்றது.

உண்மையிலேயே இலங்கையில் தற்போது காணப்படும் கல்வி முறையே, இளையோருக்குச் சிக்கலான விடயமாக மாறியுள்ளது என்றே கூறலாம். பரீட்சை மையக்கல்வி, மனம் மட்டும் செய்து பரீட்சையில் சித்தி பெறல், தொழிலுலகுக்கு வழிகாட்டாமை, பாடத்தெரிவுகளில் குறைபாடுகள், கௌரவத்துக்காகக் கற்றல், என்று பல்வேறு குறைபாடுகளைக் கொண்டமைந்த கல்வியானது, ஈற்றில் வேலையில்லாப் பட்டதாரிகளை அல்லது கீழுழைப்புப் பட்டதாரிகளை உருவாக்கிச் சாதனை படைக்கின்றது. இவை இளையோர்களுக்கான சவால்கள் மட்டுமல்ல இதிலிருந்து மீளக்கூடிய வழிவகைகளைக் கூடக் கண்டுபிடிக்க முடியாதவர்களாக அவர்கள் அல்லலுறுகின்றனர். அதிலும், பாடசாலைகளில் கற்பிக்கப்படும் சமயக்கல்வி கூடச் சமயத்தின் மீது பற்றுள்ளவர்களை உருவாக்குகின்றதே தவிர, ஒழுக்க விழுமியங்களையும், நல்ல வழக்காறுகளையும் கற்றுக் கொடுப்பதாக இருப்பதில்லை என்றவாதம் தற்போது பெரிதாகப் பேசப்படுகிறது. இன்று இளையோர், ஒழுக்கம் சார்ந்த பல சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

மேலும், இளையோருக்கு ஆதரவாக இலங்கையில் தற்போதுள்ள 13 ஆண்டுக் கல்வித்திட்டம், தொழிற்பயிற்சிக் கல்வித்திட்டம் என்பவை கூட இளையோரைச் சவால்களுக்கு உள்ளாக்கியுள்ளது உரிய நடைமுறை இன்மை, போதிய விளக்கமின்மை, கௌரவம் என்வற்றில் கட்டுண்டு, இதிலும் இளைய சமூகம் தோற்றுக் கொண்டிருக்கின்றது. ஏனெனில் பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்குக் கொடுக்கும் அந்தஸ்தினைத் தொழிற்பயிற்சி மூலம் பெறப்படும் பட்டத்துக்கு வழங்கும் நிலையில் சமூகம் இல்லை என்றே சொல்லலாம்.

மேலும் சமூகமானது இளையோரில் தாக்கம் செலுத்தி அவர்களுக்குச் சவால்விடும் ஒரு களமாகவே அமைந்துவிட்டது. பாடசாலைக் கல்வியிலிருந்து வெளித்தள்ளப்படும் பெரும்

எண்ணிக்கையான இளையோர்கள், தனக்கென ஒரு சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொள்வதற்குக் கடுமையாகப் போராட வேண்டியுள்ளது அவ்வாறு சமூகத்தில் பின்னடைவைச் சந்திக்கும் இளையோர், இன்று பல்வேறு ஒழுக்கம் சார் பிரச்சினைகளுக்கு ஆளாகிச் சமூகத்தால் வெறுக்கப்படும் நிலையில் காணப்படுகின்றனர். இளையோர் ஒழுக்கம் தொடர்பாகச் சமூகத்தில் காணப்படும் சமூக நிறுவனங்களான சனசமூகநிலையங்கள், கோவில்கள், பொது அமைப்புக்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோருக்கு மிகப்பெரும் பங்கு கொண்டுள்ளனர். இருப்பினும், இது எந்த அளவுக்குத் தற்போதைய சமூகத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. என்பதே விவாதத்துக்குரியது.

அந்தவகையிலே குடும்பம், பாடசாலை, சமூகம் என்பன ஏதொ ஒரு வகையில், இன்றைய இளையோருக்குத் தடைகளை அல்லது சவால்களை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது என்பது வெளிப்படை. அவ்வாறான நிலையில், இன்றைய இளைய சமூதாயத்தின் பல்வேறுபட்ட நிலைமைகளுக்கு வகை கூறுவது யார்? என்ற நிலை தோன்றுகிறது. குடும்பம் தன்னுடைய கடமையைச் சரியாக நிறைவேற்றினால், அல்லது பாடசாலையின் குறிக்கோள்களுக்குச் சமாந்தரமாக இயங்கினால், இன்று அகிலத்தால் எதிர்பார்க்கப்படும் இளையோர் சமூதாயம் படைக்கப்பட்டிருக்கும் அதேவேளை, இளையோராகிய இன்றைய இளைஞர், யுவதிகள் எதிர் கொள்ளும் ஒழுக்கம் சார் பிரச்சினைகள், கீழ் உழைப்பக்கள், அவமானங்கள் என பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் இடமிருந்திருக்காது.

எனவே, இன்றைய நிலையில் குடும்பம், பாடசாலை, சமூகம் அனைத்தும் சமாந்தரமாக இயங்கி, இளைய சமூகத்தின் நலனுக்காகக்கூட்டுப் பொறுப்புடன் பணியாற்ற வேண்டிய காலமாகவே உள்ளது இளையோரின் எண்ணங்களுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்பளித்து, அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிக் கொள்ள வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ளது. இதன் மூலம், இவற்றுக்கும் இளைய சமூகத்துக்கும் இடையிலான பிணைப்பு அதிகரிப்பதுடன் பரஸ்பர புரிந்துணர்வும், நம்பிக்கையும் ஏற்படும்.

அந்தவகையிலே, சமூகமானது இளையோர் முகம்கொடுக்கும் சகலவிதமான சவால்கள், பிரச்சினைகளுக்குச் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும், அல்லது அவற்றை எதிர் கொள்ளக் கூடிய நுட்பங்களைக் கற்றுக்கொடுக்கும் வளங்களாக மாற்றமடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கேற்ற வகையிலே, இளையோரை வடிவமைக்கும் செயற்பாட்டையும் செய்ய வேண்டும். இளையோரிடமிருந்து சமூகத்துக்கும், சமூகத்திலிருந்து இளையோருக்கும் வலுப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர் காலத்துக்கு ஏற்ற கல்வி முறை ஏற்படுத்தப்பட்டுப் போதிக்கப்பட வேண்டும்.

எனவே, இன்றைய இளையோர் எதிர் கொள்ளக் கூடிய அனைத்துச் சவால்களையும் சாதனைகளாக மாற்றக்கூடிய, அனைத்துத் திறன்களும் உடையவர்களாக அவர்கள் மாற்றப்பட வேண்டும். இவை குடும்பம், பாடசாலை, சமூகம் என்பவற்றின் கைகளிலேயே தங்கியுள்ளத

அதற்கேற்றவகையில் கூட்டுப்பொறுப்புடன் செயற்பட்டு வழிப்படுத்தினால் நாளைய உலகில் நாயகர்களாக இன்றைய இளையோர் திகழ்வதை யாராலும் தடுக்க முடியாது என்பது திண்ணம்.

### உசாத்துணை நூல்கள்


1. மனநலமருத்துவர் எஸ்.சிவதாஸ் 2014
   மகிழ்வுடன் வவுனியா மனநலசங்கம் மனநலப்பிரிவு
   மாவட்டப் பொது வைத்தியசாலை.

2. அறிஞர்குழு அழியாது வாழ்வில் வெற்றிபெற மாணவர்களுக்கு மனவளக்கலை 2013 பதிப்பகம். உலக சமூதாய சேவாசங்கம் வாழ்கவளமுடன் அப்செட் பிரீன்டேர்ஸ் பிறைவேட் லிமிட்டட் 29 நாச்சிமார் வீதி, ஈரோடு.

3. கலாநிதி விமலா கிருஸ்ணபிள்ளை
   "வழிகாட்டலும் ஆலோசனையும் 2019
   சேமமடு புத்தகசாலை Aஜீ50 பீப்பிள்ஸ் பார்க் கொழும்பு 11

4. கலாநிதி க.கஜவிந்தன் "மனநலமும் மனநோயும் ஒரு நோக்கு"
   உன்னத ஆளுமையில் உலகையே வெல்வோம் 2015
   மாகாண உளசமூக வளநிலையம்
   மாகாணக்கல்வித்திணைக்களம்
   வடமாகாணம்.






# சிறுவர் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான ஆசிரியர்களின் வகிபாகமும் இலங்கையின் கல்விச் சட்டங்களும்



திரு.ப.ஆனந்தராசா
அதிபர்
கிளி/முழங்காவில் தேசிய பாடசாலை.

ஐக்கிய நாடுகள் சாசனம் பிரகடனஞ் செய்துள்ள கோட்பாடுகளின் படி உலகில் சுதந்திரம், நீதி, சமாதானம் என்பன நிலைநாட்டப்பட வேண்டுமானால் மனித சமுதாயத்தின் சகல உறுப்பினர்களினதும் உள்ளார்ந்த கௌரவம், சமாதானம் பிறர் அபகரிக்க முடியாத உரிமை ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. இதிலும் சிறுவர் மீதான அனைத்து பாதுகாப்பும் மிக முக்கியமானது எனக் குறிப்பிட்டு நிற்கின்றது. சிறுவர்களது பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் என்பவற்றில் ஐக்கிய நாடுகள் சாசனம் மிகவும் வலுவானதாக உள்ளமையுடன் சமுதாயத்தில் பிள்ளைகள் தனிப்பட்ட வாழ்க்கை நடாத்துவதற்கு முற்று முழுதாக தயார்ப்படுத்தப்படவும் இவ் சாசனம் வரையறுத்துள்ள பண்புகளுக்கமைய அதிலும் சமாதானம், கண்ணியம், சகிப்புத்தன்மை, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற இலட்சிய உணர்வுடன் வளர்க்கப்பட வேண்டும் எனக்குறிப்பிடப்படுகின்றது.

சிறுவர் எனக்குறிப்பிடப்படும் 1-18 வயது என்பது வரையறுக்கப்படுவதுடன் 18 வயதிற்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்களே என ஐக்கியநாடுகள் சாசனம் வலியுறுத்தும் அதேவேளை சிறுவருக்கு சிறப்பான பராமரிப்பு அவசியம் என்பதை 1934ம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் பற்றிய ஜெனிவாவின் பிரகடனத்திலும் 1959ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் திகதி ஐக்கியநாடுகளின் பொதுச்சபை ஏற்றுக்கொண்ட சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்திலும் கூறப்பட்டுள்ளதுடன் மனித உரிமைகள் பற்றிய சர்வதேச பிரகடனத்திலும் குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச ஒருமைப்பாட்டிலும் சர்வதேச சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாய உறுப்புரிமைகளிலும் இவை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, அவர்களது உரிமை என சமவாயத்தில் (54) ஐம்பத்து நான்கு உறுப்புரிமைகளை சிறுவர் தொடர்பாக அவர்களது உரிமைகளை குறிப்பிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் சிறுவர்களின் பாதுகாப்பு அவர்களது கல்வி தொடர்பாக ஆசிரியர்களின் வகிபாகம் என்பது மிக முக்கியமானது.

பிள்ளையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அரசதரப்பினரின் பங்கே அதிகவனத்தில் கொள்ளப்படுவது ஆகும். ஏனெனில் பாடசாலைக்காலங்களில் அதிக நேரம் பிள்ளைகள் செலவழிப்பது கல்வியில் என்பதனாலேயாகும். இந்த நிலையில் சிறுவர் உரிமைகள் சார்ந்த சமவாயத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் படி வைத்தியர், பொலிஸ் அதிபர்

ஆசிரியர்கள் என்ற வகையில் அரச உத்தியோகத்தர்களின் முக்கிய கடமையாக கொள்ளப்படுகின்றது.

கல்வி, சுகாதாரம், மருத்துவம் என்பன பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய முக்கியமான உரிமையாகக் கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் கல்வி கற்கும் உரிமை பிள்ளைகளிற்கு இலவசமான கட்டாய ஆரம்பக்கல்வி ஒவ்வொரு பிள்ளைக்கும் கிடைக்கக் கூடிய பல்வேறு வகையான இடைநிலைக்கல்வி ஆற்றலின் அடிப்படையில் சகலருக்கும் கிடைக்கக் கூடிய பல்வேறு வகையான இடைநிலைக்கல்வி ஆற்றலின் அடிப்படையில் சகலருக்கும் கிடைக்கக்கூடிய உயர்கல்வி என்பவற்றை உறுதிசெய்தல் அரசின் கடமையாகும். பாடசாலையின் ஒழுக்கக் கட்டுப்பாடு பிள்ளையின் உரிமைகளுக்கும் கௌரவத்திற்கும் இசைவாக இருத்தல் வேண்டும். இந்த உரிமையை நடைமுறைப்படுத்தலுக்காக அரசு சர்வதேசத்தின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும் என சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் எடுத்துக்கூறுகின்றது.

அது மட்டுமன்றி கல்வியின் இலக்குகள் எனக்கூறப்படும் பிள்ளையின் ஆளுமை, திறமை, உள மற்றும் உடல் சார்ந்த ஆற்றல்கள் என்பவற்றை முழுமையாக பரிணமிக்கச் செய்தல் வேண்டும். கல்வியானது சுதந்திர சமூகமொன்றிலே உயிர்த்துடிப்பானதும் முதிர்ச்சியானதுமான வாழ்க்கையை வாழ்வதற்கு பிள்ளையை ஆயத்தம் செய்தல் வேண்டும். அத்துடன் பிள்ளையின் பெற்றோர் பிள்ளையின் கலாசார தனித்துவம் மொழி விழுமியங்களின் மீது மட்டுமன்றி ஏனையோரின் கலாசார பின்னணி விழுமியங்கள் என்பவற்றின் மீதும் மரியாதையாக வளர்த்தல் வேண்டும்.

இந்த வகையில் ஆசிரியர்கள் சிறுவர் உரிமை பாதுகாப்பு தொடர்பாகக் கொண்டிருக்க வேண்டிய வகிபாகமானது பிள்ளைகளின் நலன் சார்ந்த விடயங்களில் முக்கிய கவனம் எடுத்தல் வேண்டும் என்பதுடன் அவனது பாதுகாப்பு, கல்வி என்பவற்றில் மிகக்கூடிய கவனஞ்செலுத்துவது மிக முக்கியமானது. அத்துடன் அவனுக்குரிய கல்வியை அவனது இயல்புக்கேற்ற வகையில் வழங்கும் பொறுப்பு ஆசிரியருக்குரியது.

மேலும் தண்டனை வழங்கல், உடல் உள ரீதியாக பாதிப்பை ஏற்படுத்தல் மிகப்பெரிய குற்றம் எனக்கூறப்படுவதுடன் சமூகத்தில் ஆசிரியர்களே மிக உன்னத பிறவியில் இருப்பவர்கள் என்பதுடன் சிறுவர்களின் நலனில் அக்கறை கொண்டவர்களாகவும் அவர்களது எதிர்காலத்தை திட்டமிட வைப்பவர்களாகவும் இருப்பவர்கள் ஆசிரியர்களேயாகும். என்பதால் அவன் எந்த வகையிலும் பாதிப்புக்குள்ளாகாதவாறு பாதுகாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்குரியது.

மேலும் உடல் உள ரீதியாக பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுமிடத்து குற்றவியல் தண்டனைகளைப்பெறாத வகையில் அவற்றை வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு என்பது பெற்றோரை விட ஆசிரியர்களுக்கு முக்கிய கடமையாகும்.

மேலும் கல்விகற்கும் வயதில் வேலைக்கு அமர்த்துதல், கல்வியில் புறக்கணிப்பை ஏற்படுத்துதல் என்பன தண்டனைக்குரிய குற்றம் என்ற வகையில் அத்தகைய நிலை ஏற்ப்படாதவாறு கல்வி கற்கும் காலத்தில் மாணவர்களை இனங்காணல், வழிப்படுத்தல்

என்பனவும் ஆசிரியர்களின் வகிபாகமாகும்.

எனவே ஆசிரியர் ஒருவர் தாயாய், தந்தையாய், ஆசானாய், நல்ல நீதிபதியாய், தோழனாய் பல்வேறு வகிபாகங்களினூடாக சிறுவர்களை வழிப்படுத்தி 18 வயது வரை அவன் கல்வி கற்கவும் உயர் கல்வி வாய்பை அல்லது தொழிற்கல்வியைப் பெற்று சமூக அந்தஸ்து உடையவராக சிறுவர்களை மாற்றுவதும், வழிப்படுத்துவதும் ஆசிரியர்களின் கடமை என்பதை உணர்தல் வேண்டும் என்பது சிறுவர் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் விதப்புரை மட்டுமன்றி நமது நாட்டு கல்விச்சட்டமுமாகும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இலங்கையில் கல்வியுடன் தொடர்பு படும் சட்டங்கள்

1. I. அரசியல் அமைப்புச்சட்டம் - அடிப்படை உரிமைகள் அத்தியாயம் (III)
2. II. (அ) வது விதி ஆளவரும் சித்திரவதைக்கு, அல்லது கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தைக்கு அல்லது தண்டணைக்கு உட்படுத்தப்படலாகாது. இது அரசாங்கத்தால் மட்டுப்படுத்தல்களுக்கு உட்படுத்த முடியாத விதிகளாகும்.
3. சித்திரவதைகளுக்கு உள்ளாகாதிருக்கும் சுதந்திரம் (மாணவர்களுக்கு உடல் ரீதியாக தண்டனை வழங்கப்பட்டது.

    (ஆ) பாராபட்சத்திற்குள்ளாகாதிருக்கும் உரிமை
4. அத்தியாயம் (iv) மொழிபற்றிய ஏற்பாடுகள்
5. அரசியலமைப்பிற்கான 13வது திருத்தம் 16வது திருத்தம் என்பனவற்றின் அரசகருமமொழி பற்றி தெரிந்திருத்தல் வேண்டும்.
6. அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் உத்தரவாதப்படுத்தப்பட்ட உரிமைகள் (பிரிவு 10-17 வரை) மற்றும் அத்தியாயம் (iv) ல் கூறப்பட்டுள்ள மொழியுரிமை அரசாங்க நிர்வாக அதிகாரத்தை பிரயோகித்து மீறப்படுமாயின் அதற்கெதிராக உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட உறுப்புரை 126 (1), (2) ஏற்பாடுகளை கொண்டுள்ளன.
7. அடிப்படை உரிமைகள் மீறப்படுமிடத்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் மூலம் தடையுத்தரவு பெறல்.
8. அரசியலமைப்புச் சட்டத்தின் 126 (2) பிரிவின் படி (உரிமைகளும், மொழியுரிமையும் மீறப்படுமிடத்து) மேன் முறையீட்டு நீதி மன்றின் மூலம் பெறக்கூடிய இடைக்கால தடையுத்தரவுகள்
    1. ஹெபியாஸ்கோப் கட்டளை
    2. சர்டியோராரி கட்டளை
    3. ப்ரசிடென்டோ
    4. மென்டாமுஸ்
9. அரசியல் அமைப்புச்சட்டத்தின் அத்தியாயம் IX பகிரங்க சேவைபற்றி விளக்கம் அளிக்கின்றது.
10. அரச அலுவலர் எனப்படுபவர் யார்? அவர்களின் நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு,

ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு யார் பொறுப்பு என்பதை அறிந்து கொள்ள உதவும்.

11. அரசியல் அமைப்புச் சட்டத்தின் உறுப்புரையும் 60-17 வது திருத்தம் உறுப்புரை 61, பிரிவு என்பன அரசாங்க ஊழியர்கள் தெரிந்திருக்க வேண்டிய ஒன்றாகும். பொ.சே ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் அல்லது முடிவில் நேரடியாகவோ மறைமுகமாகவோ செல்வாக்கை செலுத்த முற்படுதல் மேல் நீதிமன்றத்தின் வழக்கை எதிர் நோக்கும் செயற்பாடாகும்.

12. யூரர் சபை இல்லாத வழக்கு விசாரணையில் குற்றவாளி என்பது நிருபிக்கப்பட்டால் ஒரு லட்சத்துக்கு மேற்படாத அபராதம் அல்லது ஏழாண்டு சிறை அல்லது இரண்டும் தண்டணையாக விதிக்கப்படலாம்.

13. அரசாங்கப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அரசாங்க நிதியை பயன்படுத்துபவர்கள். அரசாங்க நிதி பயன்படுத்தப்படல் அரச தாபனங்களின் நிதி கணக்காய்வுக்கு உட்படல் என்பனவற்றின் அரசியல் திட்டத்தில் அத்தியாயம் XVII விளங்குகின்றது.

14. பொது நிதி செலவு செயற்படுதலை கணக்காய்வுக்கு உட்படுத்தும் அதிகாரமானது நாட்டின் அடிப்படை சட்டமான அரசியல் சட்டத்தினாலேயே கணக்காய்வின் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்டு இருப்பதால் அப்பணிக்கு எமது ஒத்துழைப்பை வழங்கவேண்டும். அது பற்றி விளக்கம் எமக்கு அவசியம் ஆகும்.

15. அரசியல் அமைப்புக்கான 13வது திருத்தம் பற்றி அறிந்திருத்தல் அவசியம். கல்வி என்ற விடயம் மாகாணசபைகளுக்கு பகிரப்பட்ட விடயமாகும்.

16. குறித்தொதுக்கப்பட்ட பாடசாலைகள் தவிர ஏனைய பாடசாலைகளின் முகாமையை மேற்பார்வை செய்தல் மாகாணசபைக்கு அதிகாரம் பகிரப்பட்ட விடயம் ஆகும்.

17. ஆசிரியர் நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை சம்மந்தமாக மாகாணசபை மற்றும் ஆளுநர் கொண்டுள்ள தத்துவங்கள் அதிகாரங்கள்.

18. 1987/42ம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின்படி மத்திய அமைச்சரவைக்குள்ள அதிகாரங்களுக்கு சமமான அதிகாரம் மாகாண ஆளுனருக்கும் வழங்கப்படுகின்றது.

குற்றவாளியினால் 10 வருடங்களுக்கு குறையாத 20 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனை வழங்கப்பட சட்டத்தில் இடமுண்டு.

பாலியல் துஸ்பிரயோகம் சிறுவர், சிறுமியரை பாலியல் ரீதியாக துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தியமைக்கு ஒருவர் குற்றவாளி என நிருபிக்கப்பட்டால் தண்டனைக் கோவைச் சட்டத்தின் 36வது பிரிவின்படி 10 வருடங்களுக்கு குறையாத 20 வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையும் பாதிக்கப்பட்ட வருக்கு நட்ட ஈடும் தண்டனையாக வழங்க ஏற்பாடுகளுண்டு.

பாலியல் செயற்பாட்டிற்காக 12 வயதிற்கு குறைந்த பிள்ளையினால் தெரிவிக்கப்பட்ட சம்மதமானது அப்பிள்ளை சம்மதம் தெரிவித்ததாக கருதப்பட மாட்டாது.

16 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளையுடன் சம்மதத்துடனே சம்மதமின்றியோ

மேற்கொள்ளப்படும் பாலியல் ரீதியிலான செயற்பாடுகள் பாலியல் துஸ்பிரயோகமாகவே கருதப்படும்.

இத்தகைய குற்றம் புரிபவருக்கு 306, பிரிவின் படி ரூபாய் 2 லட்சம் தண்டப்பணம் மற்றும் ஏழு வருடங்களுக்கு குறையாத 20 மேற்படாத தண்டனை வழங்கப்படலாம்.

கல்வி அமைச்சின் 2005 17இல் சுற்று நிருபம் இந்த சட்டத்தினை குறிப்பிட்டு காட்டியுள்ளது.

## குற்றவியல் சட்டத்தின் கீழ்......

நிற ஆடை அணிந்து தாயுடன் பாடசாலைக்கு வந்தமையால் தாயின் முன்னால் 18 வயதுக்கு குறைந்த மாணவர் ஒருவருக்கு உடல் ரீதியான தண்டனை வழங்கிய கொழும்பு டி.எஸ் சேனநாயக்கக்கல்லூரி ஆசிரியர் மூவருக்கு ஏ.எம். ஆரியபால (51) எம்.ஏ.டி.சார்ந்தகுமார் (48) ஏ.எம்.ஜீ. எதிரி சூரிய உ. அ (51) தலா 2 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

1995 22ம் குற்றவியல் திருத்தச் சட்டத்தின் 308, (2) ன்படி குற்றம் சாட்டப்பட்டு சட்டமாதிபரால் தாக்கம் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பாகும்.

அரசாங்கச் சொத்துக்கள் நாசமடையவிடுதல், சொந்த தேவைக்காக பயன்படுத்தும் அரச ஊழியர் ஒருவர் லஞ்சம் வாங்குதல், நிதி மோசடிகள் போன்ற செயல்கள் உட்பட அரச சொத்துக்கள் வீணாவதைத் தடுக்காதவாறு சொந்தப் பயனுக்கு பாவித்தல் என்பன லஞ்ச ஊழல் சட்டத்தின் கீழான குற்றமாகும். Section 70 of the Bribery Act) நீதிமன்றால் தண்டிக்கப்படலாம்.

அரச ஊழியர் ஒருவர் உத்தியோக பூர்வ கடமைகளை ஆற்றுவதற்கு இடையூறுவிளைவித்தல் குற்றவியல் தண்டனைக் கோவை சட்டப்படி குற்றமாகும்.

குற்றவியல் தண்டனைக் கோவை சட்டத்தின் 183 வது பிரிவின் படி வேண்டு மென்றோ ஓர் அரச ஊழியர் ஒருவரது உத்தியோக பூர்வ கடமையை செய்வதற்கு எவரும் இடையூறு ஏற்படுத்தியமை நிருபிக்கப்பட்டால் 3 மாத கால சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

பாடசாலையில் மரம் தறிக்கும் போது இந்த சட்டத்தின்படி செயற்படல் வேண்டும். forests Law (No. 13 of 1966) - Sect 80

1991ம் ஆண்டின் அரசகரும மொழிச் சட்டம்.

அரச நிறுவனங்கள் நியதிச்சட்டசபைகள் அரைகுறை அரசசார் கம்பனிகள் ஆகியவற்றால் மொழியுரிமை மீறப்பட்டால் விசாரணைகள் மேற் கொள்ளுமதிகாரம் அரசகரும மொழித் திணைக்களத்திற்கு உண்டு.

குற்றவியல் சட்டம்

குற்றவியல் சட்டமும் ஒரு பொதுச் சட்டமாகும். குற்றவியல் சட்டத்தில் தண்டணைக்குரிய செயல் எனக் கூறப்பட்டவையை செய்தல் தனியாளுக்கெதிராக செயற்ப்பட்ட குற்றமாக அன்றி முழுச் சட்டத்திற்கும் எதிராக சமூக நலனுக்கு எதிராக குற்றமாக கருதப்படுகின்றது.

1939ம் ஆண்டு 31 இல் கல்விச் சட்டத்தில் இன்றும் பயன்பாட்டில் உள்ளவை

இலவசக் கல்விக்கு அடிப்படையாகவும் கல்வியை ஜனநாயகப்படுத்தவும் இச் சட்டத்தின் 47வது விதியின் (1)ம் உப பிரிவு அரசாங்க மற்றும் உதவி பெறும் பாடசாலை மாணவர் அனுமதிக்கென கட்டணம் எதனையும் அறவிட முடியாது என்பதை வலியுறுத்துகிறது. 1947ம் ஆண்டின் 26ம் இலக்க கட்டளை திருத்தச் சட்டத்தின் படி மாணவர் கற்க விரும்பும் ஊடக மொழியில் கல்வி புகட்ட வசதியில்லா அரச மற்றும் அரச உதவி பெறும் பாடசாலை அதனடிப்படையில் ஒரு மாணவனுக்கு அனுமதி மறுக்கலாம். என்ற விதியை சேர்த்துள்ளது.

மேலும் கல்வியை வழங்குதலை அடிப்படையாகக் கொண்டு மத மாற்றம் மேற்கொள்ளப்படுவதை தடுக்கும் வகையில் இதன் 34ம் விதி எந்தவொரு பாடசாலை அனுமதியானது பிள்ளையின் அல்லது பெற்றோரின் சமயம், இனம், சாதி, சமூக அந்தஸ்து அல்லது மொழி காரணமாக மறுக்கப்படலாகாது எனவும் 35 (1) விதி பெற்றார் எந்த சமயத்தவரோ அச்சமயம் மாணவனுக்கு கற்பிக்கப்படும் பாடங்களில் ஒன்றாக இருத்தல் வேண்டும். என குறிப்பிடுகிறது. 35 (1) a பாடசாலை ஒன்றில் ஒரு குறிப்பிட்ட சமயத்தைச் சேர்ந்த மாணவர் தொகை 15க்கு மேற்படாதிருப்பின் அந்த சமயப் பாடத்தை கற்பிக்க வேண்டியது கட்டாயமல்ல (b) பிரிவு பெற்றார் தானாக முன்வந்து எழுத்து மூல வேண்டுகோள் விடுத்தலன்றி பிற சமய ஆராதனைகளில் மாணவரை பங்குபற்ற செய்யலாகாது. எனவும் 35 (2) அரசாங்க மற்றும் உதவி பெறும் பாடசாலை அதிபர் பொறுப்பானவர் பாடசாலையிலோ அல்லது விடுதியிலோ மாணவர் தான் சாராத மத அனுட்டானங்களில் ஈடுபட கோரலோ அனுமதித்தலாகாது.

பிள்ளையின் மதம் எதுவென தீர்மானித்தல் 4 (1) b தந்தையின் சுய நினைவிலான பிரகடனம் அவரில்லாவிடத்து தாயின் இருவருமில்லாவிடத்து சட்டரீதியான பாதுகாவலரது பிரகடனப்படி தீர்மானிக்கப்படும்.

1945ம்“ஆண்டில் இலவசக் கல்வியின் அறிமுகத்துடன் பொதுக் கல்வியை போதிப்பதற்காக மாணவர்களிடம் கட்டணம் அறவிடலுக்கான கட்டுப்பாடுகளை விதிப்பதில் சட்டங்கள் மூலம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. 1947ம் ஆண்டின் 26ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 41ஏ (1) பிரிவு மாணவர் அனுமதிக்கு மாத்திரமன்றி கல்வி புகட்டவும் அரச பாடசாலைகளிலும் அரசாங்க பாடசாலைகளிலும் மாணவர் அனுமதிக்கோ அல்லது வழங்கப்படும் கல்விக்காகவோ எத்தகைய கட்டணமும் அறவிடப்படலாகாது (No Fees shall be charged in respect of admission to, or of the education provided in, government school or an Assisted School) அரசாங்க மற்றும் உதவி பெறும் பாடசாலைகளில் விளையாட்டுகள். அல்லது உடற் பயிற்சி ஏதேனும் வேறு சேவைகள் வழங்கும் போது அச்சேவைக்கான நியாயமான கட்டணத்தை அம்மாணவர்களிடம் அறவிட 41 (2) இடமளிக்கிறது.

1951ம் ஆண்டு 5ம் திருத்தச் சட்டம்

இச்சட்டத்தின் பிரதான அம்சம் ஊடக மொழி பற்றிய ஏற்பாடுகளை கொண்டிருத்தலாகும் விதி 4 (1) சிங்கள மாணவர்கள் எண்ணிக்கையில் 15 பேருக்கு அதிகமாக இருக்கும் நிலையில்

அவர்களுக்கான ஊடக மொழியாக சிங்களம் இருத்தல் வேண்டும். 4 (2) படி தமிழ் மாணவர்கள் எண்ணிக்கையில் 15 பேருக்கு அதிகமாக இருக்கும் நிலையில் அவர்களுக்கான ஊடக மொழியாக ஆங்கிலம் இருத்தல் வேண்டும். எனக் கோருமிடத்து அம்மொழியில் கல்வி வழங்க வேண்டும் என நான்கு தொகுதியாக வகைப்படுத்துகின்றது.

இப்போது பாடசாலைகளில் அறவிடப்படும் வசதிகள் சேவைகள் கட்டணத்திற்கான சட்டப் பின்னணியை வழங்கிய சட்டமாக இதைக் கொள்ளலாம். வசதிகள், சேவைகள், கட்டணம் பற்றி 1951 ன் 5ம் இல சட்டம் சரத்து 12 (1) (2) (3) உப பிரிவுகள் 1947ம் ஆண்டின் 26ம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 41 (1) யின் கீழ் கூறப்பட்டவாறு அறவிடப்படும் பணம், வசதிகள், சேவைகள், கட்டணம் என அழைக்கப்படும் என்பதுடன் பணிப்பாளர் நாயகத்தால் நிர்ணயிக்கப்படும் கட்டணமே அறவிடப்படலாம். அந்த உச்ச எல்லைக்குள்ளிருந்து பாடசாலைக்குப் பாடசாலை வேறுபட்ட தொகையில் கட்டணம் அறவிடலாமென பொருள் கொள்ளும் வகையிலமைந்துள்ளது. கட்டணம் செலுத்த முடியாமையை காரணமாகக் கொண்டு எந்த மாணவனையும் தண்டித்தலாகாது. 1975.11.05 வெளியிடப்பட்டதும் 1975 / 57 இலக்கமுடையதுமான தற்போது நடைமுறையிலுள்ள சுற்று நிருபம் இச்சட்டத்தின்படி ஆக்கப்பட்டதாகும்.

உதவி பெறும் பாடசாலைகள் மற்றும் பயிற்சி கல்லூரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 1960.5 இல சட்டமும் 1961, 8ம் இல. குறை நிரப்பு ஏற்பாடுகளும்

1960 5ம் இலக்க சட்டம் சகல உதவி பெறும் பாடசாலைகளுக்கும் பணிப்பாளர் முகாமையாளராக பணியாற்றவும் உதவி பெறா பாடசாலைகள் தம்மை உதவி பெறும் பாடசாலைகளாக இணைய தேர்தல் ஒன்றை நடாத்தவும் தேவையான ஏற்பாடுகளை கொண்டிருந்தது. 1961 8ம் இலக்கச் சட்டம் கல்விப் பணிப்பாளர் முகாமையாளராகும். அரச உதவி பெறும் பாடசாலைகளின் சொத்துக்களை நட்ட ஈடின்றி அரசுடமையாக்க இச்சட்டம் ஏற்பாடுகளை கொண்டிருந்தது.

1968ம் ஆண்டு இல 25 பொதுப் பரீட்சைகள் சட்டம்

ஆசிரியர்கள் அதிபர்கள் பொதுப் பரீட்சை பணிகளில் ஈடுபடுவர். பொதுப் பரீட்சை பணியில் ஈடுபடும் ஒருவர் செய்யக்கூடாதவைகள் குற்றவியல் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும். பரீட்சை பணிகளில் ஈடுபடும் மற்றும் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இச்சட்ட விதிகள் பற்றி அறிந்திருத்தல் வேண்டும்.

1968 - 5ம் இல பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் பிரிவு 5 ஆள்மாறாட்டம் மற்றவர்களுக்காக பரீட்சை எழுதுதல் 2 மற்றவரின் சுட்டிலக்கத்தை தனத விடைத்தாளில் எழுதுதல் என்பனவற்றையும் குற்றச் செயலாகக் கருதுவதுடன் பிரிவு 6 வினாப்பத்திரம் சார்ந்த விடயங்களை குறிப்பிடுகிறது. பரீட்சை வினாத்தாள் பரீட்சார்தியின் விடை எழுத ஒப்படைக்கப்பட்டு 30 நிமிடங்கள் தொடக்கம் வரை அது மிகவும் அந்தரங்கமான ஆவணம் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டவர் தவிர பிறரிடம் இருத்தலோ அது பற்றிய தகவல்கள்

வழங்குதலோ ஆகாது.

பிரிவு - 7 விடைத்தாளில் அல்லது புள்ளிப் பதிவுத்தாளில் மாற்றம் அல்லது அழித்தல் பிரிவு - 8 அந்தரங்க ஆவணங்களை அழித்தல் பிரிவு 9 பொதுப் பரீட்சையுடன் தொடர்பான ஆவணங்களுக்கு உடமைகளுக்கு சேதம் விளைவித்தல், பிரிவு 10 உரியவருக்கு அன்றி பிறருக்கு பரீட்சை ஆவணங்களை விநியோகித்தல், பிரிவு 11- பரீட்சை அந்தரங்க ஆவணங்களை அதிகாரமளிக்கப்படாத ஒருவர் கைவசம் வைத்திருத்தல் விற்பனை செய்தல். பிரிவு 12 - பொதுப் பரீட்சையில் நேர்மையீனமாக நடந்து கொள்ளல் என்பனவற்றை தண்டனைக்குரிய செயலாக கருதுகிறது. மேலும் பிரிவு 13 - பரீட்சகர் பற்றிய தகவல்கள் பரீட்சை விடைத்தாள் சார்ந்த விடயங்களை நேர்மையற்ற வகையில் வழங்குதல். பிரிவு 14 - பரீட்சை பெறுபேற்று அட்டவணையில் அல்லது பரீட்சைப் பெறுபேற்றை வழங்குதலில் மோசடி செய்தல் போன்றனவும். இதிலடங்கும்.

பிரிவு 15 மேற்குறித்த குற்றச் செயல்களில் ஒன்றிற்கோ பலவற்றிற்கோ உடந்தையாக இருத்தல். பிரிவு -16 மேற்குறித்த குற்றச் செயல்களில் ஒன்றிற்கோ பலவற்றிற்கோ முயற்சித்தலை தண்டனைக்குரிய செயலாக கருதுவதுடன் பிரிவு 17 நீதி மன்றம் மற்றும் ஒழுக்காற்று விசாரணை மூலம் தண்டனை வழங்குதல் பற்றி விளக்கமளிக்கிறது.

கல்வி அமைச்சரால் உதவி பெறா பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்க விடுக்கப்பட்ட 1982ம் ஆண்டின் பிரமாணங்கள்

கல்வி அமைச்சரால் 1960ம் ஆண்டு 5ம் இல சட்டத்தின் 14ம் உப பிரிவு மூலம் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும் மேற்குறித்த சட்டத்திற்கு 1981ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டமூலத்தின் படியும் பின்வரும் விதிமுறைகள் ஆக்கப்பட்டுள்ளன. இப்பரிமாணங்கள் உதவி பெறா பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்கும் 1982ம் ஆண்டின் பிரமாணங்கள் என அழைக்கப்படும். அரச உதவி பெறா பாடசாலை ஒன்றில் பணியாற்றும் அதன் தகைமை பெற்ற ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் அரச நிதியிலிருந்து சம்பளம் வழங்குவதற்கு மானியம் வழங்குவது பொருத்தமானது என கல்விப் பணிப்பாளர் நாயகம் அபிப்பிராயப்பட்டால் அவ்வாறு செய்யலாம் ஆ தொகையானது அப் பாடசாலைக்குரிய தகைமை பெற்ற ஆசிரியர் தொகையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

இத்தொகையானது 1980ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி அப் பாடசாலையில் கல்வி பயின்ற மாணவர் தொகைக்கேற்ப அமைதல் வேண்டும்.

கல்விப் பணிப்பாளர் நாயகத்தால் காலத்திற்கு காலம் அரசாங்க பாடசாலைகளில் ஆசிரியர் தேவையை கணிக்க பயன்படுத்தும் சுற்று நிருபத்தின் விதி முறைகளுக்க ஏற்ப கணித்தல் வேண்டும்.

எந்தவொரு உதவி பெறா பாடசாலையும் இந்த அறிவுறுத்தல்களை மீறச் செயற்பட்டால் பணிப்பாளர் நாயகத்திற்கு அப் பாடசாலைக்கு வழங்கப்படும் ஆசிரியர்களுக்கான சம்பளம்

வழங்குவதற்கு கொடுக்கப்படும் மானியத்தை முழுமையாகவே பகுதியளவிலோ இடைநிறுத்த முடியும்.

இங்கு ஆசிரியர் தகைமை என்பது கல்வி அமைச்சால் ஆசிரியராக பணியாற்றுவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தகைமையை குறிக்கும்.

உதவி பெறா பாடசாலை ஆசிரியர்களுக்கான சம்பளம் 1980 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து பெற உரித்துடையவர்.

1939ம் ஆண்டின் 31ம் இல சட்டப்பிரமாணங்களின் 37ம் உப பிரிவின் பிரகாரம் கல்விக்கு பொறுப்பான அமைச்சரும் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1983.05.23 அன்று பின்வரும் விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவ்விதி முறைகள் 1983ம் ஆண்டின் உதவி பெறும் மற்றும் உதவி பெறா பாடசாலைகளுக்கான விதிமுறைகள் என அமைக்கப்படுகின்றன.

சகல உதவி பெறும் மற்றும் உதவி பெறா பாடசாலைகளும் தமது ஆசிரியர்களது தகைமை நியமனம் மற்றும் பயிற்சிக் காலம் சம்பந்தமாக பின்வரும் விதிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும்.

இதற்குப் பின்னர் மேற் கொள்ளப்படும் சகல ஆசிரிய நியமனங்களும் கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளில் குறைந்தது ஏதேனுமொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

அ. அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக் கழக பட்டம்
ஆ. ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்
இ. சங்கீதம், நடனம், சித்திரம், விவசாயம், மனைப்பொருளியல் போன்ற அழகியல் தொழிநுட்ப பாடங்களில் ஏதாவதொரு பாடத்தில் டிப்ளோமா சான்றிதழ்

ஈ. கா.பொ.த (உ.த) 3 பாடங்களில் சித்தி

டிப்ளோமாதாரிகள் தாம் கற்பித்தல் தொழிலை ஆரம்பித்த 10 வருட முடிவிற்குள் ஆசிரியர் பயிற்சியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

அதிபராக பணியாற்றுபவர் பல்கலைக்கழக பட்டமொன்றுடன் குறைந்தது 10 வருட கால கற்பித்தல் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.


குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றில் தண்டனை வழங்கப்பட்ட ஒருவர் அல்லது அரச சேவையிலிருந்து ராஜினாமா செய்த ஒருவர் மேற்குறித்த பணிகளில் அமர்த்தப்படலாகாது.

## உசாத்துணை நூல்கள்

1. கல்விச் சட்டங்கள் - ப. ஆறுமுகம்

2. சிறுவர் சமயவாயம்

# தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும்



திரு.கா.கார்த்திகேசு
ஓய்வுநிலை உத்தியோகத்தர்,
பூநகரி.

இன்று நாம் பண்பாடு என்னும் சொல்லால் குறிப்பிடும் துறைகளை நம் முன்னோர் பண்பு பண்புடமை சால்பு, சான்றாண்மை, ஒப்புரவு முதலிய சொற்களால் குறித்துள்ளனர். கலித்தொகையில் பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்றும், வள்ளுவத்தில் பண்புடையார் பட்டுண்டு உலகம் என்றும் வருவதைக் காணலாம். பண்பாடு உடையவரை சான்றோர் என்றும் மேலோர் என்றும், ஒழுக்கமுடைய பெரியோர் என்றும், மாசற்ற காட்சி உடையோர் என்றும், அழைத்தனர். ஆங்கில மொழியில் Cultural எனப்படும் சொல்லுக்கு தமிழில் பண்பாடு என்று குறிப்பிடுகின்றோம். உழவுக் தொழில் எவ்வாறு நிலத்தை பண்படுத்துகிறதோ அவ்வாறே மக்கள் மனங்களை பண்படுத்துவது பண்பு ஆகும். உள்ளத்தின் செம்மை செழுமை பண்பாகும். பண்பாடு என்பது இனிமையும் ஒளியும் என்றும் சிந்தனையின் தொழில் என்றும். அழகிலும் மனித உணர்ச்சியிலும் ஈடுபாடு என்றும் T.S.E /io$^{+}$ எலியட் எனும் ஆங்கிலம் புலவர் கூறியுள்ளார்.

பண்பாடு என்பது ஓர் இனத்தின் வாழ்வியல் ஆகும். ஓர் இனத்தாரின் கொள்ளைகள் கோட்பாடுகள், நோக்கங்கள், இலட்சியங்கள் வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், சமூகச் சட்டங்கள் மரபுகள், இலக்கிய மரபுகள், அரசியல் அமைப்புக்கள், ஆடை அணிகலன்கள், திருவிழாக்கள், பண்டிகைகள், உணவுப் பழக்க வழக்கங்கள், பொழுது போக்குகள், விளையாட்டுக்கள், வழிபாடுகள் சடங்குகள், சம்பிரதாயங்கள் அவற்றை எல்லாம் பண்பாடு குறிக்கும். ஓர் இனத்தாரின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு உயர்ந்த இலக்கியம் பயன்படுவது போல நாடோடி நாட்டார் இலக்கியமும் பயன்படுகின்றது. இவற்றை நாட்டுப் பாடல்களிலும், நாடோடி இலக்கியங்களிலும், பழமொழி முது மொழிகளிலும், இசை நாடகத்திலும், நாட்டியத்திலும் பரக்கக் காணலாம். மேலும் ஓவியம், சிற்பம், கட்டிடக் கலை, முதலிய கலைகளிலும் ஓரினத்தாரின் பண்பாடு புலப்படும்.

தமிழர் பண்பாட்டை ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாக தமிழ் மக்கள் வளர்த்து வந்த இலக்கியங்களிலும் கவின் கலைகளிலும் காணலாம். நூல்களை பொறுத்தவரை சங்க இலக்கியங்கள் குறிப்பிடத்தக்கவை. தொல்காப்பிய பொருளதிகாரம் குறுந்தொகை, புறநானூறு, திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் பண்பாட்டை விளக்கும் சிறந்த நூல்களாகும் திருக்குறள் பன்னாட்டு மொழிகளிலும் மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட ஒரு சிறந்த நூலாகும்.

தமிழ்ப் பண்பாட்டை அடித்தளமாகக் கொண்டே புலவர்கள் பாடியிருக்கின்றனர். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மொழியில் மறு மலர்ச்சி காரணமாக இருந்த எழுத்தாளர் ஆங்கில புலமை உடையவராக இருந்தாலும் மேல் நாட்டு இலக்கியங்களையும் வரலாற்றையும் கண்டு பயின்றிருந்தாலும் தமிழ் மரபு என்ற தடத்தில் இருந்து விலகிச் செல்லவில்லை. மயிலாடு துறை வேதநாயகம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை, விஜி சூரிய நாராயண சாஸ்திரி எனப்படும் பரிதிமால் கலைஞன், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, திரு வி. கல்யாண சுந்தர முதலியார், பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை, பேராசிரியர் மு.வரதராசன் போன்றவர்கள் தமிழ் ஆங்கிலம் பயிற்சியால் தழிழர் பண்பாட்டை விளக்கினார் ஒழிய அதனை மாற்றவில்லை.

நாகரிகம் என்னும் சொல்லும் பண்பாடு என்னும் பொருளில் இக் காலத்தில் கையாளப்பட்டு வருகிறது உதாரணம் தமிழர் நாகரிகம், இந்து நாகரிகம், ஆங்கிலத்தில் (Civilization) என்று கூறப்படும் பொருளைத்தான் நாகரிகமும் குறிக்கின்றது. சங்க இலக்கியத்தில் நகர் நகரைக் குறிப்பதுடன் ஒரு பெரும் இல்லத்தையும் குறிக்கும். நகரில் சீரடைந்த மக்களை நகர நம்பியா குறிக்கும். சிலப்பதிகாரத்திலும் மணி மேகலையிலும் நகர நம்பியா வருவதைக் காணலாம். ஆரியர் வட இந்தியாவைக் கைப்பற்றிய காலத்தில் திராவிட மக்கள் பெரும் நகர்களில் வாழ்வதைக் கண்டு வியப்பு அடைத்தனர் திராவிட மக்களிடம் இருந்தே நகர்களை அமைக்கவும் ஆரியர் கற்றுக் கொண்டனர்.

**தமிழர் பண்பாட்டின் கோட்பாடுகள் சில**

பரந்த உலக மனப்பான்மை ஒரு கொள்கை ஆகும். புற நானூற்றில் கணியன் பூங்குன்றனார் யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று பாடுகிறார். இந்த கேளீர் என்பது உறவினரைக்குறிக்கும். யாதானும் நாடாமல் ஊராமல் என வள்ளுவர் குறிப்பிடுகின்றார். வள்ளுவர் உலகு என்ற சொல்லை பல இடங்களில் கையாளுகின்றார். விருந்தோம்பல் ஒரு சிறந்த கோட்பாடு வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசை வான்புலம் செல்விருத்து ஒம்பி வருவிருந்து பார்த்திருப்பார் நல்விருந்து வானத்தவர்க்கு என்கிறது. வள்ளுவம் சிவனடியாரை உபசரித்தல் என்பது ஒரு தொண்டாகும் பல நாயன்மார்கள் செய்து வந்துள்ளமையையும் இங்கு குறிப்பிடலாம். பண்டிலி ஞாலத்துள்ளோர்க்கெல்லாம். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என் கடன் பணி செய்துகிடப்பதேயான் பெற்ற இன்பம் பெறுக இவை வையகம் என்ற உயர்ந்த எண்ணம், உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற உயர்ந்த இலட்சிய மனப் பாங்கு இவை தமிழர் பண்பாட்டின் அரிய சில கோட்பாடுகள் என்று கோடிட்டுக் காட்டலாம்.

சமணர், ஐரோப்பியர் ஆகிய பிறநாட்டார் செல்வாக்கடைந்த காலத்தில் தமிழர் பண்பாட்டு அடிப்படை கொள்கையில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. சமணர், புத்தர், ஐரோப்பியர், கிறிஸ்தவர்கள், முகமதியர் தமிழ்ப் பண்பாட்டை தழுவ முயன்றனர். சமணர் இயற்றிய சிலப்பதிகாரம், பௌத்தர் இயற்றிய மணிமேகலை, வீரமா முனிவர் இயற்றிய தேம்பாவணி, உமறுப் புலவர் இயற்றிய சிறாப்புராணம் இவற்றை ஆராயும் காலை இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளை கூறினாலும் தமிழர் பண்பாட்டை விளக்கியே செல்கின்றனர்.

### உலக மனப்பான்மை

தமிழர் உலக மனப்பான்மை உடையவர்கள். பார்ப்பனர் யவனர் புலம் பெயர் மக்கள் தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்தார்கள். பிறமக்களின் நலத்தை கருதும் பண்பு தமக்கென வாழப் பிறர்க்குரியாளன் என்னும் தன்மை இச் சிறப்பை மேலும் வளர்த்தது பிளேட்டோ அரிஸ்டோட்டல் போன்றோர் கிரேக்கர் மட்டுமே உயர்ந்தவர்கள் என்றும் பிறமக்களை நாகரிகம் அற்றவர்கள் என்றும் கூறி வந்தனர். வட ஆரியர் இமய மலைக்கும் விந்திய மலைக்கும் இடையே உள்ள நிலம் தான் புண்ணிய பூமி என்று கருதினர். தமிழரோ யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றார்.

## கண்னோட்டம்

உலக மனப்பான்மையில் இருந்து தோன்றியதே கண்ணோட்டம் ஆகும். தமிழ் நாட்டிற்கு அப்பாலிருந்து வந்த சமயங்கள் எல்லாம் தத்துவம் எல்லாம் தமிழ் நாட்டில் தடையின்றி போதிக்கப்பட்டன. பெரும் விழாக்களில் தத்துவ வாதிகள் சமய வாதிகள் தத்தம் கொடிகளை பறக்க விட்டு தம் கருத்துக்களை பற்றி உரை நிகழ்த்தினர். சமணராகிய இளங்கோ அடிகள் தமிழர் தழுவிய பல பழக்க வழக்கங்களையும் வழிபாட்டு முறைகளையும் விபரித்துக் கூறியுள்ளார்.

### பக்தி இலக்கியம்

பல்வர் காலத்தில் பக்தி இலக்கியம் பெரு வளர்ச்சி கண்டது தமிழைப் பக்தியின் மொழி என்று கூறுவர். பக்தி இலக்கியங்கள் மோல் அழகிலும் ஆழத்திலும், பரப்பிலும் இத்துணை இலக்கியம் வேறெந்த மொழியிலும் இல்லை. சமயகுரவர்களின் தேவாரம் திருவாசகம், ஆழ்வார்களின் நாலாயிர திவ்விய பிரபந்தம் சிறந்த பக்தி நூல்களாகும்.

யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல. நின்பால் அன்பும் அருளும் அறனும் மூன்றுமே பலிபாடல் கூறும் மாசில் வீனையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே - அம்பா சுவாமி கூறுவர்.

இப் பக்திப் பண்பினை ஏனைய தமிழ்க் கலைகளிலும் காணலாம். தஞ்சாவூர் பெரிய கோயில் கங்கை கொண்ட சோழபுரம் இவையும் இசைக்கலை, பரத நாட்டியம் போன்றவை பக்தியால் இயற்றப் பெற்றவை ஆகும். உலகம் போற்றும் ஆட வல்லாரின் வடிவம் இப்பக்தியின் பயன் எனபதை யார் மறுப்பார்? இந்தோனிசியாவல் இருக்கும் பிறம் பாணாதல் தாராள கோயில்கள் கம்பூச்சியாவில் இருக்கும் சில அரண்மனைகள், சிற்பங்கள் தாய்லாந்தில் கொண்டாடப்படும் திருவெம்பாவை திருநாள் இவை தமிழ் பக்தியின் பயனென்றே கூற வேண்டும்.

### ஒழுக்கம்

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என ஒழுக்கத்திற்கே முதலிடம் தந்தனர் தமிழர். நீதி இலங்கியங்களை போற்றினர். வள்ளுவம் ஒரு நீதி நூல் அறம் உரைக்கும் அரிய நூல். ஔவை பாடிய செந்தமிழ் அறமே. ஒழுக்கம் தமிழர் வாழ்வில் அழகையும் மன

நிறைவையும் தருகின்றது.

**மக்கள் நலக் கொள்கை**

ஈகை, இரக்கம், பரோபகாரம், சகிப்புத்தன்மை, அஹிம்சை, பிறர் நலம் பேணுதல், கொடை, கல்வி போதனை, பிறர் துயர் துடைத்தல் பிறர் துண்பம் கண்டு இரங்குதல், உண்மை பேசுதல் பொறுமை, பெறாமை விலக்குதல், மது விலக்கு இப்படியான மக்கள் பண்புக்கு மதிப்பளித்தனர் இல்லறத்தை நல்லறமாக நடத்த விரும்பினர் நன் மக்கள் பேற்றை விரும்பினர் முதியோரை பேணி பாதுகாத்தன மாதா, பிதா, குரு தெய்வம் என போற்றினர். நன்றி மறத்தல் பாவம் என்றனர். குளங்கள் தொட்டனர். உண்ணும் நீர்க் கூவல் அமைத்தனர். உழுதூண் விரும்பினர். உழைத்து வாழ்ந்தனர்.

**பிறரன்பு**

தன்னுயிர் போல் மன்னுயிரையும் நேசிக்கும் பண்பு பிறரிடர் பரிவு அன்பு பாசம் காட்டுதல் இயல்பான குணங்கள் ஆயின. என் கடன் பணி செய்து கிடப்பதே என்று தொண்டுள்ளம் கொண்டு செயற்பட்டனர். கொள்கைச் சான்றோராக வாழ்ந்தனர். பொது நலம் பேணியதால் நய வஞ்சகம் சூது வாது இல்லாது வாழ்ந்தனர்.

**இயற்கை**

இயற்கையை நேசித்தனர்: ஆராதித்தனர் இயற்கை நுண்ணறிவு உடையோராக இருந்தனர். சங்க இலக்கியங்களில் மக்கள் இயற்கையோடு இசைந்து வாழ்ந்தமையை அறிந்து கொள்ள முடிகிறது. நிலத்தினை ஐந்தாக வகுத்தனர். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி, வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல், காடும் காடு சார்ந்த இடமும் முல்லை, பாலை வனப்பகுதி பாலை பூக்களில் மனதை பறி கொடுத்தனர். இயற்கை வனப்பில் திளைத்தனர். முல்லை, காந்தள், கொன்றை இவற்றைப்பாடினர்.

இயற்கைத் தாவரங்களைத்தெய்வ வடிவம் கொடுத்து பேணி வந்தனர்.

**நாட்டுப்பற்று மொழிப்பற்று**

நாட்டுப் பற்று மொழிப் பற்றில் அளவற்ற ஈடுபாடு கொண்டவர்கள் தமிழர்கள்.
தமிழ் திரு நாடு தன்னை எங்கள் பெற்ற தாயென்ற கும்பியடி பாப்பா - பாரதி

தமிழக்கு அமிழ் தென்று பேர்
அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர் - பாரதிதாசன்

தம் தாய் மொழியாகிய தமிழை தெய்வத் தமிழ் எனப் போற்றுவர். தமிழே உன்னால் இருந்தேன் இமயவர் தம் விருந்து அமிழ்தமாயினும் வேண்டேன் என்கிறார் ஒரு சங்கப்புலவர். நனிபசு மொழியும் யாலும் தென்னை நல்சிடும் குளிர் இளநீரும் இனியவை எனினும் தமிழை என்னுயிர் என்பேனா கண்டீர் என்கிறார் பாரதிதாசன், யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது யாதொன்றும் இல்லை என்கிறார் பாரதியார்.

தமிழ் மீது கொண்ட பற்றுக் காரணமாகவே சங்கம் அமைந்து தமிழ் வளர்ந்தனர் புலவர். சங்கம் முதல், இடை, கடை என மூவகைப்படும். இவை தவிர நான்காம் தமிழ்ச் சங்கம் என வழங்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் 1901ம் ஆண்டு நிறுவப்பெற்றது. 1956ல் பொன் விழாப் பொலிவு கண்டது. முதன் சங்கத்தில் 549 புலவர்கள் தமிழ் வளர்த்தனர். அவர்களில் ஈழத்து முரஞ்சியூர் முடிநாகர் என்னும் புலவரும் ஒருவர். இரண்டாம் சங்கம் கபாடபுரம் என்னும் இடத்தில் 3700 புலவர்களைக் கொண்டதாய் 3700 ஆண்டுகள் நிலைத்தது என்பர். மூன்றாம் தமிழ்ச் சங்கம் இன்றைய மதுரையில் 449 புலவர்களைக் கொண்டு 9850 ஆண்டுகள் நிலைத்திருந்தது. அதில் ஈழநாட்டை சேர்ந்த பூதந்தேவன் என்னும் புலவர் வீற்றிருந்து தமிழ் வளர்த்தார். அவர் பாடியனவாக அகநானூறு, குறுந்தொகை, நற்றினை ஆகிய நூல்களில் ஏழு பாடல்கள் கிடைத்துள்ளன.

நன் பாட்டுப் புலவனாய் சங்கமேறி நற்கனக கிழி தருமிக் கருளினோன் காண் என்று திருநாவுக் கரசர் தேவாரம் கூறுகிறது. உயர் மதிற் கூடலின் ஆயந்த வொண்டீந் தமிழின் துறை என மாணிக்கவாசகர் திருக்கோவை பேசும். சங்கத் தமிழ்மாலை என திருமங்கையாழ்வார் பாசுரம் கூறும். ஏழிசை நூற் சங்கம் என்பர் புகழேந்தி புலவர். ஔவையார் சங்கத் தமிழ் மூன்று என்று குறிப்பிடுகிறார்.

### தமிழ் திராவிட மொழிகளின் தாய்

திராவிட மொழிகள் என்னும் கூட்டத்தில் தமிழ், மலையாளம் கன்னடம், துளுவம், சூடகம், தெலுங்கு என்னும் மொழிகள் உள்ளன. இவற்றிற்கு முன் தோன்றி மூத்த மொழியாய் உள்ளது தமிழ் கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் உன்னுதரத்து உதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும் என்பார் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை.

### ஐவகை நிலனும், பண்ணும் இசையும் பறையும்.

தமிழ் வழங்கும் நிலம் ஐந்து குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் இவற்றிற்குரிய பண் முறையே குறிஞ்சிப்பண், முல்லைப்பண், பாலைப்பண், மருதப்பண், நெய்தற் பண் என்பனவாகும். இவற்றிற்குரிய இசை முறையே யாம யாழ், முல்லை யாழ், பாலை யாழ், மருத யாழ், விளரி யாழ் என்பனவாகும், இவற்றிற்குரிய பறை தொண்டகப்பறை, ஏறு கோட்பறை, நிறை கோட்பறை, மணமுழவு மீனு கோட்பறை என்பனவாம். இப்பண்ணுக் குரிய பொழுது முறையே யாமம், விடியல், நண்பகல், மாலை, ஏற்பாடு முல்லைப்பணிக் சாதாரி எனவும், நெய்தற் பண் செவ்விழி எனவும் பெயர் பெறும்.

### சங்க இலக்கியம்

சங்க இலக்கியம் என இன்று வழங்கும் செய்யுள்கள் முன்றாம் தமிழ் சங்கத்தில் எழுந்தன அவை தொகையும் பாட்டும் என இரு பகுப்பானவை தொகை நூல்கள் நற்றிணை, குறுந்தொகை ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பத்துப்பாட்டு திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை பெரும் பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பாட்டினப்பாலை, நெடுல்வாடை ஆகும்.

## பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்

இதில் முதன்மையானது திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் ஆகும். நான்மணிக் கடிகை இன்னாநாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஆசாரக் கோவை பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணை மாலை நூற்றைம்பது, கைந்திலை, களவழி நாற்பது என்பன பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும்.

### தமிழும் இசைக் கருவிகளும்

தமிழர் கண்ட இசைக்கருவிகளுள் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என்பன சிறப்பானவை. தோற்கருவி என்பன பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம் சல்லிகை, கரடிகை, குடமுழா, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரிமுழவு, முரசு, தகுநிச்சம், துடி என்பனவும் பிறவுமாம்.

துளைக்கருவிகள் என்பவற்றுள் வங்கியம் என்னும் குழல், நாதசுரம், மகிடி என்பவை பழமை யானவை. நரம்புக் கருவிகள் என்பவற்றுள் யாழ் சிறப்பானது. அது பலவித வடிவங்களில் அமைந்தது. பலவாய நரம்புக் கூட்டங்களைக் கொண்டது. பேரியாழ், மகரயாழ், செங்கோட்டியாழ், சகோடயாழ் என்பன சிறப்பிடம் வகிப்பன. கஞ்சக் கருவி என்பது தாளம், சாலரா, சப்பாளக கட்டை முதலியவாகும்.

### கல்வியே கருந்தனம்

கல்விக்கு தமிழர் முதலிடம் கொடுத்தனர். பிச்சை புகினும் கற்கை நன்றே என்பது ஔவை வாக்கு. இன்னறுங்கனிச்சோலைகள் செய்தல், இனியநீர் தண் சுனைகள் அமைத்தல், அன்ன சாத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்கிறார் பாரதியார். படியாத பெண்ணாய் இருந்தால் கேலி பண்ணுவர் என்றும் ஊரார் அறிந்தால், மலை வாழை அல்லவா கல்வி கற்றிடக் கற்றிட தெரியும் அப்போது கடிகாரம் ஓடமுன் ஓடு என்கண்ணா அண்டை வீட்டு பெண்களோடு, என்கிறார் பாரதி தாசன். வள்ளுவரும் கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையார் எனக்கேலி செய்கிறார். கல்வியை ஒரு அழியாத சொத்தாகக் கருதிப்போற்றினர் தமிழர்.

### தமிழாராய்ச்சி மாநாடு

தமிழை உலகளவிய ரீதியில் பல்கலைக் கழகங்கள் ஆய்வு செய்கின்றன பன்னாட்டு தமிழ் அறிஞர்களை கொண்டு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை பல்வேறு இடங்களில் நடத்தி வருகின்றனர். ஐந்தாவது தமிழாராய்ச்சி மதுரை நகரில் இனிது நடைபெற்றது.

### உசாத்துணை நூல்

1. செல்வநாயக ஞாபகார்த்த உரை
2. பில்க் வைற் செய்திகள்

# இலக்கியங்கள் காட்டும் மனித வாழ்வு



திரு.கோ.அரியநாயகம்
ஓய்வுநிலை கிராம அலுவலர்,
ஜெயபுரம்.

உலகிலே பல இனங்கள் பல மொழிகள் பல காலாசாரங்கள் தோன்றி வளர்ந்தாலும் தமிழ் மொழியானது உலகில் தலைசிறந்த மொழிகளில் ஒன்றாகவும் பல மொழிகளின் தோற்றத்துக்கு காரணமாகவும் அமைந்திருக்குக்கின்றது என்றால் மிகையாகாது. அதனை நாம்" கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளத் துறவும் உன்னுதிரத் உதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும் ஆரியம் போல் உலக வழக்கம் தொழிந்து சிதையா உன் உரிமைத்திறம் கண்டு செயல் கண்டு வாழ்த்துவமே என்னும் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை பாடல் மூலம் தெளிவாக அறியக் கூடியதாக இருக்கின்றது. மேலும் அம் மொழியைப் போற்றி வளர்த்த தமிழ் மன்னர்களும் நீதி தவறாமல் அரசாண்டது மட்டும் அன்றி அம் மக்களும் சிறந்த பண்பாடு கலாசாரம் உடையவர்களாக வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை பண்டைத் தமிழர்கள் வரலாற்றைக் கூறும் புராணங்களும் இதிகாசங்களும் நீதி நூல்களும் சான்றாக விளங்குகிறது. பண்டைத் தமிழர்கள் குருபக்தி பெற்ரோர் பக்தி, ஜீவகாருண்யம். நல்லொழுக்கம் பஞ்சமா பாதகங்களைச் செய்ய அஞ்சுதல் பெண்களைத் தெய்வமாகப் போற்றுதல் கற்பு நெறி தவறாமை முதலிய நற்பண்புடையவர்களாகவும் அவர்களுக்கென சிறந்த நடை உடை பாவனை உடையவர்களாகவும் வாழ்ந்தார்கள்.

தமிழர்களை அரசாண்ட கிபி என்னும் சர்க்கரவர்த்தியானவன் ஒரு புறாவுக்காக தன்னுடைய உடலில் உள்ள தசைகளை வெட்டி வேடனுக்கு கொடுத்தமையையும் பாரி என்றும் அரசன் முல்லைக் கொடி படர்வதற்கு தன்னுடைய தேரை விட்டுச் சென்றதையும் நாம் அறியும் போது அந்த அரசர்கள் உயிர்கள் மீது ஏவ்வளவு அன்பு ஜீவ காருண்யம் உடையவர்களாக விளங்கினார்கள் என்பதை அறிய முடிகின்றது.

பொற்கைப் பாண்டியன் என்னும் அரசன் இரவு நகர் சோதனைக்காக சென்ற போது நகரில் உள்ள வீடுகளின் வாயிற் கதவைத் தட்டியமைக்காக அரசவையில் அரசனின் கையை வெட்ட வேண்டும். என தீர்ப்பு வழங்கப்பட்ட போது மன்னன் தன்னுடைய கையை எது வித தாமதமும் இன்றி தன்னுடைய கைவாளால் துண்டித்ததையும் நீதி தவறாமல் ஆராச்சி மணி கட்டி அரசாண்டு வந்த மனு நீதி கண்ட சோழ அரசனின் மகனான வீதி விடங்கள் தேரில் வீதியுலா வரும் போது பசுக்

கன்று ஒன்று தேர்ச்சில்லில் சிக்கி இறந்து விட்டது. இதனை கண்ட தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை அடித்ததன் காரணத்தினை அறிந்த அரசன் கன்று இறந்தது போல தன் மகனையும் தேர்ச் சில்லின் கீழ்ப் படுக்க வைத்து கொன்று நீதி வளங்கியதாக. “வளவநின் புதல்வனாங்கோர் மணி நெடும் தேர்மேலேறி அளவில் தேர்த்தானை சூள அரசும் தெருவில் போங்கால் இளைய ஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந்திறந்ததாக தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்தித்தன்மை என்றன் என்னும் புராணங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. இது பண்டைய மன்னரும் மக்களும் நீதி நெறி தவறாதவர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கு சான்றாக அமைகின்றது.

மகா பாரதத்திலே வருகின்ற ஏகலைவன் என்கின்ற வேடனது துரோணாச்சாரியாரை தன்னுடைய மானசீகக் குருவாக ஏற்றுக் கொண்டு வில்வித்தை பயின்று சிறந்த வில்வீரனாக தேர்ச்சியடைந்த பின் ஏகலைவனைச் சந்தித்த துரோணர் குரு தட்சணையாக அவனின் கட்டை விரலை தரவேண்டும் என கேட்ட போது ஏகலைவன் சிறிதும் தாமதிக்காமல் தனது கட்டை விரலை வெட்டி குரு தட்சணையாக கொடுத்தான். இது குரு பக்தியின் மகத்துவத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இராமரிடம் அவரின் சிற்றான்னையாகிய கைகேயி வந்து அவருக்கு பட்டாபிஷேகம் நடப்பதற்கு முதல் நாள் உனது தந்தையாகிய தசரதச்சக்கரவர்த்தி கூறியதாக உனது தம்பி பரதனுக்கு முடி சூட்டு விழா நடத்தி அவனே நாடாள வேண்டும் நீ 14 வருடம் வனவாசம் செய்ய செய்ய செல்ல வேண்டும் என கூறுகின்றாள். அப்போது இராமர் தனது முகத்தில் எது வித வேறுபாடும் காட்டாமல் சந்தோஷத்தோடு காடு செல்கிறார் அதை மன்னவன் பணியென்றாகிலும் நும் பணி மறுப்பனோ என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றே என்னி உறுதியிப்பால் இப்பணி சிரமேற் கொண்டேன் மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும் கொண்டேன்.

என்னும் கம்பராமாயண பாடல் மூலமாக காணலாம் இதன் மூலம் பண்டைத் தமிழர் பெற்றோரை எவ்விதம் போற்றி பாதுகாத்தார்கள் அவர்களின் சொல்லுக்கு எவ்வளவு மதிப்ப கொடுத்தார்கள் என்பதை அறிய முடிகின்றது.

தமிழர்கள் ஒழுக்கம் மிக்க சமுதாயமாகவும் அதற்கு முன்னுரிமை கொடுப்பவர்களாகவும் வாழ்ந்திருக்கின்றார்கள். அதனால் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்” என முன்னோர் கூறினர் அதாவது உயிரிலும் மேலாக ஒழுக்கத்தை மதித்தார்கள். 3000 ஆண்டு முன் வாழ்ந்து உலகிற்கு அரிய திருக்குறள் நூலைத் தந்த திருவள்ளுவர் ஒரு அதிகாரத்தில் “ஒழுக்கத்தின் சிறப்பைப் பற்றியும் அதனை அவசியமாக கடைப்பிடிக்க வேண்டிய தேவை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்கள் பஞ்சமா பாதகங்களைச் செய்ய அஞ்சுபவர்களாகவும் அவர்களை ஆண்ட அரசர்களும் தரும நெறி தவறாதவர்களுமாக அரசாண்டார்கள் யுத்த களத்தில் புறங் காட்டி ஓடுபவர்களைக் கொல்லாதவர்களாகவும் பெண்கள் சிறுவர்களைக் கொல்லாது

காப்பவர்களாகவும் அரசாண்டார்கள். துரோணாச் சாரியார் யுத்த களத்தில் தன்னைக் கொல்வதற்கென்றே பிறந்திருக்கின்ற பெண் வேடத்தை உடைய சிகண்டி என்பவன் யுத்தம் செய்ய எதிரே வந்தபோது தன்னுடைய வில்லை நழுவ விட்டு அவனேடு யுத்தம் செய்யாமல் விட்டகாரணத்தினால் சிகண்டியாலேயே துரோணர் கொல்லப்பட்டதாக மகாபாரதம் கூறுகின்றது இதிலிருந்து தர்ம நெறிக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதை அறிய முடிகின்றது.

நம் முன்னோர் பெண்களைத் தெய்வமாகப் போற்றியதுடன் பெண்களும் கற்பு நெறி தவறாதவர்களாகவும் வாழ்ந்திருக்கின்றார்கள் சீதா இராமன் பின்னே அவர்களுக்கு காவலாகச் சென்ற இலக்குவன் 14 வருடமும் நித்திரை கொள்ளாது காவல் செய்தது மட்டுமன்றி சீதையைக் கவர்ந்து செல்வதற்காக மாய மானாக மாரீசன் வந்த போது சீதைக்கு காவலாக இலக்குவனை நிறுத்தி விட்டு இராமர் மானைத் தேடிச் சென்ற போது அரக்கரின் வஞ்சகத் தன்மையினால் நீண்ட நேரமாகியும் இராமர் திரும்பி வராதமையைக் கண்ட சீதா தன்னை விட்டு விட்டு இராமனைத் தேடிச் செல்லுமாறு இலக்குவனிடம் கட்டளையிட்ட போது தங்களைக் கவர்ந்து செல்வதற்காக அசுரர்கள் செய்யும் சூழ்ச்சி இது எனக் கூறி அவ்விடத்தை விட்டு நகராமல் சீதையை காவல் செய்து நின்ற இலக்குவன் திருமணத்தில் அண்ணாவை அசுரர்கள் கொன்றபின் என்னை கவர்ந்து கொள்வதற்காகத்தான் இங்கே நிற்கிறாயா" என சீதை கூறிய வார்த்தையைக் கேட்ட இலக்குவன் அந்த வார்த்தையைக் கேட்கச் சகிக்க மாட்டாமல் அவ்விடத்தை விட்ட கன்று இராமரைத் தேடிச் சென்ற சமயத்திலேயே சீதையை இராவணன் கவர்ந்து சென்றமையை இராமாயணத்தில் காண்கின்றோம் இதன் மூலம் பெண்களை எவ்வாறு மதித்தார்கள் பிறர் மனைவியை தீண்டாதவர்களாக எப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறிய முடிகின்றது.

அக்காலத்து பெண்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதைத் திருவள்ளுவர் "தற்காத்து தற்கொண்டாள் தகை சான்ற சொற் காத்து சோர்விலாள் பெண்"

என்னும் திருக்குறள் மூலம் மிக அழகாகக் கூறுகின்றார் அதாவது அக்காலப் பெண்கள் அடக்கம் நடையுடை பாவனை மூலம் தங்களைச் சிறப்பாக காவல் செய்து தன்னை தானே ஆட்கொள்பவளாகவும் தகை சான்ற சொல்லாகிய "கற்பரசி" என்கின்ற சொல்லை காப்பாற்றிக் கொள்பவர்கள் பெண்கள் என சிறப்பாக கூறியுள்ளார் சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகியானவள் கற்பரசியாக வாழ்ந்து பாண்டில் நாட்டில் நீதியை நிலை நாட்டிச் சென்ற தாயாக நாம் காண்கிறோம் அத் தாய்க்கு தமிழ் கூறு நல்லுலக மெல்லாம் ஆலயம் அமைத்து வழிபாடு செய்வதை நாம் கண் கூடாகக் காண்கிறோம்.

"நாற் குணமும் நாற் படையாய்
ஐம்புலனும் நல்லமைச்சாய்
ஆர்க்கும் சிலம்பே அணி முரசாய்
வேற்படையும் வாளுமே கண்ணாய்
ஆளுமே பெண்மை அரசு"

அக்காலப் பெண்களின் சிறப்பைப் பற்றி ஒரு புலவர் இப்படிக் கூறிச் சென்றார் அதாவது பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கின்ற நான்கு குணங்களும் நான்கு படைக்கலன்களாகவும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்கின்ற ஐம்புலன்களும் நல்ல மந்திரிகளாகவும் சத்தம் செய்கின்ற அவர்களின் காலில் கட்டிய சிலம்பினது சத்தம் முரசப்பறையாகவும் அவளது இரண்டு கண்களும் வாளும் வேலும் ஆகிய இரண்டு ஆயதங்களாகவும் பெண் உலகை ஆட்சி செய்தாள் என புலவர் கூறுகின்றார். இவைகள் நம் முன்னோர் பெண்களை எவ்வளவு உயர்ந்த இடத்தில் வைத்துப்போற்றினார்கள் அவர்கள் எவ்விதம் கற்பு நெறி தவறாது வாழ்ந்தார்கள் என்பதை சுட்டியும் கூறி நிற்கின்றது

தமிழர்கள் எவ்விதம் நன்றியறிதல் உடையவர்களாக வாழ்ந்தார்கள் என்பதற்கு அவர்கள் எடுக்கும் விழாக்கள் சான்றாக உள்ளன அதாவது எமது வாழ்வுக்கும் எமது தொழிலுக்கும் உறுதுணையாக இருக்கும் சூரிய தேவனுக்கு நன்றி தெரிவிக்கும். பொருட்டாக தைப் பொங்கல் பொங்கி விழாக் கொண்டாடுகின்றோம் எமது தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும் மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டாக தைப் பொங்கலின் அடுத்த நாள் மாட்டுப் பொங்கல் பொங்கி கொண்டாடுகின்றோம். இவைகள் தமிழர்களின் நன்றி மறவாத பண்பை எடுத்தியம்பி நிற்கின்றன.

பண்டைத் தமிழர்கள் வேட்டி, சால்வை அணிபவர்களாகவும் பெண்கள் சேலை கட்டி தலையிலே பூ மாலை சூடி நெற்றியில் திலகம் இடுபவர்களாகவும் வாழ்ந்தார்கள். இது அவர்களின் அன்பின் அடையாளமாகவும் அமைதியான சுபாவத்தையும் எடுத்தியம்பி நிற்கின்றன. இதனையே பாரதி தாசன்.

“தமிழன் என்றொரு இனம் உண்டு
அவற்கே தனக்கொரு மதிப்புண்டு
தமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும் என கூறிச் சென்றார்

ஒரு இனத்தின் வாழ்வு அவர்களின் கலை, கலாசாரம், பண்பாடு இவற்றைக் கட்டிக் காப்பதில் முக்கிய பங்கு உண்டு. தற்காலத்தில் மேல் நாட்டு நாகரீகத்தின் மோகம் காரணமாகவும் சினிமாத்துறையினர் எமது வாழ்வைப் பற்றி சிறிதும் சிந்திக்காமல் வியாபாரத்தையே முதன்மை நோக்காமாகக் கொண்டு படங்களைத் தயாரிப்பதன் காரணமாகவும் எமது இனத்தின் தனித்துவமும் எமது இனத்தின் கலை, கலாசாரம். பண்பாடு போன்றவை மங்கி மறைந்து கொண்டு போவதைக் காண்கிறோம். எமது கலை, கலாசாரம், பண்பாடு இவற்றை வளர்ப்பதில் கலாசார விழா எடுப்பது முக்கிய பங்கு உண்டு என்றால் மிகையாகாது. பண்டைத் தமிழர் வரலாற்றைக் கூறும் புராண நாடகங்கள் போட்டிகள் முதலியவற்றை வைத்து ஊக்குவிப்பதன் மூலம் எமது கலை கலாசாரத்தைப் பாதுகாக்க முடியும்.

# எல்லோரிடமும் குறை உண்டு



திரு.சி.சிவப்பிரகாசம்
கறுக்காய்த்தீவு,
பூநகரி.

பாண்டவர்கள் ஐவரும் பாஞ்சாலியுடன் வீடு பேற்றை செல்லும் பெரும் பயணத்தை தொடங்கினார்கள்.

முதலில் தருமர் சென்றார். அவர் உள்ளம் இறைவனையே எண்ணியபடி இருந்தது. அவருக்குப் பின் பீமனும் அடுத்ததாக அர்ச்சுனனும் தொடர்ந்து நகுல சகாதேவனும் பாஞ்சாலியும் சென்றார்கள். நாய் ஒன்றும் அவர்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது.

நீண்ட நாட்கள் பயணத்துக்குப்பின் அவர்கள் இமைய மலையை கடந்தார்கள். மேருமலையை அடைந்தார்கள். வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்தார்கள்.

யோக நெறி காரணமாக அவர்கள் வானத்தில் தவழ்ந்தபடி சென்று கொண்டிருந்தார்கள். தீடீர் என்று பாஞ்சாலி தரையில் விழுந்தாள். தருமரைத் தவிர மற்ற நால்வரும் திரும்பிப் பார்த்தார்கள்

அண்ணா! அறநெறி சிறிதும் வழுவாதவர் பாஞ்சாலி பெரும்பாலும் நிறைவேறாமலே விழுந்ததற்கு காரணம் என்ன? என்று உணர்ச்சி பொங்கக் கேட்டான் பீமன்.

“தம்பி பீமா! இப்படி பற்றுடன் வினவுவதை விட்டுவிடு, எல்லோரிடமும் இணையாக அன்பு கொள்ள வேண்டிய இவள் அர்ச்சுணனிடம் மட்டும் அதிக அன்பு செலுத்தினாள் அதலால் தான் விழுந்தாள்” என்றார்.

சிறிது தொலைவு அவர்கள் சென்றார்கள் இப்பொழுது சகா தேவன் விழுந்து விட்டான்.

அண்ணா! அறிவுக் கூர்மையும் நற்பண்புகளும் உடைய சகாதேவன் விழுந்த காரணம் என்ன? என்று கேட்டான் பீமன்

“தம்பி! கல்வியில் தனக்கு நிகரானவர் யாரும் இல்லை என்ற செருக்கு சகாதேவனுக்கு இருந்தது அந்தக் குற்றத்தால் தான் விழுந்தான்.

அடுத்ததாக நகுலன் விழ அதே கேள்வியைக் கேட்டான் பீமன்

அதற்கு தருமர் "தானே பேரழகன் என்ற ஆணவம் நகுலனுக்கு அதனால் தான் விழுந்து விட்டான், பற்றை விட்டு விட்டுத் திரும்பிப் பாராமல் நட" என்றார்.

அடுத்ததாக அர்ச்சுணனும் விழுந்தான் "அண்ணா! நல்லவனும் உலகம் போற்றும் வில்லாளியுமான அர்ச்சுணன் ஏன் விழுந்தான்?" என்று கேட்டான் பீமன்.

"தம்பி! தன் வில்லாற்றலில் அளவுக்கு அதிக நம்பிக்கை வைத்திருந்தான் அர்ச்சுணன் அதனால் எல்லா வில்லாளிகளையும் இகழ்ந்து பேசினான். மூன்றாம் நாள் போரில் தான் ஒருவனாகவே பகைவர்களை எல்லாம் அழித்து விடப் போவதாகக் கண்ணனிடம் வீரம் பேசினான் சொன்னபடி செய்ய வில்லை இதனால் தான் விழுந்தான் என்றார் தருமர்.

சிறிது தொலைவு அவர்கள் இருவரும் சென்றார்கள் நாய் தொடர்ந்து வந்து கொண்டிருந்தது பீமனும் விழுந்தான்.

உரத்த குரலில் அவன், "அண்ணா! நான் விழுந்ததற்கு காரணம் என்ன? என்று கேட்டான்.

தம்பி! இன் சொல் உன்னிடம் இல்லை அதனால் விழுந்தாய் என்ற தருமர். திரும்பிப் பாராமலே நடந்தார்.

பொன்னாலாகிய தேரில் இந்திரன் அங்கு வந்தான் "உம்மைச் சொர்க்கம் அழைத்துச் செல்ல வந்துள்ளேன். தேரில் ஏறுக என்று அன்புடன் சொன்னான்.

"இந்திரனே! என் அன்புத் தம்பியரும் ஆருயிர் மனைவியும் வழியிலேயே விழுந்து இறந்தார்கள், அவர்கள் இல்லாமல் நான் மட்டும் மேல் உலகம் செல்ல விரும்பவில்லை" என்றார் தருமர்.

"அவர்கள் உடம்பை இங்கே விட்டு விட்டுச் சொர்க்கம் சேர்ந்து விட்டார்கள். மனித உடம்புடன் சொர்க்கம் செல்லும் பேறு உமக்கு மட்டுமே கிடைத்து உள்ளது தேரில் ஏறும்" என்றான் இந்திரன்.

இந்த நாயும் என்னுடன் வரவேண்டும் என்றார் தருமர்.

"நாய் சொர்கத்துக்குள் வரக் கூடாது நீர் மட்டும் ஏறும்" என்றான் இந்திரன்.

"நம்பியவர்களை எப்பொழுதும் கைவிட மாட்டேன் இந்த நாய் சொர்க்கம் வரும் வாய்ப்பு இல்லையானால் நானும் சொர்க்கப் பேற்றை இழக்கிறேன்" என்று உறுதியுடன் சொன்னார் தருமர்.

அப்பொழுது அந்த நாய் தரும தேவதையாக மாறியது "தருமா! ஒரு நாய்க்காகச் சுவர்க்கப் பேற்றையே இழக்கத் துணிந்தாயோ உமக்கு இணையானவர் மூவுலகிலும் இல்லை உம்புகழ் என்றும் நிலைத்து நிற்கும்" என்று வாழ்த்தினார்.

அந்தப் பொன்தேர் நரகத்தின் வழியாகச் சென்றது "உத்தமரே! உமது காற்றுப் படுவதனால் எங்கள் வேதனை சிறிது குறையும் சிறிது நேரம் இங்கேயே நின்று விட்டுச் செல்லுங்கள்" என்ற அவலக்குரல்கள் தருமருக்குக் கேட்டது.

தேரை நிறுத்திய அவர் "நரகத்தில் கொடும் துன்பம் அனுபவிக்கின்றீர்களே நீங்கள் யார்?" என்று கேட்டார்.

"நான் கர்ணன்", "நான் பீமன்", நான் அர்ச்சுனன்" என்று குரல் அவருக்கு கேட்டது.

திடுக்கிட்ட அவர், "நல்லவர்களான என் உடன் பிறந்தவர்கள் நரகத்தில் துன்பப் படுகிறார்கள் கொடியவர்களான துரியோதனாதியர் சொர்க்கத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் இது என்ன கொடுமை? என் தம்பியருடன் நானும் நரகத்திலேயே தங்குகிறேன் பொன் தேரே! என்னை இங்கேயே இறக்கி விட்டுச் செல்" என்றார்.

உடனே அந்த நரக உலகக் காட்சி மறைந்தது எங்கும் இனிய நறுமணம் வீசியது.

இந்திரனும் தரும தேவதையும் தருமர் முன்தோன்றினார்கள்" மகாபாரதப் போரில் நீர் அசுவத்தாமன் என்ற யானை இறந்து விட்டது என்று பொய் புகன்றீர். அதனால் துரோணர் கொல்லப்பட்டார் அந்தப் பாவத்துக்காக நரகத்தை பார்க்க வேண்டிய விதி உமக்கு வந்தது. இனி உம் தம்பியருடன் சொர்க்கத்தில் நிலையாகத் தங்கி இருக்கலாம்" என்று சொல்லிவிட்டு மறைந்தார்கள்.



# தொழில் சார் மன அழுத்தம்



திரு.நா.கஜீதரன்
**(B. A. IN. PSYCHOLOGY, DIP. IN. CONSELLING)**
வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர்
கிளி/ நாச்சிக்குடா அ. மு. க. பாடசாலை

தொழில்சார் மன அழுத்தம் என்றால் என்ன? எனப் பார்க்கும் முன்பு, மன அழுத்தம் என்றால் என்ன? என்பதை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும் எல்லோரும் நாளாந்த வாழ்வில் பல சமயங்களில் மன அழுத்தங்களை அனுபவிக்கின்றனர் அந்தவகையில் மன அழுத்தம் என்றால் என்ன? என்பது பற்றி ரெய்லர் (Taylor) தந்த வரைவிலக்கணத்தை நோக்கினால், "உடலியல், உளவியல் தொழிற்பாட்டைப் பாதிக்கின்ற அல்லது பாதிப்பதாக அச்சுறுத்தும் நிகழ்வுகளுக்குத் துலங்கும் செயன்முறையே மன அழுத்தமாகும்" என்றுள்ளார். அதே மாதிரி வோல்ரர் கனொன் (Walter Cannon) மன அழுத்தம் பற்றிய ஆய்வில் மிகவும் பிரசித்தமானவர் மன அழுத்தத்தின் போது உடலின் எதிர்வினை எப்படி அமையும் என்பதை முதலில் குறிப்பிட்டவர் இவராவார். உதாரணமாக ஒருவர் மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளாகும் போது இதயம் கனக்கும், மூச்சு விடக் கடினமாகவிருக்கும் அதே மாதிரி மன அழுத்தம் எமது மனவெழுச்சி சார் விளைவுகளை, முக்கியமாக உடலியல் மாற்றங்களை உருவாக்குகின்றன எனக் ஹான்ஸ் சீலி (Hand Selye - 1976) குறிப்பிட்டார் அந்த வகையில் தொழில்சார் மன அழுத்தம் என்றால் என்ன? என்பதை நோக்குவோம்.

### தொழில் சார் மன அழுத்தம் தொடர்பான வரைவிலக்கணங்கள்

தற்போதைய உலக சுகாதாரத்தின் (WHO) வேலையில் எதிர்பார்க்கப்படும் தேவைகள் அவர்களின் திறனுக்குச் சவாலாகவும், அவர்களின் அறிவு மற்றும் திறன்களுக்குப் பொருத்தமில்லாமல் அழுத்தங்களைக் கொடுக்கும் போது, மக்களுக்குத் தொழில்சார் மன அழுத்தத்தைத் தரும் என வரையறை தந்துள்ளது.

நியூயோர்க் ஒக்ஸ்போட்டின் (New york oxford) வரையறைப்படி, ஒரு தனிப்பட்ட எதிர் வினைகள் அல்லது விகாரங்களில் இருந்து இறுக்கமான வேலை நிலைமைகள் அல்லது அழுத்தங்களால் மன உடல் அல்லது உணர்ச்சி சூழல், பணியிடை கோரிக்கைகளை முடிக்க ஒரு தனிப்பட்ட திறனிடையே முரண்பாடு உள்ளபோது தொழில்சார் மன அழுத்தம் ஏற்படலாம் என்று வரையறுத்துள்ளது.

மால் கொல்ம் ரீ (Mal Colm tee) என்பவரின் கருத்துப்படி, மன அழுத்தம் அதிகரிக்க ஊழியர்களது உற்பத்தித்திறன் வீழ்ச்சியடையவும் அதனூடாக நிறுவனத்தின் வெளியீடும்

இலாப உழைப்பும் குறைவடைகின்றது. இதன் காரணமாகவே தற்கால நிறுவனங்கள் ஊழியர்களது மன அழுத்தத்தை இனங்கண்டு அவற்றை நிர்வகிப்பதற்கென அழுத்த முகாமைத்துவத்தின் மீது அக்கறை காட்டி நிற்கின்றனர் அதேசமயம், தொழிலாளர்களுக்குத் தோன்றக் கூடிய அழுத்தமானது நிறுவன ரீதியான அழுத்தமாகவும் காணப்பட முடியும் என்றார்.

**வேலை சார் மன அழுத்தம் தோன்றுவதற்கான காரணங்கள்**

1. வேலைச்சுமை ஒரு வேலைத்தளத்தில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டு ஊழியர்களின் நலனில் அக்கறை செலுத்தாமல் வேலைச்சுமையை ஒருவனில் ஏற்படுத்தும் போது மன அழுத்தம் அதிகரிக்கும்.

2. தீர்மானமெடுக்கும் பொறுப்பிருத்தல் - உதாரணமாக ஒருவர் திடீரென பதவியுயர்வைப் பெற்று தீர்மானம் எடுக்கும் பொறுப்பை ஏற்பாராயின் அவருக்கு அது பெரும் மன அழுத்தத்தை உண்டு பண்ணும்.

3. தலைமைத்துவ இயல்பு கடுமையாக இருத்தல் ஒரு நிறுவனத்தில் சர்வாதிகார தலைமைத்துவம் இருக்கும் பட்சத்தில் அங்கு ஊழியர்களின் நலன் கருத்தில் எடுக்கப்பட மாட்டாது எனவே, ஊழியர்களின் மன அழுத்தம் அதிகரிக்கும்.

4. சுதந்திரமில்லாத நிலமை - சின்னச்சின்ன விடயங்களிற்கும் மேலிடத்திற்கு அறிவித்து, அதன் பின்புதான் தீர்மானம் எடுக்க இயலுமாயின், அது கீழ்மட்ட ஊழியர்களுக்கு மன அழுத்தத்தை உண்டு பண்ணும்.

5. சாதகமற்ற வேலைச்சூழல் - ஒரு வேலைச்சூழலில் வெளிச்சம், சத்தம் போன்ற பௌதீக நிலைமைகள் வேலை செய்பவர்களுக்கு இடையூறை உண்டு பண்ணும் வகையில் அமையுமாயின் பணியாளர்களால் மனவிருப்புடன் வேலை செய்ய இயலாது.

6. கடுமையான மேர்ப்பார்வை இருத்தல் - கடுமையான மேற்பார்வையின் போது, வேலைத்தவறுகளை விடக்கூடாது என்பதற்காக தீவிரமாக வேலை செய்வர். எனவே அங்கு அவர்களுக்கு ஒரு சுதந்திரம் இருக்காது. எனவே அது மன அழுத்தத்தை உண்டு பண்ணும்.

7. வேலையில் இளைப்பாறுதல் - ஓடித்திரிந்து வேலை செய்தவர்கள் திடீரென இளைப்பாறியவுடன் அது அவர்களுக்கு ஒரு தனிமை ஏற்படுத்துகின்றது. அவர்களது பிள்ளைகள் திருமணம் முடித்து போயிருப்பார்கள் எனவே தனிமையில் இருக்கும் போது அவருக்கு மன அழுத்தம் ஏற்படக்கூடும்.

8. இடமாற்றங்கள் - ஒருவர் இன்னொரு இடத்திற்காக வேலைக்காக இடமாற்றங்களைப் பெறும் போது அச்சூழல் அவருக்கு புதிதாக அமைதல் அவருக்கு ஏற்ற போக்குவரத்து, உணவு, இட வசதிகள் சரியான வகையில் அமையாவிடின் இவையும் மன அழுத்தத்தை உண்டு பண்ணும் மேற்கூறப்பட்ட அழுத்தங்கள் நிறுவன ரீதியான அழுத்தங்களாகும் இனி ஊழியர்களைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட அழுத்தங்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன அவையாவன
   1. விபத்தின் சிக்குதல்
   2. சுகயீனம் ஏற்படுதல்

3. குடும்ப உறுப்பினர் இறந்து போகுதல்
4. திருமணம் செய்து கொள்ளுதல்
5. வறுமை
6. விவகாரத்துச் செய்து கொள்ளுதல்
7. குடும்பத்தின் முரண்பாடு
8. நிதிக்கஸ்டம் காணப்படுதல்
9. குடியிருப்பு இல்லாதிருத்தல்
10. பங்கு முரண்பாட்டைக் கொண்டிருத்தல்
11. பதவி உயர்வை பெறமுடியாதிருத்தல்
12. ஓய்வு கிடைக்காமல்
13. உணவு தேவை பூர்த்தியாகாமை
14. பொழுது போக்கிவிடுபட முடியாமை
15. சகபாடி உறவைப்பேன முடியாமை

அமெரிக்காவில் உள்ள உளவியல் நிறுவனத்திலே மேற் கொள்ளப்பட்ட ஆய்விலே பின்வரும் பண்புகள் உள்ளவர்களிடம் அழுத்தம் தோன்றியதை எடுத்துக் காட்டுவதாகக் கூறப்படுகின்றது.

1. ஊழியர் கவலையுடன் காணப்படுதல்
2. உறசாகமின்றிக் காணப்படுதல்
3. இரத்த அழுத்தம் தோன்றியிருத்தல்
4. நித்திரையின்மை
5. கோபம் அதிகரித்தல்
6. மதுபானம் பாவிக்கத் தொடங்குதல்
7. நோய் வாய்ப்படுதல்
8. மனநோய் ஏற்படுதல்
9. வரவீனம் ஏற்படுதல்
10. ஒத்துழைப்பு வழங்க மறுத்தல்

இதனை விட மேலும் உளரீதியான பாதிப்புக்களை நோக்கினால்

1. அதிக பதற்றம்
2. உளச்சோர்வு அதிகரித்தல்
3. மனதை ஒரு நிலைப்படுத்த முடியாமை
4. ஞாபகசக்தி குறைவடைதல்
5. குறகிய நேரத்துக்குள் களைப்படைதல்
6. நிறுவனத்தின் மீது வெறுப்படைதல்
7. பசியின்மை
8. தனிமையை நாடுதல்

இன்றைய இலத்திரனியல் உலகில் மன அழுத்தம் அதிகரித்தமைக்கான காரணங்கள்

1. நிறுவனங்களிற்கிடையே ஏற்பட்ட அதிகரித்த போட்டி
2. இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட நிர்வாக அலகுகள்
3. அதிகரித்த பணிச்சுமை
4. இலத்திரனியல் மயமாக்கப்பட்ட தொழிற் கலாசாரம்
5. ஊழியர்களிடையே காணப்படும் போட்டி
6. நிறுவனங்களின் எல்லையற்ற நோக்கங்கள்

தொழில்சார் மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் முறைகள்

1. ஊழியர்களுக்கு தேவையான ஆலோசனை வழங்குதல்
2. ஊழியர்களுக்கு ஆத்திரம் ஏற்படுவதைத் தவிர்த்தல்
3. பெருமளவு பொழுது போக்கினைத் தவிர்த்தல்
4. அழுத்தத்தைக் குறைக்கப் பயிற்சிகள் வழங்குதல்
5. ஆலோசனைச் சேவை மேற்கொள்ளல்
6. தேவையான புத்திமதி கூறுதல்
7. தொழிலாளர்களுக்கு நம்பிக்கை ஊட்டுதல்
8. மீள்வழிகாட்டும் நடைமுறைகளை அறிமுகப்படுத்தல்
9. ஊழியர்களின் வெளிப்பொறுப்புக்களைக் குறைக்க நடவடிக்கை எடுத்தல்
10. பொருத்தமான ஊக்குவிப்புக்களை வழங்கல்

மன அழுத்தத்தைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள்

1. தியானம் தொடர்பான அறிவுறுத்தல்
2. உடற்பயிற்சி தொடர்பான அறிவுறுத்தல்
3. ஊழியர்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்
4. வேலைச்சுழற்சியை அமுல்படுத்தல்
5. பொழுது போக்கு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
6. ஊழியர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லுதல்
7. மனதை ஒருநிலைப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

### வழங்கப்படும் சிகிச்சை முறைகள்

1. உளநல உதவி வழங்கல்

உளநல உதவி வழங்கல் என்றால் பிரச்சினைகளோடு வருபவரை ஏற்றுக் கசப்பான உணர்வுகளைப் பகிர உதவி, அவர்களது உணர்வுக்குள் புகுந்து, அவரது ஏக்கங்களையும், தேவைகளையும், ஆசைகளையும் அறிந்து, அவரது பிரச்சினையின் உண்மை நிலையினை அவரையே அறியச் செய்தலாகும். மேலும், அவரே அப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டெடுத்துத் தீர்மானத்தில் வெற்றி பெறுகின்றாரா? என்று துணை நபருடன் இணைந்து சோதித்து பிறரோடு நல்லுறவுகளைக் கட்டியெழுப்பி அவரது ஆற்றலினை உணர்ந்து முழுமையான வாழ்வு பெறச் செய்யும் கலை ஆக்கம் அதாவது அவருக்கு உருவாகிய நெருக்கீட்டினை ஆரோக்கியமான

வழியில் கையாளும் வழிமுறைகளை எடுத்துக் கூறுவதலாகும் உளநல உதவி வழங்கல் என்பது, இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கோ இடையில் உள்ள சுறுசுறுப்பான சக்தி வாய்ந்த நோக்கத்தோடு கூடிய தொடர்பு அதில் துணை நாடுவோரின் தேவைகள் வேறுபட்டனவாக இருக்கலாம் ஆனால், அப்பொழுதும் துணை நாடுநருக்கும், துணை வழங்குபவருக்கும். இடையே சுயநிர்ணயச் செயல்பாடு என்னும் பரஸ்பர பங்களிப்பு குவிந்துள்ளது என எட்வின் ஹேர் (Edwin Herr) குறிப்பிடுகின்றார்.

**உள ஆற்றுப்படுத்தல் துறையைப் பின்வருமாறு பிரிக்கலாம்.**

**1. உள ஆற்றுப்படுத்தல் திறன்கள்**

உள ஆற்றுப்படுத்தலானது பல்வேறு தனித்துவமான துறைகளைக் கொண்டிருந்தாலும் அனைத்திற்கும் தேவையான திறன்கள் உண்டு. அவற்றை ஆரம்ப நிலைத்திறன், தேர்ச்சி நிலைத்திறன் என இரண்டாகப் பிரித்து நோக்கலாம். ஆரம்ப நிலைத்திறன்களில் தேர்ச்சி அடைந்த பின்னரே, தேர்ச்சி நிலைத்திறன்களுக்கான பயிற்சி வழங்குவதுண்டு.

**2. உளக்குணமாக்கல் முறைகள்**

உளக்குணமாக்கல் முறை 150ற்கு மேல் உள்ளதெனினும் கீழுள்ளவையே முக்கியமானவையாக கருதப்படுகின்றன.

1. ஆள்மைய முறை
2. கெஸ்ரால் முறை
3. உளப்பகுப்பாய்வு முறை
4. அட்லர் வாத முறை
5. நடத்தை வழிமுறை
6. யதார்த்த வழி முறை
7. இருப்பியல் சிந்தனை முறை
8. உறவு உளநிலை ஆய்வு
9. குடும்ப அமைப்பு வழிமுறை
10. பெண்ணிலைச் சிந்தனை வழிமுறை

**உளநல உதவி வழங்கலின் நோக்கங்கள்**

1. சூழலுக்கு பொருத்தப்பாடடையச் செய்தல்
2. பிரச்சினையைத் தீர்த்தலும், தீர்மானம் எடுத்தலும்
3. ஒருவர் தன்னைத் தானே அகநோக்க வைத்துத் தன்னையும் மற்றவர்களையும் விளங்கிக் கொள்ள வைத்தல்
4. நேரான உள ஆரோக்கியத்தை அடைந்து கொள்வதன் மூலம், வாழ்வினை நேரான பார்வை பார்க்கச் செய்தல்
5. தமது இலக்குகளை அடையத் தடையாகவுள்ள விடையங்களைச் சரியான வகையில் கையாள உதவுதல்
6. சுயதிறன் மேம்பாடடையச் செய்தல்

## 2. குடும்ப ஆற்றுப்படுத்தல் சிகிச்சை

குடும்ப ஆற்றுப்படுத்தல் என்பது குடும்பத்தில் உள்ள மனைவி, பிள்ளைகள் என்போரை அழைத்து அவர்கள் எத்தகைய இடர்களை எதிர்நோக்குகின்றனர் என்பதை அவரிடமிருந்து பெற்று அதிலிருந்து பிரச்சினைக்குரிய காரணங்களைக் கண்டு, அதனை விளங்க வைத்து அதிலிருந்து அவர்களாகவே விடுபட வழிமுறைகளை கூறல். குடும்ப ஆற்றுப்படுத்தல் சிகிச்சை அணுகுமுறைகள் மனித நடத்தைகளைப் புரிந்து கொள்ளும் வழிகள் பற்றியும் விளக்குகின்றன குடும்பமானது தனிநபர் ஒருவரின் ஆளுமையை உருவாக்குவதில் செல்வாக்கு செலுத்துகின்றது இதனைத் தனிநபர் சிகிச்சையாளர்கள் தற்போது ஏற்றுக் கொள்கின்றனர் அந்த வகையில் குடும்ப ஆற்றுப்படுத்தலில் குடும்பத்தார் அனைவரையும் சேர்த்துத்தான் சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

குடும்ப ஆற்றுப்படுத்தலில் பிரச்சினைக்குரிய விடயங்கள் ஒரு நபருக்கு வெளியேயும், குடும்பத்திலும் மற்றும் தொடர்புகளிலும் இருப்பதாகக் கொள்ளப்படுகின்றன. எனவே குடும்ப அமைப்பில் மாற்றத்தைக் கொண்டு வருதல் சிகிச்சை முறையாக அமைகிறது. அப்படி மாற்றத்தை ஏற்படுத்தும் போது ஒவ்வொரு குடும்ப அங்கத்தினரும், அவரது வாழ்வு முறையும் மாற்றமடைகின்றது. ஆகவே குடும்ப ஆற்றுப்படுத்தலில் தனிநபர் மட்டுமல்ல முழுக்குடும்பமே மாற்றமடைகிறது எனவே பிரச்சினைகளில் இருந்து இலகுவாக வெளியே வரவும் முடியும்.

3. அறிக்கை நடத்தைச் சிகிச்சை வழங்கல் உள ஆற்றுப்படுத்தல் சிகிச்சைக்குப் பயன் படுத்தும் நுட்பங்களே இங்கும் வழங்கப்படும். மக்கள் தம்மைப் பற்றியும் உலகம் பற்றியும், சமூகம் என்பவற்றைப் பற்றியும் கொண்ட தவறான கருத்துக்களை மாற்றுவதன் மூலம், மக்களுடைய சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தச் சிகிச்சை அளிப்பவர்கள் கவனம் செலுத்துகின்றனர். இம் முறையில் ஒருவருடைய நம்பிக்கைகள், யதார்த்தமான, நியாயமான, தர்க்கரீதியான கருத்துக்களை மீளமைத்து ஏற்கச் செய்யும் முயற்சியாகும் அனேகமானவர்கள் உண்மையற்ற, யதார்த்தமற்ற, பொருத்தம் அற்ற கருத்துக்களை ஏற்றுக் கொண்டிருப்பதால் மகிழ்வற்ற, உளரீதியான. ஒழுங்கீனமான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

நாம் செய்யும் ஒவ்வொரு முக்கியமான செயலுக்காகவும், நாம் விரும்பப்படுவது அவசியம் நாம் பிரயோசனமானவராக இருப்பதாக நாம் நினைக்க வேண்டுமாயின் நாம் முழமையான போதிய அளவு வெற்றிகரமான சகல துறைகளிலும் இருக்க வேண்டும் நாம் விரும்பிய வண்ணம் நடைபெறாவிட்டால் அது பயங்கரமானதாகவிருக்கும்

தம்மிடம் சிகிச்சை பெறுபவர்களை தவறான கருத்துக்களைக் கைவிடச் செய்வதற்காகச் சிகிச்சை அளிப்பவர்கள், சிகிச்சை அளிக்கும் போது மிக உற்சாகமாக, நேரடியான முறையில் அவர்களது கருத்துக்களை மறுத்துரைப்பார்கள். அவர்கள் தமது கருத்தை தர்க்க ரீதியாக எடுத்துரைப்பார்கள் இம்முறையினால் சிகிச்சை பெறவோ, யதார்த்தமான, உண்மையான விதத்தில் தமது கருத்துக்களையும், சூழ்நிலையையும் புரிந்து மாற்றிக் கொள்வார்கள்.

மகிழ்வுடன் வாழ மனம் விட்டுப் பேசுவோம்.

# பால் உற்பத்திக்கான பசுந்தீவனங்கள்



செல்வி க. தணிகா
கால்நடை அபிவிருத்தி போதானாசிரியர்
கால்நடை வைத்திய அலுவலகம்
பூநகரி.

இலாபகரமான பால் உற்பத்திக்கு மேம்படுத்தப்பட்ட புல் இனங்கள் அதிக பங்களிப்பைச் செய்கின்றன. அவையாவன மேய்ச்சல் புல், வெட்டுப் புல், அவரை இன மரங்கள், உலர்புல் மற்றும் சைலேஜ் என்பனவாகும். இலங்கையானது பல்வேறுபட்ட காலநிலைகளை கொண்டிருப்பதனால் நமது பிரதேசத்திற்கு பொருத்தமான புல்வகையைத் தெரிவு செய்து பயிர்செய்வது மிகவும் பொருத்தமான செயற்பாடாகும். இத்தகைய புல் இனங்களின் மத்தியில் கலப்பின வெட்டும் புல்லான நேப்பியர் வகை($CO_3$) முக்கியமானதாகும்.

**செறிந்த வளர்ப்பு முறையில் நடுகைப்பொருட்களை உற்பத்தி செய்வதிலுள்ள நன்மைகள்**

- ✓ கால்நடைக்கு உணவாக வழங்கப்படுகின்ற புற்களின் அரை முற்றல் நிலையில் உள்ள தண்டுகளின் கீழ்ப்பகுதியில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணுக்களை உபயோகிக்க முடியுமாக இருத்தல்.
- ✓ நோய் மற்றும் பீடைத்தாக்கமற்ற நடுகைப்பொருட்களை உற்பத்தி செய்யக் கூடியதாக இருத்தல்.
- ✓ சிறிய இடத்தில் அதிகளவிலான நடுகைப்பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியதாக இருத்தல்.
- ✓ வெளிக்களத்தில் பயிரிடப் பொருத்தமான காலம் வரை நடுகைப்பொருட்களை சிறிது காலத்திற்கு சாடியில் அல்லது பொலித்தீன் பையிலேயே வைத்திருக்க கூடும்.
- ✓ நீர் குறைந்த அளவு தேவைப்படல் மற்றும் இலகுவில் நீர் வழங்கக்கூடியதாக இருத்தல்.

**01 மேய்ச்சல் புல்**

மேய்ச்சல் புல் என்பது கால்நடைகள் சுயமாக மேய்ந்து தமது போசணைத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய புல்லாகும். பெரிய அளவிலான நிலப்பரப்பைக் கொண்ட பண்ணைகளிலேயே மிகவும் பயனளிக்கக் கூடியது. அநேகமாக இலங்கையின் காலநிலைக்கும் மண்வளத்திற்கும் ஏற்ப புற்றரை பராமரிக்கப்பட வேண்டும். இப்புற்றரையை நன்கு

பராமரிப்போமாயின் 10 ஏக்கர் புற்றரையில் 15 பசுக்களுக்கு தொடர்ச்சியாக போசணை ஊட்ட முடியும்.

1. சிக்கனல் புல்
2. ருசி புல்
3. ரய் புல்
4. கிக்கியு புல்

**நடுகைப்பொருள் (ஏக்கருக்கு)**

1. விதை - 3-4 kg

வருடத்திற்கு ஒரு ஏக்கரில் உற்பத்தி செய்யும் புல்லின் அளவு 6000L பாலுக்கு சமமானது

**2. வெட்டும் புல்**

✓ வெட்டும் புல் என்பது வயலில் செய்கை பண்ணி வெட்டி வந்து விலங்குகளுக்கு ஊட்டும் புல்லினமாகும்.

✓ புல் கறவைப்பசு ஒன்றிற்கு ஒரு நாளைக்கு தரமான வெட்டும் புல் 40-50kg ஊட்ட வேண்டும் (குறைந்த பட்சம் விலங்குகளின் உயிர்நிறையில் 10-12% வரை)

✓ இவை அதிக விளைச்சலத்தரக்கூடிய போசணை மிகுந்த தரமுயர்த்தப்பட்ட புல்லினமாகும்.

✓ நன்கு பராமரிக்கும் போது ஒரு தடவையில் ஒரு சதுர மீற்றரில் 3kg வரையும் ( 01 ஏக்கர் - 12000kg வரையும் ) விளைச்சலைப் பெறலாம். அத்தடன் ஒரு ஏக்கரில் 12 பால் பசுக்களுக்கு தேவையான புல்லை தினமும் தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள முடியும்.

1 Co3
2 TD-58 ( கினி )
3 VRI – 435 ( கினி )
4 Hamil ( கினி )

கினி புல்லினம் உலர் வலயத்திற்கு மிகவும் உகந்தது.

**03. அவரை இன மரங்கள்**

1. கிளிறிசீடியா
2. முள்முருங்கை
3. இப்பில் இப்பில்
4. புலா
5. காட்டு சூரியகாந்தி

- ✓ விலங்குகளின் போசணைக்காக நாளொன்றுக்கு 5- 10 kg வரை ஊட்டுவதன் மூலம் உணவின் போசணை சமநிலை அடையும்.

### 04. உலர்புல்

உலர்புல் தயாரிக்கும் முறை

- ✓ புல்லை ( பூப்பதற்குமுன்) அறுவடை செய்தல்.
- ✓ வயலிலே அவற்றைப் பரப்பி அல்லது மராக்கை, கம்பிப்பட்டம் போன்றவற்றில் அடுக்கி உலர விடுதல் (ஈரப்பதனை 15 % தால் கட்டுப்படுத்த வேண்டும்)
- ✓ உரிய முறையில் உலர்த்திய புல்லை இரு கைகளாலும் பிடித்து முறுக்கும் போது இலகுவாக முறியாமலும் புல்லிருந்து நீர் வடிதலும் நடைபெறாது.
- ✓ உலர்த்திய புல்லை இறுக்கமான பிடிகளாகக் கட்டி களஞ்சியப் படுத்திக் கொள்ளல்.
- ✓ உரிய முறையில் தயாரித்து சேமித்து உலர் புல்லை 6-8 மாதங்கள் வைத்திருக்க முடியும்.

### 05.சைலேஜ்

சைலேஜ் எனப்படுவது புல், அவரையின தாவரங்களின் மற்றும் விலங்குகளுக்கு உணவாகக் கொடுக்கக்கூடிய இலைகுழைகளை காற்றின்றிய சூழலின் கீழ் நொதிக்க வைத்து பெறப்படுவது ஆகும்.

### சைலேஜ் தயாரிக்கும் முறை

- ✓ புல்லை அறுவடை செய்தலும் துண்டுகளாக வெட்டுதலும்.
- ✓ துண்டுகளாக வெட்டிய புல்லை படைபடையாக அடுக்கி பீப்பாவில் இருந்து காற்று வெளியேறுவதை தடுத்தல்.
- ✓ இதற்காக 200L அளவுடைய பிளாஸ்டிக் பீப்பாக்களை பாவிப்பது உகந்தது
- ✓ வெட்டிய புல்லை நிரப்பி அமுக்கும் போது இடை இடையே மேலதிக போசணைக்கலவை கலத்தல்

100 kg பச்சை புல்லுக்கு

01 kg சீனி 500g யூரியா 500g கனியுப்பு கலவை சிறிதளவு நுண்ணங்கி ஊக்கி போதுமானது


- ✓ புல்லை மீண்டும் நன்கு அமுக்கி பாத்திரத்தை மூடுதல்
- ✓ 45 - 60 நாட்களில் சைலேஜ் ஆக தயாராகிய புல்லை விலங்குகளுக்கு ஊட்ட முடியும். பாத்திரம் பாதிப்படையாமல் இருக்குமாயின் அவற்றைத் திறக்காமல் நீண்ட காலம் வைத்திருக்க முடியும்.

## புல் ( பசுந்தீவனங்கள்) பாதுகாப்பின் நோக்கம்

- ✓ மேலதிகமாக கிடைக்கும் புல்லை எதிர்காலத்தில் பயன்படுத்தல்
- ✓ புல்லின் தரத்தை மேலும் உயர்த்தல்
- ✓ விலங்குகளுக்கு உணவின் சுவையை உயர்த்தல்
- ✓ குறைந்த எடையில் அதிகளவு உலர் பொருளை ஊட்ட முடிதல்

## பூநகரியின் காலநிலையும் புல் வளர்ப்போர் எதிர்நோக்கும் பிரச்சினையும்

வானம் பார்த்து பயிர்செய்வோர்தான் பூநகரி பிரதேசத்தில் அதிகளவில் வாழ்ந்து வருகிறார்கள் எனவே பூநகரியின் எல்லாப்பகுதியிலும் மேற்குறிப்பிட்ட புல்வகைகளை ஆண்டின் முழுகாலப்பகுதியும் பயிர்செய்வது கடினமான ஓர் விடயமாகும். இப்பிரதேசத்தில் ஆண்டின் பெரும்பகுதி அதிகளவு வெப்பத்தை எதிர்நோக்குவதுடன் தொடர்ச்சியாக நன்னீரை பெற்றுக் கொள்வதும் புல் வளர்ப்போர் எதிர்நோக்கும் பெரிய சவலாகும். பூநகரியின் தெற்குப்பகுதியில் (ஜெயபுரம் முழங்காவில் பல்லவராயன்கட்டு) ஓரளவு ஆண்டின் முழப் பகுதியும் மேற்குறிப்பிட்ட புல்வகைகளை பயிர் செய்து கால்நடை வளர்ப்பினை அபிவிருத்தி செய்ய முடியும். ஏனைய பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் அடிப்படை தேவைக்கு நன்னீரை பெற்றுக்கொள்வதில் பெரும் இடரினை எதிர்கொள்கின்றார்கள் ஆயினும் சில பண்ணையாளர்கள் நீரினை கொள்வனவு செய்து தமக்கு தேவையான புல்வகைகளை உற்பத்தி செய்வதுடன் தமது வாழ்வாதாரத்தில் முன்னேற்றமடைந்து வருகிறார்கள். மழைநீரை நம்பி புல்வளர்ப்பினை மேற்கொள்ளும் பண்ணையாளர்கள் கோடைகாலத்திற்கு தேவையான உணவினை சைலேஜ் ஆகவும் உலர்புல்லாகவும் உற்பத்தி செய்து பாவிக்கமுடியும்.



# மன்மதனின் பஞ்ச பாணங்கள்



திருமதி.ஜோ.தயாழினி (BFA, PGDE)
ஆசிரியர்
கிளி/முட்கொம்பன் ம.வி

பரத நாட்டியத்தின் அடிப்படை அம்சங்களின் ஒன்று பஞ்ச பாணங்கள். இவை ஒவ்வொன்றும் மன்மதனின் அம்புகள் தைத்த மாத்திரத்திலே காதலர்களுக்கு ஏற்படுகின்ற அவஸ்தைகளை கூறுவது ஆகும். இப்பஞ்ச பாணனுக்குரிய பெயர்களாக அனங்கன், மதனன், மதனவேள், மன்மதன் என்றவாறு அமையும்.

ஸ்லோகம் :- "அரவிந்த மசோகஞ்ச சூதம்ச நவமாலிகா / நீலோத்பலஞ்ச பஞ்சைதே பஞ்சபாணஸ்ச சாயக

கருத்து :- தாமரை, அசோகம், சூதம் (மா), முல்லை, நீலோத்பலம் ஆகிய இவ் ஐந்து மலர்களும் பஞ்சபாணங்கள் ஆகும்.

தாமரை :- இப்பாணத்தினால் காமநினைவுகள் ஏற்படும்.

அசோகம் :- தமது ஆசை பூர்த்தியாகும் வரையில் உணவை வெறுப்பார்.

சூதம் (மா) :- இப்பாணத்தினால் காதலர்களுக்கு பசலை உண்டாகும் வெட்கத்தால் பச்சை நரம்பு ஓடச் செய்யும்.

முல்லை :- மிக வருத்தமும் சோகமும் உண்டாகும்.

நீலோத்பவம் :- ஒருவருடைய ஆசை உடனே நிறைவேறா விட்டால் மரணமும், மரண மூர்ச்சையும் உண்டாகும்.

இவ்வாறு உருவாகிய பஞ்ச பாணங்களினால் மன்மதனின் அம்பு தைத்த மாத்திரத்தில் காதலர்களுக்கு பத்து வகையான அவஸ்தைகள் ஏற்படுகின்றன அவையாவன.

1. நேத் ரோற்சவம் :- நாயகனைக் கண்குளிரப் பார்த்து ஆனந்தப்படுதல் ஆகும்.
2. சித்த சங்கமம் :- உள்ளத்தால் அவனைக் கூடிக் களித்தல் ஆகும்.

3. ஸ்மரணம் :- எப்போதும் காதலன் நினைவாகவே இருத்தல்.

4. குணகீர்த்தனம் :- நாயகனின் குணங்களைச் சொல்லிக் கொண்டாடுதல்.

5. அரதி :- நாயகனின் நினைவுகள் ஏற்பட்டமையால் தனியே இருப்பதை நினைத்து பிரிவாற்றாமையால் வருந்துதல்.

6. தாபம் :- அந்த வருத்தத்தால் காமஜ்வரமும் உண்டாகும்.

7. வஜ்ஜாத்தியாகம் :- வெட்கத்தை விடுதல்.

8. கமனம் :- கூச்சத்தை விடுத்து நாயகளைத் தேடி வலுவில் செல்லுதல்.

9. மூர்ச்சை :- பிரிவு தாங்காமல் மூர்ச்சை யாகுதல்.

10. தன்னியதா :- இவ்வளவு கஷ்ரப்பட்டு நாயகனை அடைந்தவுடன் ஒரு கணமும் பிரியாமல் அவனை செல்வம் போல் உடன் வைத்துக் கொள்வாள்.

எனவே ஒரு நடன பாத்திரமானவர்கள் இரு பாலரும் இவ் ஐந்து பஞ்ச பாணங்களையும், அதன் அவஸ்தைகளையும் ஒன்று சேர்த்து நடை முறைப் படுத்துவதனூடாக பரத நாட்டியம் சிறந்து விளங்கும்.



# வாழ்வே நாட்டியம்



செல்வி. இ.றேனுகா
முழங்காவில்

மனிதன் பேசத் தெரியும் முன்பே முகக்குறி, கைக்குறிகளாலும் உறுப்பசைவுகளாலும் தன் உணர்ச்சியையும் கருத்தையும் வெளியிட்டான். ஆதலால் மொழிக்கும் இசைக்கும் முன்பே நடனம் இருந்தது, மொழியும் இசையும் சேர்ந்து நடனகலைக்கு ஒரு வடிவம் தந்தன. சொல்லிற் கேற்ற கைக்குறி, கண்குறிகளும் சொல்லாளான இசைகளுக்கேற்ற ஆட்டங்களும் இயற்கையாகவே உண்டாயின. இசைக்கேற்றபடி இராக தாளங்கள் உண்டாயின. இராகதாளங்களுக்கு முதலிலே குரலும் கைகளும் பயனாயின. பிறகு மனித அறிவும் சுவையும் முதிர முதிரப் புதிய புதிய இசைக்கருவிகளும் ஆடல் பாடல்களின் முறை வகுப்புகளும் அபிநய லட்சணங்களும் எழுந்தன. யாழ். குழல், முழவு ஆகிய கருவிகள் மனிதக்குரலை இன்புறுத்தித் துணை செய்தன.

மனித வாழ்வே ஒரு நாட்டிய கலை தான். மனித உணர்ச்சி தான் மூளையில் அறிவாகவும், நாவில் பேச்சாகவும், வாக்கில் கவியாகவும், குரலில் பாட்டாகவும், முகம், கை, கால்களில் அபிநயமாகவும் வெளிவருகிறது. வாய் பேச்சின்றி சாடையாலேயே உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றோம். ஒருவன் மனதை முகக்குறியும் கைக்குறியும் காட்டும் ஆ...ஹ... என்ன வியப்பு, அப்பா காரியம் ஒருவழியாக முடிந்தது, என் இன்பமே வாவா! என் கண்ணே சாப்பிடு!.... ஐயோ, என்கதி ஆனதே! என்று பேசிப்பாருங்கள் அபிநயம் தான் வரும். இவ்வாறு இயற்கையாவே வருவதே உண்மையான நாட்டியமாகும்.

நீண்ட காலமாக உலகில் இந்த அபிநய பாஷைதான் வழங்கி வந்தது. இன்றும் சில ஜாதியாரிடையே சைகைகள் தான் உள்ளுணர்வை வெளிப்படுத்தியது. தமிழே அறிந்த ஒருவன் தமிழே அறியாத ஒரு இந்தியருடன் பேசுவதானால் மொழி பயனாவதில்லை. அபிநயம் பேசா உலக மொழியாக வழங்குகிறது. அதை மனித சமுதாயமும் நன்றாக உணர்ந்தால் நாட்டியம் நம் வாழ்வில் மிளிரும் என்பதில் ஐயமில்லை.

ஜப்பானியர் தமது நடனக்கலையை அபாரமாக வளர்த்துள்ளார்கள். சீனருக்கு நடனம், நாடகம் என்றால் கொண்டாட்டம் தான். பாரசீகர் பாட்டிலும் நாட்டியத்திலும் சொக்குகின்றார்கள். ஐரோப்பியரைப் போல கேட்க வேண்டியதில்லை. வெள்ளையர் சண்டையிலும் சமாதானத்திலும்

ஆண் பெண் கைகோர்த்து நடனம் புரிகின்றனர். நாட்டியத்தின் உயிரையும், பயனையும் உயர்ந்த இலட்சியத்தையும் கண்டு போற்றியது பாரத தேசமாகும். அதிலும் தமிழகமேயாகும்.

பாரத நாட்டின் நாட்டிய கலையே பரத நாட்டியமாகும். முதன்மையாக பரதக்கலை தமிழகத்திற்கே உரியது. இது இங்கே தான் வளர்ச்சி பெற்று இன்னும் பொலிந்து விளங்குகிறது. ஐரோப்பா, ஜப்பான் முதலிய நாடுகளின் நடனம் கொட்டுக் குதிக்கும் நடனங்களோயாகும்.

புலன்களின் இன்பமே அவற்றின் குறிப்பாகும். நாட்டின் கலை, புலன் மனங்களைக்கடந்து உள்ளுயிரான சுத்தான்மாவின் இன்பத்திற்கேயாகி தெய்வவொளி வீசுவதாம் நடனக்கலை ஜீவான்மா பரமான்மாவைக் கண்டு கலங்க செய்யும் தெய்வீகக் கலையே நாட்டிய கலையாகும்.

நம் முன்னோர் நடனக் கலையை எவ்வளவு பயபக்தியுடன் போற்றினர் என்பதற்குப் பரத நாட்டிய சாஸ்திரம், அபிநய தர்ப்பணம், சிலப்பதிகாரம் போன்ற நூல்களே சான்றாகும். இது என்றும் நம்மில் பலரிடையே போற்றப்பட்டு உயிரூட்டப்படுகின்றது. இக்கலை நமது ஆலயங்களில் தெய்வப் பொலிவுற வளர்ந்து வருகின்றது. கடவுளுக்கே நம்மவர் நடராஜ வடிவம் தந்து ஆடுதெய்வமாகப் போற்றி வழிபட்டனர் கோயில்களில் நர்த்தனமும் தாண்டவமும் ஒரு வழிபாடாகக் கருதப்படுகின்றது. கோயில் தூண்களிலும் நாட்டிய கலை சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்து சமய மக்களிடையே பெரும்பாலும் போற்றப்படுகிறது. இன்றும் அழியாமல் பாதுகாக்கப்படுகிறது. மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்து பயணித்து. நம் வாழ்வோடு இரண்டறக்கலந்திருக்கிறது.



# கத்தோலிக்க சமய இசைக்கலை



திரு.தாவீது நிர்மல கென்றிசன்
இரணைமாதா நகர்

"கிறிஸ்தவ இசை" என்ற ஒன்று திருச்சபையின் வரலாற்றில் இருண்ட காலம் (500 - 100) என்றழைக்கப்படும். மத்திய காலத்திலேயே முதன் முதலாக தோன்றியதாகக் கூறப்படுகிறது. கிறிஸ்தவ இசை அல்லது சங்கீதம் என்பது கிறிஸ்தவ ஆலயங்களில், பேராலயங்களில் அல்லது இறைமக்கள் வழிபடும் இடங்களில் நடைபெறும் வழிபாடுகள். சடங்குகளின் போது பாடுவதற்காக இயற்றப்பட்ட பாடல்களாகும். அவை கிறிஸ்தவ சமூகத்தின் நம்பிக்கையை வெளிப்படுத்த எழுதப்பட்ட கிறிஸ்தவ அல்லது கத்தோலிக்க சங்கீதங்களாகும்.

இறைவனைப் புகழ்வது அவரை மாட்சிப்படுத்துவது, வழிபடுவது, மனம் வருந்துவது, கண்ணீர் சிந்துவது போன்ற கிறிஸ்தவ மன உணர்வுகளை உள்ளடக்குகிறது. இசையானது மனித உணர்வுகளை ஒரு நிலைப்படுத்தி இறைவனை ஒன்றிக்க வைக்கின்றது. ஆனால் அதன் உருவாக்கம், பாடப்படும் வடிவம், அதன் முக்கியத்துவம் என்பன கலாசாரம், சமூக சூழலுக்கு ஏற்ப இடத்துக்கிடம் வேறுபடுகிறது. கிறிஸ்தவ சங்கீதமானது இரசனை, மதவழிபாட்டு வடிவம், அதன் முக்கியத்துவம் என்பன கலாசாரம், சமூக சூழலுக்கு ஏற்ப சடங்குகள் மகிழ்வித்தல் கலை நிகழ்ச்சி போன்ற பலவித நோக்கங்களுக்காக இயற்றப்பட்டு பாடப்பட்டு வருகின்றது. ஆனால் பொதுவாக மதவழிபாட்டு சடங்குகளிலேயே பாடப்பட்டு வருகின்றன.

சில பாடல்கள் மத விடயங்களைப் பற்றியதாக இருக்கும் ஆனால் அவை வழிபாடுகளில் பயன்படுத்துவதற்காக இயற்றப்படவில்லை. மாறாக அவ்வகையான பாடல்கள் மக்களை மகிழ்விக்கும் நோக்குடன் கலை இரசனைக்காக எழுதப்பட்டவை. அவற்றை நாம் திருச்சபையின் இசை எனச் சொல்வதில்லை. திருச்சபையின் பாடல்கள் விசுவாசிகளின் சமூகத்தினாலேயோ அல்லது ஒரு பாடகர் குழுவினாலேயோ அல்லது ஒரு குறிப்பிட்ட நபர்களினாலேயோ பாடப்படும். அவை வழமையாக ஆர்மோனியம், பியானோ, வீணை, வயலின், கிற்றார், போன்ற இசைக் கருவிகளின் உதவியுடன் பாடப்படும். சில வேளைகளில் பல இசை வாத்தியங்களும் பயன்படுத்தப்படும். ஆனால் அவை பொதுவாக ஆர்மோனியத்துடனேயே பாடப்படும். சில புரட்டஸ் தாந்து சபைகள் எவ்வித இசைக்கருவிகளும் பயன்படுத்தாமல் பாடுவதை விரும்புவர்.

மேலும் கிறிஸ்துவின் காலத்தில் இருந்தே அவருடைய சீடர்கள் சங்கீதங்களைப்

பாடல்களாகப் பாடி வந்திருக்கிறார்கள். இயேசுவும் சீடர்களும் பங்கு பற்றிய ஜெருசலேம் ஆலய யூத வழிபாட்டிலே பாடல்களும், சங்கீதங்களும் பாடப்பட்டு இசைக்கருவிகளும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இயேசு தம் பாடுகளுக்காக ஜெருசலேம் நோக்கி பவனியாக வந்த பொழுது மக்கள் கூட்டம் கடவுளைப் புகழ்ந்து “சொன்னார் ...” பாடி இயேசுவைப் புகழ்ந்தனர். இறுதி இரவு உணவின் போது இயேசுவும் சீடர்களும் புகழ் பாடல் பாடி விட்டு ஒலிவமலைக்குச் சென்றனர் என கூறப்படுகிறது. புனித பவுல் எபேசியரையும், கொலோசியரையும் திருப்பாடல்கள், புகழ்ச்சிப் பாடல்கள் ஆவிக்குரிய பாடல்களைப் பாடி ஆண்டவரைப் போற்றும் படியாக கூறுகின்றனர்.

ஆதிக் கிறிஸ்தவர்களின் வழிபாட்டிலும் சடங்குகளிலும் திருப்பாடல்கள் புகழ்ப்பாக்கள் பாடப்பட்டன என புனித அம்புறோஸ் போன்ற திருத்தந்தையர்களின் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிளினி என்ற வரலாற்று ஆசிரியர் கிறிஸ்தவர்கள் காலையில் ஒன்று கூடி கிறிஸ்துவை கடவுளாக அறிக்கையிட்டுப் பாடினர் எனக் கூறுகின்றார்.

எனவே திருச்சபையின் ஆரம்ப காலத்திலிருந்தே திருச்சபை வழிபாட்டுச் சடங்குகளில் “சங்கீத இசை” இருந்து வந்திருக்கின்றது. வெவ்வேறு இடங்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் அந்த இடங்களில் காணப்பட்ட பாடல்களை பரம்பரை இசைகளைப் பயன்படுத்தி வந்தார்கள். அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் பயன்படுத்திய இசைகள் பல்வேறு பட்டவையாகக் காணப்பட்டன. பின்னர் அம்புறோசியார், கிளாரியார் போன்றோர் திருச்சபையின் தந்தையர்கள் அழகான பாடல்களை இயற்றி அளித்துள்ளனர்.

ஆரம்ப காலத்தில் யூத மரபுப்படி கத்தோலிக்க சமய வழிபாடுகளில் மிக இலகுவான இசையே பயன்படுத்தப்பட்டது. இதனால் அன்றைய பாடல்கள் ஆழ்ந்த விசுவாசம் போதனை என்பவற்றைக் கொண்டிருந்தன. எல்லா மக்களாலும் பாடப்பட்டன. காலப்போக்கில் திருத்தந்தை பெரிய கிரகோரியார் வழிபாடுகளில் திருஇசைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை தனது கண்காணிப்பின் கீழ் நெறிப்படுத்தி அங்கீகரித்தார். அன்றிலிருந்து இன்று வரை அவரது அங்கீகாரம் பெற்ற திருஇசை” கிறகோரியார் இசை என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. திருச்சபையின் எல்லா வழிபாடுகளிலும் கிறகோரியார் இசைக்கே முதலிடம் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் காலப் போக்கில் இவ் இசைக்கு பல நெருக்கடிகளும் எழுந்தன.

10ம் நூற்றாண்டுக்குப் பின் கிரகோரியார் இசைக்குப் பல நெருக்கடிகளும் எழுந்தன. 10ம் நூற்றாண்டுக்குப்பின் கிரகோரியார் இசைக்குப் பதிலாக வேறு இசைகளும் கத்தோலிக்க சமய வழிபாடுகளில் இடம் பெற்றன. அதே வேளை இலத்தின் மொழிப் பாவனையும் குறைந்து மக்கள் அனைவரும் சேர்ந்து பாடி வந்த நிலை மாறியது அது மட்டுமல்லாமல் எளிதாக இருந்த இசையும் மென் மேலும் மெருகூட்டப்பட்டது.

இவ்வாறு வளர்க்கப்பட்டு வரும் கத்தோலிக்க சமய இசையானது இன்றைய சமுதாய மனித

குலத்தின் உணர்வுகளைப் பண்படுத்தவும், பக்குவப்படுத்தவும், துயரை மறக்கவும், மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. மனிதனின் மன உணர்வுகளை மாற்ற வல்ல இந்தப் புனிதமான இசையானது மக்களின் பண்பாட்டினை வளர்க்கவும் மனிதனை பகுத்தறிவுடன் சிந்திக்கச் செய்யவும் மக்கள் செய்கின்ற ஒவ்வாத செயல்களைத் தடுத்து அன்பு, பாசம், மென்மை, உழைப்பு, காலத்துடன் செயற்படுத்தல், உய்த்துணர்தல், இயற்கையை இரசித்தல், மனிதத்தை மதித்தல் போன்ற நல்ல குணங்களைத் தோற்றுவிக்கும் இசையாகக் காணப்படுகின்றது.

கத்தோலிக்க சமய வழிபாடுகளின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை இசையே பெரும் பங்காற்றி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்க சிறப்பான தொரு விடயமாகும். மனிதன் இந்த வழிபாடுகளில் இனிமை கலந்த மனதால் இறைவனை வழிபட்டு அவனிடம் நிறைந்த மன அமைதி பெறுகின்றான். சந்தோசத்தையும், ஆறுதலையும், பெறுகின்றான். இவ்வாறாக கத்தோலிக்க சமய இசைக்கலையானது மனித ஆன்மாவை இறைவனோடு இணைத்துவிடுகின்றது.

### உசாத்துணை நூல்கள்



1. ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன் கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியங்கள் - 2001
2. கிறிஸ்துவின் நான் பகுதி - 2 தமிழ்நாடு விவிலிய மறைக்கல்வி திரு வழிபாட்டு நடு நிலையம் - 1993
3. தூதன் கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் - கிழக்குப் பல்கலைக்கழகம் மட்டக்களப்பு - 2011 - 2013




# சுற்றுலா தளமாக மாறி வரும் சங்குப்பிட்டி – கௌதாரிமுனை கடற்கரையும் வன்னேரிக்குளமும்



**திரு.க.சயந்தன்**
**ஆசிரியர்**
**கறுக்காய்த்தீவு.**



இன்றைய உலகில் மனிதனுடைய வாழ்க்கை ஆனது மிகவும் வேலைப்பளு நிறைந்த வாழ்க்கை ஆகக் காணப்படுவதுடன் அச்சுமையில் இருந்து விடுபடுவதற்காக தமக்குக்கிடைக்கும் நேரங்களில் இயற்கை இடங்களை மக்கள் தமது பொழுதைக் கழிப்பதற்காக அப்பிரதேசத்தில் அமையபெற்று இருக்கும் புதிய எழில் மிகு இடத்திற்கு சென்று இயற்கை அழகை கண்டு கழிப்பதுடன் அவ்விடத்தில் சிறு விளையாட்டு மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றனர். அப்பிரதேச மக்களின் வருகையை தொடர்ந்து உள்நாட்டு மக்களும் அவ்விடத்தை நோக்கிப் படையெடுக்கின்றனர். இது காலப்போக்கில் சிறந்த இயற்கைச் சுற்றுலாத் தளமாக மாற்றம் பெறுகின்றது.

அவ்வாறு சிறந்த சுற்றுலாத் தளமாக மாறிவரும் இடங்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரிப் பிரதேசத்தில் சங்குப்பிட்டிப் பாலம், கௌதாரிமுனைக் கடற்கரை மற்றும் வன்னேரிக்குளம் ஆகியன இயற்கை எழில்மிகு இடங்களாகக் காணப்படுவதுடன் அப்பிரதேச மக்கள் மற்றும் உள்நாட்டுச் சுற்றுலா பயணிகளால் கவரப்படும் சுற்றுலாத் தளங்களாகமாறி வருகின்றன.

சுற்றுலாத் தளமும் அபிவிருத்தியும் கிடைக்கின்ற வாய்ப்பை சரியான நேரத்தில், சரியான முறையில் சரியான திட்டத்தில் அபிவிருத்தி செய்து பயன்படுத்துவதே சிறந்த முகாமைத்துவம் ஆகும்.

## 01. சங்குப்பிட்டி பாலம்

இலங்கையிலே கடலுக்கு நடுவே சிறந்த வீதிக் கட்டமைப்பு மற்றும் இருமருங்கிலும் இயற்கை மின்ஒளியுடனான அழகான மேம்பாலமாக இது காணப்படுவதுடன் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் மிகவும் கவரப்பட்டு இளைப்பாறும் ஓர் பிரபல்யமான இடமாக மாறிவருகின்றது. அது

மட்டுமின்றி பல உள்நாட்டு படக்கலைஞர்களால் படப்பதிவு செய்யும் இடமாகவும் காணப்படுகின்றது. இவ் இடத்தை ஒரு வளமாகக் கொண்டு பொருளாதார ரீதியாக அபிவிருத்தி செய்வதால் உள்ளூர் மக்களின் பொருளாதரத்தை முன்னேற்ற முடியும்.

உதாரணமாக :- சிறு சிற்றுண்டி சாலைகள் மற்றும் சில பொழுது போக்கு செயற்பாடு அமைப்பதன் மூலம்

## 02 விநாசியோடை மண்ணித்தலை தெற்குக் கடற்கரை

இலங்கையில் சிறந்த வெள்ளை மணல் திட்டைக் கொண்ட ஒரே ஒரு இடமாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரே ஒரு சுற்றுலாக் கடற்கரையை கொண்ட இடமாக கௌதாரிமுனைக் கடற்கரை காணப்படுகின்றது. இங்கு அதிகளவில் உள்ளூர் மக்கள் சென்று பொழுதைக் கழிக்கும் இடமாக உள்ளது. இக்கடற்கரையை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்வதன் ஊடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவர்ந்து இழுக்கும் இடமாக மாறுவதுடன் அப்பிரதேச மக்களின் பொருளாதாரத்தையும் முன்னேற்ற முடியும். அது மட்டுமின்றி இக்கடற்கரை சிறந்த அமைவிடத்தில் காணப்படுவதால் இலங்கையில் முக்கியத்துவம் வாய்ந்த கடற்கரையாக மாறுவதுடன் ஹோட்டல் துறையையும் அபிவிருத்தி செய்து கொள்வதற்கு ஏதுவான அம்சங்களைக் கொண்ட இடமாகவும் காணப்படுகின்றது.

உதாரணமாக :- உள்நாட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வுத் திட்டங்களை (Awareness Programmes) மேற்கொள்ளல் மற்றும் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

## 03. வன்னேரிக்குளம்

2020ஆம் ஆண்டு உள்ளூர் மக்களை அதிகளவில் கவரும் ஓர் இயற்கை எழில் மிகுந்த இடமாக வன்னேரிக்குளம் காணப்படுகின்றது. இவ்விடம் பசுமை நிறைந்த இயற்கை மரங்களால் சூழப்பட்டு எழில் மிகு குளத்தையும் கொண்டு காண்பவர்களைக் கொள்ளை கொள்ளும் இடமாக காணப்படுவதால் அதிக உள்ளூர் மக்கள் விரும்பி சென்று பொழுதை களிப்பதுடன் ஒளிப்படங்களை எடுப்பதற்காக அதிகளவிலான படக்கலைஞர்களும் வந்து செல்கின்றனர். இங்கு பொழுது போக்கு விளையாட்டு மற்றும் பாதுகாப்பான குளக்குளியல் வசதிகளை மேம்படுத்துவதனுடாக இவ்விடத்தை சிறந்த உள்நாட்டு சுற்றுலாத் தளமாக மாற்ற முடியும்.

இலங்கையில் வளர்ந்து வரும் துறையாகவும் அதிக வருமானம் ஈட்டும் துறையாகவும் சுற்றுலா துறை காணப்படுகின்றது. இத்துறையானது பூநகரிப் பிரதேசத்தில் உள்ளூர் மக்களால் இனங்காணப்பட்டு சிறந்த சுற்றுலாத்துறை வளத்தைக் கொண்டு காணப்படுகின்றது. கிடைத்த இயற்கை வளத்தை சரியான திட்டம், தலைமைத்துவம், மற்றும் முகாமைத்துவத்தின் ஊடாக அபிவிருத்தி செய்து பூநகரிப் பிரதேச மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தி எமது கலாசாரத்தையும் பாதுகாத்து இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். அத்துடன் எதிர்காலத்தில் எமது பிரதேசத்தின் அடையாளமாக இம்மூன்று வளங்களும் காணப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

# பூநகரியில் அழிந்து செல்லும் வரலாற்று பொக்கிஷம் அரசபுர கட்டட அழிபாடு ஓர் வரலாற்றுப்பார்வை



திருமதி.நி.சஜிந்தா
விடுகைவருடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.
இலங்கை

பூநகரியுள்ளிட்ட வன்னிப் பிரதேசம் இலங்கையில் ஏனைய பிராந்தியங்களைப் போல் தொல்லியல் ஆய்வு செய்யப்பட்ட பகுதியெனக் கூறமுடியாது. ஆயினும் ஒரு சில ஆய்வாளர்கள் இப் பிராந்தியத்திலுள்ள சில இடங்களில் சில தொல்லியல் ஆய்வுகளை மேற் கொண்டிருந்தனர் என்பதனையும் மறுப்பதற்கில்லை. 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த ஆங்கிலேய நாட்டவரான பாக்கர் என்பவர் இப்பிராந்தியத்தில் கிடைத்த கல்வெட்டுக்களையும், பிற கட்டட அழிபாடுகளையும் கொண்டு ஆதியில் இங்கு தமிழ் மக்கள் வாழ்ந்துள்ளனர் எனக் கூறியுள்ளார். (இராசநாயகம், செ,. 1994, யாழ்ப்பாண சரித்திரம், பக், 113 - 114) மேலும் இவர் மாகாவம்சத்தில் வரும் பெலிவாவியை பூநகரியின் தென் எல்லையில் உள்ள பாலியாறு என அடையாளம் கண்டு இங்குள்ள வவுனிக்குளத்தின் ஆரம்பத்தோற்றம் பாளி இலக்கியங்களில் மறைக்கப்பட்டுள்ள எல்லாளன் சாதனைகளில் ஒன்றாக இருக்கலாம் என்றார். இவரின் சமகாலத்தவரான லூயிஸ் என்பவர் இங்கு கண்டுபிடித்த சில கட்டிட அழிபாடுகளையும், பல இந்து விக்கிரகங்களையும் அடிப்படையாகக் கொண்டு இவை புராதன இராசதானியின் சிதைவுகளாக இருக்கலாம் என அபிப்பிராயம் தெரிவித்தார். (மேலது, ப.125)

தமிழ் மக்களது சுதந்திர அரசு 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தோன்றியது என ஆரம்பத்தில் கூறிய இந்திரபாலா பிற்காலத்தில் மல்லாவி, முத்தையன் கட்டு, ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கட்டிட அழிபாடுகளை ஆதாரமாக வைத்து இவை பழைய இராசதானியின் சிதைவுகளா? அல்லது சோழர்கால தலைநகரின் எச்சங்களா என்ற கேள்வியை எழுப்பினார். இக்கருத்துக்கள் யாவும் வன்னிப்பிராந்தியத்தில் தமிழர் நாகரிகமாக சுதந்திரமாக இருந்துள்ளனர் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன (இந்திரபாலா,கா,. 1973, "வன்னி காட்டில் ஒரு அரண்மனை", ப.32). இந்நிலையிலே பூநகரியின் பல்வேறு இடங்களில் இன்றும் இக்கட்டிட அழிபாடுகளைக் காணமுடிவதோடு இவை ஆதித்தமிழர் வரலாற்றினையும் எடுத்து விளக்குகின்றன. இவ்வகையில் பூநகரியின் வரலாற்றினை எடுத்து கூறும் வரலாற்று பொக்கிஷமாக விளங்குகின்ற அரசபுர கட்டட அழிபாடு தொடர்பாக நோக்கின்.

புராதன யாழ்ப்பாணம் என்னும் நூலை எழுதிய இராசநாயகம் முதலியார் தமிழ்ப்

பிராந்தியங்களில் புராதன நகரங்களில் அழிபாடுகள் காணப்படும் இடங்களில் ஒன்றாகப் பூநகரியில் உள்ள அரசபுரத்தை குறிப்பிட்டுள்ளார். அரசபுரம் வரலாற்று பழமை வாய்ந்த இடமாகும். இது தற்போது பூநகரி மன்னார் வீதியில் மண்டைக்கல்லாறு குறுக்கிடும் பகுதியில் கிழக்கு பக்கமாக 3 கிலோமீற்றருக்கு அப்பால் அமைந்துள்ள கிராமமாகும். அரசபுரம் ஒரு காலத்தில் அல்லிராணி ஆண்ட பிரதேசம். இடிபாடுடைய செங்கற்கள் கிணறுகள் என்பன இன்றும் உண்டு. (முருகவேள், பொ,. 2018, ப.16) இடப்பெயர்வு காலத்துக்கு முன்னர் இவ்விடத்தில் ஒரு புராதன கட்டடம் இருந்ததற்கான கட்டட அத்திவாரங்களும், சிதறுண்ட நிலையிலே செறிவான செங்கட்டிகளும் காணப்பட்டன. இதற்கு கிழக்கே அரசபுரக்குளம் காணப்படுகின்றது. பல வருடங்களுக்கு முன்னர் இங்கிருந்த கட்டிடங்களை இடித்து அதன் கற்களையும், செங்கட்டிகளையும் கொண்டு மாந்தையில் உள்ள சில ஆலயமும், கறுக்காய் தீவு , அரியாலை பகுதிகளிலும் ஆலயங்கள் கட்டப்பட்டதாக அறியமுடிகின்றது.

எனவே அங்கு ஆலயங்கள் அமைப்பதற்கு அரசபுரத்திலுள்ள கட்டடத்தின் பகுதிகள் கொண்டு சென்று ஆலயங்கள் அமைக்கப்பட்டமையில் இருந்து இவ்விடத்தில் இந்து ஆலயம் ஒன்று அமைந்து காணப்பட்டுள்ளதோ எனவும் எண்ணத் தூண்டுகின்றது. ஏனெனில் இங்கு காணப்படும் கட்டட அழிபாடுகளை வைத்து நோக்குகின்ற போது ஆலயம் ஒன்று அமைந்திருக்க முடியும்எனவும் ஊகித்துக்கொள்ள முடிகின்றது.



பூநகரியில் வாழும் மக்கள் இங்கிருந்த கட்டடத்தை அல்லி ராணி வாழ்ந்த அந்தப்புரம் என்று கூறிக்கொள்கிறார்கள். இந்த மரபு வழியிலே அந்தப்புரம் அரசபுரமாக இடம் பெயர் பெற்றது எனக் கருதப்படுகின்றது. பூநகரியில் கடமையாற்றிய சில அரச அதிகாரிகள் இக் கட்டிடப்பகுதியில் இருந்து வேட்டையில் ஈடுபட்டோர் உலோகப்பாத்திரங்கள், வாள் முதலிய சின்னங்களை எடுத்த போதும் தாம் நேரிலே பார்த்ததாகவும் கூறுகின்றனர். இவ்விடத்துக்கருகிலே பாலாவி என்ற இடம் உள்ளது. இப்பெயர் ஏற்பட ஆதிகால மக்கள் திருக்கேதீஸ்வரத்துடன் கொண்ட தொடர்பே காரணம் என்ற கர்ணபரம்பரைக் கதையும் இங்கு நிலவுகின்றது. இவையனைத்தையும் அரசபுரத்திலுள்ள கட்டிட அழிபாடுகள் மிகப்பழமையானவை என்பதற்குரிய சான்றாதாரங்களாக கொள்ளலாம். இந்நிலையில் ஆலடிச்சோலையில் கிடைத்த விநாயகர் சிற்பத்தை இக் கட்டிடத்


தொகுதியுடன் தொடர்பு படுத்தி ஆராயவும் இடமுண்டு. அத்தோடு கிராமத்தினுடைய பெரியவர்களின் கருத்துப்படி இப்பிரதேசத்தில் அல்லிராணியினுடைய மருமக்கள் பரம்பரையினர் இருந்து வந்துள்ளனர் என்பதும் கடந்த இடப்பெயர்வின் போது இடம்பெயர்ந்து சென்றவர்கள் மீண்டும் வந்து குடியேறவில்லை என்றும் கூறினர். இவற்றையெல்லாம் வைத்து நோக்கும் போது இவ்விடம் மிகப்பழமையான வரலாற்றினை கொண்டுள்ளது என்பது தெரியவருகின்றது.

எனினும் அரசபுரத்தின் அழிபாடுகள் இன்றுவரை மண்ணில் புதையுண்டே காணப்படுகின்றது. இங்கு தொல்லியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் போது இப்பிரதேசத்திலுள்ள இக்கட்டிட அழிபாடு எக்காலத்துக்குரியது என்பதுடன், அரசபுரத்தில் ஆட்சிசெய்யப்பட்டபோது ஆலயம் அமைப்பித்தார்களா? அல்லது அல்லிராணி ஆட்சி செய்தபோது கட்டிய கோட்டையா என்பது தெரியவரும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அத்துடன் இன்று அழிந்து செல்லும் இவ்வரலாற்று பொக்கிஷத்தினை பாதுகாத்து தொடர்ந்து ஆய்வு நடவடிக்கையினை மேற்கொள்வதன் ஊடாக பூநகரியின் வரலாற்று பாரம்பரியத்தினைப் பேணிப்பாதுகாத்து கொள்ள முடியும் என்றே கூற முடியும்.

**உசாத்துணைகள்**


1. இந்திரபாலா,கா., (1972), ”இலங்கையில் திராவிட கட்டிடக்கலை”, குமரன் புத்தக இல்லம், சென்னை.
2. இராசநாயகம்,செ., (1994), ”யாழ்ப்பாண சரித்திரம்”, ஆசிய கல்விச்சேவை, புதுடில்லி, சென்னை.
3. இரகுநாதன்,ம., (2009), ”பண்டைத் தமிழர் பண்பாட்டு தடயங்கள்”, எஸ்.எஸ்.ஆர் பிரிண்டர்ஸ்
4. கிருஸ்ணராஜா,செ., (1998), ”தொல்லியலும் யாழ்ப்பாண தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்”, பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம்.
5. சிவப்பிரகாசம்,சு., (1988), ”விஸ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு”, அகில இலங்கை வெடியரசன் கலாமன்றம், தொல்புரம்.
6. சிற்றம்பலம்,சி,கா., (1993), ”யாழ்ப்பாண தொன்மை வரலாறு”, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
7. தனபாக்கியம்,ஜி., (2001), ”இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும், திரவிடக் கலாசாரமும்” மணிமேகலைப் பிரசுரம்.
8. புஸ்பரட்ணம்,ப., (2000), ”தொல்லியல் நோக்கில் இலங்கை தமிழர் பண்பாடு”, பவானி பதிப்பகம், யாழ்ப்பாணம்.
9. முருகவேள், பொ., (2018), ”பூமியில் ஒரு புதையல் பூநகரி”, செல்லமுத்து வெளியீட்டகம். வள்ளுவர்புரம்.

# ஒரு முத்து



திரு.பரா.ரதீஸ்
ஆசிரியர்,
யா/மெதடிஸ் பெண்கள் உயர் தரப் பாடசாலை

உலகப் பொதுமறையைத் தந்து தமிழை உலகறியச் செய்த பெரும் புலவன் வள்ளுவன். அறத்தையும் ஆத்மீகத்தையும் இணைத்து, கூடவே அரசியலையும் கலந்து பழந்தமிழர் காதலையும் காட்டி கல்விச் சிந்தனைகளையும் ஊட்டி "எல்லாப்பொருளும் இதன் பால் உள இதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லை" என எம்மைச் சொல்லவைத்த பெரும் வள்ளல் அவன், தமிழர்களை மட்டுமன்றி பிறமொழி அறிஞர்களையும் கவர்ந்து இழுத்த தமிழ்க்காந்தம். தமிழர் தம் பண்பாடு தனித்துவமானது, உயர்ந்தது, உன்னதமானது சொல்ல வைத்த எம் ஞானி. பாடுபொருளாலும் பாடப்பட்ட முறையாலும் ஈராயிரம் ஆண்டுகள் கழிந்தும் இன்றும் எம் அறிவிற்கும் மனநிலைக்கும் வாழுமிடத்திற்கும் தேவைக்கும் ஏற்ப பொருத்தி, சுவைத்து, எமை மகிழ வைத்த, வைக்கின்ற இலக்கியப்பிரம்மா. இனி இவன் தந்த அழுத்தத் தமிழ்க் கடலுக்குள் சென்று ஒரு முத்தெடுத்து நாம் சுவைத்துப் பார்ப்போம்.

**"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"**

இது தான் நான் சொன்ன முத்து. இப்படி எத்தனை எத்தனையோ முத்துக்கள் இந்தக்கடலுக்குள் பிரகாசிக்கின்றன. சரி நான் சொன்ன இந்த முத்தைக் கையிலெடுப்போம். திருக்குறளுக்கு பலர் உரை கண்டனர் இதில் பரிலேலழகர் உரை சாலச்சிறந்த தென்பது தமிழ் அறிஞர்கள் சிலரது முடிவு. ஆயினும் இவரது உரைவாயிலாக திருக்குறளின் மதிக்கத் தகுந்த உண்மைகள் முழுவதும் வெளிப்படவில்லை என்று வேதனைப்பட்ட அறிஞர்களும் உளர். எது எவ்வாறாயினும் இந்த முத்து பரிமேலழகர் கைக்குச் செல்கின்ற பொழுது எத்தகைய விளக்கத்தைப் பெறுகின்றது. என்பதைப் பார்ப்போம்.

"பிற தெய்வம் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத்தொழா நின்று துயிலெழுவாள், "பெய்" என்று சொல்ல, மழை பெய்யும். இவ் உரையை இக்கால மொழிநடையில் சொல்வதனால் பின்வருமாறு சொல்லலாம்.

கடவுளை வணங்காது, தன்கணவனையே தெய்வமாக நினைத்து வணங்கி, நித்திரை விட்டு எழுகின்ற பெண், "பெய்" என்று சொன்னால் மழை பெய்யும்.

"கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை" என்கிறது நான் மணிக்கடிகை. மணமான பெண்ணுக்கு கணவன் தான் உலகம், அவன் தான் உயிர், அவன் தான் தெய்வம், தமிழர் கற்பித்த இல்லறம். இது ஆணாதிக்கத்தின் சிந்தனை என்று நினைத்துக் கோபப்பட்டால் அது ஒருவித அறியாமை அல்லது இல்லறத்தின் பயனறியாத பண்பிலார் செயல் என்று அமைதிகாண வேண்டியது தான். ஆண்மைக்குள் எத்தனையோ தியாகங்கள், பெண்மைக்குள் எத்தனையோ போற்றுதல்கள். "கணவரைப் போற்று" பெண்ணை அடிமைப்படுத்த முன்னோரால் கூறப்பட்டதன்று. ஆணைக்கட்டுப்படுத்த, இல்லறத்தைச் சிறக்க வைக்கச் சொல்லப்பட்டது.

"தெய்வம் தொழாள் கொழுநன் தொழுது எழுவாள்" தெய்வத்தை வணங்கமாட்டாள், கணவனையே கண்கண்ட தெய்வமாக வணங்குவாள் இங்கே தெய்வத்தை வணங்கக்கூடாது கணவனை மட்டும் வணங்கினால் போதுமென்று வள்ளுவர் சொல்லவில்லை. மணமான பெண்ணுக்கு கணவன் எவ்வளவு முக்கியமென்பதையும் அவனைப்போற்றுதல் எவ்வளவு அவசியம் என்பதையும் வலியுறுத்துகிறார். தந்தையாக, தாயாக, நண்பனாக, ஆசானாக, வழிகாட்டியாக எனப்பல்வேறு உறவு நிலைகளில் அவளோடு தொடர்படுகிறான். எல்லாவற்றையும் தாண்டி தெய்வமாகவும் ஆகிவிடுகிறான். அவனில் தெய்வத்தைக் காணலாம் என வலியுறுத்துகிறான் வள்ளுவன். கணவனைப் போற்றாது தெய்வத்தைப் போற்றுவதில் பயனில்லை என்ற தமிழர் தம் அறத்தை வலியுறுத்துகிறான் வள்ளுவன்.

இந்த உண்மையைப் புரிந்துகொள்வதற்கு நல்குரவில் வரும் பின்வரும் தொடரைக் கற்றுத் தெளிந்து கொள்வோம். "ஈன்ற தாயானும் பிறன் போல நோக்கப்படும்" இங்கு செல்வமிலாதவனை பெற்றதாய் கூடப் பிறரைப் போல பார்ப்பாள் என்பதை சொல்லுவதல்ல வள்ளுவனின் நோக்கம். செல்வத்தை ஈட்டவேண்டியதன் அவசியத்தை ஆண்மக்களிடத்தே வலியுறுத்துவதுதான் நோக்கம். இது போலத்தான் தெய்வத்தை வணங்க வேண்டாம் கணவனை வணங்கினால் போதுமென்பதைச் சொல்வதல்ல நோக்கம். மாறாக கணவனைப் போற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதே நோக்கம்.

"பெய்யெனப் பெய்யும் மழை" இங்கே பெண்மையின் ஆற்றலை அல்லது வல்லமையை வெளிப்படுத்துகிறார் தெய்வப்புலவர். பெண்மைக்குள் எத்தனை ஆற்றல்கள் இருக்கின்றன இதனால் பெண்ணைத் தெய்வமாகக் கொண்டு போற்றினார்கள் தமிழர்கள். கணவனைப் போற்றி இல்லறத்தைப் பேணி தன்கடமையைச் சரிவரச் செய்கின்ற பெண்ணுக்கு தெய்வீகம் இயல்பாக வந்து குடி கொண்டு விடுகிறது. அப்போது அவளால் நினைத்ததை நினைத்த மாத்திரத்திலே செய்து விட முடிகிறது. அந்த ஆற்றல் எத்தகையதென்பதை வெளிப்படுத்தவே "பெய்" என்று சொன்னால் மழை பெய்யும்" என்று விளக்கினார் பொய்யாமொழிப்புலவர். பெண்மையின் ஆற்றலை கற்போருக்கு விளங்க வைப்பதற்காக வள்ளுவன் பயன்படுத்திய தொடரே "பெய்யெனப் பெய்யும் மழை" என்பதாகும்.

இதை விளக்கிக் கொள்ள முடியாத சில இலக்கிய நண்பர்கள். எங்கே உங்களில் யாராவது ஒருவரால் இப்போது மழையைப் பெய்ய வைக்க முடியுமா? என்று மேடைகளில் ஆவேசமாகக் கேட்கிறார்கள் கணவனை வணங்கவில்லை, கற்புப்போய் விட்டது பெண்மை கெட்டு விட்டது

என்று கூடவே வேதனைப்படுகிறார்கள். இது அவர்களின் அறியாமை என்று அமைதிபேணிவிடலாம். ஆனால் கேட்பவர்கள் கை தட்டுகிறார்கள். புதிதாக ஏதோ இவர்கள் கண்டு சொல்லி விட்டதைப் போன்ற அவர்கள் கைதட்டி ஆரவாரிக்கின்றார்கள். கேட்போரின் இச் செயல்தான் எமக்கு வேதனையை ஏற்படுத்துகிறது. கணவனைப் போற்ற வேண்டியதன் அவசியத்தையும் பெண்மையின் ஆற்றலையும் வள்ளுவன் வெளிப்படுத்துவதாகக் கண்டு சொல்கிறார் பரிமேலழகர். பரிமேலழகர் தரும் இந்த விளக்கம் தமிழர்கள் கண்ட இல்லறத்தோடு பொருந்திவிடுகின்றதென்பதை நாம் மனம் கொள்ள வேண்டும். நாம் மேலே குறிப்பிட்ட கருத்துக்களை வைத்துப் பார்க்கும் போது பரிமேலழகர் தரும் விளக்கத்தை ஒவ்வாத ஒன்றாகத் தட்டிக்கழிக்க முடியவில்லை. போற்றிப் பின்பற்றத்தான் வேண்டும். பரிமேலழகரது உரையினூடாக மதிக்கத் தகுந்த உண்மைகள் முழுவதும் வெளிப்படவில்லை என்று வேதனைப்படுபவர்கள் கூட இந்தக்குறளுக்கு பரிமேலழகர் தரும் விளக்கத்தைப் பொறுத்த வரையில், அவ்வளவு தூரம் கலங்க வேண்டியதில்லை என்று நினைக்கின்றேன்.

அவருடைய உரைகளும் அநேக இடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்கு ஒவ்வாதனவாகவும் தத்துவங்களுக்கும் சத்தியங்களுக்கும் முரண்பட்டனவாகவும் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் முற்றிலும் வேறுபட்ட பொருத்தமான புது உரைகளைச் செய்திருப்பதே இந்நூலின் சிறப்பு. இது திருக்குறளுக்குப் புது உரை எழுதிய நாமக்கல் கவிஞருடைய கூற்று. இங்கு "அவர்" என்பது பரிமேலழகரைக் குறிக்கிறது புது உரை காண வந்த கவிஞர் நாம் மேலே குறிப்பிட்ட குறளுக்கு பரிமேலழகர் தந்த விளக்கத்தை ஏற்று போற்றி திருப்தி கண்டு விடுகிறார். தெய்வத்தை வணங்கமாட்டாள், கணவனை வணங்கி எழுந்திருப்பாள் அவள் பெய் என்று சொன்னவுடனே மழைபெய்யும்" இது தான் நாமக்கல் கண்ட உரை.

இக்குறளைப் பொறுத்தவரையில் பரிமேலழகர் தரும் உரையோடும் அதற்கு நாம் கண்ட விளக்கத்தோடும் நாமக்கல்லின் வழிமொழிதலோடும் எம்மால் திருப்திகாண முடியவில்லை. அதே நேரம் மேற்குறித்த விளக்கம் தவறானது என்று கூறவரவில்லை. இன்னும் சிந்திப்போம். முத்தைக் கையிலெடுப்போம். மீண்டும் படித்துப் பார்ப்போம்.

**"தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"**

இந்தக்குறளுக்கு இன்னொரு விதமாக விளக்கம் கொடுக்கலாம் போல் தெரிகிறது. கடவுளை வணங்காது தன் கணவனைத் தெய்வமாக வணங்குகின்ற பெண் "பெய்யெனப் பெய்யும் மழை" போன்றவள். "பயிர்களெல்லாம் கருகி விட்டனவே, சரியாக வியர்க்கிறதே, வெப்பக்கொடுமை, உடலில் நோய்கள் எல்லாம் வந்து விடுமோ? கடவுளே! இப்போது ஒரு மழை பெய்யாதோ?, இப்படி நாம் நினைக்கும் போது ஒரு மழை பெய்யுமாயின், அது தான் "பெய்யெனப் பெய்யும் மழை, எமது உள்ளக்கிடக்கையை நாம் சொல்லாமலே, நினைத்த மாத்திரத்திலேயே, தான் உணர்ந்து பெய்த மழை, இப்படிப்பட்ட மழையைப் போன்றவள் தான் கணவனைப் போற்றுகின்ற பெண். கணவனைப்

போற்றுகின்ற பெண்ணுக்கு அப்படி ஒரு சிறப்பா? அவள் பெய்யெனப் பெய்யம் மழை போன்றவளா? நீங்கள் என்னைக் கேட்பது எனக்குத் தெரிகிறது. வாருங்கள் சற்றுச் சிந்திப்போம்.

வள்ளுவன் 'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதிகாரத்தில் இக்குறளைப் பயன்படுத்தியுள்ளான். இல்வாழ்க்கைக்குத் துணையாக இருந்து சிறப்புக்களைத் தேடுகின்ற பெண்ணிற்கு கணவனைப் போற்றுதல் அவசியம் என்பதை வலியுறுத்தவே இக்குறளைப் பயன்படுத்தியுள்ளான். எந்தப் பெண்ணால் கணவனைச் சரியாகப் போற்ற முடியும்? கன்னியாக இருந்த காலத்தில் பெற்றோரைப் போற்றிப், பெரியோரைப் போற்றிப் பணிவிடை செய்த பெண்ணால் தான், இல்லறத்திற்கு வந்த பின்பு கணவனைப் போற்ற முடியும். கணவனைப் போற்றுகின்ற பெண்ணால் தான் பிள்ளைகளைச் சரியாக வளர்க்க முடியும். இல்லறக் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியும். மாமன், மாமி, உறவு சுற்றம் என யாவரையும் போற்ற முடியும். விருந்துகளைப் பேண முடியும். மொத்தத்தில் இல்லறத்திற்குச் சிறப்புச் சேர்க்க முடியும். "கொழுநன் தொழுது எழுவாள்" தன்னைத் சார்ந்தவர்களது உள்ளத்துணர்வுகளை, எதிர்பார்ப்புக்களை அவர்கள் கூறாமலே புரிந்து நிறைவேற்றிவிடுவாள். கூறாமை நோக்கிக் குறிப்பறிந்து, இல்லறத்திற்கு மட்டுமன்றி வையத்திற்கே அணியாக அமைந்துவிடுவாள். எனவே கொழுநனைத்தொழுது எழுவாள், பெய்யெனப் பெய்யும் மழை" ஆகிவிடுகின்றாள்.

கணவனைப் போற்ற வேண்டியதன் அவசியத்தையும் போற்றி வாழுகின்ற பெண்ணால் இல்லறம் சிறப்படையும் என்பதையும் கணவனைப் போற்றுகின்ற பெண் எத்தகைய சிறப்புடையவள் என்பதையும் வலியுறுத்தவே வள்ளுவன் இக்குறளைப் பயன்படுத்தியுள்ளான் என எண்ணத்தோன்றுகின்றது.

மேற்குறித்த இரண்டு வகையான விளக்கங்களோடு மட்டும் மனநிறைவு காண இயலவில்லை. ஏனெனில் வள்ளுவனது இந்த முத்து இளங்கோவினுடைய கைக்குச் சென்று மேலும் புதுவிளக்கம் பெறுவது போல் தெரிகிறது. இளங்கோ தன் காப்பியத்தில் கட்டுரைக் காதையில் இந்த முத்தினைப் பதித்து எழிலூட்டுகின்றார்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுவாளைத்
தெய்வம் தொழுந் தகைமை திண்ணிதால் - தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து"

வள்ளுவன் தந்த இந்தக் குறளுக்குச் சான்றாக கண்ணகியின் வாழ்வு அமைந்து விடுவதை இளங்கோ எமக்கு நினைவுபடுத்துகிறார்.

இந்தக் குறளுக்குச் சான்றாக கண்ணகியின் வாழ்வு எப்படி அமைந்தது என்பதைப் பார்த்து விட்டு இக்கட்டுரையை முடித்துக்கொள்வோம்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

**தெய்வம் தொழாஅள் :** கோவலன், கண்ணகியைப் பிரிந்து மாதவியிடம் சென்று விட்டான். அப்பொழுது கண்ணகியிடத்து வருகிறாள் தோழி தேவந்தி. "சோமகுண்டம், சூரிய குண்டம் எனப்படும் பொய்கைகளிலே நீராடி, காமதேவனின் கோயிலுக்குச் சென்று வணங்கினால் கணவனைப் பிரியாது இன்பமாக வாழலாம். வாநாமும் சென்று நீராடி வணங்குவோம். பிரிந்து சென்ற கணவனை மீண்டும் பெறுவோம்" இவ்வாறு தேவந்தி கூறியபோது "பீடு அன்று" (அது முறையல்ல) என்று மறுக்கிறாள் கண்ணகி. எனவே அவள் தெய்வத்தைத் தொழவில்லை.

கொழுநன் தொழுது எழுவாள்: மாதவியோடு விடுதல் அறியா விருப்பம் கொண்டு வாழ்ந்த கோவலன் அவளைப் பிரிந்து கண்ணகியிடத்து வருகிறான்.

"சலம்புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
குலம் தரு வான்பொருள் குன்றம் தொலைத்த
இலம் பாடு நாணுத்தரும் எனக்கு"

கணவனோ, தனது தவறை உணர்ந்து தேடி வந்து மன்னிப்புக் கேட்கும் பேறினைக் கண்ணகி பெறுகிறாள்.

பெய்யெனப் பெய்யும் மழை : தெய்வத்தை வணங்காது கணவனே தேடி வந்து தனது பிழையை ஒப்புவித்து மன்னிப்புக்கேட்கும் பேறு பெற்ற கண்ணகி, எதை நினைத்தாளோ அது நடக்கிறது. துன்பமாலையில்

"காய் கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்"
என்று சூரியனைக் கேட்கிறாள், கண்ணகியின் அக் கேள்விக்கு
"கள்வனோ அல்லன் கருங்கயந் கண் மாதராய்
ஒள்ளெரி உண்ணும் இவ்வூர்"
என்று பதிலளிக்கிறான் ஆதவன்.

மதுரை மாநகரை எரிக்க முனைந்த கண்ணகி, தீத்தெய்வத்தை ஏவி எரிக்கிறாள். "பெய்" என்று சொன்னால் உடனே மழை பெய்வதைப் போன்று நினைத்ததை நினைத்த மாத்திரத்திலே செய்து முடிக்கிறாள்.

கணவன் போற்றுகின்ற, வணங்குகின்ற பேறுபெற்ற பெண்கள் சாதாரண பெண்களுக்கு இல்லாத பெரும் சக்தியைப் பெற்று நினைத்ததை நினைத்த மாத்திரத்திலே செய்து முடிப்பார்கள் "பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின்". இவள் தெய்வமென்பதை உணர்ந்து பாதத்தில் வீழ்ந்து வணங்கியிருக்கிறேன். நீங்களும் இவளை வணங்குங்கள் என்கிறான் காரைக்காலம்மையாருடைய கணவன் பரமதத்தன். கணவனே தன் காலில் விழ்ந்து வணங்குகின்ற பேறு பெற்ற காரைக்காலம்மையார் நின் தாள்கள் போற்றும் பேய் வடிவு அடியேனுக்கு பாங்குறவேண்டுமென்று பரமனை வேண்டிப் பெற்றுக்கொள்கிறார். நினைத்ததை நினைத்த மாத்திரத்திலே பெறுகின்ற வல்லமை பெற்றுவிடுகிறார்.

இத்தகைய சிந்தனையகளின் அடிப்படையில் பார்க்கும் போது இந்தக்குறளுக்கு "தெய்வத்தை வணங்கமாட்டாள், கணவனே பாதத்தில் வீழ்ந்து வணங்கி எழுகின்ற பேறுபெற்ற

பெண் “பெய்யென்று சொன்னால் உடனே மழை பெய்யும்” என்று பொருளுரைப்பது சாலப்பொருத்தம் போல் தெரிகிறது. பெண்மையின் பேற்றையும் ஆற்றலையும் வள்ளுவன் போற்றியுள்ளமையைக் கண்டு மகிழமுடிகின்றது.

**“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுது எழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை”**

பொருள் 1 : கடவுளை வணங்காது தன் கணவனையே தெய்வமாக நினைத்து வணங்கி, நித்திரை விட்டு எழுகின்ற பெண், ‘பெய்’ என்று சொன்னால் மழை பெய்யும்.

பொருள் 2 : கடவுளை வணங்காது தன் கணவனையே கண் கண்ட தெய்வமாக வணங்குகின்ற பெண் ‘பொய்யெனப் பெய்யும் மழை’ போன்றவள்.

பொருள் 3 : கடவுளை வணங்கமாட்டாள். கணவனே பாதத்தில் வீழ்ந்து வணங்குகின்ற பேறுபெற்ற பெண், பெய்யென்று சொன்னால் உடனே மழை பெய்யும்.

பார்த்தீர்களா! ஒரு முத்து எத்தனை விதமாக ஒளிர்கிறது எத்தனை சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கிறது. இதில் எது சரி எது பிழை என்று தர்க்கிக்கவில்லை.

இளம் தமிழ் மாணாக்கர்களே!
இவற்றையெல்லாம் சுவைத்து இன்பத்தமிழிலே திளைத்து அமுதை எமக்களிப்பது உம் தலைக்கடனே.





# பூநகரியில் சிறிய / நடுத்தர பாற்பண்ணையாளர் எதிர் கொள்ளும் பிரச்சனையும் அதற்கான தீர்வும்.



Dr.இ.சசிகரன்
அரச கால்நடை வைத்தியர்,
அரச கால்நடை வைத்தியர் அலுவலகம்,
பூநகரி.

பூநகரியில் வாழ்கின்ற சிறிய / நடுத்தர பாற்பண்ணையாளர்களின் முக்கிய சவாலாக இருப்பது குறைந்த செலவில் கால்நடைத் தீவனத்தை பெற்றுக் கொள்வதாகும். குறிப்பாக வரட்சி காலத்தின் போதும், மழைக்காலத்தின் போதும் தரமான புற்களை போதியளவு பெற முடியாது உள்ளார்கள். இதனால் பாற்பண்ணையாளர்கள் குறைந்த பால் உற்பத்தியைப் பெறுகின்றார்கள் இதனால் அவர்களது வருமானம் குறைகின்றது.

பொதுவாக பெரும்பாலன பண்ணையாளர்கள் தமது பால் பசுக்களின் உணவுத் தேவைக்கு திறந்தவெளி மேய்ச்சலை நம்பி இருக்கின்றார்கள். இது ஒரு புறம் இருக்க. இயற்கையான மேய்ச்சல் தரையை வேறு தேவைகளுக்காக ஒதுக்குவதன் மூலம் அதன் பரப்பளவு குறைந்து செல்கின்றது. இதனால் மீதியாக காணப்படும் தரையில் மிதமிஞ்சிய பாவனை இடம் பெறுவதால் மேய்ச்சலுக்கான புற்தட்டுபாடும், தரக்குறைவான புற்களும், கால்நடைகளுக்கு ஒவ்வாத களைகளும் காணக்கூடிய சூழல் உருவாகின்றது. இதனால் பாரிய நெருக்கடியை பாற்பண்ணையாளர்கள் எதிர் கொள்ள வேண்டி உள்ளதுடன். பாற்பசு வளர்ப்பினைக் கைவிடும் நிலையையும் உருவாக்கின்றது.

எனவே இதற்கான மாற்றுவழியாக கால்நடைப் பண்ணையாளர்கள் தமக்கு ஏற்படைய நிலங்களில் (சொந்த நிலங்கள் அல்லது பாவிக்கக் கூடிய ஏனைய நிலங்கள்) புல்வளர்ப்பினை மேற்கொள்வதும், அவற்றினை அறுவடை செய்து ஆண்டு முழுவதும் தேவைக்கு ஏற்ப எடுத்து பாவிக்க கூடிய வகையில் சைலேஜ் என்னும் வடிவில் (ஊறுகாய் புல்) சேமித்து வைப்பதுமாகும்.

இவ்வாறு புல் வளர்ப்பினை செய்வதற்கு நீர்த் தட்டுப்பாடு காணப்படுமாயின், தூவல் முறை நீர்ப்பாசனம் மற்றும் துளிமுறை நீர்ப்பாசனம் போன்ற முறைகள் மூலம் நீர் விரயத்தினை குறைப்பதற்கு வழி வகை செய்தல் வேண்டும். மேலும் பாற்பசுக்கள் நாள் ஒன்றுக்கு 4-5 மணித்தியாலங்களே உணவுக்குரிய நேரமாகவும் அதே போல் 10-12 மணித்தியாலங்கள் அதன் ஓய்வு நேரமாகவும் (அசைமீட்டும் நேரமாகவும்) இருத்தல் வேண்டும். அப்போது தான் அதியுச்ச பால் உற்பத்தியை அப்பசுக்களில் இருந்து பெறலாம்.

மாறாக திறந்த வெளி மேய்ச்சல் தரவைக்குச் செல்லும் கால் நடைகள் தமது சக்தியை வீணாக்கி மேய்ச்சலுக்காக அலைந்து திரியும் போது இளைப்பாறும் நேரத்தை வெகுவாக குறைப்பதால் அதன் பாலுற்பத்தி பாரியளவு குறைவடையும். இதனால் தான் பசுந்தீவன புல் வகைகளை வளர்த்து அதனை சைலேஜ் முறையில் பதப்படுத்தி ஆண்டு முழுவதும் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தும் முறையை பழக்கப்படுத்திக் கொண்டால் பாற்பண்ணையாளர்கள் தமது பால் வருமானத்தினை சீராகப் பெற்றுக் கொள்வார்கள் என்பது திண்ணம்.

கால் நடை தீவனத்திற்குரிய புல் வகைகளான இறுங்குப்புல், சோளம் மற்றும் நேப்பியர் வகைப் புற்கள் என்பன கால்நடைகளுக்குத் தேவையான போசனைகளை வழங்குகின்றது. இதனால் இதனை சைலேஜ் செய்ய பயன்படுத்துவதற்காக புல் வளர்ப்பினை மேற்கொள்வது சாலச் சிறந்ததாகக் காணப்படுகின்றது.

பதப்படுத்தப்பட்ட சைலேஜ் நீண்ட காலத்திற்கு சேமித்து வைத்து பாற்பசுக்களுக்கு உணவூட்டக்கூடிய இந்த முறைமை தான் தற்பொழுது பிரபலமாகி வருகிறது.

## இதன் தயாரிப்பு முறைகள் பின்வருமாறு

### தேவையான மூலப்பொருட்கள்

- புல் வளர்ப்பு மூலம் வளர்க்கப்பட்டு அறுவடை செய்யப்பட்ட இறுங்குப்புல், நேப்பியர் வகை (Co3, Co4 புல்), சோளம் போன்றன.
- இயற்கையாக கிடைக்கின்ற தீவன வகைகளான இப்பில் இப்பில், பனையோலை, கிளிசெறியா இலை போன்றன.
- சேர்க்க வேண்டிய ஏனைய பொருட்களான சீனி, உப்பு, "நுண்ணங்கி ஊக்கி" என்பன
- சைலேஜ் கொள்கலன்கள் அல்லது சைலேஜ் பொலித்தீன் பைகள் / உறைகள்.

### தயாரிக்கும் முறை

1. நுண்ணங்கி ஊக்கி தயாரித்தல் இதற்காக 1/2 kg இறுங்கு புல்லையும், 100g சீனியையும் ஒன்று சேர்த்து அரைத்து 1 1/2 L நீரையும் விட்டு கரைத்து காற்று போகாத வண்ணம் இறுக்கமாக மூடி மூன்று நாட்களுக்கு சூரிய ஒளிபடாது வைத்திருத்தல் (இதற்கு சோடாப் போத்தல் சாலச்சிறந்தது)
2. புல் வெட்டி வாடவிடுதல் வேண்டும் - சரியான பருவத்தில் உள்ள இறுங்கு புற்களை வெட்டி எடுத்து ஒன்று தொடக்கம் இரண்டு மணித்தியாலங்கள் வெய்யிலில் வாடவிடுதல் வேண்டும். (நீர் 60% - 65% ஆகும் வரை வாடவிடுதல்)

3. வாடவிட்ட புற்களை சிறு சிறு துண்டுகளாக நறுக்குதல் வேண்டும் - இவ்வாறு நறுக்குவதற்காக “புல் வெட்டி நறுக்கும் இயந்திரம்” பாவிக்கலாம் அல்லது கை மூலம் நறுக்கலாம்) இச்செற்பாட்டின் போது 2.3 சென்ரிமீற்றர் துண்டுகளாக நறுக்குதல் வேண்டும்.

4. சேர்க்கப்படக் கூடிய ஏனைய பசுந்தீவன வகைகளையும் மேற்கூறியபடி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி சேர்க்கலாம் (இதற்காக இப்பில் இப்பில், பனையோலை, Co3, கிளிசெறியா இலை போன்றவற்றையும் பாவிக்கலாம்.

5. சீனி, உப்பு, “நுண்ணங்கி ஊக்கி” சேர்த்தல் - இதற்காக சுமார் 1000kg எடையுள்ள வெட்டி நறுக்கப்பட்டுள்ள புற்களுக்கு 3kg சீனி, 3kg உப்பு, 1 1/2 L நுண்ணங்கி ஊக்கி போன்றவற்றை ஒன்றாக சேர்த்து நன்கு கலக்க வேண்டும்.

6. காற்று போகாதவாறு பொதியிட்ட கொள்கலன்களை உருவாக்குதல் வேண்டும். இதற்காக மேற்கூறிய புற்கலவையை சைலேஜ் கொள்கலன்களில் இறுக்கமாக நசித்து அடைக்க வேண்டும். காற்று உள்ளே இருக்காதவாறு இடைவெளியின்றி இறுக்கமாக நசித்து அடைக்க வேண்டும். அடைக்கப்பட்ட கொள்கலன்கள் காற்று இன்றிய நிலையில் இருப்பதனை உறுதி செய்தல் வேண்டும். அத்தோடு சைலேஜ் கொள்கலன்கள் இல்லாதவர்கள் சைலேஜ் பொலுத்தீன் உறைகளில் நசித்து அடைத்து காற்று இன்றிய நிலையில் இறுக்கமாக கட்டி சேமித்து வைக்கவேண்டும்.

7. கொள்கலனை சேமித்து பாதுகாக்கும் முறை - குளிரான, உலர்வான இடத்தில், கடுமையான சூரிய ஒளி இல்லாத இடத்தில், கொள்கலன்களின் வாய்ப்பகுதி கீழே இருக்கக்கூடியவாறாக தலைகீழாக வைத்திருத்தல் நன்று.

இத்தகைய சத்து நிறைந்த பதப்படுத்தப்பட்டு சேமிக்கப்பட்ட சைலேஜ் ஆனது நீண்ட காலம் வைத்திருந்து உணவூட்டக் கூடிய ஒன்றாகும். அவ்வாறே இது பொலுத்தீன் உறைகளில் சேமிக்கப்படுமாயின் 4 மாதங்கள் தொடக்கம் 1 வருடம் வரையும் சேமிக்கலாம். அதே போல் பிளாஸ்டிக் பரல்கள் / சைலேஜ் கொள்கலன்களில் சேமித்து வைப்பதாயின் 2 தொடக்கம் 3 வருடங்கள் வரை சேமித்து வைத்து உணவூட்டலாம்.

**தரமான சைலேஜ் கண்டறிவதற்காக பின்வருவனவற்றை அவதானிக்க வேண்டும்.**

1. நிறம் - பொன்னிறமாக அல்லது வெண்ணிறப் பச்சை நிறத்தில் அல்லது மண்ணிற மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

2. மணம் / வாசனை - பழங்களின் வாசனை (பழுத்த விளாம்பழ வாசமாக) இருக்கும்.

3. ருசி - வினாகிரிப் பழங்களில் காணப்படும் புளிப்புத் தன்மை கொண்ட ருசி உள்ளதாக காணப்படும்.

4. தொடுகை அல்லது எடுத்து பார்க்கும் போது - சிறுசிறு துண்டுகள் தனித்தனியாக பிரிந்து கொள்ளும் ஒன்றுடன் ஒட்டாது காணப்படும்.

**"சைலேஜ்" உணவாக ஊட்டும் முறை**

ஆரம்பத்தில் புதிதாக சைலேஜ் வழங்கும் போது கொஞ்சம் கொஞ்சமாக மற்றைய உணவுகளுடன் சேர்த்து கலந்து கொடுத்தல் வேண்டும் பின்னர் படிப்படியாக நாளுக்கு நாள் சைலேஜ் பங்கின் அளவினை கூட்டிச் செல்லல் வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு பசுவுக்கு தேவையான சைலேஜ் அளவினை காலை, மாலை என்று இரண்டு வேளைகளிலோ அல்லது காலை, மாலை முன் இரவு என்று மூன்று வேளையோ வழங்கலாம். பொதுவாக 200 தொடக்கம் 250 கிலோக்கிராம் எடையுள்ள நாளாந்தம் 4-5 லீற்றர் பால் கொடுக்கக்கூடிய ஓர் கலப்பின பசுவிற்கு நாள் ஒன்றிற்கு 10-12 கிலோக்கிரம் எடையுள்ள சைலேஜினை உணவாக வழங்கலாம்.

அதே போன்று சைலேஜ் ஏனைய உணவுக் கூறுகளுடன் சேர்த்துக் கலந்து நிறை உணவூட்டல் முறையாகவும் உணவு வழங்கலாம். இதற்காக பச்சை அரிசி தவிடு, மாட்டு அடர்வுத்தீன், மைசூர் பருப்புக் கோது, பயற்றம் குருனி, உழுந்துக் குருனி, புண்ணாக்கு வெட்டி நறுக்கப்பட்ட புல்வகைகள் (Co3, இறுக்கு) வெட்டி நறுக்கப்பட்ட பனையோலை, சிறிதளவு உப்பு போன்றவற்றை ஒன்று சேர்த்து உணவூட்டலையே "நிறையுணவூட்டல்" என்று அழைக்கப்படுகின்றது.

பொதுவாக சைலேஜ் தயாரிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் கழிந்த பின் பாவிக்கலாம். ஆனால் அவசரத் தேவைகள் ஏற்படின் மூன்று கிழமைகளின் பின் பாவிக்க முடியும். ஆனால் அதனை விடக் குறைந்த காலத்தினுள் திறந்து பாவிக்க முற்பட்டால் சிறந்த, தரமான சைலேஜினை பெற்றுக் கொள்ள முடியாது. எனவே அது நல்லதல்ல.

பெரிய பரல்களில் / கைலேஜ் கொள்கலன்களில் சைலேஜ் தயாரிக்கப்பட்டிருந்தால் அதன் போது பண்ணையாளர்களின் நாளாந்தத் தேவையும் குறைவாகக் காணப்பட்டால், தேவையான அளவு சைலேஜ் எடுத்த பின்னர் மிகுதியை காற்றுப்புகாதவாறும், காற்றின்றியும் இறுக்கமாக மூடி வைத்திருத்தலை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

ஒரு மாட்டிற்கு எத்தனை கிலோ சைலேஜ் உணவூட்ட வேண்டும் என்பதனை அந்த மாட்டின் பால் உற்பத்தி, மாட்டின் நிறை, அதன் கர்ப்பநிலை, வயது என்பன தீர்மானிக்கின்றது. இருப்பினும் இது தொடர்பாக அரச கால் நடை வைத்தியர் ஆலோசனையை பின்பற்றுவதும் சிறப்பானதாக இருக்கும்.

# இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களில் பகிடிவதையும் அதன் கொடிய எதிர் விளைவுகளும் சட்ட ரீதியான அணுகுமுறை.



திரு.ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ
L.L.B (Hons)
சித்தன் குறிச்சி,
பூநகரி.

பல்கலைக்கழக மாணவர்கள் நன்னடத்தையுள்ளவர்களாக இருக்க வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் புத்தியுள்ளவர்களாக இருக்க வேண்டும், கடமை உணர்வு மிக்கவர்களாக மிளிர்தல் வேண்டும் காத்திரமான விமர்சகர்களாகவும். ஆய்வாளர்களாகவும் ஆற்றல் மிக்கவர்களாகவும் திகழ வேண்டும். அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் எல்லை மீறாதவர்களாகவும் சமூக நீதிக்கு பயந்தவர்களாகவும் இருக்க வேண்டுமென சமூகத்தின் அனைத்து பிரஜைகளாலும் எதிர் பார்க்கப்பட்டாலும் நடைமுறையில் ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் செய்திகள் பல்கலைக்கழக மாணவர்களை நாகரீகமற்றவர்களாகவும். பண்பாடற்ற மோசமான சிந்தனை வறட்சி உள்ள காட்டு மிராண்டிகளுக்கு ஒப்பாகவே வைத்து நோக்குமளவுக்கு நிலவரங்கள் உள்ளன. பொதுவாக பல்கலைக்கழகங்கள் எனப்படுபவை ஒரு நாட்டின் அதி உச்ச கல்விப் பீடங்களாவும். அறிவியற் கூடங்களாகவும். மறு மலர்ச்சி சிந்தனைகளை உற்பத்தி செய்தியும் மாபெரும் சர்வ கலாசாலைகளாகவும் விளங்கவேண்டும். ஆயினும் பல்கலைக்கழகங்கள் பகிடிவதை எனும் பெயரில் சித்திரவதைக்கூடங்களாக மாறியிருப்பது மிகப்பெரும் துரதிஷ்டமே ஆகும்.

இலங்கைத் தீவானது உலக நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அபிவிருத்தியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தாலும் உலகத்தின் வல்லரசு நாடுகளால் கூட அடைய முடியாத இரு பெரும் இலக்குகளை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது. அவை இலங்கையின் இலவசக்கல்வியும். இலவச சுகாதார சேவை வசதியும் ஆகும். அந்த வகையில் உயர்கல்வி வாய்ப்பென்பது மாணவர்களுக்கு கிடைக்கும் அரிய வரப்பிரசாதமே ஆகும். குறிப்பாக இந்தியாவில் நீட் எனும் தேர்வு முறையினால் எத்தனை திறமை மிக்க மாணவராயினும் பணவசதியே ஒருவரின் எதிர்கால கல்வியை தீர்மானிக்கும் நிலையில் இலங்கையில் உள்ள பல்கலைக்கழக தேர்வு முறை என்பது பாரபட்சமின்றி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். அண்ணளவாக ஆண்டுதோறும் 3.25 இலட்சம் மாணவர்கள் தோற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் அண்ணளவாக 31,000 மாணவர்களே பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் நிலையில் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்கள் உண்மையிலேயே மிகப்பெரும் அதிஸ்டசாலிகள் எனினும் இத்தகைய வாய்ப்பின் பெறுமதியை பெருமளவான மாணவர்கள் உணரவில்லை என்பதே உண்மை. காரணம் சமத்துவத்தையும், சகோதரத்துவத்தையும்

வளர்ப்பதற்குப் பதிலாக பகிடிவதை எனும் போர்வையில் உளவியல் பிரச்சனை உடைய மனநோயாளிகளாக பகிடிவதையில் பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபடுவது மிகவும் கவலைக்குரிய தொன்றாகும்.

பகிடிவதையின் வரலாறு

இலங்கையில் பகிடிவதை கலாசாரம் பிரித்தானிய காலனித்துவத்தின் விளைவாகவே தோற்றம் பெற்றது. Ragging எனும் பதமானது இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம் போன்ற நாடுகளிலேயே அதிகம் பிரசித்திம் பெற்றுள்ளது. அமெரிக்கா போன்ற மேலைத்தேச நாடுகளில் Hazing அல்லது Bullying போன்ற பதங்களால் அழைக்கப்படுகிறது. ஒரு மாணவருக்கு Senior எனும் அடிப்படையில் உடலியல் ரீதியாக உளவியல் ரீதியாக அல்லது பாலியல் ரீதியாக பயம், காயம் அல்லது மனவருத்தத்தை ஏற்படுத்தும் எந்தவொரு செயலும் பகிடிவதையாகும்.

இரண்டாம் உலகப்போரில் கலந்து கொண்ட இராணுவ வீரர்கள் மீண்டும் தமது பயிற்சிக் கல்லூரிகளுக்கு திரும்பிய போது சிரேஷ்ட அதிகாரிகளால் வழங்கப்பட்ட பகிடிவதை முறையே பின்னர் எமது நாட்டின் பல்கலைக்கழகத்தின் ஓர் உப கலாசாரமாக பரிணமித்தது இலங்கை வரலாற்றில் 1974 ஆம் ஆண்டே முதலாவது பகிடிவதை விவகாரம் மிகப்பெரும் சர்ச்சையாக உருமாறியது. இப்போதைய களனிப் பல்கலைக்கழகமும் அப்போதைய வித்தியாலங்கார கல்விச் சாலையில் இடம் பெற்ற பகிடிவதை சம்பவம் தொடர்பில் அப்போதைய பிரதம மந்திரி சிறிமவோ பண்டாரநாயக்க அம்மையார் உருவாக்கிய விசேட V.W குலரத்தின விசாரணை ஆணைக்குழுவின் மூலம் இடம் பெற்ற விசாரணைகளின் ஈற்றில் பகிடிவதையில் ஈடுபட்ட 12 சிரேஷ்ட பல்கலை மாணவர்கள் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளில் இருந்து முழுமையாக இடை நீக்கம் செய்யப்பட்டமையும் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமைக்காக 4 பல்கலைக்கழக ஊழியர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படமையும் குறிப்பிடத்தக்கது

அதனைத் தொடர்ந்து 1975 ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் பகிடிவதை தொடர்பிலான முதலாவது மரணச் சம்பவம் பதிவாகியது. பேராதனை பல்கலைக்கழகத்தின் 22 வயதுடைய விவசாய பீட மாணவியாகிய ரூபா ரத்னசீலி (Rupa Rathnaseeld) பகிடிவதையில் இருந்து தன்னை பாதுகாத்து கொள்ள இராமநாதன் மண்டபத்தின் மேல் மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார். அதனைத் தொடர்ந்து காலத்துக்கு காலம் இத்தகைய பகிடிவதையின் மூலமான மரணச் சம்பவங்கள் தொடர்ந்தும் பதிவாகிய வண்ணமே இருந்தது. அவற்றுள் குறிப்பாக 1997 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியற்பீட மாணவன் S.வரப்பிரகாஷ் எனும் மாணவன் கடுமையான பகிடிவதையினால் சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்தமை இலங்கையின் உயர்கல்வி சூழலிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் பாரிய அதிர்வலைகளை ஏற்படுத்தி இருந்தது. அதே ஆண்டில் கேலும் துஷார விஜேயதுங்க (Kelum Thushara Wijeyatanga) எனும் மாணவன் அம்பாறையில் உள்ள Hoody Techinical Institute நிலையத்தில் இடம் பெற்ற பகிடிவதை மூலம் மரணமாகியமை, 2002 ஆம் ஆண்டு சமந்த வித்தனகே எனும் ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைகழகத்தின் மூன்றாம் வருட முகாமைத்துவ பீட

மாணவன் பகிடிவதைக் கெதிராக பாரிய எதிர்ப்பு முயற்சிகளை மேற்கொண்டு வந்த தருணத்தில் கொலை செய்யப்பட்டமை போன்ற விடயங்கள் சோகமான வரலாற்று துன்பியல் சம்பவங்கள் ஆகும்.

### பகிடிவதையின் பன்முக வடிவங்கள்.

1. உடலியல் சார்ந்த பகிடிவதை மற்றும் துன்புறுத்தல் (physical ragging orphysdcal torture)
2. உளவியல் சார்ந்த மன உளைச்சல்கள் (emotional abuses or mental torturdng)
3. பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் அல்லது துஷ்பிரயோகம் (Sexual torture or sexual abuse)

எமது நாட்டில் 1970, 1980, 1990 களில் இடம் பெற்ற உடலியல் சார்ந்த பகிடிவதைகள் தற்போது ஒப்பீட்டளவில் சற்று குறைந்தாலும் உளவியல் சார்ந்த மற்றும் பாலியல் ரீதியான பகிடிவதை எனும் போர்வையில் அமைந்த துன்புறுத்தல்கள் அரச பல்கலைக் கழகங்களில் தற்போதும் தொடர்ந்த வண்ணமே உள்ளது. குறிப்பாக பல்கலைக் கழகங்களுக்குள் உள்நுழையும் மாணவர்களுக்கு அணியும் ஆடைகளில் கட்டுப்பாடு விதித்தல் மிகவும் முக்கியமானது பெண் பிள்ளைகளாயின் பாவாடை சட்டை மட்டுமே அணிய வேண்டும், தலைமுடி நன்றாக எண்ணெய் வைத்து பின்னி அணிதல் வேண்டும். பெரிய கறுப்பு பொட்டு அணிதல் வேண்டும். குறித்த சில நாட்களில் புடவை அணிய வேண்டும். காலில் சாதாரண பாட்டா செருப்பு மட்டுமே அணிய வேண்டும். புத்தகப்பை கொண்டு வர முடியாது. அதே போல் ஆண் மாணவர்களுக்கு தொய்வான பெரிய ஜீன்ஸ் மற்றும் சேட் அணிய வேண்டும். தலை முடி மொட்டையாக வெட்டியிருக்க வேண்டும் முழுமையாக முகச்சவரம் செய்திருக்க வேண்டும். காதில் பூ அணிந்திருக்க வேண்டும். காலில் சாதாரண பாட்டா செருப்பு மட்டுமே அணிய வேண்டும். சப்பாத்து போடக் கூடாது. புத்தகப்பை கொண்டு வரக்கூடாது. மோட்டார் வாகனங்களில் பல்கலைக்கழகம் வரக்கூடாது. வேட்டி வாரம் எனும் காலப்பகுதியில் ஆண்கள் உள்ளாடை அணியாமல் வேட்டி கட்ட வேண்டும். அனைத்து கனிஷ்ட மாணவர்களும் தமது காலத்தில் பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலைகளில் விநியோகிக்கப்படும் விலைகுறைந்த சாதாரண உணவுகளையே உண்ண வேண்டும் போன்ற கட்டுப்பாடுகள் பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் தற்போதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

இவற்றுக்கு மேலதிகமாக புதுமுக மாணவர்கள் தமது சக ஆண்டு மாணவர்களின் பெயர் மற்றும் குறியீட்டு பெயர் என்பவற்றை மனப்பாடம் செய்யவும். தமது சிரேஷ்ட மாணவர்களின் பெயர் மாவட்டம் என்பனவற்றை மனப்பாடம் செய்யவும். தமது பீடத்தில் விரிவுரைகளை போதனை செய்யும் விரிவுரையாளர்களின் பட்டப் பெயர்களை மனனம் செய்யவும். திணிக்கப்படுவர் அத்துடன் பல்கலை கழகத்தில் உள்ள சிற்றுண்டிசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு, விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவு, பீடங்களின் எண்ணிக்கை எவ்வளவு, நூலகம் எங்கே உள்ளது, வழிபாட்டுத் தளங்கள் எங்கே உள்ளன, வங்கி எங்கே உள்ளது போன்ற விடயங்களை மனனம் செய்யவும் திணிக்கப்படுவர்.

அத்துடன் பாலியல் ரீதியாக அருவருக்கத்தக்க சொற்களை உடைய பாடல்கள்,

பழமொழிகள், வாசகங்கள், திருக்குறள் என்பனவற்றை மனப்பாடம் செய்யவும் திணிக்கப்படுவார் அத்துடன் மரங்களுக்கு கட்டிடங்களுக்கு முத்தமிட வேண்டும்.

எதிர்பால் இனத்தவர்களுக்கு காதலை வெளிப்படுத்துவது போல நடித்தல், ஒரே இனிப்பு பண்டத்தை அனைத்து மாணவர்களும் உண்ண வேண்டும் போன்ற அருவருக்கத்தக்க இன்னும் பல பாலியல் சேட்டைகள் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை எனும் போர்வையில் அரங்கேற்றப்படுகின்றன. இவற்றை செய்ய மறுக்கும் கனிஷ்ட மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் கடுமையாக தாக்குதல், அச்சுறுத்தல், ஏனையவர்களிடம் இருந்து ஒதுக்கி வைத்தல் அவர்களுக்கான அனைத்து உதவிகளையம் நிறுத்துதல், பல்கலைக்கழகத்தில் இடம் பெறும் அனைத்து விழாக்களிலும் கலந்து கொள்ள தடை செய்தல் போன்ற பழிவாங்கல்களை மேற்கொள்வார்கள்.

## பகிடிவதையை முழுமையாக இல்லாமல் செய்தல் உள்ள தடைகள் எவை? பகிடிவதையை எப்படி இல்லாமல் ஒழிக்கலாம்?

1. பல்கலைக்கழக நிர்வாகத்தினரின் கவனயீனமும் அசமந்தப் போக்கும்.

பல்கலைக்கழக வளாகம் மற்றும் அதனை சூழவுள்ள தங்குமிட விடுதிகளிலேயே அதிகளவிலான பகிடிவதை நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. எனவே அவற்றை கண்காணிக்கவென உரிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்கள் வினைத்திறனாக செயற்பட்டாலே பெருமளவிலான பகிடிவதைகளை தவிர்க்க முடியும் ஆயினும் சிரேஷ்ட மாணவர்களுடன் ஏன் தேவை இல்லாமல் பகைக்க வேண்டும் என்ற அச்ச உணர்வும் கண்டுகொள்ளாத பெருமளவிலான உத்தியோகத்தர்களின் மன நிலையுமே பகிடிவதைக்கான பிரதான காரணமாகும். பகிடிவதையில் இருந்து தம்மை பாதுகாத்து கொள்வது தொடர்பான விழிப்புணர்வு கருத்துக்களை புதுமுக மாணவர்களுக்கு விரிவுரையாளர்கள் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பதுடன் பகிடிவதையினால் உண்டாகும் எதிர்மறையான விளைவுகள் மற்றும் அதற்குரிய சட்ட நடவடிக்கைகள் மற்றும் தண்டனைகள் தொடர்பில் சிரேஷ்ட மாணவர்களுக்கு விரிவுரையாளர்கள் அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டும். அத்துடன் பகிடிவதையை கட்டுப்படுத்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவர் ஒன்றியங்களை உள்ளடக்கிய விழிப்புணர்வு குழு ஒன்று பரந்து பட்ட அளவில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும். நள்ளிரவில் பகிடிவதை தொடர்பான செய்திகள் கிடைத்தால் கூட அவ்விடத்துக்கு உடனடியாக விரையக் கூடிய தயார் நிலையில் அக்குழு இயங்கு நிலையில் இருக்க வேண்டும்

2. பரந்து பட்ட அரசியல் பின்புலங்களையுடைய மாணவர் ஒன்றியங்களின் ஒரு பக்கச் சார்பான செயற்பாடு இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களின் பல மாணவர் ஒன்றியங்கள் மிகுந்த வலுவுடையனவாகவே உள்ளன. போருக்குப் பின்னரான சூழலில் அரசாங்கத்துக்கு எதிராக பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதில் அரசியல் கட்சிகளை விட மாணவர் ஒன்றியங்கள் மிகுந்த வீரியத்துடன் செயற்பட்டன. அவர்களின் செயற்பாட்டு அடிப்படையில் குறிப்பிடத்தக்க சில வெற்றிகளையும் அவர்கள் பதிவு செய்தார்கள். இருப்பினும் அம்மாணவர்

ஒன்றியங்கள் கடந்த காலங்களில் சில அரசியல் கட்சிகளின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு துணை போனதையும் அவர்களின் கிள்ளுக் கீரைகளாகவும் விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

வெளிப்படையாக கூறுவதாயின் களனிப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் என்பனவற்றில் கடந்த காலங்களில் மாணவர் ஒன்றியங்கள் மூலமான அரசியல் கட்சிகளின் ஆக்கிரமிப்பு மிக அதிகமாக காணப்பட்டது. இவ் மாணவர் ஒன்றியங்கள் அத்தகைய பின்புல செல்வாக்கின் அடிப்படையில் நாட்டில் இடம் பெறும் தேசிய இன பிரச்சனைக்கான தீர்வு, ஊழல் மோசடிகள், கல்வியை தனியார் மயமாக்கும் அரசின் திட்டங்கள், சுற்றுப்புறச் சூழல் தீங்குக்கு எதிரான ஆர்பாட்டங்கள் என பல காத்திரமான செயற்பாடுகளில் ஈடுபட்டன. இது மிகவும் போற்றுதலுக்கும் பாராட்ட வேண்டிய விடயமாகும். ஆயினும் இதே சக்தியை வைத்துக் கொண்டு பகிடிவதையில் ஈடுபட்டு தண்டனை அனுபவிக்கும் மாணவர்களை காப்பாற்றவும் அதே மாணவர் இயக்கங்களை பயன்படுத்தி போராட்டங்களை ஏற்பாடு செய்கின்றமை அவர்களின் கொள்கையில் உள்ள கோட்பாட்டு முரண்பாட்டை தெளிவாக காட்டுகிறது. அரசியல்வாதிகள் சரியாக இருக்க வேண்டும். மக்கள் சரியாக இருக்க வேண்டும் நிர்வாகம் சரியாக இருக்க வேண்டும் என வீதியில் இறங்கி போராடும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்கள் பல்கலைக் கழக புதுமுக மாணவர்களின் அடிப்படை உரிமைகளை சிரேஷ்ட மாணவர்கள் முழுமையாக மீறுகின்ற போது ஏன் மௌனம் சாதிக்கின்றன. சமத்துவச் சிந்தனையும் சகோதர உணர்வும் என்கின்ற கோசங்களும் வெறுமனே மற்றயவர்களுக்கு மட்டும் தானா? ஆகவே அரசாங்கத்தின் ஒடுக்கு முறைக்கெதிராகப் போராடும் மாணவர் ஒன்றியங்கள் பகிடிவதை எனும் போர்வையில் அட்டூழியங்களையும் பாலியல் ரீதியான வக்கிரங்களையும் புரியும் சக மாணவர்களையும் தண்டிக்க நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

3. பகிடிவதையில் ஈடுபடும் சிரேஷ்ட மாணவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும் என்கிற பாகுபாட்டு உணர்வு இலங்கையில் ஆண்டு தோறும் பல விசித்திரமான பகிடிவதைச் சம்பவங்கள் நடைபெறுவதாக குறிப்பிடப்பட்டாலும் கூட அவற்றுக்கு எதிராக எந்த அளவு துரிதமான நடவடிக்கைகள் இடம் பெறுகின்றது என்பதும் அவ்விசாரணை நிறைவில் உண்மையிலேயே குற்றம் இழைத்தோர் தண்டிக்கப்படுகின்றனரா என்ற கேள்விக்கும் பதில் பெருமளவில் கிடைப்பதில்லை இதற்கு மிக முக்கிய காரணம் அம்மாணவர்கள் மீது பல்கலைக் கழக நிர்வாகம் காட்டுகின்ற பரிதாபமும், பாவம் பிழைத்துப் போகட்டும் என்ற அசண்டையீனமே ஆகும். இதனால் நாம் எது செய்தாலும் நிர்வாகமும் சட்டமும் எம்மை தண்டிக்க மாட்டாது என்கிற அசட்டுத் துணிவே தொடர்ந்தும் மாணவர்களை குற்றமிழைக்கத் தூண்டுகிறது. ஒரு சிலருக்கு கடுமையான நீண்ட கால வகுப்புத் தடை, பகிடிவதையில் ஈடுபடுவோருக்கு உதவித் தொகைகளான மகாபொல மற்றும் பேர்சரி போன்ற நிதி உதவிகளை முற்றாக நீக்குதல், குற்றமிழைத்த மாணவர்களை பல்கலைக்கழகத்தை விட்டு இடைநீக்கம் செய்தல் போன்ற கடுமையான தண்டனைகளை வழங்கினால் ஏனைய பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பகிடிவதையில் ஈடுபடவே மாட்டார்கள்.

4. தலைமுறை தலைமுறையாக பல்கலைக் கழகத்தில் ஊடுகடத்தப்படும் உப பண்பாடு இலங்கை பல்கலைக்கழகங்களில் கல்வி போதிக்கும் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் அதே பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்களாக விளங்கும் சந்தர்பங்கள் மிக அதிகம் அவர்கள் கூட பல்கலைக் கழகத்தின் மாணவர்களாக இருக்கும் போது அதே கலாசாரத்தில் ஊறித்திளைத்தவர்களாகவே இருக்கும் வாய்ப்புகள் மிக அதிகம். எனவே பல விரிவுரையாளர்களிடம் இக்கலாசாரத்தை முழுமையாக இல்லாதொழிக்கும் மனப்பாங்கு இருப்பதில்லை. பகிடிவதைக் கலாசாரமானது தலைமுறை தலைமுறையாக இலங்கை பல்கலைக்கழகங்களில் பின்னிப்பிணைந்துள்ள சூழலில் அதனை இல்லாதொழிக்க பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் திடசங்கற்பம் பூணுதல் அவசியம்.

5. பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரம் மிக அதிகமாக இருத்தல் பாடசாலைக் காலத்தில் தனியார் வகுப்புகள், பிரத்தியோக வகுப்புக்கள், பாடசாலை என மாறி மாறி ஓடி ஓடிப் படித்த மாணவர்களுக்கு பல்கலைக்கழக சூழலில் கிடைக்கும் அதிக ஓய்வுப் பொழுதுகள் அவர்களை பகிடிவதை, போதைப் பொருள் பாவனை போன்ற தவறான வழிகளுக்கு இட்டுச் செல்லும் வாய்ப்பை அதிகரிக்கின்றன. உண்மையில் பாடசாலைக் கல்விக்கும் பல்கலைக்கழக கல்விக்கும் இடையில் பாரிய வேறுபாடு உள்ளதென்பதை மாணவர்கள் உணர வேண்டும் பாடசாலையில் ஆசிரியரினால் வழங்கப்படும் குறிப்புகள் மாத்திரம் பரீட்சைக்கு போதுமானவை ஆயினும் விரிவுரை மண்டபங்கள் அவற்றில் இருந்து முற்றிலும் வேறுபட்டவை. அங்கு பரீட்சைக்கு தேவையான அடிப்படை விடயங்கள் மாத்திரமே கற்றுக் கொடுக்கப்படும் பூரணத்துவமான அறிவை பெற நூலகங்களில் சுய தேடல் மற்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது மிகவும் அவசியமாகும். துரதிஷ்டவசமாக எமது மாணவர்கள் பலர் மழைக்கும் கூட பல்கலைக்கழக நூல் நிலையங்களுக்கு செல்வதில்லை என்பதே வருத்தமான உண்மையாகும். எனவே மாணவர்களை வேலைப்பளு மிக்கவர்களாக மாற்றுவதன் மூலமாகவும் பகிடிவதையில் ஈடுபடுவதில் இருந்து தவிர்க்கச் செய்யலாம்.

மாணவர்களை கலை இலக்கியத்துறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல், ஆக்கபூர்வமான மாணவர் ஒன்றியச் செயற்பாடுகளுக்கு இணைத்தல், நூல் வெளியீடு, கண்காட்சி ஏற்பாடு, விளையாட்டு போட்டிகள் நடத்தும் பொறுப்பு, நிகழ்ச்சி ஒருங்கமைப்பு, நிதி சேகரிப்பு, சங்கங்கள் கழகங்களுக்கு தலைமைத்துவம் வகிக்கச்செய்தல் போன்ற பணிகளை கொடுத்தால் அவர்களின் நேரம் பகிடிவதைச் செயற்பாடுகளில் ஈடுபடாமல் சமூகத்துக்கு பயன்தரக்கூடிய விதத்தில் பெறுமதியாக மாற்றப்படும். அத்துடன் பகிடிவதையில் ஈடுபடுவோரை காட்டுமிராண்டிகள் போல சித்தரித்தும் பல்கலைக்கழக நேரத்தை பெறுமதியாக செலவிடுவோரை பரிசில்கள், விருதுகள் வழங்கி கௌரவித்து நாயகர்களாக சித்தரித்தால் அடுத்துவரும் கனிஷ்ட மாணவர்களும் நல்ல முன்னுதாரனமான மாணவர்களை அடியொற்றி நடப்பார்கள்.

## சட்ட ரீதியான பாதுகாப்பு ஏற்பாடுகள்

பல ஆண்டுகளாக பகிடிவதையில் ஈடுபடுவோர் இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவை (Penal Code) மற்றும் Criminal Procedure Code என்பனவற்றினால் நீதி விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்த நிலையில் 1997 ஆம் இடம் பெற்ற வரப்பிரகாஷ் மற்றும் கேலும் துஷார விஜேயதுங்க ஆகியோரின் மரணங்கள் நாடு முழுவதும் ஏற்படுத்திய அதிர்வலைகளின் காரணமாக இலங்கைப் பாராளுமன்றம் 1998 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29 ஆம் திகதி பகிடிவதை தடுப்புச் சட்டத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

இச்சட்டத்தின் பிரிவு 2 (1) பல்கலைக்கழக வளாகத்தினுள் அல்லது வேறு பிரதேசத்தில் பகிடிவதையில் ஈடுபட்டால் அல்லது அச்செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருந்தால் சுருக்க முறையிலான விசாரனை நீதாவான் நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்டு 2 வருடங்களுக்கு மேற்படாத கடுழிய சிறைத்தண்டனை வழங்கப்படும் என்பதுடன் பாதிக்கப்பட்ட மாணவருக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் இழப்பீட்டு தொகையை குற்றவாளி செலுத்த வேண்டும்.

பகிடிவதை தடுப்புச் சட்டத்தின் பிரிவு 2 (2) இல் குறிப்பிடப்பட்ட குற்றங்களாகிய பகிடிவதை எனும் பேரில் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை மேற் கொள்ளல், மாணவர்களை அடித்து காயப்படுத்தல் போன்ற குற்றங்களை இழைத்தால் சுருக்கமான விசாரணையின் முடிவில் குற்றவாளி என நிருபிக்கப்பட்டால் 10 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமென்பதுடன் பாதிக்கப்பட்ட மாணவருக்கு நட்ட ஈட்டுத் தொகையும் வழங்க வேண்டும்.

அதேவேளை குறித்த சட்டத்தின் பிரிவு 3, பல்கலைக்கழக வளாகத்தினுள் அல்லது வெளியிலோ மாணவர்களின் சொத்துக்களுக்கோ உடமைகளுக்கோ தீங்கு விளைவித்தால் நீதாவான் நீதிமன்றின் விசாரணை நிறைவில் 5 வருடத்துக்கு மேற்படாத கடுழிய சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும்.

அதே வேளை பிரிவு 4 இல் மாணவர்களின் நடமாடும் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் விதத்தில் மாணவர்களை அடைத்து வைத்து துன்பம் விளைவித்தல் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டால் 7 வருடத்துக்கும் மேற்படாத கடுழிய சிறைத்தண்டனையை குற்றமிழைத்த மாணவர்கள் அனுபவிக்க வேண்டும்.

1998 ஆம் ஆண்டு பகிடிவதை தடுப்புச் சட்டத்தின் பிரிவு 9 பிணை தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட பிரிவு 2 (2) மற்றும் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்ட குற்றங்களை புரியும் மாணவர்களுக்கு நீதவான் நீதிமன்றின் மூலமாக பிணை வழங்கும் அதிகாரம் இல்லை என்பதுடன் மேல் நீதிமன்றத்துக்கே அவ்வதிகாரம் உண்டு அத்துடன் பிரிவு 11 இன் படி இது ஒரு Cognizable offence என்பதால் பிடியாணை இன்றி குற்றமிழைத்தவர்களைக் கைது செய்யமுடியும்.

### பகிடிவதை செய்வோருக்கு எதிராக எப்படி முறைப்பாடு செய்ய முடியும்?

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும்.
   பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு நேரடியாக தான் சென்று முறைப்பாடு வழங்க வேண்டுமென எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை https://eugc.ac.lk/rag/ எனும் இணையத்தளத்தின் மூலமாகவும் 0112123700 எனும் தொலைபேசி இலக்கம் மூலமாகவும் முறைப்பாட்டினை மேற்கொள்ள முடியும். தவிர Google play store இல் உள்ள UGC Emergency Safety App மூலமாகவும் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியும்.

2. பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவ ஒழுக்க அதிகாரி (Marshal, மாணவர் ஆலோசகர் (Student Counselor) சிரேஷ்ட மாணவ ஆலோசகர் Senoir Student Counselor) ஆகியோருக்கு உடனடியாக அறிவிக்கலாம், அது தவிர விரிவுரையாளர்கள், பீடாதிபதி, துணைவேந்தர் போன்றோருக்கும் அறிவிக்கலாம்.

3. நிலைமை மிகவும் மோசமாக போனால் பொலிசாரின் உடனடி இலக்கமாகிய 119 என்ற இலக்கத்துக்கும் உடனடியாக அறிவிக்கலாம்.

**முடிவுரை**

பல்கலைக்கழகங்கள் சுயாதீனமான உன்னத புலமைத் தேடலுக்கான சுவர்க்க பூமியாகும். ஆயினும் துரதிஷ்ட வசமாக பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர்களில் பெரும்பாலோனோர் பகிடிவதையை ஒரு சாதாரண உப பண்பாடாக கருதுகின்றனர். புலமைத்துவ கல்வி பீடங்களில் Senior-Junior என்ற பேதம் சரியானது என்கிற கருத்துருவாக்கம் இருந்தால் நாட்டில் பெரும் பான்மையானோர் சிறு பான்மையினரை அடக்குவது கூட சரியானதாகவே தென்படும், உயர் சாதியினர் என்று தம்மை தாமே அடையாளப்படுத்திக் கொள்வோர் ஒடுக்கப்பட்ட சாதி மக்களுக்கெதிராக அடக்கமுறைகளை பிரயோகிப்பதும் சரியாகவே தென்படும் ஆகவே ஒடுக்குமுறைகளுக்க எதிராக குரல் கொடுப்போர் பகிடிவதைக்கெதிராகவும் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இன்று பல்கலைக்கழகத்தில் பகிடிவதை செய்வோர் தான் நாளை இந்த நாட்டின் அரச, தனியார் மற்றும் மிக முக்கிய நிர்வாக ஆட்சி செயற்பாடுகளின் பிரதான பங்காளிகளாக இருக்கப்போகிறார்கள் ஆகவே அங்கும் இதே பலாத்கார சிந்தனைகளுடன் தான் பணியாற்ற போகின்றார்களா? நாட்டை ஆள இருக்கும் படித்த இளையவர்கள் மனநோயாளிகள் போல பகிடிவதையில் ஈடுபட்டால் நாட்டின் நாளைய எதிர்காலம் எப்படி இருக்கும்? இந்த பகிடிவதையில் ஈடுபடும் மனநோயாளிகளுக்கு மருந்து, மாத்திரை கொடுத்து இனி பயனில்லை, கடுமையான அறுவை சிகிச்சைகளே தேவைப்படுகின்றன. ஒரு சிலருக்கு கொடுக்கப்படும் தண்டனைகள் முழு மாணவர் சமூகத்தையும் திருத்தும் என்பதில் ஐயமில்லை, ஆனால் துணிச்சலோடு எவ்வித அழுத்தங்களுக்கும் அடி பணியாமல் இந்த பூனைகளுக்கு மணி கட்டப்போவது யார் என்பது தான் நம்மிடம் இருக்கும் பிரதானமான கேள்வி.

# மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலுக்கு....



திரு.ப.விஜயநாதன்
(MED,MA-Tamil,BED,
DSM,PGDEM,Primary traint)
ஆசிரிய ஆலோசகர் வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி.

பாடசாலைகளின் பாடவிதானத்தில் ஆரம்பக்கல்வி மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். அனைத்திற்கும் ஆரம்பக்கல்வியே அடிப்படை என்பதற்கு ஏற்ப ஆரம்பக்கல்வியில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு சிறப்பாகவும், தெளிவாகவும் மாணவரைச் சென்றடைதல் இன்றியமையாதது ஆகும். அதற்கு ஆசிரியரின் வகிபங்கு முக்கியமானதாகும். கல்விச் சிந்தனையாளர் கால்டுவெல், மென்ரிசூரி அம்மையார் ஆகியோரால் எடுத்துரைக்கப்பட்ட விளையாட்டு முறைக் கற்றல் தற்கால சீர்திருத்தங்களில் சிறந்த முறையாகச் செயற்படுகிறது. அந்த வகையில் அரங்க விளையாட்டுச் செயற்பாடுகள் மனக்கணித விளையாட்டுக்களின் ஊடாக மகிழ்ச்சிகரமான கற்றலையும் உடலியக்கத் திறன்களையும் கல்வியில் நாட்டத்தையும் ஏற்படுத்த முடியும்.

மேலும் இலத்திரனியல் உபகரணச் செயற்பாடுகளின் ஊடாக மாணவரின் விருப்பமான கற்றலை மேம்படுத்துவதால் அடைவை மேம்பாட்டுக்கு இட்டுச்செல்லும் அத்துடன் விளையாட்டுக்கள் மூலம் பிள்ளைகள் தானே தொடர்ந்து இயங்குகின்ற ஆற்றலை வளர்க்கின்றன. என்றும், புலங்களுக்குப் பயிற்சி தருகின்றது என்றும் மொன்ரிசூரி அம்மையார் கூறுகின்றார். எனவே, ஆரம்பப்பருவப்பிள்ளைகளுக்கு மிகவும் பயன்மிக்க முறையாகவும் காணப்படுகிறது. விளையாட்டை கருவியாகப் பயன்படுத்தி பிள்ளைகளை கல்விச் செயற்பாட்டில் நாட்டத்தையும் விருப்பத்தையும் ஏற்படுத்த முடியும்.

கற்றலும், கற்பித்தலும் சிறப்பாக நிகழும் போதே பாடசாலையில் மாணவர்களின் அடைவு மட்டம் உயரும், இங்கு அடைவு மட்டம் எனக் குறிக்கப்படுவது மாணவரின் அறிவில்,திறனில், மனப்பாங்கில், விழுமியத்தில் ஏற்படும் உரிய தேர்ச்சிகளைக் குறித்து நிற்கின்றது. என்பதைக் கண்டறியும் கற்றல், கற்பித்தல் செயன்முறையினை தொடர்ச்சியாக விருத்தியாக்கக்கூடிய செழுமை மிகு கல்வியியலாளர்களாக ஆசிரியர்கள் மிளிருதல் வேண்டும்.

மாணவர் எல்லோரும் ஒரே மாதிரியான அடைவு மட்டத்தை உடையவர்கள் அல்லர். அவர்களின் தனியாள் வேறுபாடுகளுக்கேற்ப அடைவு மட்டங்களும் வேறுபட்டுள்ளன. இதனால் ஆய்வின் இறுதியின் விளைவு, எல்லா மாணவர்களையும் ஒரே மாதிரியான அடைவு மட்டத்துக்கு

கொண்டு வந்துள்ளது எனக்கூற முடியாது. எனவே மாணவர்களின் கற்றலில் மகிழ்ச்சியான கற்றல் - கற்பித்தல் செயற்பாடு பாட அடைவினை உயர்த்த முடியும். அதாவது மாணவர் விரும்பும் கற்றல் முறையில் கற்பிக்கும் போது அடைவு மேம்பாடு அடைவது நிதர்சனமானது.

ஆசிரியத்துவம் ஓர் களைப்படையும் தொழில் நுட்பமாகும். ஆசிரியர்கள் உடல் ரீதியாகவும் மட்டுமன்றி, உளரீதியாகவும் களைப்படைவர். பாடசாலை முடிவடையும் போதும், தவணை முடிவடையும் போதும். களைப்பின் மிகுதியை உணர்வர் என்பது அறிஞர் ஒருவரின் கருத்தாகும், உண்மையில் மகிழ்வான கற்பித்தல் முறையின்றி கற்பிக்கும் போது களைப்பின் மிகுதியை உணர்த்தக் கூடியதாக இருக்கும். வெறுமனே வாய் மொழி மூலமும். மகிழ்வான கற்பித்தல் முறையின்றி கற்பிக்கும் போது களைப்பின் மிகுதியை உணர்த்தக்கூடியதாக இருக்கும். வெறுமனே வாய் மொழி மூல ஆசிரியர் தொழிற்பாடு கூடிய கற்பித்தல் மூலம் சரியான எண்ணக்கரு மாணவரிடம் ஏற்பட்டிருக்குமா? என்பது கேள்வியே? ஒரு அலகை எவ்வளவு தூரம் வாய்மொழி மூலம் மட்டும் விளக்கினாலும், எதிர்பார்த்த விளைவு கிடைப்பதில்லை. ஆசிரியர்களுக்கு களைப்பு ஏற்படுகிறது. ஆனால், விடயத்தை சாதனங்கள் மூலம் கற்பிக்கும் போது ஒரு புலக்காட்சியை மாணவர்கள் பெற முடியும். இதனையே ஆய்வாளர் கருப்பொருளாக எடுத்து வெளிப்படுத்தினார்கள் எனலாம்.

கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள், முரண்பாடுகள், உளப்பாதிப்பு, விரக்தி, நெறிபிறழ்வான நடத்தை முதலியவற்றிலிருந்து விடுவித்து அரங்க விளையாட்டுக்கள், இலத்திரனியல் உபகரணச்செயற்பாடுகள் மூலம் மகிழ்ச்சிகரமான கற்றலில் மாணவர்களை ஈடுபடுத்துவது என்பது எதிர்காலக் கல்வியின் தேவைப்பாடாகும்.

### ஆசிரியரிடம் இருக்கவேண்டிய வினையாற்றல்

- ✓ மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை பிரயோகித்தல்.
- ✓ சிறந்த கற்பித்தல் முறைகளை பயன்படுத்தி கற்பித்தல்.
- ✓ அரங்க விளையாட்டுக்கள், வினோத விளையாட்டுச் செயற்பாடுகள் மூலம் கற்பித்தல்.
- ✓ மனக்கணித விளையாட்டுக்கள், ஆடல், பாடல் செயற்பாடுகள் மூலம் கற்றல்.
- ✓ மாணவர் அடைவு சம்மந்தமாக பெற்றோருடன் தொடர்பை விருத்தி செய்தல்.
- ✓ அரங்க விளையாட்டு மூலம், ஆடல், பாடல் செயற்பாடுகள் மூலம் மாணவர்களுக்கு நேரடியாக அனுபவங்களைக் கற்றுக்கொடுத்தல்.
- ✓ பெற்றோர்களிடம் பிள்ளைகளின் அடைவு மட்டத்தினை முன்னேற்றுவது தொடர்பான திறந்த கலந்துரையாடல் கிரமமாக ஈடுபடல்.
- ✓ கற்போரின் சுயக்கற்றலை மேம்படுத்தக்கூடிய கற்பித்தலை மேம்படுத்தல்.

- ✓ திருப்திகரமான வகுப்பறைக்கவின் நிலையை விருத்தி செய்தல்.
- ✓ பாடவடிவமைப்பில் நேர்ப்பாங்கான கோட்பாடுகளைப் பயன்படுத்தல் வேண்டும்.
- ✓ தொடர்பாடல் நுட்பங்களைப் பொருத்தமாய்ப் பயன்படுத்தல்.
- ✓ தொடர்பாடல் நுட்பங்களை வினைதிறனுடன் உபயோகித்தல் வேண்டும்.
- ✓ கற்றலை தூண்டுவதற்கான வளங்களை சந்தர்ப்பங்களை உருவாக்கல், பயன்படுத்தல், மதிப்பீடு செய்தல் வேண்டும்.
- ✓ பாடப்புல அறிவு, பாடத்திட்டமிடல், வகுப்பறை முகாமைத்திறன், கற்போனுடைய வெளிப்பாடுகளை ஊக்குவிக்கும் திறன், கற்றலை அறவிடலும், மதிப்படலுமான திறன் ஆகிய கற்பித்தல் சார்ந்த தேர்ச்சி ஆசிரியர் பெற்றிருத்தல் வேண்டும்.
- ✓ கற்றல் - கற்பித்தல் திட்டமிடல் ஆகியவற்றினை நெறிப்படுத்த சக ஆசிரியர்களின் உதவி பெறல்.
- ✓ கற்றல்- கற்பித்தல் சாதனங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தல் மூலம் கற்பித்தல் இலகுவடைகிறது.
- ✓ மாணவரிடையே தரிசன நோக்கினை (Vision) விருத்தி செய்து அதனை அடைவதற்கு இடையறாது ஊக்குவித்தல்.
- ✓ மாணவர்கள் மீது நம்பிக்கையையும், விசுவாசத்தையும் கொண்டிருப்பதோடு உடன்பாடான மனப்பாங்குகளை வெளிப்படுத்தல் வேண்டும்.
- ✓ மாணவர் அடையும் சிறுசிறு வெற்றிகளைக்கூட முதன்மைப்படுத்திக் கொண்டாடுதல் வேண்டும்.
- ✓ மாணவரின் கற்றலுக்கும் அவர்களது பூரண விருத்திக்கும் பொறுப்புடைமை மாத்திரமின்றி, வகைக்கூறலையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- ✓ ஆசிரியர் தன்னிடமுள்ள திறமைகளை ஒழுங்கமைப்பதுடன் மாணவர்களிடையே அமைதியின்மை, மனக்குழப்பம், உணர்ச்சி, விரக்தி, தவறான மனநிலை போன்றவற்றை இல்லாமல் செய்தலுடன் மற்றோரிடம் புரிந்துணர்வை ஏற்படுத்தல்.

இச்செயற்பாடுகளினூடாக மாணவரின் உள்ளார்ந்த ஆற்றல்கள் தூண்டப்படுகின்றன. அவர்களின் இறுக்கமான நிலையினைக் களைவதற்கும், இலகுவானதும், இலேசானதும், சுதந்திரமானதுமான மனநிலையை ஏற்படுத்துவதற்கும், கற்றலுக்குமான சூழ்நிலையை மாணவருக்கு ஏற்படுத்தவும் உதவுகிறது. சிறார்களின் கற்பனை அவதானம், புலனுணர்வு, மனவெழுச்சி, கருத்தூன்றல், சுதந்திர சிந்தனை, சமூக உணர்வு, உளமுதிர்ச்சி, படைப்பாக்கச் சிந்தனை முதலியன மாணவரின் அடைவு மேம்பாட்டுக்கு உதவுகிறது.

இவை போன்ற ஆலோசனைகளை கவனத்தில் எடுப்பதன் மூலம் ஓர் நிறைவான வினைதிறன் மிக்க மனித சமூதாயத்தினை முன்னேறுகின்ற சிறப்பான விளைவை எய்த முடியும். அரங்க விளையாட்டு முறையைப் பயன்படுத்தி கற்பிக்கும் போது கற்பித்தலானது எளிதாகவும், இலகுவாகவும் அமைவதுடன் கற்பித்தலில் ஒரு திருப்தியும் ஏற்படுகின்றது. அரங்க விளையாட்டுக்கள், ஆடல், பாடல் இலத்திரனியல் உபகரணச்செயற்பாடுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி கற்பித்தல் செயற்பாட்டை ஆரம்ப வகுப்புக்களில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் சிறந்த சுயதிறனுள்ள ஓர் எதிர்கால கல்விச் சந்ததியை உருவாக்க முடியும். அத்துடன் நேரடி அனுபவங்களையும் பூரண விளக்கத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

கற்பித்தல் என்பது ஒரு கலையாகும். மாணவர்களுக்கு தெளிவாகப் புகட்டல் என்பது வெறுமனே பேச்சினாலோ, வெண்கட்டியினாலோ மாத்திரம் நிறைவேறிவிடாது.... ஓர் ஆசிரியருக்கு கற்பித்தலில் உள்ள ஆர்வம், திறமை, இயல்பூக்கம் அவரது கற்பித்தலில் இழையோடும் பாடசாலைகளில் நல்ல ஆசிரியர்களைக் கண்டு கொண்டிருந்தோம். ஏன் இன்றும் கூட கண்டு கொண்டிருக்கின்றோம். அவர்களின் பெயர்களை அவ்வப்போது உச்சரிக்கையில் எமது உள்ளம் புளாங்கிதம் அடையும். அவர்களிடம் காணப்பட்ட அந்த மந்திரம் தான் என்ன......?மாணவர்களுடனான நல்லுறவு, இணக்கம், பிணைப்பு, பரஸ்பர தொடர்பு மாணவரை மதித்தல் அவர்களை வென்றிட இவையும் காரணமாக இருந்திருக்கிறது.

ஒரு ஆசிரியனுக்கு பல ஆளுமைகள் தேவைப்படுகின்றன. ஆசிரியர்களின் உச்சரிப்பு, பேச்சு, தொனி மாணவர்களின் பால் நிச்சயம் ஈர்க்கும். அந்த வகையில் ஆரம்பக்கல்வியில் ஓர் ஆசிரியரின் வகிபங்கு பலவிதமானதாக உள்ளது. மிக நெருக்கமாக குழந்தைகளுடன் தாய், தந்தையாக, சகோதராக, தாதியாக, நண்பராக, ஆசிரியராக பல வகிபங்குகளை அவர் ஏற்க வேண்டியுள்ளது. கதைக்கும் முறை, அணுகும் முறை, தனது வகிபங்கிற்கு இயைபாகி செயற்பட வேண்டியுள்ளது. ஆசிரியரது மகிழ்ச்சிகரமான தோற்றம் அவரது கனிவான பார்வை, பொறுமையுடன் கேட்கும் சகிப்புத்தன்மை, தொடர்ந்து விடாது முயன்று மீண்டும் மீண்டும் ஆசிரியர் நோக்கத்தை அடைய செயற்படும் செயற்பாடு ஆசிரியர்களை மாணவர்களுடன் கலந்திடச்செய்யும். ஓர் ஆசிரியரின் உடல் அங்க செயற்பாடுகள் (Body Languages) மிக முக்கியமானவையாகும். ஆரம்பக்கல்விக்கு மாத்திரம் அல்ல, உயர்வகுப்புக்களுக்கும் தெளிவான கூர்மையான ஆசிரியரின் விழிப்பார்வை, உதடு, கன்னம், முகம், கை, ஆகிய உறுப்புக்களின் அசைவுகளின் தோற்றம் கற்பித்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

ஆசிரியர் கற்பிக்கும் போது மாணவர்கள் ஜடமாக அமர்ந்திருக்கவில்லை என்பதையும், உயிர்த்துடிப்புடன், உணர்வுகளுடன் ஆசிரியரை அவர்கள் அவதானிப்பார்கள் என்பதையும், மனதில் கொள்ள வேண்டும். அவர்கள் ஆசிரியருடன் இருக்கிறார்கள். என்பதே ஆசிரியரின் கற்பித்தல் வெற்றியாகும். அவர்கள் ஆசிரியருடன் உயிர்ப்புடன் இல்லை. எனில் அதுவே ஆசிரியரின் கற்பித்தலின் தோல்வியாகும். ஆசிரியர் எவ்வாறு தங்களது பாடப்பகுதியை

சமர்ப்பிக்கின்றார். (Presentation) என்பது மாணவரின் துலங்கலில் பிரதிபலிக்கும் எனலாம். மிக முக்கியமானது ஆசிரியர்கள் எவ்வாறு மாணவருடன் உரையாடுகின்றார்கள் என்பதாகும். நீங்கள் பேசும் பாணி (The way of talking) மிக முக்கியமானதொன்றாகும், சுவருக்கும். கரும்பலகைக்கும், வெண்பலகைக்கும், கதிரை, மேசைகளுக்கும் ஆசிரியர் கற்பித்தல் மாணவர்களான உயிருள்ள மனித பிராணி என்பதை நல்லாசிரியன் தெரிந்து வைத்திருப்பான். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே ஒரு பிணைப்புச் சங்கிலி போல் தொடர்ந்து வருகின்றன என்பது மிக முக்கியமானதாகும். ஆசிரியரின் சந்தம், ஒலி, தொனி, மாணவனை கவர்ந்து ஈர்க்கும் ஆசிரியர்கள் தமது சத்தத்தினை தயார்படுத்தி செம்மைப்படுத்தி கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும் ஆசிரியரின் தொழிலுக்கு குரல்தொனி (voice) அவசியமானதாகும்.

ஆசிரியர்கள் முன்னாயத்தத்துடன் வகுப்பறைக்குச் செல்லவேண்டும் முன்னாயத்ததுடன் வகுப்பறைக்குச் செல்லல் என்பதை சட்டமாக சுற்றுநிருபமாக கட்டளையாக கொள்ளத் தேவையில்லை ஆனால் சிறந்த கற்பித்தலுக்கு அதுவே வழி என்பதனை சுயமாக ஆசிரியர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும். கற்பித்தல் தொடர்பாக ஆசிரியர்கள் அறிவையும் திறனையும் பெற்றிருப்பதுடன் செயற்படுத்தும் மனப்பாங்கும், விழுமியமும் இருப்பது நன்று கற்பித்தலில் திறன் கொண்ட ஆசிரியர்களின் மாதிரி வகுப்பறைக் கற்பித்தலை (Model Classes) கற்பித்தல் பாணியையும் (style) தெரிந்திருத்தல் ஆசிரியர்களின் தம் பணிக்கு செழுமை சேர்க்கும்.

சிறார்களிடையே இறுக்கமான நிலையைக் களைவதற்கும் இலகுவானதும் அல்லது இலேசானதும் சுதந்திரமானதுமான மனநிலையை சிறார்களிடையே ஏற்படுவதற்கும் இலத்திரனியல் உபகரணச் செயற்பாடு, அரங்க விளையாட்டுக்கள் மனக்கணித விளையாட்டுக்கள் மிக உகந்தவை. இவ்வகையில் இவ் விளையாட்டுக்கள் மாணவரின் தேர்ச்சியினை அதிகரிக்கக்கூடிய தயார் நிலையை மாணவர்க்கு ஏற்படுத்த உதவியது. அது மட்டுமல்லாது உடனடிப் பிரச்சினைக்கு முகங்கொடுக்கக்கூடிய திறனையும் ஏற்படுத்தியது. மாணவரிடையே பிணைப்பையும், முதிர்ச்சியையும் ஏற்படுத்தியது ஒன்றிணைந்து செயற்படுத்துவதற்கும் அழகியல் ஆற்றல்களை வளர்த்தெடுப்பதற்கும் மேலாக பிள்ளை போல் செயற்பட வைத்தது.

ஆரம்பப்பிரிவு கற்றலுக்கு உறுதுணையாக ஆடலும், பாடலும், விளையாட்டும், உபகரணச் செயற்பாடுகளும் ஆகும். அவை இங்கு ஒரு படிமேல் சென்று மாணவருக்கு மிகவும் பிடித்தமானதாக அரங்க விளையாட்டு, மனக்கணித விளையாட்டு, இலத்திரனியல் விளையாட்டுச் செயற்பாடுகள் முதலியன. மேலும், மாணவர்கள் தமது துன்ப துயரங்களை மறந்து செயற்பட ஏதுவாகியது. சிறார்களிடையே மரங்கள், தாவரங்கள், விலங்குகள், விருப்பமும் இயற்கை என்பவற்றிடமும் இயற்கையை ரசிக்கும் பண்பும் இயற்கை வளங்களை பாதுகாக்கும் மனப்பாங்கும் ஏற்படுத்தியது. அது மட்டுமல்லாது மிருகங்கள், பறவைகள் என்பவற்றை அவதானிக்கும் இயல்பு, அவற்றிடம் அன்பு கொள்ளும் தன்மை, அவற்றை துன்புறுத்தாமல் பாதுகாக்கும் இயல்பு, இவற்றிடம் கொள்ளும் தன்மை, அவற்றை துன்புறுத்தாமல் பாதுகாக்கும்

தன்மை, அவற்றைப் போலச் செய்தல். சூழல் மாசுபடுதலை அனுமதிக்காமல் தன்னளவில் சூழலுக்கு நேசமான செயற்பாடுகளைக் கொண்டவர்களாகும். இயல்பு என்பவை ஏற்பட வாய்ப்புண்டு.

கற்றல் கற்பித்தலில் பிள்ளைக்கு உதவுதலே கல்வியாகும். இவ்வகையில் ஓர் ஆசிரியரின் பணி மேன்மையானது. மிருகங்களைப் பழக்குவது போன்ற நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. அன்பும், அரவணைப்பும், பற்றும், பாசமும், உறவும், உணர்வும் நிறைந்த ஒரு தெய்வீகமான நிலையை அவ்வாசிரியர் பேணுதல் வேண்டும். தனது மாணவ சிறாருக்கு கற்றல் அனுபவத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் அதற்கான களநிலையினை நன்கு திட்டமிட்டு உருவாக்குதல் என்பவையே அவரது பிரதான பணியாகும்.

மேலும், பிள்ளைகளின் கல்வி பற்றிச் சிந்திக்கும் பலர் அதைச் செய்யாதே, இதைச் செய்யாதே இது தவறு அது பயனுள்ளது எனப் பலர் கூறி வந்தனர். பல சிந்தனைகள் உருப்பெற்றன என்பதே உண்மை, எப்போது அப்பிள்ளை தான் உணர்ந்து விருப்பத்துடன் செயற்படுகின்றானோ, அவ்வேளையில் அவன் அடைகின்ற அடைவு அல்லது அனுபவம் தான் கல்வியாகின்றது. இங்கு அடைவு அல்லது அனுபவம் தான் கல்வியாகின்றது. இங்கு தான் ஆசிரியர் பணியாற்றி கவனமெடுக்க வேண்டியுள்ளது. உண்மையில் ஓர் ஆசிரியர் வசதியளிப்பவர், ஒரு பங்கு மற்றும் நெறியாளர் ஆகின்றார். கற்றல் செயற்பாட்டை நன்கு திட்டமிட வேண்டியவர் ஆகின்றார். என்ன விடயம் பிள்ளைக்கு சென்றடைய வேண்டும். என்பவை போன்ற விடயங்களை நன்கு திட்டமிடுவதோடு பிள்ளைகளை அரவணைத்துக் கொண்டு செல்பவராகவும் இருத்தல் வேண்டும். இதற்கு உணர்வுகளைப் புரிந்து கொள்ளக் கூடிய உணர்வுக்குக் கொடுக்கக்கூடிய பக்குவ நிலையினை அவ்வாசிரியர் கொண்டிருப்பது அவசியமாகும். இவ்வாறான நிலையிலேயே பிள்ளைகளை குறிப்பாக கவனிக்கப்பட்டு உரிய தேர்ச்சிகளை இத்தகைய ஒரு பக்குவ நிலையிலேயே மனிதத்துவத்தை உருவாக்கக் கூடிய கல்வி அனுபவம் பிள்ளைகளிடத்தே சென்றடையும்.

எல்லோராலும் வெற்றிபெற முடியும். நாம் நம்முடைய முழுக்கவனத்தையும் கல்வியின் மீதும் கற்றல் செயற்பாடுகளின் மீதும் கவனம் செலுத்த வேண்டும். எந்தவொரு காரியத்திலும் நமது நோக்கம், சிந்தனை, செயல் யாவும் வெற்றியென்பதை மாத்திரமே இலக்காகக் கொண்டு நேர் சிந்தனையுடன் (Positive Thinking) செயற்பட வேண்டும். “ஒவ்வொரு செயலுக்கும் நானே பொறுப்பு என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்” இதனை புத்த மதம் “நாம் இருக்கின்ற நிலைமைக்கு யாரோ காரணமல்ல நமது நிலைமைக்கு நாமே தான் காரணம்” எனக் கூறுகின்றது. வேதாகமம் “ஒருவன் எதை நினைக்கிறானோ அதுவாகவே அவன் இருக்கிறான்.” ஏனக் கூறுகின்றது. இந்து சமயம் “மனம் எதை உருவாக்க நம்புகின்றதோ அதை மனிதன் அடைகின்றான்” எனக் கூறுகின்றது.

ஆகவே எவ்வகையில் நோக்கினாலும் “முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்” “கற்று

ஆய்ந்து ஒழுகு" எனும் கருத்துக்கள் உள்ளன. எனவே "எல்லா ஆசிரியர்களும் கற்பிக்கத் தகுதியுடையவர்கள், எல்லா மாணவரும் கற்கத் தகுதியுடையவர்கள், ஆசிரியர் கற்பிக்கின்ற முறையில் மாணவர் கற்க முடியாவிட்டால் மாணவர் கற்க விரும்பும் மகிழ்ச்சியான கற்பித்தல் ஒழுங்குமுறையில் ஆசிரியர் கற்பிக்க வேண்டும்" ஆகவே, மாணவர் அடைவு அதிகரிக்கும் மனப்பாங்கும், அறிவும், திறனும் அதிகரிக்கும் என்பது கட்டுரையாளரின் அனுபவக்கருத்தாகும்.

**உசாத்துணை நூல்கள்**


- ✓ ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் - 2007 தேசிய கல்வி நிறுவகம், மஹரகம
- ✓ மகிழ்ச்சிகரமான கற்றல், பயிற்றுனர், கைந்நூல் 2001 GT2/T/P/Nep
- ✓ ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தரம் 4, 2006 - தேசிய கல்வி நிறுவகம்
- ✓ செயற்பாட்டுப் பூங்கா 2002 யுனிசெவ் வெளியீடு
- ✓ ஆரம்பக்கல்வி சீர்திருத்தம் வழிகாட்டல்கள் 2002 தேசிய கல்வி நிறுவகம்
- ✓ வாண்மை விருத்தி ஆசிரிய ஆலோசகர்களுக்கானது 2002 GTZ/T/P/Nep
- ✓ இராதாகிருஸ்ணன். மு. உள்ளொலி பெருக்கும் சிறுவர் அரங்கு 2004
- ✓ சிறுவர்களுக்கான அரங்க விளையாட்டுக்களுக்கும் புதிர்களும் 2006 NEP வெளியீடு
- ✓ ஆரம்பக்கல்வியும் விசேட கல்வியும் - பாடவிதான அபிவிருத்தி பிரிவு தே.க. நி மஹரகம
- ✓ முகிழ்வுடன் வாழ்தல் - 2003 N.I.E,GT.Z
- ✓ சிறுவர் உளநலம் 2005 கல்வி அமைச்சு N.I.E
- ✓ செயல்நிலை ஆய்வு ஓர் அறிமுகம் 2006 தனராஜ் - தை
- ✓ சின்னத்தம்பி.க கல்வி ஆய்வியல் 2006 ஜெரேப்ரோ.பி. சந்திரசேகரம், சோ. பெற்றோரும் கல்வியும்
- ✓ நவரட்ணம்.உ.2007 கற்பித்தல் செயல்முறையியல் கல்வி உளவியல்
- ✓ பாஸ்கரன்.க.கல்வியல் செயல்நிலை ஆய்வு
- ✓ முல்லை நிசானா 2004 விளையாடுவோம் வாசிப்போம்
- ✓ கற்பித்தலுக்கான ஆசிரியர் பயிற்சிகள் கைந்நூல் தே.க.நி. மஹரகம
- ✓ அகவழி ஆசிரியத்துவ நோக்கு கட்டுரைகள் 2008, 2009
- ✓ ஜெயராசா சபா (2005) குழந்தை உளவியலும் கல்வியும் பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு
- ✓ ஸ்டேலா வொஸ்னியாடோ (2005) பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றார்கள்.

# கிராமமட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவின் முக்கியத்துவமும் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் தேவைப்பாடும்!



செல்வி.S.M.E. பிறிட் ஜெற்
சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், பூநகரி.

சிறுவர்களின் அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு சம்மந்தமான சேவைகளுக்கு பொறுப்புக் கூறும் அமைப்பாக சிறுவர் அபிவிருத்தி மகளிர் அலுவலங்கள் இராஜாங்க அமைச்சு செயற்படுவதுடன் அது பின்வரும் நிறுவனங்கள் மூலமாக சேவைகளை வழங்குகின்றது.

1. நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
2. சிறுவர் செயலகம்
3. பெண்கள் பணியகம்
4. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

இவற்றுக்கு மேலதிகமாக மாகாண அமைச்சர்களும் திணைக்களங்களும் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு சம்மந்தமான விடயங்களில் ஒத்துழைப்புடன் செயற்படுவதுடன் பொறுப்புகளையும் கொண்டிருக்கின்றன.

இதற்கமைவாக 1989 நவம்பர் மாதம் 20ம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பினது சிறுவர் உரிமைகள் சம்மந்தமான சிறுவர் சாசனம் ஒன்றை அங்கீகரித்தது. 1991ம் ஆண்டு இலங்கையும் இதனை உத்தியோக பூர்வமாக அங்கீகரித்ததுடன் அவற்றை இலங்கையிலும் நடைமுறைப் படுத்த ஆரம்பித்தது. இதன் விளைவாக இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு மேற்படி சாதனத்தில் உள்ளடங்கும் உரிமைகளை இலங்கையின் கொள்கை சட்டத்திற்குள் உள்ளடங்கும் நோக்கத்துடன் அவ் உடன்படிக்கைக்கு ஏற்றவாறு சிறுவர் சாசனமொன்றைத் தயாரித்தது இவ்சிறுவர் சாசனம் என்பது ஒரு நாட்டுக்குள் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு சார்ந்த விடயங்களை வலுவூட்டுவதற்கான ஒரு கொள்கை சார் ஆவணமாகின்றது. அது மாகாண, மாவட்ட, கிராமிய மட்டத்தின் கொள்கைகள் மீதும் செயற்பாடுகள் மீதும் தாக்கம் விளைவிக்க கூடியதாகும்.

கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழு (VCDC) என்பது அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கிராமிய மட்டத்திலான ஒரு அமைப்பாகும். இவ்வமைப்புக்கு ஏற்ற பணிகளை நெறிப்படுத்தல், மேற்பார்வை செய்தல் போன்றவற்றின் பொறுப்புக்கள் நன்டைத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினர் மேற்கொள்ளப்படுகின்றது.

கிராமிய சிறுவர் அபிவிருத்தக்குழு என்பது கிராமத்துக்குள் சிறுவர்களின் அபிவிருத்தித் தேவைகளையும் அவர்களின் உரிமைகளையும் மேம்படுத்துகின்ற அதே சமயம் அவற்றை உறுதிப்படுத்துவதற்கு கூட்டாக செயற்படுகின்ற பிரதான சமூதாய செயற்பாட்டாளர்களையும் அரச அலுவலகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாகும். அதாவது சிறுவர்களின் அபிவிருத்தி, மேம்பாடு அல்லது உரிமைகள் பாதுகாக்கும் விடயத்தில் கிராமமட்டத்தில் பொறுப்புடைய அலுவலர்கள், சமூதாய நலன் விரும்பிகள் சமுதாய மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து அவற்றை வலுவான பொறிமுறைகள் மூலம் வெற்றிகரமான செயற்பாடுகளை முன்னெடுப்பதை குறிக்கின்றது. குறித்த கிராமத்தில் உள்ள தேவைப்பாடுகள் அபிவிருத்திகள், சிறுவர் உரிமைகள் போன்றவற்றை அக்கிராம அங்கத்தவர்கள் ஊடாக உணர்வு பூர்வமாகவும் அக்கறையாகவும் அர்ப்பணிப்பாகவும் பொறுப்புக் கூறும் நிலையை பரிந்துரைக்கின்றது.

**கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுவின் பின்னணி :**

2000ம் ஆண்டு அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரத்துடன் சமூக சேவைகள் அமைச்சு ஒரு சுற்று நிருபத்தை வெளியிட்டதுடன், பிரிவு மட்டத்தில் சிறுவர் பராமரிப்புக்காக சமுதாய மட்டத்திலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென அதனூடாக பிரயோகிக்கப் பட்டது. இதையடுத்து 6 வருடங்களுக்குப் பின்னர் 2006 ம் ஆண்டு நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் பிறிதொரு சுற்று நிருபம் (இல.PCC.CRPO,11-03-04) வெளியிடப்பட்டதுடன் அதனூடாக கிராமிய சிறுவர் உரிமை கண்காணிப்பு குழு (CRMS) ஸ்தாபிக்கப்பட வேண்டிய விதம் மற்றும் சமூக மட்டத்தில் அக்குழுவால் மேற்கொள்ளப்படும் பணிகள் பற்றியும் தெளிவாக விளக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இந்த அமைப்பு சிறுவர் பாதுகாப்பு குழு, சிறுவர் பராமரிப்புக்குழு சிறுவர் உரிமை கண்காணிப்பு குழு என பல்வேறு பொயர்களால் அழைக்கப்பட்டது. இக்குழு தற்போது கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழு என அழைக்கப்பட்டு வருகின்றது. தற்போது அழைக்கப்படும் சிறுவர் அபிவிருத்திக் குழுவானது தேசிய மட்டத்திலான ஒத்ததொரு முறையை ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு குறித்த திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

**கிராமிய சிறுவர் அபிவிருத்திக்குழு உருவாக்கப்படுவதற்கான தர்க்க ரீதியான காரணங்கள்.**

- சிறுவர்களின் உயர் நலனையும், அபிவிருத்தியையும் உரிமைகளையும் நிலைநாட்டிக் கொள்ள மனித சமுதாயமே மிகவும் பொருத்தமான இடமாக சிறுவர் உரிமை சாசனம் கருதுகின்றது.
- சிறுவர்களின் பிரதான வாழ்வானது அவர்களது குடும்பத்தையும் சுற்றியிருக்கின்ற சமூதாயத்தையும் சார்ந்ததாகும் எனவே தான் சிறுவர்களின் அபிவிருத்தியில் பாதகமான

தாக்கம் ஏற்படும் போது அதனை தவிர்ப்பதற்கு, குறைப்பதற்கு மற்றும் அதற்கான முற்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சிறந்த ஆற்றல் உள்ளவர்கள் குடும்பமும், சமூகமுமே காணப்படுகின்றது.

- சிறுவர் பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டு கிராமிய சிறுவர் அபிவிருத்திக்குழு சமுதாயத்துடன் இணைந்து முறைசார்ந்ததொரு அமைப்பை உருவாக்கிக் கொள்வதனூடாக சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான செயற்பாடுகளை மேற் கொள்ள வாய்ப்பு கிட்டுகின்றது.

- கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழு தேசிய சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு முறைமைக்குள்ளேயே அமைந்துள்ளது. அதற்கேற்ப அதனுடைய தேவைகளுக்கேற்றவாறு சேவைகளை ஒன்று திரட்டி அவற்றை நெறிப்படுத்துவதற்கு சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர், நன் நடத்தை உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர். பொலிஸ் உத்தியோகத்தர் போன்ற சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

### கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுவின் குறிக்கோள்கள்:

- சிறுவர்கள் மீது பாதகமான தாக்கம் விளைவிக்கும் செயற்பாடுகளை இயன்றளவு குறைத்து சிறந்த சமூக விழுமியங்களின் அடிப்படையில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கான சூழல் ஒன்றை உருவாக்குதல்.

- விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகள் ஊடாக சமூதாயத்திற்கு சிறுவர் உரிமைகளை மேம்படுத்தல்.

- ஆபத்துக்களை முன் கூட்டியே இனங்காணுதல், அறிக்கையிடல் மற்றும் பொறுப்புக் கூறுதல், போன்ற தலையீடுகளை மேற்கொள்ளுதல். சிறுவர் உரிமைகள் மீறப்படுவதை தடுத்தல்.

- சிறுவர் உரிமைகள் மீறப்படுதல் தொடர்பான விடயங்களை சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவருக்கு அறிக்கையிடல், கிராமிய சிறுவர் அபிவிருத்தி செயற்பாட்டாளருடன் ஒருங்கிணைப்பை ஏற்டுத்தி ஆபத்து குறைந்த நிலையிலுள்ள பிரச்சினைகளை முகாமைத்துவம் செய்தல்.

### கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுவில் அங்கத்துவம் வகிப்போர் : (குறித்த கிராமத்தின்)

தலைவர் : கிராம அலுவலர்.

செயலாளர் : சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்

உபதலைவர் : குழுவினரால் தெரிவு செய்யப்படுபவர்

அங்கத்தவர்கள் : பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார மருத்துவ மாது,

பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பொலிஸ் உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், குறித்த பாடசாலை அதிபர், மதத் தலைவர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பிரதேச மக்கள் பிரதிநிதிகள், சமாதான நீதவான், சிறுவர் கழக சிறார்கள் (2)

மேற்குறித்த நபர்கள் குறிப்பிட்ட கிராமத்தைப் பிரதி நிதித்துவப்படுத்துபராக இருந்து சிறுவர்கள் தொடர்பாக அதியுச்ச நலனைக் கருத்தில் கொண்டு தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்துவதாக அமையும்.

**கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுவினரிற்கு இருக்க வேண்டிய பண்புகள்: (அங்கத்தவர்களுக்கு)**

- இரகசியத் தன்மை பேணுபவர்களாக இருத்தல்.
- அர்பணிப்புடன் சேவையாற்றல் அவசியம்.
- சிறுவர்கள் தொடர்பான விழிப்புணர்வு உள்ளவர்கள்.
- சிறுவர்களின் உயரிய நலன் பற்றிய விழிப்புணர்வு உள்ளவர்களாக இருத்தல்.
- பாரபட்சம் காட்டாது அனைவரையும் பாதுகாத்தல்.
- பிரச்சினைகளை வெளிக் கொனர்ந்து அவற்றுக்கான ஒன்றுபட்ட தீர்வைக் காண்பதற்கு முயற்சிப்பவர்களாக இருத்தல்.
- சிறுவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான இடங்கள், நபர்களை அடையாளம் கண்டு அறிக்கையிட முன்வருபவராக இருத்தல்.
- சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை பெற்றவர்களாக இருத்தல்.
- சமுக விழுமியங்கள், குடும்ப கட்டமைப்புக்கள் தொடர்பான நடைமுறை விளக்கத்தைக் கொண்டிருத்தல் அவசியமாகும்.

**கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுவின் செயற்படும் பொறி முறை :**

- மாதத்திற்கு ஒரு முறை கிராம மட்டத்தில் சிறுவர்களின் அபிவிருத்தி, தேவைப்பாடுகள் பாதுகாப்பு போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்காக கலந்துரையாடல் ஒன்றை மேற் கொண்டு அதனது அறிக்கையினை பிரதேச செயலகத்தில் வழங்க வேண்டும்.
- கிராம மட்டத்தில் அனைவரது ஒருங்கிணைப்புடனும் ஒத்துழைப்புடனும் சிறுவர்களது

தேவைகளும் பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு சுமூகமான நிலையை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பை வழங்குதல்.

- சமூகத்தில் கிடைக்கும் அனைத்து வளங்கள் பற்றிய தகவல்களையும் முக்கியமான நபர்களை தொடர்பு கொள்ளகூடிய தரவுகளையும் சேகரித்து அனைத்தையும் ஒன்றிணைத்து தீர்மானம் மேற்கொள்ளல்

- கிராம மட்டத்தில் தீர்க்க முடியாத விடயங்களை பிரதேச மட்டத்திற்கு பரிந்துரைத்து அதனூடாக தீர்வினைப் பெற வழிப்படுத்தல்களை மேற் கொள்ளல்.

இவ்வாறான செயற்பாடுகளை அர்ப்பணிப்புடனும் ஒன்றிணைந்த செயற்பாட்டினூடாகவும் மேற் கொண்டு இரகசியத்தன்மையுடன் செயற்படும் போது கிராம மட்டத்தில் சிறுவர்களின் உயரிய நலன் பேணப்படும் என்பதையும் அவர்களின் மேம்பாடு உன்னதமாகும். என்பதையும் மறைக்கவும் மறுக்கவும் முடியாது.

## பூநகரி கிராமிய சிறுவர் அபிவிருத்தியின் குழுக்களின் நிலமைகள்

பூநகரிப் பிரதேச செயலகர் பிரிவில் 19 கிராம அலுவலர் பிரிவு உள்ளது இவ் 19 கிராம அலுவலர் பிரிவிலும் கிராம அலுவலர் தலைமையில் கிராம மட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு இயங்கி வருகின்றது. மாதாந்தம் சிறுவர்களின் விருத்தி, மேம்பாடு, தேவைப்பாடுகள் தொடர்பாக குழு அங்கத்தவர்கள் இணைந்து கலந்துரையாடி தீர்க்கமான முடிவுகளை எடுத்துவிடுகின்றனர் அத்துடன் இதற்கான அறிக்கைகளை பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பித்து விடுகின்றனர்.

மேலும் கிராம மட்டத்தில் சிறுவர்களுக்கு எதிராக ஏற்படும் வன்முறைகள், பிரச்சினைகளிற்கு கிராம அலுவலரின் தலைமையில் சம்பந்தப்பட்ட அலுவலர்களை அழைத்து குறித்த பிரச்சினைகளிற்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிராம மட்டத்தில் இக் குழவால் தீர்க்க முடியாத சம்பவங்கள் பிரதேச மட்டத்திற்கு பாரப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் கிராம மட்ட சிறுவர் தொடர்பான சம்பவங்களுக்காக சம்பவ மாநாடு பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் போது கிராம மட்ட அலுவலர்களது பங்களிப்பு கோரப்படும் போது எமது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது

இந்த வகையில் சிறுவர்களின் பாதுகாப்பு, பராமரிப்பு, தேவைகள் தொடர்பாக கிராமமட்டத்தில் உறுதியான கட்டமைப்பு காணப்படும் போது பிரதேச மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் சிறுவர் உரிமை பாதுகாக்கப்படும் என்பதில் ஐயமில்லை

எனவே இவ்வாறான கிராமிய சிறுவர் அபிவிருத்திக் குழுக்களின் செயற்பாடுகள் ஒரு கிராமத்திற்கு இன்றியமையாதது என்பது கண்கூடகும்.

# திராவிட மொழிக் குடும்பத்தில் தமிழ்



திரு.கே.கஜவரதன் (BA)
ஆசிரியர்.
கிளி /பூநகரி மத்திய கல்லூரி.
பூநகரி.

உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை வியத்தகு படைப்புகளும் கண்டு பிடிப்புகளும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. ஆயினும் கண்ணால் காண முடியாத நிலையான வடிவத்தைத் தர இயலாத காற்றினால் ஏற்படும் ஓசையை ஒலியாக்கி அதற்கு வரிவடிவம் தந்து மொழியாக நிலை பெறச் செய்த மனிதனின் செயலுக்கு இணையான படைப்போ கண்டு பிடிப்போ இந்நாள் வரை தோன்றவில்லை என்பதே உண்மை.

மொழி என்பது ஒருவர் எண்ணங்களையும் கருத்துக்களையும் மற்றொருவர் அறிவதற்கு உதவும் கருவியாகும். உலகில் பல்வேறு மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. அவற்றுள் தனக்கெனத் தனிச் சிறப்பும், பல மொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மொழியே மூலமொழி அதிலிருந்து தோன்றி வளர்ந்த மொழிகள் கிளை மொழிகள் அவற்றின் பொதுத்தன்மையின் அடிப்படையில் அவற்றை ஒரே மொழிக் குடும்பத்தில் அடக்குவர் மொழியியல் அறிஞர்கள்.

திராவிட மொழிக் குடும்பத்தில் மிகப் பெரிய மொழிகளாகத் தமிழ் மலையாளம், தெலுங்கு, கன்னடாம் ஆகிய மொழிகள் கருதப்படுகின்றன. அதிலும் தமிழ்மொழி மிகவும் தொன்மையான மொழியாகக் கருதப்படுகிறது. உலகளவில் சமஸ்கிருதமும், தமிழ் மொழியும் மிகவும் பழமையான மொழியாகப் பார்க்கப்படுகின்றது. ஆனால் சமஸ்கிருத மொழியைப் போல் அல்லாமல் தமிழ் மொழி தன்னுடைய பழமைக்கும் இப்போதுள்ள நவீனத்துக்கும் இடையே தன்னை தொடர்புபடுத்திக் கொண்டுள்ளது.

திராவிட மொழிகள் பூகோள ரீதியாக பரவிய காலம், அதன் உண்மையான பூர்வீகம் குறித்துத் தெளிவான காலம் இல்லை ஆனால் திராவிட மொழிக் குடும்பங்களுக்கு இந்திய துணைக் கண்டம் என்பது பூர்வீகம் என்ற கருத்தொற்றுமை ஆய்வாளர்கள் மத்தியில் நிலவுகிறது ஏறக்குறைய 3500 ஆண்டுகளுக்கு முன் இந்திய ஆரியர்கள் வருகைக்கு முந்தைய மொழியாக இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

திராவிட மொழிக் குடும்பத்தில் முதன்மை மொழியாக தமிழையும் கிளை மொழிகளாக மலையாளம், தெலுங்கு கன்னடம் ஆகிய மொழிகளை தமிழியன் அல்லது தமுலிக் (Tamilic) என்று வழங்கியுள்ளார்கள். எனவே இவ்வின மொழிகள் அனைத்தையும் திராவிடம் என்னும் சொல்லால் தான் குறிப்பிட்டுள்ளதாக கால்ட்டுவெல் கூறியுள்ளார்.

தமிழ் என்னும் சொல்லில் இருந்து உருவானதே திராவிடம் என்னும் சொல்லாகும் மற்ற திராவிட மொழிகள் விட தமிழே பழமையானது என்பதாலும் மற்றய திராவிட மொழிகளின் பல்வேறு அம்சங்கள் தமிழிலேயே காணப்படுவதாலும் தமிழை உயர்தனிச் செம்மொழியாக உலகின் மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

தமிழில் இருந்து திராவிடம் என்னும் சொல் பிறந்தது தமிழ் ,திரமிள, திரவிட, திராவிட என்று உருமாறி வந்ததாக ஈராஸ் பாரதியார் கூறுகின்றார். திராவிட மொழி என்றாலே தமிழ் மொழியையே குறிக்கும் திராவிட மொழிகளில் மிகவும் தொன்மையான பண்பட்ட மொழி தமிழே, திராவிட மொழிகளுள் மூலம் திராவிட மொழியின் வடிவத்தையும் மொழிக் கூறுகளையும், வேர்களையும் பெருமளவில் கொண்டுள்ள மொழி தமிழே இத்தகைய தொன்மைச் சிறப்பும் தலைமைச் சிறப்புமே தமிழை இன்று உயர்தனிச் செம் மொழியாய் உயர்ந்து நிற்கச் செய்துள்ளது.

மேக்ஸ் பிளான்க் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர் ஆனிமேரி "திராவிட மொழிகள் பிற மொழிகளில் குறிப்பிடத்தக்க அளவு ஆதிக்கம் செலுத்தி உள்ளதால் திராவிட மொழிகளை ஆய்வு செய்வது யூரேசியாவின் தொல் வரலாற்றைப் புரிந்து கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கும்" என்கிறார்.

வட இந்திய மொழிகளிலும் பல திராவிடச் சொற்கள் இன்றும் காணப்படுகின்றன. அவற்றைச் "சுதேசிச் சொற்கள்" என்று வடமொழி இலக்கண நூலாசிரியர்கள் கூறுகின்றனர் "ஓரிய மொழியில்" திராவிட மொழிச் செல்வாக்கு இருப்பதை ஓர் ஒப்பாய்வு புலப்படுத்துகின்றது.


திராவிட மொழிகள் ஒட்டு நிலை மொழிகளாக உள்ளன. மொழியில் பொருள் உடையதாக அமைந்த மிகச் சிறந்த சொல் கூறு "உருபன்" ஆகம் இதனுடன் ஒட்டுக்கள் சேரும்.

உதாரணம் : செய் - வினை நிகழ்ச்சியை குறிக்கும் உருபன்
த் - இறந்த காலத்தைக் காட்டும் ஒட்டு ருபன்
ஆன் - ஆண்பாலைக் காட்டும் ஒட்டுருபன் எனவே செய்,த்,ஆன் என்று உருபன்கள் ஒட்டி நின்று செய்தான் என்ற சொல் உருவாகின்றது.

உயிர் நீளல் அல்லது குறுகல் என்ற அளவில் சிறிதளவு வேறுபாடு மட்டுமே ஏற்படும். ஆனால் இந்தோ ஐரோப்பிய மொழிகளில் அடிச் சொல்லுடன் பிற உறுப்புக்கள் சேரும் போது அடிச் சொல்லும் சேர்ந்த சொல்லும் இவை இவை எனத் தனித்தனியே பிரித்துக் காண முடிவதில்லை அவை சிதைந்து கலந்து பிரிக்க முடியாதனவாக மாறியுள்ளன. எனவே திராவிட மொழிகள் ஒட்டு மொழிகள் எனப்படுகின்றன.

தென்னிந்திய மொழிகள் பற்றி ஆராய்ந்து "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் " என்ற நூலை எழுதிய "கால்டுவெல்" அடிகளார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்பன ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புடையதாக கூறுகிறார். இவற்றுள் தமிழ் மொழியே முதன்மையானது. என்பதை பல ஆதாரங்கள் முன்வைத்து தமிழிலிருந்து திரிபடைந்து சென்றவையே தெலுங்கு, கன்னடம் மலையாளம் என்பதை தனது ஒப்பிலக்கணத்தில் இவர் நிறுவி இருப்பதனைக் காண முடிகிறது.

திராவிட மொழிக் குடும்பத்தின் வகைப்பாடுகளாக, கால்டுவெல் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்.




இவ்வாறு திராவிட மொழியில் பல மொழிகள் காணப்பட்டாலும் தொல் திராவிட மொழிச் சொற்களின் வேர்களை ஏனைய மொழிகளை விட தமிழே பெரிதும் பேணிக்காத்துள்ளதால் திராவிட மொழியின் மூலமாக தொல் திராவிடத்தின் தொடர்ச்சியாக மொழியியலாளர்கள் நிர்ணயித்த வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு தொல் மொழியின் வடிவத்தோடு தமிழே அதிகளவில் பொருந்துவதால் திராவிடத்தின் பாரம்பரிய மொழியாக தமிழை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

# மூன்றாம் நிலைக் கல்வியும் பூநகரிப் பிரதேசமும்



திரு.கா.குலசேகரம்
ஓய்வு நிலை அதிபர்
சித்தன்குறிச்சி,
பூநகரி.

இலங்கையில் கல்வி பல படிமுறைகள் வழிமுறைகள் காணப்பட்டன. நீண்டகாலமாக குரு குலக் கல்வி முறைமையில் கல்வி வளர்க்கப்பட்டது. ஆரம்பக காலங்களில் அறநெறி சார்ந்த சமய நிறுவனங்கள் சாந்ததே கல்வி வழங்கப்பட்டு வந்தது இக்கல்வி முறையானது ஏட்டுக்கல்வி முறையாகவும் அதாவது எழுத்தறிவு சார்ந்த கல்வியாகவும் தொழில் கல்வி சார்ந்த கல்வி முறையாகவும் காணப்பட்டன.

குருகுலக்கல்வி எழுத்தறிவும் கல்வி சமயத்தலைவர்கள் மூலம் நடைபெற தொழிற்கல்வி தந்தையிடமிருந்து தனயனுக்கும் சிறுவயது முதல் பயிற்சி வழி வழங்கப்பட்டு வந்தது இவையாவும் அந்தக் கால தேவை கருதி எழுந்தவையே எல்லோருக்கும் எழுத்தறிவு வழங்கும் கல்வி முறைமை அதாவது பாடசாலைக் கல்வி முறைமை போர்த்துக் கீசர் வருகையுடன் தான் ஆரம்பித்தது எனலாம். போத்துக்கேயர் காலத்தில் தேவாலயங்களோடு இணைந்த பாடசாலைகளில் சுய மொழிக் கல்வி சமயக் கல்வியாக வழங்கப்பட்டு வந்தது. போர்த்துக் கீசரின் பின் வந்த ஒல்லாந்தரே தலை வரி, நகை வரி போன்றவற்றை அறவிடுவதற்காகக் கட்டாயக் கல்வி முறைமையை அறிமுகப்படுத்தினர் ஒல்லாந்தரின் பின் இலங்கையை ஆட்சி செய்த பிரித்தானியர் காலத்திலேயே பாடசாலைக் கல்வி வளர்ச்சி பெற்றது கோல்புறுக்கமறன் சீர்திருத்தத்தின் விளைவாக இலங்கையில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சி பெற்றது. இலங்கை அரச சேவைக்கு இலங்கையரை ஆட்சேர்க்கும் ஆங்கிலக் கல்வி முறைமை புகுத்தப்பட்டதோடு முன்றாம் நிலைக்கல்வி முறையும் வளர்ச்சி பெற்றது.

பிரித்தானியர் காலத்தில் அமெரிக்க மிசன் இலங்கைக்கு வருகை தந்தது. அப்போதைய பிரித்தானிய அரசு அமெரிக்க மிசன் கல்வியை வழங்க யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் மட்டும் வழங்கலாமென மட்டுப்படுத்தப்பட்டது. குடா நாட்டுக்குள் வெளியே வேறு மிசன்கள், மற்றும் நிறுவனங்கள் கல்வியை வழங்க முற்பட்டன. குடா நாட்டுக்குள் அமெரிக்க மிசன் வழங்கிய பாரிய கல்வி மாற்றம் பெரு நிலப்பரப்பில் ஏற்படுத்தப்பட வில்லை. இதனால் பெரு நிலப் பரப்பினுள் அடங்கியிருந்த பூநகரிப் பிரதேசமும் விரைவான கல்வி வளர்ச்சியை பெற இயலவில்லை.

பூநகரிப் பிரதேசத்தில் போர்த்துக் கீசரால் ஆரம்பிக்கப்பட்ட கோவில் பற்று கிறிஸ்தவ

பாடசாலைகள் பூநகரி, பல்லவராயன் கட்டு, ஈழவூர் ஆகிய ஊர்களில் நடைபெற்றன எனினும் பிருத்தானியர் காலத்தில் 1885 ஆம் ஆண்டு முதலாவது பாடசாலையாக மட்டுவில் நாடு மகேஸ்வரி வித்தியாலயம் தோற்றம் பெற்றது தொடர்ந்து பொன்னா வெளியில் ஆறுமுக நாவலர்களால் உருவாக்கப்பட்ட பொன்னா வெளி சைவப்பிரகாச பாடசாலையைத் தொடர்ந்து பல பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. அவை பேசுபபை, இந்து போட், மற்றும் தனிநபர்களால் ஆரம்ம்பிக்கப்பட்டன இவ்வாறு உருவாங்கப்பட்ட காலகட்டங்களில் (S.S.C) சிரேஷ்ட தராதரப்பத்திரத்திற்குரிய கல்வி வழங்க முயற்சிக்கப்பட்டன இதனால் சிற்றூழியர் தர அரச உத்தியோகம் பயிற்சி ஆசிரியர் உருவாக்கம் என கல்வியால் நன்மைகள் ஏற்பட்டன.

பூநகரிப் பிரதேச மக்கள் வன்னிப் பிரதேசத்தினுள் இருந்தாலும் ஒல்லாந்தர் பிருத்தானியர் கால விவசாய முயற்சிகள் காரணமாக யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து இப்பிரதேசத்தினுள் குடியேற்றப்பட்ட குடும்பத்தினர் கல்வி பெற முயன்ற வேளை பாடசாலைகள் தோற்றம் பெற்றன அத்தோடு இப்பிரதேசத்தினுள் பெற முடியாத கல்வியை குடாநாடு சென்று பெற முயன்றுள்ளனர்.

இத்தருணத்தில் மூன்றாம் நிலைக் கல்வி என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும் இலங்கையில் கல்வி முறைமை முன்பள்ளிக் கல்வி, ஆரம்ப கல்வி, இடைநிலைக் கல்வி மூன்றாம் நிலைக் கல்வி என வகுக்கப்பட்டுள்ளது முன் பள்ளிக் கல்வியானது தரம் ஒன்றிற்கு முற்பட்ட கல்வியைக் குறிக்கும் தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையாக வகுப்புகளில் கல்வியை ஆரம்ப கல்வி என்றும் தரம் ஆறு தொடக்கம் தரம் பதின்மூன்று வரையான கல்வியை இடைநிலைக் கல்வியென்று (தரம் 6-11 வரை கனிஸ்ட இடைநிலைத் தரம் (12,13) சிரேஷ்ட இடைநிலை இதன் பின்னான கல்வியை முன்றாம் நிலைக் கல்வி என்றும் அழைப்பார்

மூன்றால் நிலைக் கல்வியானது பல்கலைக் கழக கல்வி, உயர் தொழில் நுட்பக் கல்வி, முது நிலைக் கல்வி, ஆசிரியர் பயிற்சிக் கல்வி, கல்வியியற் கல்வி, தேசிய கல்வி நிறுவகக் கல்வி, டிப்ளோமா கல்வி முறைகள், கலைக் கல்லூரிகளில் கல்வி, பட்டயக் கணக்காளர் கல்வி, தனியார் கல்வி நிறுவனங்களைவழங்கப்படும் டிப்ளோமா கல்வி சட்டக் கல்லூரிகள், திறந்த பல்கலைக் கழக கல்வி, தனியார் ஆயர் வேதப் படிப்பு என பலதரப்படும்.

பூநகரிப் பிரதேசத்தில் இவ் கல்வி முறையில் பயிற்றவர்கள் அடையாளம் காணல் சிரமமானது ஆயினும் கிடைத்த தகவலின் அடிப்படையில் இக்கட்டுரை வரையப்படுகின்றது.

பூநகரிப்பிரதேசத்தில் 1958 ஆம் ஆண்டில் முதலாவது பட்டதாரி உருவாகியிருக்கின்றார் அதன் பின் 1960.70 தசாப்த காலத்தில் மட்டுவில் நாடு மேற்கு (வாடியடி) மட்டுவில் நாடு கிழக்கு (பள்ள கட்டுவான்) பொன்னாவெளி நல்லூர் ஆகிய பிரதேசங்களிலிருந்து பல்காலக்கழகக் கல்வியைப் பெற்றவர்களும் கறுக்காய்த்தீவு, செட்டிய குறிச்சிப் பிரதேசங்களிலிருந்து ஆசிரியர் பயிற்சியை முடித்தவர்களும் உருவானார்கள். இக்கால கட்டத்தில் நல்லூரிலிருந்து விஞ்ஞானப் படிப்பிற்கு ஒருவர் தெரிவாகியிருந்தார்.

1970 - 1980 தசாப்த காலத்தில் கறுக்காய்த்தீவு, சித்தன் குறிச்சி, கொல்ல குறிச்சி ஆகிய பிரதேசங்களிலிருந்து பல்கலைக் கல்வியைப் பெற்ற கலைப் பட்டதாரிகள் உருவானார்கள் இதே கால கட்டத்தில் விஞ்ஞானக் கல்வியை நல்லூரிலிருந்தும் செல்லையா தீவிலிருந்தும் ஒவ்வொருவரும் பெற்றனர். ஆசியர் பயிற்சி பெற்ற ஒருவர் தம்பிராய் கிராமத்திலிருந்தும் சோபாலபிட்டி கறுக்காய்த்தீவு கிராமத்திலிருந்தும் மட்டுவில் நாடு மேற்கு வரசட்டப் பிட்டியிலிருந்தும் உருவாகினர்.

1980 - 1990 தசாப்த காலத்தில் கறுக்காய்த் தீவு ஆலங்கேணி ஆகிய பிரதேசங்களிலிருந்து பல்கலைக் கல்வியைப் பெற்றவர்களும் அத்தாப் கறுக்காய்த் தீவு இரணை தீவு, கிராமத்திலிருந்தும் பயிற்சி ஆசிரியர்கள் உருவானர்கள்.

1990 - 2000 தசாப்த காலத்தில் பூநகரிப் பிரதேசத்திலிருந்து பரவலாக பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டனர் அத்தாய் சித்தன் குறிச்சி சோபால பிட்டி கிராமங்களிலிருந்தும் பட்டதாரிகள் உருவானார்கள் 2000 ஆண்டின் பின் 2020 வரை பல பட்டதாரிகள் உருவாகியுள்ளனர் இதில் முக்கியமாக கிராஞ்சி, குமுழமுளை, முழங்காவில் கிராமங்களிலும் பட்டதாரிகள் உருவாகினர் அத்துடன் கல்வியியல் கல்லூரி ஆசிரியர்களும் உருவாக்கப்பட்டனர் தற்போது முன்றாம் நிலைக் கல்வியில் அதிக நாட்டம் காணப்படுகின்றது விஞ்ஞானக்கல்வி கற்றவர்களும் பூநகரி மத்தியகல்லூரி முழங்காவில் ம.வி தேசியப் பாடசாலைகளிலிருந்து பல்கலை வேறு மூன்றாம் நிலைக் கல்வித் துறைகளிற்கு தெரிவாகின்றனர் ஏனெனில் க.பொ.த உயர்தர கற்றலுக்காக கிளி/ பூநகரி மத்திய கல்லூரி கிளி / முழங்காவில் மகா வித்தியாலயம் தேசியப் பாடசாலை கிளி/ ஜெயபுரம் ம.வி கிளி/ வேரவில் ம.வி கிளி/ கறுக்காய்த்தீவு ம.வி, கிளிபூநகரி நல்லூர் ம.வி, கிளி/ முட்கொம்பன் ம.வி ஆகிய பாடசாலைகள் உருவாகியதால் ஆகும்.

பூநகரிப் பிரதேச மூன்றாம் நிலைக் கல்வியில் வளர்ச்சி போக்கில் பல்கலைக் கல்வி பாரிய வளர்ச்சி கண்டிருப்பினும் பூநகரிப் பிரதேசத்தின் தேவையை பூர்த்தி செய்யுமளவிற்கு வளரவில்லை இதில் பிறபிரதே சங்களிலும் தமது சேவையை வழங்கும் நிலையால் தேவைக் குறைபாடு காணப்படுகிறது.

மேலும் இப்பிரதேசத்தில் மூன்றாம் நிலைக் கல்வியைப் பெற்றவர்களும் வேறு அரச தொழில் செய்பவர்களும் திருமணத்தால் பூநகரிப் பிரதேசத்திலிருந்து விலகி வாழ்கின்றார்கள் அவர்களது பிள்ளைகள் மூன்றாம் நிலைக் கல்வியைப் பெற்று உயர் நிலையிலுள்ளனர் அவ்வாறு பொறியியலாளர்கள், வைத்தியர்கள், விரிவுரையாளர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள் சட்டவல்லுநர்கள் எனப்பலர் உருவாகியிருக்கின்றார்கள்

பூநகரிப் பிரதேசத்தில் மூன்றாம் நிலைக் கல்வியான பல்கலைக் கழகக் கல்வி பெறுநர் அதிகரித்த போதிலும் பலர் தொழில் நுட்பக் கல்வி பெறுவோர் அதிகம் வளர வேண்டும். அதற்கான வழிகாட்டல்கள் அவசியம்.

2000 - 2010 தசாப்த காலத்தில் பூநகரியிலிருந்து பல்கலைக்கழக நுழைவு பெற்றோர் விபரம் கீழே தரப்படுகிறது.

| 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18 | 21 | 19 | 22 | 16 | 14 | 18 | 15 | 16 | - | 11 |

2009 யுத்தத்தில் இறுதிகாலப் பகுதியாகையால் மக்கள் முகாய்களிலிருந்தமையும் மாணவர்களும் முகாமிலிருந்து பரீட்சைக்குத் தோற்றியமையாலும் அதன் விபரங்கள் உறுதிபாடாக பெற இயல்வில்லை என்பதால் அவ் விபரம் குறிப்பிடப்படவில்லை இக்காலத்தில் கலை வர்த்தக முகாமைத்துவ, விஞ்ஞான, கணித, பொறியியல் பொற்ற துறைகளில் நுளைவு பெற்றவர்களின் தொகை 170 பேராகும் கடந்த தசாப்தங்களோடு ஒப்பிடும் போது மிகப் பெரிய தொகையாகக் கருதலாம் எனவே மூன்றாம் நிலயக் கல்வியில் வளர்ச்சியானது சிறப்பாக அமைந்ததெனலாம்.

இதே போன்று 2010 - 2019 ஆண்டு தசாப்த காலத்தில் பல்கலைக்கழக நூகர்வு அட்டவனை பின்வருமாறு.

| 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|
| 14 | 12 | 15 | 18 | 26 | 24 | 27 | 34 | 42 |

2011 - 2019 தசாப்த காலத்தில் 212 பேர் பல்கலைக் கழக நுழைவை சகல பீடங்களுக்கும் பெற்றுள்ளனர் இத்தொகையளவு மாணவர் நுளைவு ஆரோக்கியமானதாகும். இவ்வாறான தரவை நோக்கும் போது மூன்றால் நிலைக் கல்வியில் மாணவர் காட்டும் ஆர்வத்தைக் காட்டுகிறது இதே தசாப்த காலங்களில் இன்னொரு மூன்றாம் நிலைக் கல்வி நுளைவான கல்விக்கல்லூரிகளின் நுழைவை நோக்கலாம் பல்கலைக் கழக நுழையைப் பெற இயலாதவர்கள் கல்விக் கல்லூரிகழுக்கு சென்றுள்ளனர் அதன் விபரங்களைத் திரட்ட இயல வில்லை.

இங்கு பெறப்பட்ட தரவுகளை விட பூநகரியைப் பிறப்பிடமாகக் கொண்ட குடும்பங்கள் இடம் பெயர்வினால் வவுனியா, யாழ்ப்பாணம் கிளிநொச்சி, மன்னார் அக்கராயன் பிரதேசங்களில் வாழ்கின்றார்கள் இவர்களில் சிலர் பல்கலைக்கழக நுளைவு, மற்றும் கல்வி கல்லூரி நுளைவென மூன்றாம் நிலை கல்வியைப் பெற்றுள்ளனர், பெறுகின்றனர். என தகவலுள்ளது இதன் விபரம் தற்கால சூழலில் சேகரிக்க இயலவில்லை.

கடந்த இரண்டு தசாப்த காலமாக மாணவர்களின் மூன்றாம் நிலைக் கல்வி ஆர்வம் பல பாடசாலைகளில் க.பொ.த. உயர் தர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டமை. புதிய இனம் ஆசிரியர்களின் சேவை, பாடசாலைக் கல்வியை வளம்படுத்த விரும்பும் அதிபர்கள் கல்வி

நிர்வாகத்தில் வலுவான சூழ் நிலை, மாணவர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ள போக்குவரத்து வசதி, பெற்றோரின் ஆர்வம், புலம் பெயர் தமிழர்களின் ஆர்வம், சமூக ஆர்வலர்களின் ஆர்வம், கல்வியின் பெறுமதி உணர்த்தப்பட்டமை போன்ற இன்னோரன்ன காரணிகள் தூண்டின. எதிர் காலத்தில் மேலும் சிறப்புற மாணவர்கள் செயற்பட வேண்டும் வழங்கப்பட வேண்டும். அத்தோடு தகவல் தொழில் நுட்ப உயர் கற்கைகளுக்கும் மாணவர்கள் செல்ல வேண்டும.

பூநகரிப் பிரதேசத்தில் நிலவும் கல்விக் குறைபாடுகள் பல. அவை மூன்றாம் நிலைக் கல்வி பெறுகையைத் தெரிவு செய்வதில் பல இடர்பாடுகளுண்டு மூன்றாம் நிலைக் கல்வியில் பல்கலைக் கல்வியை வளர்ப்பதிலேயே கல்வி நிலையங்களும் அதிபர் ஆசிரியர்களும் செயற்படுகின்றார்கள் இதில் மாணவர்கள் பல்கலை நுழைவை தவிர்த்தால் வேறு பல துறைகளுக்கும் செல்ல முடியுமென்ற தொழில் வழி காட்டல் சேவை அவசியமாகிறது அதற்காக பாடசாலைகள் முனைப்புக் காட்டப் படல் வேண்டும்.

## வாசிப்பு நூல்கள்

பூந்துணர் நறவம் 8 கா.கார்த்திகேசு பூநகரி மாண்மியம்

கா.குலசேகரம் பூநகரிப் பிரதேச கல்வி வளர்ச்சி கல்வி டிப்ளோமா கல்வி நெறிக்கான கட்டுரை 1991

திரு.P.ஆனந்தராசா அதிபர் கிளி/ முழங்காவில் ம.வி பூநகரி பட்டதாரிகள் ஒன்றியம் காப்பாளர்





# பல்லவர்காலப் பக்திப் பாடல்களில் ஆழ்வார்களின் பக்தியனுபவம்



திரு. சி.செரஞ்சன் B.A (Hons)
அத்தாய்,
பூநகரி.

வைணவ சம்பிரதாயத்தின்படி அம்மதத்தைச் சிறப்பித்தவர்களாகக் கருதப்படும் பெரியோர்களை ஆழ்வார்கள் என்றும், ஆசாரியார் என்றும் இருவகைப்படுத்துவர். ஆழ்வார்கள் என்பதற்கு "இறைவனின் குணங்களில் ஆழ்ந்து ஈடுபட்டவர்" என்பது பொருள். ஆழ்வார்கள் பன்னிருவர். இவர்களுள் முதல் மூன்று ஆழ்வார்களான பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கை யாழ்வாரும், காரைக்காலம்மையாரும் சமமான காலத்திலே வாழ்ந்தவர்கள். அதாவது சங்கமருவிய காலத்தின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்கள் என்று அறிஞர்கள் குறிப்பிடுவர். ஏனைய ஒன்பது ஆழ்வார்களின் காலம் பக்தி நெறிக்காலமான பல்லவர் காலமாகும்.

முதல் மூன்று ஆழ்வார்கள் பாடிய முதலாம், இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிப் பாசுரங்களில் திருமாலின் அழகு, அவனது லீலைகள், அவனது வீரச் செயல்கள், அவன் உறையும் திருவரங்கத் திருத்தலத்தின் மகிமைகள் முதலியவற்றை எடுத்தியம்புகின்றன. இவர்களது பாசுரங்களில் திருமாலின் பெருமை பேசப்பட்டாலும் சிவனையும், திருமாலையும் ஒன்றாகக் காண்கின்ற சமரச முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. "ஹரிஹர" வழிபாட்டு முறை இவர்களால் பெரிதும் முதன்மைப்படுத்தப்பட்டிருந்தது.

ஆழ்வார்களது பக்தியனுபவமானது புறக்கட்டுக்களைக் கடந்த சரணாகதித் தத்துவமாகக் காணப்படுகின்றது. இறைவனுக்கும் தமக்கும் இடையிலான உறவில் மரியாதை இடைவெளி என்ற பேச்சுக்கிடமின்றி இறைவனைத் தாம் எவ்வெவ் அனுபவங்களினூடாகத் தரிசிக்க முயன்றாரோ அவற்றைத் தம் பாடல்களில் ஒளிவு மறைவின்றி வெளிப்படுத்தியுள்ளனர். புறச் சமயங்களான சமணமும், பௌத்தமும் இறைவனை அடைவதற்கான வழியாகக் கடும்துறவையே முதன்மைப்படுத்தியருந்தன. இதனால் உலகியல் வாழ்க்கை புறக்கணிக்கப்பட்ட நிலையில், உலகியலோடு சமயத்தை இணைக்கும் முயற்சியில் வைதீக மதத்தினர் ஈடுபட்டனர். சைவ நாயன்மார்கள் இறைவனை ஆண்டானாக, தந்தையாக, தோழனாக, தாயாகக் கருதி வழிபட்டனர்.

ஆழ்வார்கள் இதற்கு ஒருபடி மேலே சென்று தாம் உண்ணும் உணவு, மெல்லும் வெற்றிலை, மனக் காட்சிக்குள் பதிந்த காதலன், வளர்க்கும் பிள்ளை, வளர்க்கும் தாய் எனச் சகல படி

நிலைகளிலும் இறைவனை அனுபவித்தனர். ஆழ்வார்களது பார்வையில் தங்களுக்கும் திருமாலுக்கும் இடையே மரியாதை இடைவெளி இல்லை என்ற நிலையில், மனக்கிடக்கைகளை எவ்வித ஒளிவு, மறைவின்றி வெளிப்படுத்தியுள்ளனர். அந்தவகையில் ஆண்டாள், கண்ணன் மீது கொண்ட அளவற்ற காதலை நாச்சியார் திருமொழியிலும், திருப்பாவையிலும் பாடல்களாகப் பாடியுள்ளாள்.

பெண்கள் தமது காதலை வெளிப்படையாகப் புலப்படுத்தும் நிலை சங்க கால அகத்திணை மரபில் வழுவாகக் கருதப்பட்டிந்த நிலையில், இம் மரபினை மீறிய ஆண்டாள், கண்ணனை நாயகனாகக் கருதித் தம் காதல் உணர்வுகளையெல்லாம் பாடல்களாகப் பாடி அகிலத்தவர்கள் எல்லோரும் அறியும் படியாக வெளிப்படுத்தியுள்ளாள். ஆண்டாளின் இச் செயற்பாடு அகத்திணை மரபில் ஒரு புதுமையேயாகும். கண்ணனுடன் கூடி இன்பம் அடையாத நிலையில் தன்னுடைய உடல் மெலிவடைவதாகவும், கையில் உள்ள வளையல்கள் நெகிழப் பெறுவதாகவும், மனம் நொந்து பாடலைப் பாடியுள்ளாள்.

“தாம் உகக்கும் தம் கையிற் சங்கமே போலாவோ
யாம் உகக்கும் எம் கையில் சங்கமும் ஏந்திழையீர்
தீ முகத்து நாகணைமேல் சேரும் திருவரங்கர்
ஆ! முகத்தை நோக்காரால் அம்மனே! அம்மனே!”

(நாச்சியார் திருமொழி - 607 பாசுரம்)

என வரும் பாசுரத்தில் என் தலைவனான திருமாலின் கையிலுள்ள சங்கு எப்பொழுதும் நீங்காமல் இருப்பதைப் போல், என் கையில் உள்ள வளையல்களும் எப்பொழுதும் நீங்காமல் இருக்க வேண்டுமாயின் அரவணையில் பள்ளி கொள்ளும் நாதனை, நான் ஒரு முறையேனும் காண வேண்டும் என்று பாடலைப் பாடியுள்ளாள்.

ஆண்டாள் பாடிய திருப்பாவையில் கன்னிப் பெண்கள், திருமாலின் சந்நிதியை அடைந்து, அவனைத் துயிலெழுப்பித் தமது வேண்டுகோளை முன்வைப்பதாக அமைந்திருப்பதோடு, பாவை நோன்பு அனுட்டிக்கும் வழிமுறைகளும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

குலசேகராழ்வார், திருமால் மீது கொண்ட அன்பினால் இராமாவதாரத்திலே நெஞ்சைப் பறிகொடுத்துத் தம்மை இராமனின் தந்தையாகிய தசரதனாகப் பாவனை செய்து பாடலைப் பாடியுள்ளார். இராமன் காடேறியதை நினைத்துப் பிரிவுத் துயரின் உச்ச நிலையில், கல்லும் கரைந்துருகப் பாடலைப் பாடியுள்ளார்.

“தேன்நகுமா / மலர்க்கூந்தல் / கௌசலையும்
சுமித்திரையும் / சிந்தைநோவக்
கூனுருவில் / கொடுந் தொழுதை / சொற்கேட்ட
கொடியவன் / சொற்கண்டு, / இன்று
கானகமே / மிகவிரும்பி / நீ / துறந்த
வளநகரைத் துறந்த, / நானும்
வானகமே / மிகவிரும்பிப் / போகின்றேன்

மனுக்குலத்தார் / தங்கள் / கோவே!"
(பெருமாள் திருமொழி)

என்ற பாடல் இராமனைப் பிரிந்த தசரதனின் பிரிவுத் துயரத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. குலசேகராழ்வார், திருவேங்கட மலையில் கல்லாய், அருவியாய், மீனாய்ப் பிறக்க விரும்பி நிலையில் பக்தி வைராக்கிய நிலையில் நின்று பாடலைப் பாடியுள்ளார்.

"செடியாய / வல்வினைகள் / தீர்க்கும் / திருமாலே
நெடியானே, / வேங்கடவா, / நின்கோயில் / வாசலிலே
அடியாரும் / வானவரும் / அரம்பையரும் / கிடந்தியங்கும்
படியாய்க் / கிடந்துன் / பவளவாய் / காண்பேனே"

என்று பாடுவதனையும் அவதானிக்க முடிகின்றது. மேற் கூறிய அனுபவங்கள் யாவும் ஆழ்வார்களுடைய மாசிலாப் பக்தியின் வெளிப்பாடுகளே எனலாம். இந்தப் பூமியிலே இறைவனது நாமத்தைத் துதித்தல், அவனது திருக்கோலக் காட்சியைக் கண்டு திளைத்தல், அவனது திவ்விய தலங்களில் உறைதல் முதலியவற்றை பெரும் பேறாகக் கருதியிருந்தனர்.

நம்மாழ்வார் தனது பக்தியை வெளிப்படுத்தும் நோக்குடன் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, சிறிய திருவந்தாதி, திருவாய் மொழி முதலான இலக்கியங்களைப் பாடியுள்ளார். கண்ணனைக் காதலனகாவும், தம்மைக் காதலியாகவும் கொண்டு தனது காதலின் ஆற்றாமையைக் காதலனாகிய கண்ணனுக்குச் சொல்லுவதாற்காகக் குயில், நாரை, அன்னம், அன்றில், கிளி, பூவை முதலியவற்றை திருமாலிடம் தூது அனுப்புவதாகப் பாடலைப் பாடியுள்ளார்.

"நீயலையே / சிறுபூவாய் / நெடுமாலார்க் / கென் / தூதாய்
நோயெனது / நுவலென்ன / நுவலாதே / இருந்தொழிந்தாய்
சாயலொடு / மணிமாமை / தளர்ந்தேன் / நான் / இனியுனது
வாயலகில் / இன்னடிசில் / வைப்பாரை / நாடோயே"

உலகியற் காதலைச் சிறிதும் நினையாது, இறையியற் காதலில் நிலைத்து நின்று பாடலைப் பாடியுள்ளார். இது நம்மாழ்வாரின் பக்தி உணர்வின் உச்சநிலையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

திருப்பாணாழ்வார் தனது அமலன் ஆதிபிரான் பத்தில் திருவரங்க நாதனின் தோற்றப் பொலிவினை பாதாதி கேசமாக வர்ணித்துப் பாடியுள்ளார். அவர் ஒவ்வொரு பாசுரத்தினூடாகவும் பெருமானின் பெருமைகளைப் பலவாறாக எடுத்துக்காட்டியுள்ளார்.

"கையினார் / சுரி சங்கனலாழியார் / நீள்வரை / போல்
மெய்யனார் / துளப / விரையார் / கமழ்நீள் / முடியெம்
ஐயனார், அணி அரங்கனார் / அரவின் / அணைமிசை / மேய / மாயனார்
செய்யவாய் ஐயொ! / என்னைச் / சிந்தை / கவர்ந்ததுவே!" என்றும்,

“கொண்டல் / வண்ணனைக் / கோவலனாய் / வெண்ணெய்
உண்ட / வாயன் / என்னுள்ளம் / கவர்ந்தானை
அண்டர் / கோனனியரங்கன் / என் / அமுதினைக்
கண்ட / கண்கள் / மற்றொன்றினைக் / காணவே”

எனத் திருவரங்கப் பெருமானின் அவயங்களை ஒவ்வொன்றாகக் கண்டு, உடலும் மனமும் பக்தியால் பூரிப்படைய நின்ற திருப்பாணாழ்வார் தனது இறுதிப் பாடலில் பெருமானின் அவயங்களின் அழகைக் கண்ட கண்கள் வேறொன்றையும் பார்க்கமாட்டாது எனப் பாடியுள்ளார். இதனை **“அண்டர் கோனனியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே”** என்னும் தொடர் மூலம் திருமால் மீது கொண்ட பக்தி வைராக்கிய நிலையைப் புலப்படுத்தியுள்ளார். திருமாழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் ஆகியவற்றைப் பாடியுள்ளார். நம்மாழ்வாரின் பக்தராக விளங்கியவர் மதுரகவியாழ்வார். இவர் “கண்ணிநுன் சிறுத்தாம்பு“ என்ற நூலைப் பாடியுள்ளார்.

பெரியாழ்வார், கண்ணனைக் குழந்தையாகவும், தம்மை யசோதைப் பிராட்டியாகவும் பாவனை செய்து பெரியாழ்வார் திருமொழி என்ற இலக்கியத்தைப் பாடியுள்ளார். தமது திருமொழியிலே கண்ணனின் திருவவதாரச் சிறப்பு, திருமாலின் திருமேனி அழகு, அவனைத் தொட்டிலிட்டுத் தாலாட்டுதல், அம்புலியை அழைத்தல், செங்கீரைப் பருவம், சப்பாணி கொட்டுதல், தளர் நடை நடத்தல், முலையுண்ண அழைத்தல், பூச்சிகாட்டி விளையாடல், காது குத்துதல், நீராட அழைத்தல், குழல்வாரக் காக்கையை அழைத்தல், காக்கையைக் கோல் கொண்டுவர அழைத்தல், பூச்சூட அழைத்தல், கண்ணூறுபடாமற் காப்பிட அழைத்தல் முதலான சிறுபிள்ளையின் நிகழ்வுகளைப் பாடியுள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றில் பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தத்தின் ஊற்றுக்களைப் பெரியாழ்வார் திருமொழியிலே முதன் முதலில் கண்டு கொள்ள முடிகின்றது.

ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் மீது அன்பு கொள்வதற்கு ஆழ்வார்களுக்கு ஒரு வடிவம் தேவைப்பட்டது. இதனால் தம் ஞான உணர்வின் ஊடாக இறைவனுக்குப் பல்வேறு தோற்றப் பொலிவினைக் கொடுத்துள்ளனர். திருமாலின் தோற்றத்தைப் பெரியாழ்வார் பின்வருமாறு வர்ணித்துப் பாடியுள்ளார்.

“பூணித்த / தொழுவினில் / புக்கு / புழுதி
அளைந்த / மேனி / காணப் / பெரிதும்
உகப்பென் / எனினும் / கண்டார் / பழிப்பார்
நாண் / எத்தனையும் / இலாதாய் / நப்பின்னை / காணில் / சிரிக்கும் / மாணிக்கமே,
என் மணியே, / மஞ்சனம் / ஆட / நீ / வாராய்”

திருமாலை, திருப்பள்ளி எழுச்சி ஆகிய இலக்கியங்கள் தொண்டரடிப் பொடியாழ்வாரால் பாடப்பட்டது. விப்ரநாராயணர் என்னும் இயற்பெயர் கொண்டவர். அடியார்க்கு, அடியவராகும் இவரது இயல்பால் தொண்டரடிப் பொடியாழ்வார் எனப் பெயர் பெற்றார். திருமாலின்

திருக்கோலத்தை பின்வருமாறு பாடுகிறார்.

“பச்சை / மலைபோல் / மேனி / பவளவாய்க்
கமலச் / செங்கண் / அச்சுதா / அமரர் ஏறே,
ஆயர்தம் / கொழுந்தே என்னும் இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை
பெறினும் / வேண்டேன் / அரங்கமா / நகருளானே.”

ஆண்டாள், திருமால் மீது ஆறாக் காதல் கொண்டு அரங்கநாதனின் தோற்றப் பொலிவை இயற்கைக் காட்சிகளுடன் ஒப்பிட்டுப் பாடலைப் பாடியுள்ளாள்.

“கருவுடை / முகில் / வண்ணன் / காயாவண்ணன்
கருவிளை / போல் / வண்ணன் / கமல / வண்ணத்
திரு / உடை / முகத்தினிற் / திருக் / கண்களால்
திருந்தவ / நோக்கு / எனக்கு / அருளு / கண்டாய்”
(நாச்சியார் திருமொழி - 509)

சங்க அகவாழ்வின் பகுதிகளான களவுக் காதல், கற்புக் காதல் என்னும் இரண்டு ஒழுக்கங்களையும் ஆண்டாள் தனது பாடல்களில் பாடியுள்ளாள். தனது காதல் மிகுதியையும் ஆற்றாமையையும் வெளிப்படுத்தும் நிலைகளில் களவொழுக்கத்தையம், திருமணக்கனவு, கண்ணனைக் காணுதல் முதலான நிலைகளில் கற்பொழுக்கத்தையும் இனம் காண முடிகின்றது.

பிரிவுத் துயரின் காரணத்தால் தலைவனோ, தலைவியோ தூது அனுப்புவதைச் சங்க அகத்திணை இலக்கியங்களில் அவதானிக்க முடிகின்றது. இத் தன்மையை ஆண்டாள் பாடலிலும் காண முடிகின்றது.

“கருப்பூரம் / நாறுமோ / கமலப் பூ / நாறுமோ
திருப்பவளச் / செவ்வாய்தான் / தித்தித்திருக்குமோ
மருப்பொசிந்த / மாதவன் / தன் / வாய்ச் / சுவையும் / நாற்றமும்
விருப்புற்றுக் / கேட்கின்றேன் / சொல்லாழி / வெண்சங்கே”

திருமால் மீது ஆறாக் காதல் கொண்டு திருமாலின் ஆண்மை இன்பத்தை அனுபவிக்கத் துடிக்கும் காதல் வேட்கையை மேற்படி பாடலில் அவதானிக்க முடிகின்றது.

பெரிய திருமடல், சிறிய திருமடல் என்ற இரண்டு இலக்கியங்களும் அகப் பொருள் மரபு தழுவிய இலக்கியங்களாகும். சிறிய திருமடலில் காதல் மீதூர்ந்த தலைவி, மடல் ஏறி அலர் தூற்றுகின்றாள். பெரிய திருமடலில் தலைவி மடல் ஏறப் போவதாகக் கூறுகின்றாள். இவ்விரண்டு இலக்கியங்களும் திருமங்கையாழ்வார், திருமால் மீது கொண்ட ஆழ்ந்த காதல் உணர்வை வெளிப்படுத்துவதாக அமையப் பெற்றுள்ளன.

ஆழ்வார்கள் தமது பாசுரங்களில் மகாவிஷ்ணுவினது பல்வேறுபட்ட தோற்றப் பொலிவுகளையும், இதிகாசக் கதைகளையும், வீரதீரச் செயல்களையும், திருமாலின் லீலைகளையும், திருமாலின் அழகையும் பல்வேறு பாவனை முறையில் நின்று பாடல்களைப் பாடித் தமது பக்தி வைராக்கிய நிலையினை வெளிப்படுத்தியுள்ளனர்.

# பூநகரி பிரதேச கரையோர மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான பரிந்துரைகளும்



திரு.ற.அல் அமீன்
BA (HONS) MA (READING)
நாச்சிக்குடா.

உலகிலேயே மக்களால் அதிகமாக நுகரப்படும் போசாக்கான உணவுப்பட்டியலில் கடலுணவுகளுக்கு முதலிடம் காணப்படுகின்றது . குறிப்பாக கடலில் இருந்து பெறப்படும் மீன்கள் மக்களின் போசாக்கு (புரோட்டீன்) தேவையினை நிறைவு செய்வதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. ஏனெனில் கடலில் இருந்து பெறப்படும் மீன்வகைகள் எவ்வித இரசாயன கலப்படமற்றவையாக காணப்படுவதோடு உற்பத்தி வளர்ச்சி இனப்பெருக்கம் என்பன எவ்வித தடையுமின்றி இயற்கையாகவே கிடைக்கப்பெறுவதனாலும் ஆகும். இதன் காரணமாகவே கடலுணவுகளுக்கான கேள்வி உள்ளூர், மற்றும் வெளியூர் சந்தைகளில் நாளாந்தம் அதிகரித்து வருகின்றது. பொதுவாக கடல்மீன் மீன்பிடியானது இரண்டு பிரதான பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றது.

1. கரையோரம்சார் கடல் மீன்பிடி /Coastal Sea side Fishing (களப்புக்கள் குடாக்கள் நீரேந்து பிரதேசங்கள் கரையிலிருந்து 100-600 மீற்றருக்குட்பட்ட ஆழ்கடலல்லாத பகுதிகள்)

இக்கரையோர பகுதிகளில் காணப்படும் மீனவர்கள் பெரும்பாலும் பாரம்பரிய மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி தொழில் புரிவதோடு இவர்களது தொழிலில் குடும்ப அங்கத்தவர்களினது பங்களிப்பு நேரடியாக காணப்படுகின்றது. குறிப்பாக பெண்கள் வலையில் பிடிக்கப்பட்ட மீன்களை தெரிதல், கருவாடு பதனிடலுக்காக மீன்களை கீறுதல், காயவிடுதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றனர். தேசிய நீர்வாழ் உயிரின அபிவிருத்தி செய்கை அதிகார சபையின் தரவுகளின் (NAQDA 2018) படி மொத்த மீன்பிடியில் கரையோரம்சார் கடல் மீன் வகைகளே அதிகளவில் பிடிக்கப்படுவதாகவும் ஏற்றுமதிக்கும் உள்ளூர் மீன் விநியோகத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகை மீன்கள் சிறிய மீன்களாக (சாளை, ஓரா, சின்னட்டிபாரை, விளமீன், சிறையா மீன், பாலைமீன், களப்பு மீனினங்கள்) காணப்படுவதோடு உள்ளூர் மீன் நுகர்வோரின் விலை தொடர்பில் திருப்தியான நிலை காணப்படுவதனாலாகும். மேற்படி பூநகரி பிரதேசத்தின் மீன்பிடி முறைமையும் கரையோரம் சார்ந்ததாகவே காணப்படுகின்றது.

2. ஆழமான கடல்மீன்பிடி /Deep Sea Side

ஆழமான மீன்பிடி என்பது 30 மீற்றர் ஆழத்தைக்கொண்டுள்ள கடற்பரப்பில் பிடிக்கப்படுகின்ற மீன்களையே ஆழக்கடல் மீன்பிடி எனப்படுகின்றது. இலங்கையின் தென்கடல் பகுதிகளில் பெரும்பாலும் ஆழக்கடல் மீன்பிடி முறைமையே காணப்படுகின்றது. இதில் பல நாள்

தங்கியிருந்து தொழில் புரியும் கப்பல்கள், படகுகள் நவீன தொழிநுட்ப முறையிலான மீன்பிடி முறைகள் என்பன மீன்பிடி செயன்முறைகளில் ஈடுபடக்கூடியதாக காணப்படும். இம்முறை மூலமாக பிடிக்கப்படும் மீனினங்கள் பெரும்பாலும் சாதாரண மக்களின் நுகர்வுக்கெனவன்றி ஏற்றுமதி மற்றும் பாரிய உணவகங்கள், சுற்றுலா விடுதிகள் என்பவற்றுக்கென விநியோகம் செய்யப்படுகின்றது. இதில் பிடிக்கப்படும் மீனினங்கள் பொதுவாக ஒரு மீன் 3 கிலோகிராமை விட அதிகமான நிறுவை கொண்டதாகக் காணப்படும். இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியில் மீன் மற்றும் மீன்வளத்துறை முக்கியபங்கு வகிக்கின்றது. கரையோரப்பகுதிகளில் வாழும் சனத்தொகையில் 10 பேர் கடல் மீன்பிடி மற்றும் மீன்பிடி சார் வாழ்வாதாரத்தினை அடிப்படையாகக் கொண்டவர்களாக காணப்படுகின்றனர். நாட்டின் 15 நிர்வாக மாவட்டங்களில் கடல்மீன்பிடி உள்ளது. 2014-2018 ஆம் ஆண்டு காலப்பகுதிவரை மொத்த மீன்பிடியில் கடல்மீன்பிடியானது 86.7 பங்களித்துள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மீன்வளத்துறை 2.7 பங்களிப்பு செய்கின்றது அதிலும் குறிப்பாக கரையோர மீன்பிடியானது 1.3 பங்களிப்பு செய்கின்றது. தேசத்தில் மொத்தமாக மீன்வளத்துறை சார்ந்து 2.7 பில்லியன் மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும்` ஈடுபட்டு வருகின்றனர். 2016 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி 188690 மீனவக்குடும்பங்கள் காணப்படுகின்றன. (கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களம் 2018)

வடமாகாணத்தைப் பொறுத்தவரை 40000 ற்கும் அதிகமான மீனவக்குடும்பங்கள் காணப்படுகின்றன. இலங்கையின் மொத்த கரையோர வலயத்தில் (coastal belt) 40 வீதம் வடமாகாணத்தை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இதில் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட “மீன்பிடி சார் வாழ்வாதாரத்தைக் கொண்ட கிராம அலுவலர் பிரிவில் காணப்படும் கரையோர மீன்பிடி முறைமைகளில் ஈடுபடும் மீனவர்களிடம் மீன்வளம் எவ்வாறு அவர்களது வாழ்வாதாரத்தில் பாதிப்பைச் செலுத்துகின்றது என்பதுடன் அப்பாதிப்பு உள்ளூர் பொருளாதாரத்தில் எவ்விதம் சாதக பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதையும் கீழ்க்காணலாம்.

**விலை தொடர்பில் காணப்படும் தளம்பல்**

மீனவர்களால் பிடிக்கப்படும் பல்வகை மீன்களின் கொள்வனவு விலைகள் நாளுக்கு நாள் நிலையற்ற தன்மை காணப்படுகின்றது. இதன் காரணமாக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை காணக்கூடியதாகவுள்ளது. நுகர்வோரின் திருப்தி மற்றும் கொள்வனவு செய்யும் திறன் என்பன விலையினை தீர்மானிக்கின்ற காரணியாக காணப்படுகின்றது. விலை தொடர்பில் காணப்படும் நிலையற்ற தன்மை காரணமாக நியாயமான விலைக்கு மீன்கள் விற்பனை செய்ய முடியாது போகின்றது. குறிப்பாக மீன்கள் பெருந்தொகையாக பிடிக்கப்படுகின்ற காலப்பகுதிகளில் மீன்களுக்கான விலை குறைவடைந்து போவதும் குறைவாக பிடிக்கப்படுகின்ற காலங்களில் விலை அதிகரிக்கும் முறைமையும் காணப்படுகின்றது. அதிக மீன்கள் பிடிக்கப்படும் காலங்களில் மீன்களின் கேள்வி குறைவடையும் அதன் காரணமாக விலை குறைவடையும் என்ற கருத்தும் மீனவர்கள் மத்தியில் நிலவினாலும் அதே நாளில் கொள்வனவு செய்யப்படும் மீன்கள் நகர சந்தைகளில் கூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதே

வேளை பெருநகர் சந்தை பகுதிகளில் இதன்விலை இன்னும் இரட்டிப்பாக அதிகரித்துக் காணப்படுகின்றது.

**மீன்வளத்தினது குறைபாடு தட்டுப்பாடு**

மீன்பிடி உற்பத்தியானது இப்பிரதேச மக்களின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்வதில் பற்றாக்குறை நிலை நிலவுதாக ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது. சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப மக்களது நாளாந்த உணவுத்தேவைகளும் அதிகரித்து வருகின்றது. சனத்தொகைக்கு நிகராக உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்பட்டாலும் கூட குறிப்பிட்டளவு வளங்களை வைத்துக் கொண்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதில் பல சவால்கள் காணப்படுகின்றன. அதிகளவு மீன் பிடித்தல் காரணமாக மீன்வளத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தடை செய்யப்பட்ட மீன்பிடி நுட்பங்களை பயன்படுத்தி மீன்பிடிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் மீன்வளம் குறைவடைவதோடு மீன் குஞ்சுகள் இளம் பருவத்திலேயே அழிந்து போகும் நிலை உருவாகியுள்ளது. இன்று அழிந்து வரும் உயிரினங்களின் பட்டியலில் கடற்பரப்பில் வாழும் உயிரினங்களே அதிகமாகவுள்ளது.

**அத்துமீறியுள்ள உள்நாட்டு வெளிநாட்டு இழுவிசைப்படகுகளினால் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பு**

இப்பகுதியானது அருகாமையிலுள்ள யாழ் மற்றும் மன்னார் மாவடட் மீனவர்களின் மீன்பிடி இடமாக காணப்படுவதுடன் இந்தியாவுக்கு அருகாமையில் குறிப்பாக தமிழ்நாட்டுக்கு அருகாமையில் காணப்படுகின்றமை காரணமாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய ஊடுருவல் காரணமாக இப் பிரதேச மக்களது வாழ்வாதாரம் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. பெருங்கடல்களில் அல்லது சமுத்திரங்களில் மீன்பிடியை மேற்கொள்ளவென உற்பத்தி செய்யப்பட்ட பாரிய இழுவிசைப்படகுகள் இப்பிதேசத்தினுள் அத்துமீறி நுழைந்து கடல் வளங்களை கொள்ளையடித்துச் செல்லும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது.

இவ்வகை இழுவிசைப்படகுகள் பெரும்பாலும் இந்திய நாட்டைச் சேர்ந்தவைகளாக காணப்படுகின்றன. இந்தியாவின் தென்கிழக்கு கரையோரம் இலங்கையின் வட பகுதி கரையோரம் வரலாற்று ரீதியாக நெருக்கமான பிணைப்பைக் கொண்டுள்ளது .இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான போக்குவரத்து பயணப்பாதையாகவும் இப்பகுதி காணப்படுகின்றது. அத்தோடு இப்பகுதி பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும். (palk bay geo politics) முக்கியமான இடமாக காணப்படுவதுடன் அதிகமான மீன்வளங்கள் காணப்படும் இடமாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. 1951-1983 வரையான காலப்பகுதியில் இந்த பாக்கு நீரிணைப்பகுதியில் மீன்பிடி நடவடிக்கைகள் யாழ் கிளிநொச்சி மாவட்ட மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதோடு 1983-2004 ஆம் ஆண்டு காலப்பகுதி வரை நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழல் காரணமாக அம்மீன்பிடி நடவடிக்கைகளை இந்திய மீனவர்கள் எல்லை மீறி மேற்கொண்டு வந்துள்ளனர். அதனுடைய தாக்கமே இலங்கை இந்தியாவுக்கான சமுத்திர எல்லை தொடர்பில் ஏற்பட்டிருக்கும் பிணக்கிற்கும் காரணமாக அமைந்துள்ளது.

**பிடிக்கப்படும் மீன்களுக்கான சந்தை வாய்ப்பு இன்மை**

இப்பகுதியில் அடையாளப்படுத்தப்படும் பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக பிடிக்கப்படும் மீன்களுக்கான பொருத்தமான சந்தைவாய்ப்புக்கள் இன்மை குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதான நகர்புறங்களில் காணப்படும் சந்தை வசதிகள் அல்லது போக்குவரத்து வசதிகள் இப்பகுதியில் மிகக்குறைவாக காணப்படுகின்றமை காரணமாக உடனடியாக பிடிக்கப்படும் மீன்களை சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது போகின்றது.

பூநகரி பகுதியின் கரையோர வலயத்தினுள் பிடிக்கப்படுகின்ற பெரும்பாலான மீனினங்கள் விரைவில் பழுதடையக்கூடியவையாகவே காணப்படுகின்றன. குறிப்பிட்டதொரு வர்த்தகர்கள் தரகர்கள் மூலமாகவே வெளி மாவட்டங்களுக்கு மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படுகின்ற மீனினங்கள் காலை 6-30 மணி தொடக்கம் 10.30 மணி வரையான காலப்பகுதிக்குள் கடலில் இருந்து கொண்டுவரப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனின் மீன்களை மிகக்குறைந்த விலைக்கு உள்ளூருக்குள் மாத்திரம் விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு விடும். அவ்வாறெனின் குறிப்பிட்ட நேரம் கழித்து மீன்பிடியில் ஈடுபட்டு வரக்கூடிய மீனவர்களின் பொருளாதார நிலமை மிகவும் பாதிப்படையும். மேலும் இங்கு காணப்படும் இறங்குதுறையில் மீன்களை களஞ்சியப்படுத்தி வைக்கும் வசதிகளும் இல்லை என்பதால் சில சந்தர்ப்பங்களில் மீன்களை கருவாடு பதனிடலுக்காக வழங்க வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்பட்டுள்ளன.

**மீனவர்களுக்கான பாதுகாப்பு மற்றும் நலனுதவிகளின் தேவைப்பாடு**

தொழிலில் ஈடுபடக்கூடிய மீனவர்களுக்கான தொழிநுட்ப ரீதியான விழிப்புணர்வுகளோ உதவிகளோ தேவைப்படும் காலங்களில் கிடைக்கப்பெறாமலுள்ளது. இதன் காரணமாக மீன்பிடி தொடர்பான நுட்பங்களை கற்று மீன்பிடிக்கும் முறைமை இல்லாது போவதால் அவர்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. அது மாத்தரமன்றி ஏனைய தொழிற்துறைகளுடன் ஒப்பீடு செய்து பார்க்கையில் கடற்தொழில்சார் சமூகம் சாரந்தவர்களிடம் கல்வியறிவு வீதம் குறைவாகக் காணப்படுகின்றது. ஒரு குடும்பத்தில் தொழில் புரியும் பிரதான குடியிருப்பாளர் தனது உதவிக்காக மீன்பிடிக்கு பிள்ளையை அழைத்துச் செல்கின்றார். அவ்வாறு செல்லும் பிள்ளை எதிர்காலங்களில் தன்னுடைய தந்தையினுடைய தொழிலை செய்ய வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றான். இதனால் அப்பிள்ளையினுடைய கல்வி பாதிப்படைகின்றது.

அது போலவே இப்பிரதேசத்தில் வறுமை நிலையும் அதிகமாக காணப்படுகின்றது. இவ்வருட கணக்கீட்டின்படி வறுமை கூடிய மாவட்டமாக கிளிநொச்சி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக மீனவ சமூகத்தின் வறுமை நிலைக்கு பருவ காலங்களில் மாத்திரம் தொழில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு செல்வதோடு நின்று குறிப்பிட்ட 6 மாதங்கள் எவ்வித தொழிலுமின்றி வீடுகளில் முடங்கி காணப்படுவதே பிரதான காரணியாகும். உபதொழில் நடவடிக்கைகளை மேற்கொள் போதுமான அளவு விவசாய காணிகள் இன்மையும் ஒரு காரணியாகும். 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின் பின்னர் குறிப்பிட் பிரதேசத்தில் காணப்படும் குடியிருப்புக்காணிகளில் குடியிருப்பு வீதம் அதிகரித்தமையேயாகும்.

இப்பிரதேசத்தில் காணப்படும் தொழிலாளர்கள் பெரும்பாலும் முதலாளிகளை நம்பி தொழில் புரிபவர்களாக காணப்படுவதுடன் அவர்களுடைய உற்பத்தி கொடுக்கல் வாங்கல்கள் இலாபப்பங்கீடு என்பன குறிப்பிட்டதொரு வட்டத்துடன் முடிவடைந்து விடுகின்றது இதன் காரணமாக மீனவர்களுடைய விலை தொடர்பில் பேரம் பேசும் தன்மை இல்லாமல் போயுள்ளது. தொழிலற்ற காலங்களில் தான் தங்கி வாழும் முதலாளி ஒருவரிடமிருந்து கடனாக பணத்தைப் பெற்று வாழ்ந்து வருவார் தொழில் வாய்ப்பு வரும் காலங்களில் அப்பணத்தை அவர் சார்ந்து தொழிலில் ஈடுபடுவதன் மூலம் கழித்துக்கொள்ளும் நடைமுறையும் இப்பகுதி மீனவர்கள் மத்தியில் காணப்படுவதனை அறிய முடிகின்றது.

**பிரச்சினைகளுக்கான தீர்வுகளும் ஆலோசனைகளும்**

இங்கு கரையோர மீன்பிடி முறைமைகளின் மூலமாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் எதிர் நோக்கும் பிரச்சிகைள் எவ்வாறு அவர்களது குடும்ப தனிப்பட்ட வாழ்வாதாரத்தில் பாதிப்பு செலுத்துகின்றது என்பதை ஆராய்ந்ததோடு அது எவ்வாறு உள்ளூர் பொருளாதாரத்தில் தாக்கத்தை செலுத்துகின்றது என்பதில் கவனம் செலுத்தியுள்ளது. நாளுக்கு நாள் நவீன மீன்பிடி நுட்பங்கள் வளரச்சி கண்டு வந்தாலும் கூட அதனுடைய பரவல் இன்னும் கிராமப்புற மீனவர்களுக்கு சென்றடைவது மிகத் தாமதமாக உள்ளதை அறிய முடிகின்றது. இதில் ஆய்வுப்பிரச்சினைகளாக கூறப்பட்டுள்ள மிக முக்கியமான பிரச்சினைகளுக்கு கீழ்குறிப்பிடப்படும் தீர்வு முறைமைகளை வழங்குவதன் மூலம் பிரச்சினைகளை இழிவளவாக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- கடற்தொழில் நீரியல் வளத்துறை அமைச்சினுர்டாக தடை செய்யப்பட்டுள்ள மீன்பிடி நுட்பங்களை பயன்படுத்துவோரைக் கண்டறிந்து சட்டங்களை நடைமுறைக்கு கொண்டு வர வேண்டும். இதற்கு குறித்தொதுக்கப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கரிசனையுடன் செயற்பட வேண்டும். கடற்படையினரின் உதவியுடன் இதனை முறையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலமாக இயற்கையாகப் பெருகும் மீன்களின் எண்ணிக்கையினை அதிகரிக்க முடியும்.அத்தோடு மீன்வளம் பாதுகாக்கப்படும். ஒவ்வொரு இறங்கு துறைகளிலும் காணப்படும் கரையோர பாதுகாப்பு கடற்படையினர் மீன்பிடிக்கச்செல்லும் மீனவர்களின் பதிவுகளை மட்டும் பேணி நடக்காது படகுகள் தொழிலுக்கு செல்லும் சந்தரப்பங்களில் கண்காணிப்பாக இருப்பதன் மூலமாக சட்டவிரோதமாக கொண்டு செல்லப்படும் மீன்பிடி உபகரணங்களை தடுக்க முடியும். குறிப்பாக தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளான சுருக்கு வலை, டைனமோட் வெடி மூலமாக மீன்பிடி செய்தல் கரையோரப்பகுதிகளில் நைலா எனப்படும் தடை செய்யப்பட்ட வலைகளை பாவித்து மீன்பிடியில் ஈடுபடல், சட்டவிரோதமான கடலட்டை, கடற்தாமரை போன்றவற்றை வேட்டையாடுதல் என்பன கடுமையான முறையில் சட்டங்களை அமுல்படுத்துவதன் மூலமாகவே கட்டுக்குள் கொண்டு வர முடியும். இத்தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைமைகள் சம்பந்தமாக காலத்துக்குக்காலம் மீனவர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும் வேண்டும். அவ்வாறு தொழில்களில் ஈடுபடுபவர்களைக் கண்டறிந்து அவற்களுக்கான மாற்றீட்டு தொழில் முறைமைகளை அறிமுகம் செய்து

கொடுப்பதன் மூலமாகவும் இதனை தடை செய்ய முயற்சி செய்யலாம்.

- அருகி வரும் மீனினங்களைப் பாதுகாக்கும் பொறிமுறைகளை கடற்தொழில் கிராமங்களில் அறிமுகப்படுத்தல். மாலைதீவு, இந்தியா போன்ற நாடுகளில் அருகிவரும் மீனினங்களை பாதுகாக்க பாதுகாப்பு வலையங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு மேற்கொள்ளும் போது மீன்வளம் பாதுகாக்கப்படுவதோடு சூழல் சமநிலை பேணப்படும். குறிப்பாக செந்தரவுப்புத்தகத்தின் கீழ் இலங்கையில் அருகி வரும் கடல் உயிரினங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஆமை வகைகள், புள்ளிச்சுறா மற்றும் அலங்கார மீன் வகைகள் என்பன தொடர்பான முழு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- ஒவ்வொரு வகை மீனினங்களுக்குமான மத்திய சந்தைகள். பெருநகர்பகுதிகளில் இருக்கின்ற பொழுதும் பிராந்தியங்கள் மற்றும் பிரதேசங்களில் அச்சந்தை முறையினை விரிவாக்கம் செய்து வலையமைப்புக்கு பொருத்தமான விலைகளுக்கு மீன்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல். இதன் மூலமாக மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரம் உயரும் அத்தோடு உள்ளூர் பொருளாதாரம்அபிவிருத்தி காணும். அது மாத்திரமன்றி இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினூடாக பல நகர்பபகுதிகளில் மீன்கள் நியாயமான விலைக்கு கொள்முதல் செய்யப்படுகின்றன. ஆனால் பூநகரி பிரதேசத்தில் அவ்வாறானதொரு போக்குவரத்து வலையமைப்பினை உருவாக்குவதன் மூலம் மீன்களுக்கான நியாயமான விலையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- மீன்பிடிக்கிராமங்களை அண்டிய பகுதிகளில் ஐஸ் உற்பத்தி தொழிற்சாலைகளை நிறுவுவதன் மூலமாக மீன்களுடைய குளிரூட்டல் செயற்பாடுகள் சிறப்பாக இடம் பெறும் என்பதுடன் போக்குவரத்து ரீதியாக இலகுவில் அடையக்கூடிய இடங்களில் அவற்றை அமைப்பது சிறந்ததாக அமையும்.

- பொருத்தமான ஆய்வுகளை மேற்கொண்டு கடற்பரப்பில் மீன்வளர்ப்பு நடைமுறைகளை அறிமுகம் செய்து விஸ்தரித்தல் இதனால் மீன் உற்பத்தி அதிகரிப்பதோடு பொருளாதார வசதிகள் மேம்படும். குறிப்பாக நாச்சிக்குடா இரணைதீவப்பகுதிகள் நீர்வாழ் உயிரின வளர்பினை மேற்கொள்வதற்கு உகந்த இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் கடலட்டைகள், கொடுவா மீன்கள், கலவாய் மீன்கள் போன்ற ஏற்றுமதி பெறுமதி மிக்க கடலுணவுகளை வளர்ப்பு செய்வதற்குரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு வளர்ப்புத்திடட்ங்களை உருவாக்கி அதனை அதிகப்படுத்துவதன் மூலமாக பகுதி நேர தொழிலாக இதனை செய்யக்கூடிய தொழிலாளர் படை உருவாகுவதோடு வேலை வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. அத்தோடு மீன்பிடித் தொழிலற்ற காலங்களில் மீன்வளர்ப்பு மூலம் வருவாயைப்பெற்று பொருளாதார ரீதியாக முன்னேற்றமடையலாம். அதே நேரம் வளர்ப்பு திட்டங்களுக்கென அடையாளப் படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலேயே மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்வதற்குரிய

நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக குஞ்சுகளை இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகும். அத்தோடு நல்லின மீன் குஞ்சுகளை (உள்ளூர் கடற்பகுதிகளில்) குறிப்பிட்ட கடற்பிரதேசங்களின் இயற்கைச்சூழலில் இனப்பெருக்கம் செய்ய வைத்து வளர்ப்பிற்கு வழங்குவதன் மூலமாக மீன் குஞ்சுகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்க முடியும்.

- மீன்வளர்ப்பு கூண்டுகளில் கடற்பாசிகளை வளர்க்கும் திட்டங்களை விஸ்தரித்தல் இதன் மூலமாக மீன்களுக்கு தேவையான பிராணவாயுவை அதிகரிக்கமுடியும் என்பதுடன் கடற்பாசி மூலம் வருமானத்தையும் பெற முடியும்.

- இந்திய இழுவைப்படகுகளை கட்டுப்படுத்த தேசிய ரீதியானதொரு கடல் எல்லைப்பாதுகாப்பு நடைமுறையினை அமுலுக்கு கொண்டு வர வேண்டும். வருடாந்தம் கடற்தொழில் மற்றும் பாதுகாப்பு அமைச்சினுடைய செயற்திட்டத்தினுடாக இந்திய இழுவைப்படகுகள் தொடர்பான இணக்கமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் கூட அவற்றை நடைமுறைப்படுத்துவதில் பல நடைமுறைச்சிக்கல்களை இரண்டு நாடுகளும் கொண்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. ஆனால் கொள்கைரீதியான முடிவுகளை விடுத்து தேசிய ரீதியான கடற்பாதுகாப்பு எல்லைகளின் பாதுகாப்பினை அதிகரிக்க வேண்டும். தேசிய ரீதியான சட்ட நடைமுறைகளின் கீழ் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- கடற்தொழில் கூட்டுறவு மற்றும் கிராமிய வங்கி முறைமைகளில் மீன் உற்பத்தி வளர்ப்பு தொடர்பான கடனுதவிகள், நலனுதவிகளை அதிகரித்தல். இந்நிர்வாகங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவிபுரிதல், சட்ட ரீதியற்ற மீன்பிடி நடைமுறைகள் தொடர்பாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளின் போது சங்க நிர்வாகத்தினரின் பங்குபற்றலினை உறுதிப்படுத்தல், கடற்தொழில் சங்கங்கள் அமைப்புகள் போன்ற அமைப்புக்களை மீன்வளம் தொடர்பான பயிற்சிப்பட்டறைகள் மீன்பிடிநுட்பங்கள் தொடர்பான பயிற்சிகள் போன்றவற்றை வழங்கி வலுப்படுத்தல்.

- கடல் மீன்களுக்கான இரண்டாம் நிலை பெறுமதி சேர் நடவடிக்கைகளுக்கு(கருவாடு உற்பத்தி வியாபாரம்) பெண்களின் பங்களிப்பை அதிகப்படுத்தல். அத்தோடு கருவாடு பதனிடும் மையங்களை உருவாக்கி அதில் தொழிற்பயிற்சி வழங்கப்பட வேண்டும்.இதன் மூலமாக பெண்களின் வருமானம் அதிகரிக்கும்

- பொருத்தமான கடற்தொழில் பயனாளிகளைத் தெரிவு செய்து வாழ்வாதார திட்டங்களை வழங்க தொடர்ச்சியான கண்காணிப்பில் ஈடுபடுதல். குறிப்பாக படகுகள், வள்ளங்கள் மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றை அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பெற்றுக்கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு பொருத்தமான பயனாளிகள் தெரிவு செய்யப்படுவது வாழ்வாதாரம் சார் முன்னேற்றத்துக்கு வழி சமைக்கும். மானிய அடிப்படையில் கடனுதவி திட்டங்களை உருவாக்குதல் ஏற்கனவே

நடைமுறைப்படுத்தபப்பட்டு செயற்பாட்டிலில்லாத கடனுதவித் திட்டங்களை மீளச்செயற்பாட்டுக்கு கொண்டு வருதல்

- பூநகரி பிரதேசத்தில் முக்கிய மீன்பிடி இறங்கு துறைகளாக காணப்படும் நாச்சிக்குடா, பள்ளிக்குடா, வலைப்பாடு, கிராஞ்சி போன்ற மீன்பிக்கிராமங்களில் துறைமுகங்களை ஆழப்படுத்தி மீன்களைக் களஞ்சியம் செய்து வைக்கக்கூடிய கட்டிட அமைப்புக்களை உருவாக்குதல். குளிரூட்டல் செயற்பாடுகளுக்கான வசதிகளை கரையோரங்களில் ஏற்படுத்தி செய்வதற்குரிய இயந்திரங்களை வழங்குதல்.

- நவீன மீன்பிடி முறைகள் தொடர்பான அறிவினை விஸ்தரித்தல். மீன்பிடிக்கிராமங்களிலுள்ள மாணவர்களின் கல்வி நடவடிக்கையினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். மீன்பிடி சார் காணப்படும் கற்கை நெறிகள், பாடங்கள் தொடர்பில் அறிவூட்டல் செய்யப்படல் வேண்டும்.

- கடற்தொழில் சார் துறைகளில் காலியாக உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் அது சார்ந்த உத்தியோகத்தர்களை. அதிகரித்தல். பிரதேச வாரியாக கடற்றொழில் பரிசோதகர்களுக்கான அலுவலகங்களை நிறுவுதல் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**உசாத்துணைகள்**

கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த புள்ளிவிபரவியல் அறிக்கையிலிருந்து இலங்கையின் கடல் நன்னீர் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு மூலமாக உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள் கடலுணவுகளின் எண்ணிக்கை ரீதியான தரவுகள் பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளன. அத்தோடு படகுகளின் வகைகள் தற்போதுள்ள படகுகளின் எண்ணிக்கை படகு கட்டுமானங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள்.

They vary in terms of geographical location, caste,class, ethnicity, language, political affiliation and, moreimportantly, their pre-, during- and post-war/tsunamihistories. Hence, their ability to withstand challengesvaries. This has been highlighted in research conductedfrom geopolitical (Bavinck, 2015; Stirrat, 2018), postwar(Lokuge & Munas, 2011; Soosai Siluvaithasan Stokke, 2006)

A large volume ofresearch has focused on the contested Palk Bay territoryand its effect on the fishing communities in both nations(Ajit et al., 2016; Bavinck, 2015; Hettiarachchi, 2007;Scholtens et al., 2012; Stirrat, 2018). Kadirgamar &
Scholtens (2015)

Amarasinghe, O. & Bavinck, M. (2011) Building resilience:Fisheries cooperatives in Southern Sri Lanka, In Jentoft, S. &Eide, A. (eds.) Poverty Mosaics: Realities and Prospects in

Small-Scale Fisheries, Dordrecht: Springer Netherlands, pp:383-406.

# பொருளாதாரத்தில் நிதியியல் இடையங்களின் பங்களிப்பு




திரு.பா.கோபிதன்
பட்டதாரிப்பயிலுனர்
பிரதேச செயலகம், பூநகரி.

நிதியியல் இடைத்தரகர்களுடைய செயற்பாடானது ஐந்நூறு ஆண்டுகளையும் விடப் பழமை வாய்ந்ததென்பது வரலாற்றை ஆராய்கின்ற போது தெரிகின்றது. தகவல்கள் சமமின்மை காரணமாக சமூகத்தில் உருவாகக் கூடிய சமூக உபத்திரவங்கள் (Moral Hazard) மற்றும் பாதகமான முன்னுரிமை தெரிவுகள் (Adverse Selection) ஆகிய பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகின்ற போது நிதியியல் இடைத் தரகர்களுடைய பணி முக்கியமானதாகும். உண்மையிலேயே கடந்த ஐந்து நூற்றாண்டுகளுக்கு மேலாக நிதியியல் இடைத்தரகரர்கள் தமது கடமைப் பொறுப்புகளை உரிய முறையில் நிறைவேற்றி வந்துள்ளனர். அந்த வகையில் நிதியியல் இடையீடுகள் என்பது நிதியியல் நிறுவனங்களை வங்கி, சமூக நிறுவனங்கள் காப்புறுதி கம்பனிகள் மற்றும் முதலீட்டு வங்கிகள், ஓய்வூதிய நிதியங்கள் என்பவற்றை குறிப்பிடலாம். நிதியியல் இடையீடுகள் கடன்களை வழங்குபவர்களதும் பெறுபவர்களதும் பலவகையான நிதித் தேவைகளை பெறுவதற்கு உதவி செய்பவர்களாவர்.

உதாரணமாக தனிநபர் ஒருவர் 1000 பவுண்ஸ் கடன் பெற விரும்புகின்ற போது அவர் தனிநபரை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இவற்றை தவிர்த்து அத்தனிநபர் நம்பிக்கையை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் நிதியியல் இடையீட்டு நிறுவனங்களை இனம் கண்டு கொள்ளலாம். ஆகவே தனிநபரை விட நிதியியல் இடையீடுகள் வினைத்திறனானவை ஆகம் நிதியியல் இடையீடுகள் குறிப்பாக வங்கிகள், பொது மக்களிடம் இருந்து வைப்புக்களை திரட்டி அவற்றை நிதித் தேவை தொடர்பாக விண்ணப்பிப்பவர்களுக்கு முதல் நட்டமின்றி வழங்குகின்றது. இத்தகைய வங்கிகள் போலவே கடன் கூட்டுறவு நிறுவனங்கள். சேமிப்பு கடன் நிதியங்கள், காப்புறுதி கம்பனிகளும் செயற்பட்டு வருகின்றன.

**நிதியியல் இடைத்தரகு செயற்பாடு**



### நிதியியல் இடைத்தரகர்களின் பொறுப்புக்கள்

நிதியியல் இடைத்தரகர்கள் நிலவுகின்ற பணத்தை கொள்வனவு செய்யும் பொருட்டு இடைத்தரகு நிதியியல் கருவிகளை விற்பனை செய்தல்

### பற்றாக்குறை கூறுகளின் பொறுப்புக்கள்

நிதியியல் இடைத்தரகர்கள் நிலவுகின்ற பணத்தை விற்பனை செய்யும் பொருட்டு நிதியியல் கருவிகளை கொள்வனவு செய்தல்.

### நிதியியல் கொடுக்கல் வாங்கல் வகைகள்.

நிதியியல் சந்தையானது தினமும் மாற்றமடையும் இயல்பைக் கொண்டதாகவுள்ளது. இது எவ்வகையிலும் நிலையானதாயிராது. மக்கள் கோரிக்கைகளின் மாற்றங்கள், தொழில் நுட்பத்தில் இடம் பெறும் மாற்றம், பொருளாதாரத்தில் இடம் பெறும் அசைவுகள் மற்றும் மாற்றங்கள், சட்டம் ஒழுங்குவிதிகளில் செய்யப்படுகின்ற திருத்தங்கள் போன்ற காரணிகளின் பிரதிபலிப்பாக நிதியியல் சந்தைகளுக்கிடையேயுள்ள போட்டிகளின் மூலம் மிகவும் தரமானதும் விரிவானதும் வசதிகளை கொண்ட புதிய நிதியியல் சேவைகளை வழங்கும் பொருட்டு நிதி நிறுவனங்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றன. ஆதலால் தனது நிதியியல் கொடுக்கல் வாங்கல்களைப் பேணி வருவதில் நிதியியல் நிறுவனங்கள் நீண்ட காலங்களாக எளிய நிலையிலிருந்து மிகவும் சிக்கலான நிலை வரை வளர்ச்சி அடைந்துள்ளன.

### நிதியியல் முறையின் படிப்படியான வளர்ச்சியில் முக்கியமான இடத்தைப் பெறுகின்ற இருதுறைகள் இனங்காணப்பட்டுள்ளன.

1. பாரிய மூலதன முதலீடுகளுடன் கூடிய தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் நிலையங்கள் வளர்ச்சியடைந்தமை.
2. மத்திய வகுப்பு சேர்ந்த சேமிப்பாளர்கள் பெருந்தொகையினர் உருவாகியமை.

நிதியியல் கொடுக்கல் வாங்கல்களின் எளிமை எவ்வாறு இருந்தாலும் அனைத்து நிதியியல் நிறுவனங்களும் ஒரு அடிப்படைப்பணியின் மீது அமையப் பெற்றுள்ளன, சேமிப்பு மற்றும் கடன் வழங்குகின்ற மேலதிக வரவு செலவுகளுடன் கூடிய அலகுகளில் இருந்து கடன் பெறுவதற்கும் முதலீடு செய்வதற்கும் எதிர்பார்க்கின்ற பற்றாக்குறை வரவு செலவுகளுடன் கூடிய அலகுகள் வரை நிதியங்களை இடம் பெயரச் செய்தல், இவர்களுடைய அடிப்படைப் பணியாகும். இச் செயற்பாட்டின் போது பணம், நிதியியல் சொத்துக்களின் சார்பாக பரிமாற்றப்படுகிறது.


சேமிப்பாளர்களிடமிருந்து கடன் பெறுபவர்கள் வரை நிதியங்களை மாற்றுகின்ற விதிமுறைகள். அதாவது நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் பிரதானமாக மூன்று வகைப்படுகின்றன.

1. நேரடி நிதியிடல்

2. மறைமுகமான நிதியிடல்
3. அரை நேரடி நிதியிடல்


**நேரடி நிதியிடல்**

நேரடி நிதியிடல் (Direct finance) கடன் வழங்குபவரும் (Lender) கடன் பெறுபவரும் (Borrawer) ஒருவரை ஒருவர் சந்தித்து (பௌதீக ரீதியில் அல்லாது இருக்கலாம்) நிதியியல் சொத்துக்கள் சார்பாக நிதியங்களை பரிமாறிக் கொள்வார்கள். நேரடி நிதியிடலானது சேமிப்பு அலகுக்கும் (Saving Units) பற்றாக்குறை அலகுக்கும் (Deficit Units) இடையில் நடைபெறுவதோடு சாதாரண தரகர்கள், முகவர்கள் மற்றும் வணிகர்கள் இதற்கான வசதிகளை வழங்குகின்றன.




**மறைமுகமான நிதியிடல்**

நேரடி நிதியிடல் முறையில் (மற்றும் அரை நேரடி நிதியிடல் முறையில்) உள்ள பலவீனங்கள் மற்றும் வரையறைகள் காரணமாக மறைமுகமான நிதியிடல் (Indirect Finance) வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு சேமிப்பு அலகு தனது மேலதிக நிதியங்களை, நிதியியல் அலகுகளினால் வெளியிடப்படுகின்ற நிதியியல் கருவிகளுடன் பரிமாற்றம் செய்து கொள்வதோடு இக் கருவிகளை சேமிப்பு அலகுகளின் திரவத்தன்மை, தேவைகள், மற்றும் இடர்நேர்வுக்கு பொருந்துகின்ற விதத்தில் தயாரித்து கொள்ளவும் முடியாதுள்ளது. இவ்வாறு நிதியியல் நிறுவனங்களால் ஒன்று திரட்டப்படுகின்ற நிதியங்கள் பற்றாக்குறை அலகுகளுக்கு மாற்றப்படுகின்ற இதன்படி மறைமுகமான நிதியியல் கொடுக்கல் வாங்கல்கள் நிதியியல் இடைத்தரகர்களின் (Financial Intermediary) உதவியுடனே வளர்ச்சியடைந்துள்ளன.




**அரை நேரடி நிதியிடல்**

மிகை மற்றும் பற்றாக்குறை அலகுகள் ஒன்றாக சந்திக்கின்ற செயற்பாட்டின் போது தகவல் செலவினத்தைக் குறைக்கும் பொருட்டு அத்தியாவசியமான கடமைப் பொறுப்பென்று ஒருசில தனி அலகுகளாலும் தொழில்துறை நிறுவனங்களாலும், பிணையங்கள் தரகர்களாகவும் முகவர்களாகவும் (Security Brokers, Dealers) நிகழ்த்தப்படுகின்றன. இச் செயற்பாட்டை அரை நேரடி நிதியிடல் (Semiclire Finance) என குறிப்பிடலாம்.

## நிதியியல் இடைத்தரகும் அதன் இயல்பும்

பொருளாதாரம் என்பது தனிநபர், குடும்பம், தொழில்துறைகள், அரச அலகுகள் என்றவாறு பல்வேறு அலகுகளைக் கொண்டதாயுள்ளது. இந்தப்பொருளாதார அலகுகளில் ஒரு சிலவற்றிற்கு தாம் செலவழிக்கின்ற தொகையை விடக் கூடுதலான வருமானம் கிடைக்கின்றது. ஒரு சில அலகுகள் தமக்கு கிடைக்கின்ற அளவை விட கூடுதலாக செலவழிக்கின்றன. இதன்படி பொருளாதாரத்தினுள் பிரதானமான இரண்டு வகை அலகுகளை அடையாளம் காணலாம்.

1. மிகைப் பொருளாதார அலகுகள்
2. பற்றாக்குறை பொருளாதார அலகுகள்

தமது வருமானத்தை விட செலவு குறைவாயுள்ள அலகுகள் (தற்போதைய வருமானம்) செலவு) மிகைப் பிரிவினுள் உள்ளடங்கியுள்ளதோடு மிகைப் பாதுகாப்பு தன்மை, திரவத்தன்மை, நன்மைகள் போன்ற நோக்கங்களை உச்சமட்டம் வரை அடையும் பொருட்டு செயற்படுதல் மிகைப் பிரிவின் பணியாகவுள்ளது.

வருமானத்தை விட செலவு அதிகமாகவுள்ள அலகுகளை (தற்போதைய வருமானம் செலவு) பற்றாக்குறைப்பிரிவு உள்ளடங்கியுள்ளதோடு இப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல் என்ற அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு செயலாற்றுதல் பற்றாக்குறைப் பிரிவின் பணியாகும் மிகைப்பிரிவு மற்றும் பற்றாக்குறைப் பிரிவு ஆகியன தமது நோக்கங்களை நிறைவேற்றி கொள்கின்ற போது காலத்தைக் கவனத்தில் கொள்கின்றது.

மிகைப் பிரிவின் எல்லா நோக்கங்களும் குறுகிய காலத்தை கொண்டதாயிருக்கும். பற்றாக்குறைப் பிரிவின் எல்லா நோக்கங்களும் நீண்டகாலத்தைக் கொண்டதாயிருக்கும். இதன்படி மிகைப் பிரிவு மற்றும் பற்றாக்குறைப் பிரிவுகளுக்கிடையே கால அடிப்படையில் முரண்படுகின்ற நோக்கங்களை தீர்த்துக் கொள்கின்ற போது நிதியியல் இடைத்தரகர்களின் சேவை அல்லது மறைமுக நிதியிடல் முக்கியத்துவம் வாய்ந்ததாயுள்ளது நிதியியல் இடைத்தரகர்களின் சேவையானது பொருளாதாரத்தில் சேமிப்புகள் உருவாவதனாலேயே தேவைப்படுகிறது. மக்கள் நமது வருமானத்தில் செலவழிக்காதுள்ள தொகை (yd-c) சேமிப்பு (s) ஆகும்.

சேமிப்பு = செலவிடத்தக்க வருமானம் - நுகர்வு

Savings = Disposable Income Cydm) - Consumption

இவர்கள் இதனை எதிர்கால பயனுக்காக ஏதேனுமொரு இடத்தில் அல்லது நிறுவனத்தில் வைப்பிலிடுவார்கள். இந்நிறுவனத்தை நிதியியல் இடைத்தரகு நிலையம் எனகுறிப்பிடலாம்.

## நிதியியல் இடைத்தரகராவர் இரு பிரதான பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

1. மிகைப் பணத்தை சேமிக்கின்ற நபர்களுடைய சேமிப்புகளை பெறுதல் வைப்புக்களை ஒன்று திரட்டுதல்
2. கடனுக்காக விண்ணப்பிக்கின்றவர்களுக்கு கடன் நிதியங்களை அனுப்பீடு செய்தல்

இவ் இரு பணிகளையும் தொடர்புபடுத்துதல், நிதியியல் இடைத்தரகு செயற்பாட்டின் பொருளாகும். இதன்படி தமது வருமானத்தை விட குறைவாக செலவழிக்கின்ற மிகைப் பிளவிலிருந்து தமது வருமானத்தை விட கூடுதலாக செலவழிக்கின்ற / செலவழிப்பதற்கு எதிர்பார்க்கின்ற பற்றாக்குறைப் பிரிவு வரை நிதியங்களை அனுப்பீடு செய்தல் என்ற அத்தியாவசியமான பொருளாதார செயற்பாட்டின் பொருட்டு நிதியியல் இடைத்தரகர்கள் தலையிடுகின்றனர்.

இங்கு கடன் கொடுப்போர் மற்றும் கடன் பெறுபவர்களுக்கிடையே நேரடி தொடர்புகளுக்கு பதிலாக மறைமுக தொடர்பு ஒன்று ஏற்படும் போது இரு விதமான நிதியியல் அறவீடுகள் உருவாகலாம் நிதியங்களை கடனுக்கு கொடுப்பவருக்கு நிதியியல் இடைதரகிலிருந்து நிதியியல் அறவீடு ஒன்று உள்ளது.

2 கடன் பெறுபவர்களிடமிருந்து நிதியியல் இடைத்தரகர்க்கு நிதியியல் அறவீடு ஒன்று உள்ளது.

இவ்வாறு மிகைப்பிரிவும் நிதியியல் இடைதரகரும் வட்டி என்ற எண்ணக்கருவை அடிப்படையாக கொண்டே நலன்களை பெறுகின்றனர்.


**நிதியியல் இடைத்தரகரின் தேவையும் அதற்கு ஏதுவான காரணிகளும்**

நிதியியல் சந்தையின் ஊடாக முழுமையான பயனைப் பெறும் பொருட்டு நிதியியல் இடைத்தரகரின் பணி மிக முக்கியமானதாயுள்ளது. பிரதானமாக நிதியியல் இடைத்தரகின் தலையீட்டின் ஊடாக

1. தகவல் செலவினம் (Information Cost)
2. கொ/வா செலவினம் (Transaction Cost)

ஆகியவற்றை குறைத்துக் கொள்ள முடியுமாகின்றது. குறிப்பாக கடன் கொடுப்போர் தமது சாத்திய கடன் பெறுவோர் (Potential Borrowers) யாரென்பதையும் கடன் பெறுவோர் தமது சாத்திய கடன் கொடுப்போர் (Potential lenders) யாரென்பதையும் இனம் காணுதல் செலவினத்துடன் கூடிய செயற்பாடாகும். கடன் கொடுப்போர் சாத்திய கடன் பெறுவோரை சந்தித்த போதிலும் இக்கடன் பெறுவோர் தம்மிடமிருந்து பெறும் கடன் நிதியத்தை மீள செலுத்தும் ஆற்றலுடையவரா போன்ற பிரச்சனைகளை தீர்த்து கொள்ள காலமும் பணமும் செலவிட வேண்டி ஏற்படுகிறது எனவே நிதியங்களை அனுப்பீடு செய்கின்றபோது நிதியியல் இடைத்தரகரின் பாத்திரம் அவசியமாகின்றது.

உதாரணமாக கைத்தொழில் புரட்சிக் காலத்தில் இங்கிலாந்தில் ஏற்பட்ட நிலைமையை குறிப்பிடலாம்.




**நிதியியல் இடைத்தரகும் வருவாய்களும்**

### கடன் கொடுப்போர்

ஒரு கடன் கொடுப்போருக்கு தனது சேமிப்புகளின் மூலம் பெறப்படும் வருவாய் அல்லது நிதியியல் சொத்துக்களை தெரிவு செய்வதில் எவ்வாறான காரணிகள் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற பிரச்சனை எழலாம்.

1. 1. பெரும்பாலான கடன் கொடுப்போர் கடன் வழங்கும் பணியின் போது இடர் நேர்வை குறைத்துக் கொள்ள முயற்சிக்கின்றன. இவ்வாறான இடர் நேர்வுகளை பல விதத்திலும் காணமுடியுமாயுள்ளது.
   2. செலுத்த தவறுதலின் இடர் நேர்வு
   3. கடன் கொடுப்போருக்குரிய சொத்துக்களின் சந்தைப் பெறுமதி வீழ்ச்சியடைவதிலுள்ள இடர் நேர்வு
   4. கடனை மீள செலுத்த முன்னர் நிதியங்களை மீளப் பெறுவதிலுள்ள இடர் நேர்வு
   5. போதியளவு பல்வகைப்படுத்தப்படாத சொத்துக்கள் தொடர்பான இடர் நேர்வு
2. சாத்திய கடன் கொடுப்போர் கொடுக்கல் வாங்கலின் மேலும் முக்கயமான இரண்டு தோற்றங்கள் தொடர்பாக ஆராய்கின்றனர்
   1. கொ/வா ஏற்புடைய வசதி (Convienience)
   2. திரவதன்மை (liquidity)

### கடன் பெறுவோர்

பிரதானமாக கடன் பெறுவோருக்கு நிதியங்கள், ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் செலுத்துவதற்கான, கால வரையறைக்குட்பட்டதாக ஆகக் குறைந்த செலவினத்தைக் கொண்டதாக தேவைப்படுகிறது. இதை தவிர கடன் பெறுவோருக்கு நிதியியல் சந்தை தொடர்பான தகவல்கள் தேவைப்படுகின்றன. கடன் பெறுவோர் இரு இடர்நேர்வுகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.

1. ஏதெனுமொரு சந்தர்ப்பத்தில் நிதி தேவைப்படும் போது நிதி கிடைக்காதுவிடல் இதன் மூலம் சந்தையில் நிதியங்களின் முழுமையான பற்றாக்குறை ஒன்றோ பூரணமற்ற பொறிமுறையோ உருவாகலாம்.
2. கடன் பெறுபவருக்கு பொருத்தமற்ற சந்தர்ப்பத்தில் கடன் கொடுத்தோர் கடனை முடியுறுத்த எதிர்பார்க்கலாம் இதன் மூலம் கூடுதலான வட்டி வீதங்களின் கீழ் கடன் பெற மீண்டும் நிதியங்களை கடனாக பெற நேரிடலாம் நிதியங்களை மீள கடனாகப் பெறமுடியாத ஒரு சந்தர்ப்பத்தில் கடன் பெறுபவர்க்கு தமது சொத்துகளை வி/னை செய்ய வேண்டி நேரிடலாம்.

### நிதியியல் இடைத்தரகர்க்கு உதாரணமும் இடைத்தரகு வகைப்படுத்தலும்

எந்த ஒரு நாட்டினதும் நிதியியல் கட்டமைப்பின் மூலம் அந்நாட்டின் நிதியியல் உள்ளமைப்பு எடுத்துக் காட்டப்படுவதோடு இது இரு பிரதானமான அம்சங்களை உள்ளடக்கியதாயிருக்கும்.

1. நிதியியல் கருவிகள் (Financial Instruments)
2. நிதியியல் நிறுவனங்கள் (Financial Institufions)

நிதியியல் நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள் பிரதானமாக ஆறு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றனர்.

1. கடன் பணிகள் (Credit Services)
2. பிணையங்கள் பணிகள் (Securities Services)
3. கொடுக்கல் வாங்கல்களை ஏற்பாடு செய்தல் (Transection Process)
4. சொத்துக்கள் முகாமைத்துவபணி (Asset Management Services)
5. தகவல் அறிவிப்பு மற்றும் ஆலோசனைப் பணி (Information, advising and advisory Services)

**பொதுவாக நிதியியல் இடையீடுகளுக்கான உதாரணங்கள்**

**1. காப்புறுதி கம்பனிகள்**

ஒருவர் அதிகளவான முதலீடுகளை கொண்டிருக்கும் போது ஏற்படும் ஆபத்துக்கு எதிராக காப்புறுதி செய்தல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட தனிநபரை காண்பதிலும் பார்க்க ஒரு காப்புறுதிக் கம்பனியை நாடுவது மிகவும் சுலபமானதாகும் இதன் மூலம் காப்புறுதியை வழங்குவதோடு ஆபத்தான தவறுகளையும் விலக்கிக் கொள்ள முடியும்.

**2. நிதி ஆலோசகர்கள்**

நிதியியல் ஆலோசகர்கள் நிதியினை நேரடியாக வழங்கவோ நேரடியாக பெற்றுக் கொள்ளவோ மாட்டார்கள். அவர்கள் கடன் பொறுவோர், கடன் கொடுப்போர் சார்பாக சிறப்பான ஆலோசனைகளை வழங்குபவர்கள் குறிப்பாக நிதி சந்தை நுணுக்கங்கள் தொடர்பாகவும் சிறந்த முதலீடுகளை பெற்றுக் கொள்ள வைப்பதும் தொடர்பான ஆலோசனைகளை வழங்குகின்றது.

**3. வங்கிகள்**

**4. கடன் வழங்கும் கூட்டுறவு நிறுவனங்கள்**

**5. பரஸ்பர நிதியங்கள் / முதலீட்டு நம்பிக்கை நிதியங்கள்**

இவை பரஸ்பர முதலீட்டு திட்டங்களாகும். முதலீட்டு நிதியங்கள் என்பது ஒவ்வொரு முதலீட்டாளர்களின் சிறு சேமிப்புகளாகும். இத்தகைய சிறு முதலீட்டாளர்கள் தமது முதலீட்டு நிதியங்களில் இங்கு நன்மைகளைப் பெற்றுக் கொள்வதேடு பெரியளவிலான முதல் கொடுப்பனவுகளுக்கு சிறியளவான தரகுகளை பெற்றுக் கொள்கின்றனர்.

**நிதியியல் இடையீடுகளின் தொழிற்பாடுகள்**

நிதியியல் இடையீடுகளின் தொழிற்பாட்டில் மறைமுக நிதியிடலே முதன்மை பெறுகிறது ஏனெனில் இவை தகவல்களை ஆதாரமாகக் கொண்டு இயங்குகின்றன. அந்த வகையில் நியாயமான தகவல்களை அடிப்படையாக கொண்டு தொழிற்பாடுகளை ஆற்றுகின்றனர்.

**6. சிறிய சேமிப்பாளர்களிடம் சேமிப்பை திரட்டுதல்**

வைப்பாளர்கள் குறுகிய அளவிலான தொகையை வைப்பிலிடும் போது கடன் பெறுபவர்கள் அதிகளவான கடன் தொகையை விண்ணப்பம் கோருவார்கள். நிதியியல் இடையீடுகளின்றி

100,000 டொலரை கடனாக கோரின் 1000 டொலர் பெற்று கொள்ள கூடிய வகையில் 100 கடன் கொடுப்போரை தெரிவு செய்தல் வேண்டும். இது மிகவும் சிக்கலான ஓர் நிலையாகும். நிதியியல் இடையீடுகள் சிறியளவு வைப்புத் தொகைகளை பலரிடம் இருந்து பெற்று அதிகளவு கடன்களைக் கோருபவர்களுக்கு வழங்குகின்றது. எனவே நிதியியல் இடையீடுகள் பெருமளவு சேமிப்புகளை திரட்ட முடியாவிட்டாலும் குறைந்தளவு சேமிப்புகளை ஏற்கத்தயாராக இருப்பதனால் நிறுவனத்தில் ஸ்திரத்தன்மை நன் மதிப்பை பேணுகிறது.

### 7. சொத்துக்கான பாதுகாப்பு, கணக்கியல், பணம் செலுத்துதல் பொறிமுறை போன்ற சேவைகளை வழங்குதல்

பணத்தினை பாதுகாத்தல், தங்க நகைகளை பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்தல், வைப்புக்களை ஏற்றல், கடன்களை வழங்குவதற்கான பதிவேடுகள், இலத்திரனியல் அட்டை, வசதிகள், காசோலை கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.

உதாரணம் : வங்கி

இத்தகைய சேவைகளை ஆற்றுகின்ற போது அவை தரப்படுத்தப்பட்டவை ஆகவும் தொழில் நுட்பம் பிரயோகிக்கப்படுவதனால் நிர்வாக செலவுகளையும் குறைத்து கொள்ளக் கூடியனவாகவும் காணப்படுகின்றன.

### 8. திரவ தன்மை மேலும்

பணம் / சொத்து எவ்வாறு காலதாமதமின்றியும் முதல் நட்டம் இன்றியும் சொத்தாக மாற்றப்படுகின்றதோ அத்தன்மை திரவதன்மை எனப்படும். நிதியியல் இடையீடுகள் பலவகையான செத்துக்களை தன்னியக்க இயந்திரங்களின் ஊடாகவும், காசோலை வசதி, கடனட்டை மூலமாகவும் சுலபமாக மாற்றுகின்றன.நிதியியல் இடையீடுகள் குறுங்கால வெளிப்பாய்ச்சல் நிலைமைகளிற்கும் நீண்டகால குறுகிய வட்டி வீதத்தில் இலாபம் அடைதல் மற்றும் பொருளாதார செயற்பாடுகளை குறைந்த செலவில் ஆற்றுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

### 9. ஆபத்தை பரவலாக்குதல்

கொடுக்கப்பட்ட மீளளிப்ப காலப்பகுதியில் ஆபத்தை குறைத்துக் கொள்ள நிதியியல் இடையீடுகள் இன்றியமையாதவை. ஒரு முதலீட்டாளன் தனியாக இருப்பு ஒன்றை செலவு செய்வாராயின் செலவு அதிகமாக காணப்படும். ஆனால் முதலீட்டு நிதியங்களூடாக செலவு செய்யும் போது செலவு குறைவாக காணப்படும். மேலும் காப்புறுதி கம்பனிகள் புவியியல் ரீதியாக பரவலடைந்து இருப்பதால் மக்கள் பெருமளவில் முதலிட முன்வரமாட்டார்கள். ஆனால் வங்கிகள் பரந்திருப்பதனால் சிறிய சேமிப்பை வைப்பாக ஏற்பதனாலும் ஒருவரின் கடன் செலுத்தாமை பெருமளவில் ஏனையவர்களை பாதிக்க மாட்டாது. இங்கு ஆபத்து பரவலாக்கப்படுகின்றது.

### 10.தகவல்களை சேகரித்தலும் நிரற்படுத்தலும்

நிதியியல் இடையீடுகள் தகவல்களை சேகரிப்பதிலும் நிரற்படுத்தவதிலும் முதன்மை பெற்றவர்களாவர் முதலீடுகளிற்கு ஏற்படும் ஆபத்துக்களை கணிப்பிடும் தன்மை உடையவர்கள்

தனிநபர்கள் இத்தகைய ஆபத்தை எளிதில் அறிய முடியாதவர்களாகவே காணப்படுவர். இத்தகைய தகவல் சேகரித்தல். நிரப்படுத்தல் தொழிற்பாடு தகவல்களின் சமமின்மையால் தோற்றம் பெற்ற ஒன்றாகும்.

## நிதியியல் இடையீடுகளும் தகவல் சமமின்மையும்

ஆய்வாளர்கள் நிதி சந்தை என்பது அனைத்து சந்தைகளுடனும் ஒப்பிடும் போது தரம் குறைந்தது என குறிப்பிடுகின்றனர். தகுதியான கடன் வழங்குனர்கள் மற்றும் முதலீட்டாளர்களை விட கடன் பெறுபவர்களும் இருப்பு விநியோகிப்பவர்களதும் தமது நலனையே பெருமளவு அதிகரிக்க விரும்புகின்றனர். இதனாலேயே தகவல் சமமின்மைப் பிரச்சனை ஏற்படுகின்றது. ஒருசாரார் அதிகளவு தகவல்களையும் இன்னொரு சாரார் குறைந்த தகவல்களையும் கொண்டிருக்கும் போது நிதி சந்தை வினைத்திறனற்று இயங்க வழியமைக்கிறது.

## சமமற்றதகவல்

தகவல் ஒருசாராரிடம் குறைவாக இருப்பதும் ஒருசாராரிடம் ஒரு அளவு அதிகாமாக இருப்பதும் கடன் வழங்க முன்னரும் பின்னரும் பிரச்சனைகளை ஏற்படுத்தும். நிதி கருவி ஒன்றை வாங்கவோ / விற்கவோ முன் பாதகமான தெரிவு பிரச்சனையை ஏற்படுத்தும். இங்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்துபவராக கடன் பெறுபவர் இருப்பவராயின் கடன் கொடுத்தோர் ஆபத்தை எதிர் கொள்வான். இத்தகவல் சமமின்மை சமூக உபத்திரவ நிலைக்கு இட்டுச் செல்லும்.

## தகவல் செல்லினத்தை குறைப்பதில் நிதியியல் இடையீடுகளின் பங்கு

1. Screening - கடன் வழங்குவதன் முன்பாக வங்கி/ ஒரு நிறுவனம் தனிநபர் பற்றிய பூரணமான தகவலையும் நிதிநிலைகளையும் அறிந்து வைத்திருத்தல், இங்கு தொழில் நுட்பத்தின் பங்கு முக்கியம் வகிக்கின்றது.

2. Monitoring :- கடன் பெறுபவர் தொடர்பாக அவர் மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பாக அவதானித்தல்.

3. Creating long term :- Customer relation ship :- புதிய வாடிக்கையாளர்களை உள்வாங்குவதன் மூலம் நீண்ட காலத்தில் கடனாக்கல் செயற்பாடுகள் மற்றும் மீளவும் நிலைத்து நிற்கும் தன்மையை உறுதிப்படுத்துதல்

4. Collateral :- கடன் பெற்றவர் தவறு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவர்களது சொத்துக்களினை பிணையாக வைப்பதன் மூலம் நிதியியல் இடையீடுகள் கடன் சுமையை குறைக்க இயலும்

5. Credit Rationing

6. Disclosure

## நிதியியல் இடையீடுகளின் நன்மைகள்

1. தேடுதல் செலவீனம் குறைவாக காணப்படுகின்றது. அதாவது கடன் பெறத் தகுதியுடைய ஒருவரை / கடன் வழங்குனரை தேடிச் செல்ல வேண்டிய கட்டுப்பாடில்லை நிதியியல் இடையீடுகள் தாமாகவே இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.

2. ஆபத்து பரவலாக்கம் : தனிநபரை அறியாது வழங்குகின்ற கடனும் பெற்றுக் கொள்கின்ற பணமும் கடன் பெறுபவர், கடன் கொடுப்பவர் சார்பாக ஆபத்தை ஏற்படுத்துகிறது. வங்கி, காப்புறுதி கம்பனிகளில் நிதியினை வைப்பிலிடுவதும் கடன்களைப் பெற்றுக் கொள்வதும் நம்பகதன்மையுடையவை ஆகும்.

3. பொருளாதாரத்தின் அளவுகோல் :- வைப்புகளை திரட்டுவதில் கடன்களை வழங்குவதிலும் நிதியியல் இடையீடுகள் வினைத்திறனாக விருத்தி அடைந்துள்ளன. பொருளாதாரத்தின் அளவுகோலாக குறைந்த சராசரி செலவு காணப்படுகிறது. ஒரு தனிநபரின் சொந்த சேமிப்பு முதலீடுகளை கணிப்பீடு கொள்வதற்கும் செலவிடப்படும் நேரத்தை குறைத்துக் கொள்ளவும் நிதியியல் இடையீடுகள் பயன்படுத்தப்படுகிறது.

4. கோரப்படும் தொகையை பெற்றுக் கொள்ளல் :- ஒருவர் அதிகளவான கடன் தொகையை பெறவிரும்புகின்ற போது அத்தொகையை வழங்கும் நபரை இனம் காண்பது செலவு கூடிய ஒன்றாகும். ஆனால் நிதியியல் இடையீடுகள் தமது வைப்பு தொகைகளை வழங்கி கடன் போருபவர்களின் நிதி தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியும்

## நிதியியல் இடையீடுகள் எதிர்கொள்ளும் உள்ளார்ந்த பிரச்சனைகள்.

1. ஆபத்தை பரவலாக்கம் செய்வார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை. குறைந்த முகாமைத்துவம் காரணமாக வைப்பாளர்களது பணத்தை தகுந்த முதலீட்டு திட்டங்களில் முதலிடுவார்கள் என கூறமுடியாது.

2. பெற்றுக் கொள்ளப்படும் தகவல் குறைவு :- நிதி இடையீடுகள் ஆபத்தை பரவலாக்கம் அடையச் செய்வார்கள் என முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் ஆபத்துகளை எதிர்கொள்ள வேண்டிய திட்டங்களும் காணப்படுகின்றன. உதாரணமாக - வங்கிகள் US இடமிருந்து ஈட்டுகடன் வசதிகளை பெற்று அவை பெறுமதி இழந்து போகும் சந்தர்ப்பத்தில் கடன் சுமையில் தள்ளப்படல்

3. நிதியியல் இடையீடுகள் நம்பிக்கை தன்மையிலும் திரவத்தன்மையிலுமே பெருமளவு தங்கியுள்ளன. குறிப்பாக வங்கிகள் திரவதன்மை நம்பிக்கை தன்மையை இழக்கும் சந்தர்ப்பங்களில் வைப்பாளன் பணத்தை வைப்பிலிட முன்வர மாட்டார்கள். வங்கி கடனாக்கத்திலும் ஈடுபட முடியாத நிலை ஏற்படும் போது மத்திய வங்கி இறுதி கடன் ஈவோனாக செயற்படும்.

## References


1. Adrian,t., & shin, H.s. (2010) Financial intermediaries and Monetary economics In Hand book of monetary economiks, 3, 601-605, Elsevier, 2010
2. Bloch, H, tang, S.H.K (2003) the role of financial development in economic growth progress in development studies, 3 (3), 243-251
3. Beck, T. Colciago, A Pfajfar, D. (2014) the role of financial intermediaries in monetary policy transmission Journal of Economic Dynamics and Control, 43, 1-11
4. Central Bank Annual Report (2018) Central Bank of Sri Lanka http://www.cbsl.gov.lk


புலியும் பசுவும் ஒரு துறையில்

நீர் அருந்தினாலும் அருந்தும்.

ஆனால், முதலாளியும் தொழிலாளியும்

சரிசமத்துவமாக

தங்கள் தேசப் பொருள்களை

காந்தியாரின் சுயராஜ்ஜியத்தில்

அனுபவிப்பார்கள்ள ன்பது

பகற்கனவே

# யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி நோக்கி...

(நகைச்சுவைக்காக)



திருமதி.அ.விஜயராஜ்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பூநகரி பிரதேச செயலகம்.

அது ஒரு அழகிய காலம்...
வாழ்க்கைச் சோலையிலே...
வாலிபங்கள் முளைத்த கதை...
பல்கலை நண்பர்களின் பருவகாலம் மாறி
பட்டங்கள் பெற்று பல மாற்றம் பெற்ற கதை

இருப்பின் வலி கண்டு பல
இருதயங்கள் நொந்த கதை...
இழப்பும் துயரமும் துடி துடித்து போனகதை...
வாழும் போதே சாதல் எனும்...
வலி நீறு பூத்த கதை...
கவர்மேந்து உத்தியோகம் என்ற - எம்
கௌரவம் குறையாமல்...
துயரங்களை மறைத்து - இதயம்
துடி துடித்து போன கதை...

என் நண்பர்களில் சிலர்...
எட்டு வருடமாக இந்த எட்டாத
இடமாற்றத்தினை எட்டிவிடுவோம் என்ற
ஏக்கத்தில் தோற்றுப் போன கதை...
இங்கேயே மணம் முடித்து...
இங்கேயே பிரசவம் முடித்து...
தம் பிள்ளைகள் திருமணம் ஆனாலும்...
தம் இருப்பிடம் மாறாத கண்ணீர் கதை...

என் தோழி ஒருத்தி...
எட்டுமாத கர்ப்பிணியாய்...
என் அருகில் இருந்து பயணம் செய்யும் போது...
என் இருதயங்கள் இன்னும் வேகும்.

அவளுக்கு பஸ்ஸில் சுகப்பிரசவம்
ஆகிவிடக்கூடாதென்று...

தனங்கிளப்பு வெளி...
ஆயள் தண்டணைக் கைதிகளை
அப்படியே அள்ளி அடைந்து கொண்டு வரும் ஏற்ற இறக்கத்தில் ஏக்கங்கள் தொலையும் வாழ்வு
மேடு பள்ளம் என்ற பக்குவம் புரிந்து கொள்ளும்

என்னதான் பூநகரியின் அழகினை...
புரண்டு புரண்டு இரசித்தாலும்
யாழ்ப்பாண நண்பர்கள் தங்கள்
அலுவலக கதைகளையும், சமையல்
பிள்ளைகளின் பாடசாலை, மேலதிக வகுப்புக்கள்
இதர மேற் படிப்புக்கள்
சூடான சாப்பாடு, சூடான மாலை நேர தேநீர்
என அளவளாவும் போது...
பூநகரியே போதுமடி உன் அழகு...

என்னைக் கொன்று விடு, அன்றில் - உனை
என் கண் படாமல் கூண்டிலிடு என்று தோன்றும்

அறுகு வெளி
பாதையால் பேருந்து ஊர்ந்து போகும்.
காற்றாடிகள் எங்கள் கவலைகளை
வருடிச் செல்லும்...
சங்குப்பிட்டிப் பாலத்தில்...
இதயங்கள் துள்ளலிடும்...
உயர்ந்த பனைகள் - எம்
உறக்கங்களை கொள்ளையிடும் - அந்த
உப்புக் காற்று மட்டும் எம் வலிகளை
அறிந்திருக்கும்.

வெயில் காலம் என்றால்...
தட்ப வெப்பநிலை மாற்றங்கள் இங்கு
தடம் புரண்டு ஓடும்...
பஸ்ஸினுள் அவரவருக்கு கிடைக்கும்
வெப்ப நிலைகளுக்கு ஏற்ப - அவரவர்
முகங்களும் வெம்பி வெதும்பியிருக்கும்...
என் போன்ற கறுப்பின மக்களுக்கு
அது வேற லெவல் கவலையாயிருக்கும்.

கொண்ட சோகம் அது
கனவாக போய் விடாதா என
வெஞ்சினம் கொள்ளும் மனம் அது வெதும்பி வெதும்பி அழும்
அதன் அவல வரிகளால்
எம் இருதயங்களில் அடித்த ஆணியின் தேவையென்ன?

முதல் வருடம் முடிந்து விடும்...
இரண்டாம் வருடம் இடறிவிடும்
மூன்றாம் வருடம் முடிந்து விடும்
நான்காம் வருடம் நாடி அறுந்து போய்
ஐந்தாம் வருடம் ஐயகோ என...
கதறி அழுதோம் ஆறு ஏழு... எட்டு
என் தோழர்களே... உங்களுக்கான
வார்த்தைகள் என்னிடமில்லை...
எந்தக் கடவுளாலும் காப்பாற்றப்படாத...
அபலைகள் நாம்...
எந்த மருத்துவர்களாலும் தீர்க்க முடியாத...
நோய் கொண்டோம்
இடமாற்றம் எமக்கு இருதய மாற்று...
சிகிச்சை போலானது...
நாம் இதயங்களே இல்லாதவர்கள்
என எண்ணப்படுகின்ற போது...
இடமாற்றம் தான் எதற்கு...?

பொன் இல்லை என்பது மாறி...
பெண் வெளி மாவட்டம் ஆம் வேலை
என்பதனால் தடைப்பட்ட திருமணங்கள்
அம்மாவின் முகத்தினை மறந்து போன
பிள்ளைகள்...
பஸ் கட்டணத்திற்காக எடுக்கப்பட்ட இடர் கடன்கள்...
குடும்பத்திற்கு பரிச்சயமற்ற முகங்கள்...
நித்திரையில்லாத வெறி கொண்டு
நிம்மதியில்லாத மதி கொண்டு
ஐயகோ... நித்தமும் அலைகின்றோம்.
இது நிகழ்கால தொடர்கதை தான்

கொரோனா எனும் கொடிய நோய்...
எம்மை கொன்றழிக்க...

முகக்கவசங்கள் எம் மூச்சடைக்க...
பிரத்தியேக பஸ்ஸில் வந்து...
விரக்தியோடு ஆற்றிய சேவை - அது
விடையில்லாப் போராட்டம்...
எம் மனக்கவலை அறிந்த ரைவர்...
சில வேளைகளில் எம் உளவியல்...
தன்மைகளை உலுக்கிவிடும் பொருட்டு...
காதல், இயற்கை சார்ந்த பாடல்களை
ஒலிக்க விடும் போதே...
எமக்குள்ளும் ஒரு இதயம் துடிக்கின்றது.
என்பது நினைவிற்கு வரும்...

வரலாறு காணாத...
ஈனக் கொலைகளில்...
இடமாற்றமும் ஒன்றாகும்...
தரப்பட்ட கால அவகாசம் கடந்ததும்...
உளவியல் தாக்கமும்...
உடலியல் நோய்களும் - எம்
உணர்வோடு கலந்துவிடும்...
விருப்புக்கும் வெறுப்புக்கும்...
அப்பாற்பட்டதாய் வாழ்க்கை...
ஒரு பொறுப்பினைக் கடந்து -எம்
பொறுமையை சோதிக்கும்
எமக்கு மட்டுமான சபிக்கப்பட்ட அளவுகோலாய்...
சாபத்தின் திறவு கோலாய்...
விதி விதவிதமாய் விளையாடும்...

புது வகுப்புக்குள் நுழைந்த மாணவியாய் நானும்...
ஒரு விருப்புக்காய் ஏங்கி தவித்திடும் நீங்களும்...
மாறி மாறி தழுவிக் கொள்வோம்...
மாற்றங்களை எண்ணி எண்ணி...
தோழர்களே... ஊற்றாக கண்ணீர்...
அருவியாய் சொரிந்தாலும்...
தங்கள் ஆற்றாமை எண்ணி...
காற்றாக மாறுகின்றேன் தம் - காயங்கனை
பூவாக தேற்றுவதற்கு...
வாழ்வோம்...
காத்திருப்பு எனும் சாபக்கேட்டிற்கு
அப்பாற்பட்டு...

# காரைக்கால் அம்மையார் சரிதம்



திருமதி. ச.சுந்தரமூர்த்தி
ஓய்வுநிலை ஆசிரியர்
கறுக்காய்த்தீவு, பூநகரி.

பாட்டு : தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லிசை பாட ஆமாம்
வந்திடுவாய் கணபதியே ஆமாம் வந்திடுவாய் கணபதியே
அன்பான ஐயாமாரே அம்மா மாரே தம்பி யாரே தங்கை மாரே அக்கா மாரே அண்ணா மாரே
எல்லோருக்கும் வணக்கம் வணக்கம்

இன்று நாங்கள் காரைக்கால் அம்மையாரைப் பற்றி
வில்லிசையில் கூறவந்தோம் கூறவந்தோம்.
நீங்கள் இதனைக் கேட்டுப் பயனடைய வேண்டுகின்றோம்.

ஆசிரியர் : இந்தியாவிலே சோழவன நாட்டிலே வளம் செழிக்க வேண்டுகின்றோம். ஒரு சிறு நகரம் தான் காரைக்கால் என்பது அந்தச் சிறு பட்டினத்திலே அறநெறி தவறாத வணிகர் குடியிலே தனதத்தன் என்ற பெயருடைய பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார் அவர் இறை பக்தியில் மேலான விருப்பம் கொண்டவர் இல்லறத்தை நல்லறமாகப் போற்றி வாழ்ந்து வந்தார்கள் இறை பக்தியில் மிகவும் அன்பு கொண்ட அப்பெரியாருக்குக் குழந்தை செல்வம் கிடைக்கவில்லை. இதனால் தனதத்தன் இறைவனைக் குறித்து "ஐயனே எனக்கு ஒரு பெண் குழந்தை ஆவது தந்தருளல் வேண்டும் எனத் தினந்தோறும் இறைவனை வேண்டி வழிபட்டார். வேண்டுவார் வேண்டுவன ஈய்த்தருளும் எம்பிரான் கிருபையால் தனதத்தனின் மனைவி ஓர் அழகான பெண் குழந்தையைப் பெற்றாள். அவள் பேரெளில் கொண்டவளாக இருந்தாள் பெற்றோர் அகமிச மகிழ்ந்து அவளுக்கும் புனிதவதி என்று பெயர் சூட்டிக் கண்ணை இமைகாப்பது போல வளர்த்து வந்தார்கள்.

பாட்டு : அவள், செக்கச் சிவந்த நிறம் செம்பவள வாயழகி

"நீலவேல் விழியழகி நீண்ட கருங் கூந்தலழகி உயர் கல்வியழகு அறநெறி தவறா அழகு என வளர்ந்து வந்தாள் புனிதவதி"

ஒருவர் : ஆகா என்ன அழகு அப்படித்தானே

ஆசிரியர் : ஆமாம் மழலை மொழி பேசும் போதும் அடியார்களிடத்திலே பேரன்பு உடையவளாய் இருந்தாள், புனிதவதி அப்போது புனிதவதியாரின் பிஞ்சுமனதிலே அரவணிந்த அண்ணலாரின் திருத் தோற்றம் பதிந்து விட்டது. சதா இறைவழிபாட்டுடனே வாழ்ந்து வந்த அம்மையார் உரிய வயதிலே மங்கைப்பருவம் அடைந்தாள். பராயம் அடைந்த மங்கையை அவளுடைய தந்தை தனதத்தனார் இரண்டுவருடங்களின் பின்பு அயல்பட்டினமான நாகபட்டினத்தில் வாழும் பரமதத்தன் என்ற வணிக குலமகனுக்குத் திருமணம் செய்து வைக்க விரும்பினார்.

பாட்டு : குறித்த நன்நாளிலே நாளிலே நாளிலே
பரமதந்தனுக்கும் புனிதவதி அம்மையாருக்கும்
திருமணம் கோலாகலமாக நிறைவேறியது நிறைவேறியது

ஒருவர் ஆமாம் திருமணம் நிறைவேறியது.

ஆசிரியர் : திருமணம் நிறைவேறிய பிறகு தனதத்தனுக்குத் தனது மகளைப் பரமதத்தனுடன் நாக பட்டினத்துக்கு அனுப்பி வைக்க விரும்பவில்லை ஒருவர் அப்படிச் செய்யக் கூடாது

ஆசிரியர் : தனது ஒரே மகள் என்பதால் அவளைப் பிரிந்திருக்க அவரால் முடியவில்லை இதனால் மகளை நினைத்து மிக மிக வருந்தினார்.

பாட்டு : என் ஆசை மகளே அன்பான கண்மணியே
என் நேசமான பூங்கிளியே பைங்கிளியே
என்னைப் பிரிந்து போகாதீர்
என் மனம் தாங்காது என்று புலம்பினார்

ஒருவாறு மனம் ஆறியவராய்க் காரைக்காலிலேயே இருந்து ஒரு தனியான இல்லத்தில் தனிக்குடித்தனம் நடாத்துவதற்கு மகளையும், மருமகனையும் தங்கவைத்தனர் தனதத்தன் இல்லறச் செல்வர்கள் மனையறத்தை மாண்புற மேற் கொண்டார்கள். பரமதத்தன் தனது வாணிபத் தொழிலைப் பண்போடும், நேர்மையோடும் நடாத்தி வந்தான், புனிதவதியார் இறைவன் மீது கொண்டுள்ள பக்தி நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. எந்நேரமும் சிவ அடியார்களைப் போற்றி வழிபாடு செய்து வந்தாள். அதிகாலையில் துயில் எழுந்து காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு குளித்துக் கணவனே கண்கண்ட தெய்வம் எனப் போற்றி வழிபாடு செய்து விட்டு இறைவழிபாடுகளையும் முடித்து கொண்டு வீட்டைச் சுத்தம் செய்து உணவு சமைத்துத் தலைவனுக்குக் கொடுத்துத் தானும் உண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள்.

ஒருநாள் பரமதத்தன் கடையில் இருக்கும் போது அவருடைய அன்பான நண்பர் ஒருவர் பரமதத்தனுக்கு இரண்டு மாம்பழங்களைக் கொடுத்து விட்டுச் சென்றான். அவற்றைப் பரமதத்தன் வேறொருவரிடம் கொடுத்து இம்மாம்பழங்களை எனது வீட்டில் கொடுத்து விடு என்ற அனுப்பி வைத்தான். புனிதவதியார் மாம்பழங்களை வாங்கி வைத்துக்கொண்டார்.

மாம்பழம் நல்ல மாம்மழம் சிவந்த நல்ல மாம்பழம்
மணக்க மணக்க வாயூறும் தேன் சுவை மிக்க மாம்பழம்

புனிதவதியார் மதிய உணவுக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். அந்த நேரத்தில் வாயிற்புறம் இருந்து "சிவாயநம" என்ற குரல் கேட்டது. புனிதவதி அம்மையார் விரைந்து சென்ற பார்த்தார். சிவனடியார் ஒருவர் மெலிந்த தோற்றத்துடன் பசியால் வாடி நிற்பதைக் கண்டார் அன்போடு அடியவரை வரவேற்றாள். வாடிய முகத் தோற்றத்துடன் இருக்கும் அடியவரைக் கண்ட புனித மங்கை சற்றும் தாமதியாமல் அடியவரின் பசியைப் போக்க நினைத்தாள். அவருக்குக் கை கழுவ நீர் கொடுத்து, அமர்ந்து கொள்ளுவதற்கு ஆசனம் கொடுத்தாள். அடியார் அமர்ந்த பின்பு வாழையிலையில் தான் சமைத்த சோற்றை இட்டாள் மாம்பழங்களிலொன்றை எடுத்துக் கழுவிக் கறியமுதுக்குப் பதிலாக அதை அறிந்து இலையில் இட்டாள் பசியால் தள்ளாடி வந்த தொண்டர் மிகவும் மகிழ்ந்து உணவை உண்டு விட்டுப் புனிதவதி அம்மையாரை வாழ்த்தி விடை பெற்றுச் சென்றார்.

அடியவர் சென்ற சிறிது நேரத்தின் பின்னர் வழமையாகப் பரமதத்தன் மதிய உணவுக்காக வீட்டுக்கு வந்து சேர்ந்தான். கை, கால்கள் கழுவி விட்டு உணவுண்பதற்கு ஆயத்தமாக இருந்தான். கணவன் வரவு கண்டு முகம் மலர்ந்தாள் புனிதவதி.

பாட்டு : தான் சமைத்த சோற்றுடன் வேறு கறிகளையும்
இலையிலிட்டாள் மங்கை புனிதவதி
தன்னிடமுள்ள மாம்பழத்தைச் கழுவி வெட்டி
இலையிலிட்டாள் மாதரசி

முக மலர்வோடு சாப்பிட்டான் பரம தத்தன் அரிந்து வைத்த மாம்பழத்தையும் உண்டான், மாம்பழம் மிகவும் இனிமையாகவும் சுவையாகவும் இருந்தது. இதனால் மற்றொன்றையும் உண்ணக் கருதி" மற்றைய மாம்பழத்தையும் வெட்டி இலையில் இடுக என்றான். கணவனின் கட்டளையைக் கேட்ட புனிதவதி திடுக்குற்றாள் " பரமதத்தன் விரும்பினால்" அடுத்த மாம்பழத்தை நீர் உண்ணும் என்று கூறியிருக்கலாம் அதை விடுத்து மற்றைய மாம்பழத்தையும் தா என்று கேட்டது இறைவன் சோதனையே யாகும் இதை யார்? அறிய வல்லவர்கள்

ஒருவர் : புனிதவதியாருக்கு மாம்பழம் கொடுக்கப் பரமதத்தனுக்கு விரும்பமில்லை அது தானே

ஆசிரியர் : புனிதவதியாரோ மாம்பழம் எடுத்து வருவதற்காக வீட்டுக்குள் ஓடினாள். பாவம் அங்கே மாம்பழம் இருந்தால் தானே செய்வதறியாது மனம் கலங்கினாள். இறுதியில் இறைவனின் திருவடித்தாமரையை உள்ளமுருகி வேண்டினாள். இறைவா என்னைக் காப்பாற்று என்றாள். அப்போ எம் பெருமானின் திருவருளினாலே அதிமதுர மாங்கனி ஒன்று புனிதவதியாரின் கரங்களில் வந்திருந்தது. தனக்காகத் திருவருள் புரிந்த இறைவனை நினைத்து வழிபட்டாள் மாங்கனியைக் கொண்டு வந்து தன்

கணவனுடைய இலையில் பரிமாறினாள். அதனை உண்ட பரமதத்தன் "புனிதவதி முன்பு நீ தந்த மாங்கனியை விட இப்போது நீ தந்த மாம்பழம் மேலும் சுவை கூடியதாக இருக்கிறதே எப்படி? என்று கேட்டான். தேவர்களுக்கும், மூவர்களுக்கும் கிட்டாத சுவை கூடிய மாம்பழம் இது எப்படி? உனக்குக் கிடைத்தது என்று பரமதத்தன் மிக ஆவலோடு கேட்டான் இறைவனின் சோதனைக்கு அடியவர்கள் ஆளாவது போலக் கணவரின் சோதனைக்குப் புனிதவதி ஆளானாள்.

ஒருவர் : மனைவி என்றும் பராமல் இப்படிக் கேட்கலாமா?

ஆசிரியர் : இருந்தும் அவள் இறைவனின் கருணையினலே மாம்பழம் எனக்கு எப்படிக் கிடைத்தது என்ற உண்மையை ஒன்றும் ஒழியாமல் கூறினாள் பரமதத்தன் வியப்புற்றான். புனிதவதி கூறியவற்றை நம்பாத பரமதத்தன் அங்ஙனமாயின் இது போல் சுவையான இன்னுமொரு மாங்கனியைப் பெற்றுத்தருக என்றான். புனிதவதி மீண்டும் உள்ளே சென்றாள்.

பாட்டு : இன்னுமொரு மாங்கனியைத் தந்து விடப்பா இல்லை யெனில் நான் பொய்யாவேனே இனனும்.

ஒருவர் : ஓ நல்ல காரியம் செய்தார் பரமதத்தன்

ஆசிரியர் : ஆமாம் புனிதவதியார் இறைவனை நோக்கித் தன் குறைகளைக் கூறி அழுதாள். ஆண்டவன் திருவருளினாலே தனது அடியாரின் துயர் துடைக்கும் நோக்கமாகப் புனிதவதியாரின் கரத்திலே இன்னும் ஓர் மாங்கனி வந்திருந்தது. மகிழ்ந்த அம்மையார் இறைவனுக்கு நன்றி கூறிவிட்டு மாம்பழத்தைக் கொண்டு வந்து கணவரிடம் கொடுத்தாள். பரமதத்தன் அதை வியப்போடு வாங்கிப் பார்த்தான் மாம்பழம் மாயமாக மறைந்தது என்ன அதிசயம் பரமதத்தன் பயந்து நடுங்கினான்.

பாட்டு : மாய வித்தை செய்கிறானே அம்பலவாணன் மாய வித்தை செய்கிறானே மாயவித்தை செய்கின்றான் உபாயமொன்று எடுத்துக் கொண்டு நேயமான வெளிதனில் உபாயமாய்க் கூட்டத்தில் நின்று (மாய) கொண்டு கொண்டு போகின்றான் உண்டுபண்ணவைக்கிறான் அண்டர் தொழும் அம்பலத்தில் நடுவாய் இருக்கிறான். பண்டு நாலு வழி யெங்கும் பார் எங்கும் காண ஒண்ணா அண்டர் தொழும் அம்பலத்தில் நொண்டிக் கெட்டியாகச் சென்று (மாய)

தன்மனைவி புனிதவதி மனிதப்பிறவி அல்லள் தெய்வீகப் பிறவி கொண்டவள் என்பதை உணர்ந்தான். இவள் எனக்கு மனைவி அல்லாள் தொழுவதற்கு உரியவன் என் றெண்ணி புனிதா! நான் உன்னுடன் சேர்ந்து வாழ முடியாது. தனித்து வாழ்வதே முறையாகும் என்றான். கணவரின் பேச்சைக் கேட்ட புனிதமங்கை செய்வதறியாமல் வருந்தினாள். கூட நின்றவர்களும் திகைத்து நின்றார்கள். கணவரின் முடிவு அம்மையாருக்கு மிகுந்த கவலையைத் தந்தது. திருமகளைப்

போலக் குன்றாத அழகும் இளமையும் கொண்ட அப்புனித மங்கை தெய்வ சிந்தனையில் மூழ்கியிருந்தாள்.

அக்காலத்தில் வணிகர்கள் கடல் கடந்து வெளியூர் சென்று வாணிபம் செய்வதும் பொருளீட்டுவதும் வழக்கம். பரமதத்தன் தானும் வெளி நாடு சென்று பொருளீட்டுவதாகக் கூறினான். உறவினர்களும் இதற்கு முழு ஆதரவும் தந்தார்கள். ஒருநாள் பரமதத்தன் வணிகத்துக்குரிய பொருள்களோடு மனைவி, மாமன், மாமி ஆகியோரிடம் விடை பெற்றுக் கொண்டு கப்பலேறினான்.

ஒருவர்: பரமதத்தன் அதிக பொருள்களோடு காரைக்காலுக்கு வந்து சேர்ந்து விடுவார்கள் சரிதானே

ஆசிரியர் : போகுது பார் கப்பல் போகுது பார்
மேற்கு வங்காளம் விரைவில் போகுது பார்
கடலலையில் கப்பல் அசைந்தசைந்து
போகுது பார் கப்பல் போகுது பார்
சுலுத்தானும் மரக்காரும் சுக்கான் பிடிக்க
முகம்மதும் ராசாவும் ஆங்சான் இழுக்க
போகுது பார் கப்பல் போகுது பார்

கப்பல் சென்று நங்கூரம் போட்டது. தரையிறங்கினான் பரமதத்தன். இரண்டு மூன்று கிழமைகளில் ஏரானமான செல்வத்தைச் சேகரித்தான். அங்கு அவன் இறங்கியதும் செல்வத்தைச் சேகரித்துக் கொண்டு அவற்றை எடுத்துக் கொண்டு பாண்டி நாட்டுக்குப் போனான். அங்கு தான் வைத்திருந்த பொருட்களை விற்று மேலும் பொருட்களைப் பெருக்கினான். செல்வந்தனாக வந்தான். பொருளும், அவனுடைய அழகும் கூடியிருந்தமையால் பாண்டி நாட்டிலுள்ள வணிகனொருவன் தனது மகளைப் பரமதத்தனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான். பரமதத்தன் தனது இரண்டாவது மனைவியுடன் சுகமாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ்ந்து வந்தான். அவர்களுக்கு ஓர் அழகான பெண் குழந்தை பிறந்தது. அப்பிள்ளைக்கு முதல் மனைவியின் பெயரை, முதல் மனைவியின் ஞாபகத்தினாலும் விசுவாசத்தினாலும் “புனிதவதி” என்ற பெயர் சூட்டிப் பெற்றோர் மகிழ்ந்தனர்.

இவ்வாறாகப் பரமதத்தனின் இல்லற வழி அமைய, அவனுடைய முதல் மனைவியின் வாழ்க்கையோ அறவழி நின்றது இறைவனையும் அடியார்களையும் வழிபட்டுக் கொண்டு வாழ்ந்து வந்தாள். புனிதவதி சிலகாலம் செல்லத் தனது கணவர் பாண்டி நாட்டில் இருக்கும் செய்தியைப் புனிதவதியார் அறிந்தாள். சுற்றத்தவர்களும் புனிதவதியைப் பரமதத்தனுடன் சேர்த்து வைக்க விரும்பினர். ஒரு நாள் புனிதவதியாரை அழகிய பல்லாக்கில் ஏற்றிக் கொண்டு பாண்டி நாட்டுக்குச் சென்றார்கள்.

ஒருவர் : அங்கே பல சங்கடங்கள் வரப் போகுது, யார் வெல்லுவார்களே தெரியாது.

ஆசிரியர் : "காடு மலைகள் கடந்து வந்துபல
மேடு பள்ளங்களைத் தாண்டி வந்து
ஆறு குளங்களை கடந்து வந்து பல
ஊர்களைத் தாண்டியே வந்தனரே"

காடுகள், மேடுகள் ஆறுகள் தாண்டிப் பல ஊர்கள் கடந்து பாண்டி நாட்டை அடைந்தார்கள். அங்கு பரமதத்தன் இருக்கும் வீட்டைச் சேர்ந்தார்கள் சற்றும் எதிர் பாராமல் தனத முதல் மனைவி இங்கு வந்த செய்தியைப் பரமதத்தன் அறிந்து அஞ்சினான் ஒருவாறு மனதைத் திடப்படுத்திக் கொண்டு இறைவனைக் குறித்து.

பாட்டு : "ஏதுபரா முகம் பல்லவி ஏழை என்மீதிலே
ஏகனே யோகனே மாகனே தியாகனே - (ஏது)
முந்தி நீ பலருக்கும் பல்லவி காட்டினாய் உன்னையே
முத்தி தரும் வழி கூறினாய் சிலருக்கு
பந்தியில் ஆகுமோ ஓர் வஞ்சனை
பட்சமாய் எனக்கருள் பரசுகந்தனையே" எனப் பாடித் துதித்தார் இறைவனடியில்

தனது இரண்டாவது மனைவியையும் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு புனிதவதியாரை எதிர் கொண்டு வரவேற்கப் போனான் பரமதத்தன். மனைவி புனிதவதியாரைக் கண்டதும் பரமதத்தன் தானும் மனைவியும் குழந்தையும் நிலத்தில் வீழ்ந்து வணங்கினார்கள். பரமதத்தன் அம்மையே உனது திருவருளினாலே அடியேன் சுகமாக வாழ்கின்றேன். இந்தக் குழந்தைக்கு அம்மையாரின் திருநாமத்தையே சூட்டினேன். அருள் புரிய வேண்டும் தாயே என்றான்.

கணவரின் செயல் கண்ட புனிதவதியார் அஞ்சினார். புனிதவதியாருடன் வந்த சுற்றத்தவர்களும் இச் செயலைக் கண்டு நீவீர் உனது மனைவியை நிலத்தில் வீழ்ந்து வணங்கக் காரணம் யாது? எனக் கேட்டனர். அப்போது பரமதத்தன் இவ்வம்மையார் எனது மனைவியாக இருந்தும் இவர் மானிடப் பிறவி அல்லர் எல்லோராலும் தொழுவதற்குரியவள் என்றான். கணவனின் முடிவு கண்ட புனிதவதியார் மிகவும் வேதனை அடைந்தார்கள். தனது அழகையும் இளமையையும் வெறுத்தாள். எம் பெருமானே எனக்குப் பேய் வடிவம் தந்தருளல் வேண்டும் என்ற வேண்டிப் பெற்றார். அத்தோடு தமிழ்ப் புலமையும் பெற்றார். இறைவன் திருவருளினாலே திருவந்தாதியையும் திருவிரட்டை மணிமாலையையும் பாடினார். புனிதவதியார் என்ற பெயர் நீங்கிக் காரைக்கால் அம்மையார் எனப் போற்றப்பட்டார். அல்லும் பகலும் இறைவனையே துதித்துக் கொண்டிருக்கும் காரைக்காலம்மையார் திருக்கயிலை செல்ல எண்ணம் கொண்டு பாத யாத்திரை செய்தார்.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப்
பொழுதினைச் சுருக்கிப் புழுத்தலைப் புலயனேன்
தனக்குச் செம்மையே யாகச் சிவபத மளித்த செல்வமே
சிவபெருமானே இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே

என்றபடி அம்மையார் திருக்கயிலைக்குச் சென்றதும். இறைவன் அம்மையே என காரைக்காலம்மையாரும் "அப்பா" என்ற கூறி இறைவன் தாழ்களில் வீழ்ந்து வணங்கினார். அப்போது நீவிர் வேண்டும் வரம் யாது? என இறைவன் வினாவிய போது அம்மையார் 'அப்பனே எனக்குப் பிறவா வரம்' தரல் வேண்டும் பிறந்தாலும் உம்மை என்றும் மறவா வரம் தரல் வேண்டும் என்று வேண்டிப் பெற்றார். அத்துடன் இறைவனின் ஆனந்தத்தாண்டவத்தைக் கண்டு களிக்கும் பெரும் பேறு பெற்றிருத்தல் வேண்டும் என்றார்.

"இறவாத இன்ப அன்பு வேண்டும் பின்பு வேண்டுகிறார்
அடியேன் உன் கீழிருந்து உன்னை மறவாத அன்பு வேண்டும்
மேலும் உன் நடனத்தைக் கண்டு களிக்கும் பேறு வேண்டும்" என்றார்

இவ்வரங்களைப் பெற்ற அம்மையார்

1. 'கொல்கைக் கிரங்கி' என அடியெடுத்து மூத்த திருப்பதிகம் பாடினார்.
2. "எட்டி இலவம்" எனத் தொடங்கும் பதிகத்தையும் வேறு பதிகங்களையும் அம்மையார் பாடியருளினார்கள். காரைக்காலம்மையார் அவர்கள் இன்றும் இறைவன் திருவடி நிழலின் கீழ் என்றென்றும் வாழ்கிறார்கள் என்று நம்பப்படுகிறது. அவர்களுடைய குரு பூசைத்தினம் பங்குனி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது.

துதி : மங்களம் மங்களம் மங்களம்
மாண்பு மிக்கப் புனித மங்கை சரித்திரத்தை உரைத்தவர்க்கும்
அதனை ஆவலோடு கேட்டவர்கள் எல்லோருக்கும் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம்

சுபம்



# உடைந்து போன கண்ணாடி



செல்வி.த.ஜெலானி
பேராதனை பல்கலைக் கழகம்
இலங்கை

ஓலைக்குடிசை, ஒழுகுக் கூரை, நாலு பக்கம் மண்சுவர், கதவுக்குக் காய்ந்து போன கறுப்புத்துணி, கட்டாந் தரையாட்டம் நிலம், வீட்டுக்குள்ள நாலு பாத்திரம் சாப்பிட ரெண்டு தட்டு, படுக்க கிழிந்து போன பாய், மாத்த கந்தையான நாலு துணி இது தான் அவளோட வீடு, பேருக்கென்ற ஒரு அப்பன், குடித்துக் குடித்தே முழு வருத்தமும் வாங்கி இன்றையோ நாளையோ என்று இழுத்துக் கொண்டு ஒரு பக்கம். தாய் காமாட்சி வீடு வீடாக வேலை பார்த்து, குடும்பத்தைக் கொண்டு செல்லும் முதுகெலும்பாக இருக்க, நாலாம் வகுப்பில் ஒரு தம்பி, எதுவும் தெரியாத சீறுவன் இது தான் அவள் குடும்பம்.

சங்கீதா! இது தான் அவள் பெயர், பெயருக்கேற்றால் போல் அழகாய் இருப்பாள். உயர் தரத்தில் உயிரியல் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டு இருக்கிறாள். இந்த வருசம் பரீட்சை எடுக்க இருக்கிறாள் மிகுந்த கஸ்ரத்திலும் அவள் இந்தளவுக்கு படிக்கிறாள் என்றால் அதற்குக் காரணம் கனகலிங்கம் வாத்தியார்தான். எட்டாம் வகுப்போட வேலைக்குப் போகச் சொன்ன அப்பனிட்ட இருந்து தன்ர காசைக் கொடுத்து இந்தளவு வரை படிப்பித்ததற்கு அவள் என்றைக்குமே நன்றிக்கடன் பட்டிருக்கின்றாள். வீட்டு வறுமை தாங்க மாட்டாமல் அவளும் கூட படிப்பை நிறுத்தி விட்டு வேலைக்குப் போவமெண்டு தான் இருந்தாள். இருந்தும் அவளின் திறமை கண்டு பாடசாலை நிர்வாகமே அவளது படிப்பிற்குத் தேவையான செலவுகளை இலவசமாகச் செய்து வருகிறது. அதோட நல்ல ஆதரவும் தான்.

அவள் ஒரு டொக்டராக வருவாள் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் உண்டு. அவர்களது நம்பிக்கைக்கு ஏற்றால் போல அவளும் வகுப்பில் முதலாம் நிலையாகவே வந்து நல்ல பெறுபேறுகள் பெற்று அனைவரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்கினாள். ஆனால் அவள் வீட்டைத்தான் அவளால் சந்தோசப்படுத்த முடியவில்லை. வீட்டிலோ ஒழுங்கான சாப்பாடு இல்லை எப்பவும் கால் வயிறும் அரைவயிறும் தான். சிலவேளை அதுவும் இல்லை சாப்பாட்டுக்கே வழியில்லை, இதில் அப்பாவின் வருத்தம் முற்றி ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாக ஏறி இறங்கினார் அம்மா வருத்தம் சுகமாக்க ஏராளமான பணம் கேட்டார்கள் வைத்தியசாலையில் முடியுமா அவர்களால்? விரும்பியதைச் சாப்பிட்டு, துள்ளித் திரிந்து விளையாட வேண்டிய தம்பி பசிப்பிணி கொண்டு வாடி வதங்கி கூனிக் குறுகி, கந்தையான சட்டையுடன், இருண்ட முகத்துடன் பள்ளி போவதை

எத்தனை நாள் பார்த்து அழுதிருப்பாள் அவளால் கூட எல்லாக் கஸ்டங்களையும் தாங்கமுடியும் ஆனால் அந்தச் சிறுவனால்? மாலை நேரம் தான் படிக்கும் நேரம் அவள் ஏனைய நேரங்களை வீணாக்காமல் ரியூசன் சொல்லிக் கொடுத்து அதில கிடைக்கிற சிறு வருமானத்தைப் பெற்று குடும்பத்துக்கு தன்னால் இயன்ற உதவியைச் செய்து வந்தாள் இப்படியே நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தது.

ஒரு நாள்... மாலை நேரம் அது. வகுப்பு முடிந்து சங்கீதா வேகமாக வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தாள். எல்லோரும் அவரவர் சைக்கிள்களிலும், பெற்றோர்களது வாகனங்களிலும் போய் விடுவார்கள். சங்கீதாவுக்குத் தினமும் நடைதான். நேரம் வேற போய்க் கொண்டிருந்தது வேகமாக நடந்தாள், அவளைப் போலவே அவளது நினைவுகளும் முன்னோக்கி நகர்ந்தன.

எப்பிடியும் இன்னும் ரெண்டு மாசாத்தில் எக்சாம் எழுதி நல்ல ரிசல்ட் வரும் எப்படியாவது டொக்டருக்கும் படிக்கணும் கனகலிங்கம் வாத்தியார் சொன்னவர் தானே நான் மெடிசினுக்கு போனால் அவற்ற வெளிநாட்டுத் தம்பி உதவி செய்வார்னு சொன்னா கண்டிப்பா மனுஷன் செய்யும் பிறகு டொக்டராக வந்து அப்பாட வருத்தத்த சுகப்படுத்தணும். அம்மாவ நல்லாப் பாக்கணும். தம்பி விரும்பினதெல்லாம் வாங்கிக் குடுக்கணும். பெரிய வீடாக கட்டணும் வீடு முழுக்கச் சாமன் வாங்கிப் போடணும் எண்டு அவள் பிஞ்சு மனசின் எண்ணங்கள் விரிந்து கொண்டே போக, பின்னால் ஒரு பெல் சத்தம் அவளை சுய நினைவுக்குக் கொண்டு வந்தது சைக்கிளில் வந்தவனைப் பார்த்து அவள் கண்கள் விரிந்தன ஏன்னா அங்க அசகு வழியச் சிரிச்சிட்டிருந்தான் சந்தோஷ்

சந்தோஷ் கணிதப் பிரிவில் கல்வி கற்றான், சாதாரண தரத்தில் இருந்து ஒரு தலையாக அவளைக் காதலித்து வருகிறான். ஆனால் அவள் மசிவதாக இல்லை. இது நாள் வரை அவன் அவனிடம் கேட்டதும் இல்லை அவளிடம் கேட்பதற்கு அவனிடம் துணிவும் இல்லை. இப்போது கூட சங்கீதா திரும்பி என்ன என்பது போலத்தான் பார்த்தாள் பொடியன் “ஒண்ணுமில்லையே” என்பது போல அப்பாவியாய்ப் பாத்துவிட்டு ஓட்டமெடுத்தான். அவளும் முன்னால் திரும்பி ஒரு புன்முறுவலுடன், நடக்க ஆரம்பித்தாள். சந்தோஷ் வசதியான குடும்பத்துப் பையன் ரொம்பவே நல்ல பையனும் கூட அவளுக்காக என்ன வென்றாலும் செய்வான். அவளுக்குத் தெரியாம அவள்ட தம்பிக்கு எத்தனையோ தரம் சாப்பாடெல்லாம் வாங்கிக் குடுத்திருப்பான். நிறைய நாளா அவளை மனசாரா விரும்புகிறான் இது அவளுக்குத் தெரியாமலும் இல்லை அவளுக்கும் அவனைப் பிடிக்காமலும் இல்லை இருந்தும் அவனது காதலை ஏற்றுக் கொண்டால் அவளது குடும்பம் என்னாவது? இலட்சியம் அவளைத் தடுத்தது அவள் காதலித்தால் தன் நோக்கத்தைத் தவறவிட வேண்டி வரும் பின் அவளது குடும்பம் இப்போது போலவே எப்போதும் இருக்க வேண்டியது தான் அதனால் தான் அவள் குடும்பத்தை ஒரு வழிக்குக் கொண்டு வந்து விட்டுத்தான் தனக்குக் காதல் திருமணம் எல்லாம் என்று மனதுக்குள் ஒரு வைராக்கியமாகவே இருந்தாள்.

நேரத்தைப் பார்த்தாள் 4.30 மணி அப்பாவுக்குக் குளிக்கத் தண்ணி வார்க்க வேணுமே 5

மணிக்கு ரியூசனுக்கு பிள்ளையள் வேற வருவாங்களே. போகேக்க தம்பிக்க பிடிச்ச கொம்பு பணிஸ் வாங்கிக் கொண்டு போகணுமே இல்லாமட்டித் தம்பி விடமாட்டானே என்று எண்ணங்கள் பறக்க வேகமாக நடந்து கொண்டிருந்தாள் யாருமற்ற அந்த சாலையில்.

திடீரென சாலையோர மரத்தின் பின்னாலிருந்து ஒருவன் முன்னால் பாய்ந்து வந்து நின்றான் அவள் பயந்தே போனாள் "அந்த மரத்தின் பின்னால் வா உன் கூட கொஞ்சம் பேசணும்" என்றான் அவள் என்றுமே கண்டிராத புது முகம் அது.

பயத்தின் உச்சிக்கே சென்ற அவள் "முடியாது" என்று அவசரமாக மறுக்கவும் "வாடி" என்று அவளின் கையைப் பிடித்து இழுத்தான் சற்றும் எதிர் பார்க்காத அவள், நிலை குலைந்து தப்பிக்க முயன்றாள் சிறிய போராட்டத்திற்கு பிறகு அவனின் கையைக் கடித்து விட்டு எதிர்த்திசை நோக்கி "காப்பாத்துங்க" "காப்பாத்துங்க" என்று கத்தியவாறே ஓடினாள். புத்தகங்கள் வீதியெங்கும் சிதறிப் பறந்தன. நாடி நரம்பெல்லாம் நடுக்க மெடுத்து இதயத்துடிப்பு கட்டறுத்துத் துடிக்க தலை தெறிக்க ஓடுகையில் எதிரே புதருக்குள் இருந்து இன்னொருவன் வெளிப்பட்டான் அவனைக் கண்டதும் அவள் திகைத்து நின்றாள் இது எங்கோயோ பார்த்த மூஞ்சி என்று மின்னலென மண்டையில் பொறி தட்டியது அவள் பத்தாம் வகுப்புப் படிக்கும் போது அவன் A/L படித்தவன் இவளுடன் சேட்டை விட்டானென இவளால் அதிபரிடம் புகார் செய்யப்பட்டு பாடசாலையை விட்டு கலைக்கப்பட்டவன் பல காலங்களுக்குப் பிறகு இப்போதான் பார்க்கிறாள் சட்டென நினைவைத் திருப்பி ஆபத்துக்குப் பாவமில்லை என்று "அண்ண காப்பாத்துங்க" என்ற அழுது கொண்டு அவனிடம் ஓடினாள், அவனும் "வாம்மா காப்பாத்துறன் பயப்படாத" என்று அவளுக்கு அடைக்கலம் கொடுக்க சிறு நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் இருந்தும் அது அதிக நேரம் நீடிக்க வில்லை நிண்டவன் அவள் இரு கைகளையும் இறுக்கமாகப் பற்றினான் வந்தவன் அவள் இரு கால்களையம் பிடித்து அவளை அப்படியே தூக்கிக் கொண்டு புதர்ப் பக்கம் சென்றான் அவனும் கூடவே சென்றான்.

சங்கீதா கத்தினாள், கதறினாள், கெஞ்சினாள், மன்றாடினாள் தன்னால் இயன்றளவு விடுபட முயன்றாள் இருந்தும் அந்த இரு அரக்கர்களின் இரும்புப் பிடிக்குள் இருந்து தப்பிக்க அவளால் முடியவில்லை சத்தம் வராமல் அவள் வாயை அடைத்தார்கள் அவளால் கத்தவும் முடியவில்லை காப்பாற்ற யாரும் வருவார்கள் என்ற அவளது இறுதி நம்பிக்கையும் இழந்து தளர்ந்து சோர்ந்தாள் சோர்ந்து வீழ்ந்தவளை மிருகங்கள் இரண்டும் மாறி மாறி வேட்டையாடின.

மரண போராட்டத்தின் பின் சங்கீதாவின் அசைவு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டிருந்தது இறுதியில் அவளுக்கு மூச்சு முட்டியது உயிர் பிரிந்தது அவள் செத்து விட்டதை உணர்ந்த காமுக நாய்கள் ஓட்டமெடுத்தன. சங்கீதாவின் உடல் அலங்கோலமாக சின்னாபின்னமாக்கப்பட்டு, சிதைக்கப்பட்டுக் கிடந்தது. கண்கள் மட்டும் திறந்திருந்தன. அந்தக் கண்களில் ஆயிரம் ஏக்கங்கள் நிரந்தரமாக உறங்கிப் போயின.

இரண்டு நாட்கள் கழிந்தன விசயம் பரபரப்பானது ஊரெங்கும் இதே பேச்சு சம்பந்தப்பட்ட இருவரையும் போலீசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தார்கள் பல மாத வழக்காடல்களுக்குப் பிறகு சட்டம் பணத்துக்குள் சிக்கி ஊமையாகிப் போனது ஆம்! பணம் தான் வென்றது ஆறு மாதத்தின் பின் பணத்தையும் செல்வாக்கினையும் பயன்படுத்தி, இருவரையும் குற்றவாளிகள் என நிரூபிக்கப் போதிய சாட்சிகள் இல்லையென இரண்டு கோடிக்கு விலை போன நீதவான் வஞ்சகர்களின் வீட்டுக் கோடிக்குப் பின்னால் நின்று எழுதிய தீர்ப்பை இறுதியென வாசித்தார். மேல் முறையீடு செய்யலாம் எனக் கூறி பல லோயர்களின் வாகனங்கள் சங்கீதாவின் வீட்டினை வட்டமிட்டன. அதற்கு ஒவ்வொருவரும் இரண்டு லட்சம், ஐந்து லட்சம், பத்து லட்சம் என்று கேட்டார்கள். அதே நாள் இரவு சங்கீதாவின் குடும்பம் சாப்பாட்டில் விஷம் சேர்த்து உண்டு செத்து மடிந்தார்கள் அந்தக் கோர மரண நிகழ்வுக்கு அந்த இரு கயவர்களும் வந்து துக்கம் விசாரித்து ச் சென்றதுதான் கொடூரம். கடன் தொல்லையாம் காரணம் கட்டுக்கதை வேறு.

அடுத்த நாள் காலை, வானெலியில் தலைப்புச் செய்தி....

கடந்த ஆறு மாதத்துக்கு முன் இடம் பெற்ற கற்பழிப்புக் சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு நேற்று விடுவிக்கப்பட்ட ராஜன் எனபவரின் தங்கை இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டு கற்பழிக்கப்பட்டு உயிருக்குப் போராடிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் செய்தியை கேள்விப்பட்ட ராஜன் நிலை குலைந்து போனான். தன்வினை தன்னையே தாக்கியதை நினைத்து பைத்தியம் பிடித்தவன் போல அழுது புலம்பி ரயிலின் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டான்.

மூன்ற நாள் கழித்து வந்த பத்திரிகையில் தலைப்புச் செய்தி....

ஆறு மாதங்களுக்கு முன் சங்கீதாவை கற்பழித்து கொலை செய்தோரில் சில தினங்களுக்கு முன் விடுவிக்கப்பட்ட ரகு என்பவர் மர்மநபரால் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு பாழடைந்த கட்டடத்தின் அருகில் இருந்த மீட்கப்பட்டார் அவரது சடலத்தின் அருகில் ஒரு துண்டுப் பிரசுரம் மீட்கப்பட்டது அதில் “கற்பழிப்பு காமுகர்களுக்கு தண்டனை ஜெயிலில் அல்ல, வெளியில் தான், கடவுள்” என்று குறிப்பிடப் பட்டிருந்தது விசாரணைகளைக் காவல்துறையினர் முன்னெடுக்கின்றனர் என்று தொடர்ந்தது அந்தச் செய்தி.

தன் தாய் சகோதரிகளைத் தவிர மற்றம் பெண்களை காமத்தோடு பார்ப்பவர்கள், மற்றவர்கள் கண்களுக்கும் அவர்களின் தாய் சகோதரிகள் காமத்தோடு தான் பார்க்கப்படுவார்கள் என்று அனைவரும் உணரும் வரை இந்த வன்செயல் நிறுத்தப்படப் போவதில்லை. சட்டம் பணத்தால் வாங்கப்பட்டு, செல்வாக்கும், பாரபட்சமும் தலை விரித்தாடும் வரை, நீதி கோரி எங்கு சென்றாலும் பலனில்லை இதற்கு சந்தோஷ் போன்ற மர்ம நபர்கள் உலகத்திற்குத் தெரியாமல் கயவர்களைத் தட்டிக்கேட்டு தண்டனை வழங்கினா லொழிய மற்றப்படி சட்டம் அவர்களை ஒன்றும் செய்து விடப் போவதில்லை.

# அவள் என் தோழி



செல்வி.ப.அமிர்தினி
அரசபுரம்,
பூநகரி.

அவள் எதிலும் பிடிப்பற்றவளாக எதையோ பறி கொடுத்தவள் போல் தானும் தன்பாடுமாக தனியே விரிவுரை மண்டபத்தில் அமர்ந்திருந்தாள். எதேச்சையாக அவ்வழியாக வந்த நான் அவளிடம் கதை கொடுத்தேன் என்ன காயா இங்க இருக்கிறாய்? இண்டைக்கு இனி விரிவுரை ஏதும் இல்லைத்தானே அவளுக்கு நான் கேட்டது கூட கேட்கவில்லை சிலையாக உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு அருகில் போய் அவளது தோளைத் தட்டி காயா! என்ன பலத்த யோசனை போல அவள் எதுவும் பேசவில்லை "நீ கட்டின பெரிய கோட்டையை நான் இடையில உடைச்சிட்டன் போல", கேலியாய் நான் சொல்ல அவள் புன்னகையை பலாத்காரமாய் வரவழைத்து "இல்லையில்லை நான் சும்மாதான் இதில இருக்கிறன். கொஞ்ச கணக்கு விளங்கயில்ல அததான் செய்து பாத்திட்டு இருந்தனான் மெல்லிய குரலில் பதில் தந்தாள்.

அவள் என்னிடம் எதையோ மறைக்க முயல்கிறாள் என்பது எனக்குத் தெரிந்தபோதும் அதை இப்போது கேட்பது சரியில்லையென எனக்குப்பட்டது "நீ இங்க தனிய இருந்து அந்த கணக்குகளோட சண்டை போடத் தேவையில்லை எல்லாரும்சேர்ந்து இரவு ஸ்ரடி கோலில போட்டி போட்டுப் பார்த்திடலாம் எங்களால முடியாட்டாலும் சுரேக்கா எந்தப் பெரிய கணக்கெண்டாலும் ஈஸியா புரியும்படி சொல்லித் தந்திடுவாள் நீ கணக்கப்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. இண்டைக்கு மறக்காம ஸ்ரடி கோல் போனா போதும்" அவளும் சரியென்பத போல் தலையை ஆட்டினாள். அவள் முகத்தின் இறுக்கம் இன்னும் தளர்ந்திருக்கவில்லை.

அவளை அப்படிப் பார்க்க எனக்கு ஒரு மாதிரியாய் இருந்தது எப்போதும் கலகலவென்று சிரித்துப்பேசி எல்லோரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருப்பவள் திடீரென்று அமைதியானது என்னை யோசிக்க வைத்தது.

நான் இரண்டு வருடத்திற்கு முதல் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று முதற்தடவை எனது அப்பாவுடன் போகும் போது அவளும் தனது தாய். தந்தை, தங்கையுடன் வந்திருந்தாள், அவளைப் பார்த்ததுமே எனக்குப் பிடித்துப் போயிருந்தது அவளின் அசைவுகளை நான் மெய்மறந்து பார்த்துக் கொண்டிருந்தேன் அவள் மிக எளிமையாக நேர்த்தியாக உடை அணிந்திருந்தாள் இளநீல வர்ண பஞ்சாபி உடுத்தி தாவணியை ஒரு பக்கம் கொய்து

போட்டிருந்தாள், அவளது நீண்ட அடர்ந்த கூந்தலைப் பின்னி இடையில் கிளிப் போட்டிருந்தாள் கழுத்தில் மெல்லிய தங்கச் செயின். வலது கையில் ஒரு சோடி கலர் காப்பு அவற்றையெல்லாம் விட எல்லோரையம் வசீகரிக்கும் காந்தப் புன்னகையை தன்னிடத்தில் கொண்டிருந்தாள்.

பஸ்ஸில் சாளரத்தோர இருக்கையை அவள் தனதாக்கி அமர்ந்திட அருகினில் தங்கை உட்கார்ந்தாள். அவளது மான் போன்ற மருண்ட கண்கள் சாளரத்துக்கு வெளியே இயற்கையை ரசித்திட இடையிடையே தங்கையுடன் எதையோ பேசி சிரித்துக் கொண்டிருந்தாள் அப்போது அவளுடன் எனக்குத் தொடர்பேதும் இருக்கவில்லை ஆதலால் எனது இருக்கையில் இருந்து அவளைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

மறுநாள் என்னை கம்பஸில் கண்டு புன்னகைத்தாள் நானும் புன்னகைத்தவாறே உங்க பேரென்னவென வினா தொடுக்க “காயத்ரி” என்றவாறே “உங்கட” என்றாள் அவ்வாறு. தொடங்கிய எங்களின் அறிமுகம் நாளடைவில் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளக் கூடியளவில் தோழிகளாய் சேர்த்து விட்டிருந்தது. நாங்கள் ஐந்து பேர் தோழிகளாய் ஒரே றூமில் இருந்த போதும் காயத்ரி என் கூடவே எப்போதும் இருப்பாள். என்னையே அடிக்கடி தொல்லை பண்ணிக் கொண்டிருப்பாள். அவளது உறவினர்களது நிகழ்வுகளுக்கும் என்னை வரும்படி நச்சரித்து எனது அம்மாவிடம் அனுமதி பெற்று என்னையும் கூட்டிக்கொண்டே போவாள். அதனால் அவளது சொந்த பந்தங்களுடனும் பாடசாலை நண்பர்களுடனும் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது.

பெரும்பாலான எல்லா விடயங்களும் எனக்குத் தெரிந்து இருந்ததனால் பெரும்பாலும் அவளது பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்குவது நானாகவே இருந்தது. அவள் எங்கள் பிரிவில் அன்பு, அடக்கம், அழகு நிறைந்த பேரழகியாய் இருந்ததனால் அவள் பின்னால் சுற்றுவதற்கென்றே ஒரு கூட்டம் இருந்தது பாடசாலைக் காலத்திலேயே அவள் இந்தப் பிரச்சனைகளைச் சந்தித்ததனால் இதையெல்லாம் அவள் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்வதில்லை.

நான் தான் அவளிடம் அடிக்கடி சொல்லுவேன் “காயா, நீ யாராவத ஒருத்தனுக்கு ஓகே சொல்லிட்டாய் என்றால் இந்தப் பிரச்சனையில இருந்து விடுபட்டுடலாம்.” “அவள் சொல்லுவாள்” இதெல்லாம் பிரச்சனையில்லையடி தனு அவங்க எல்லாரும் இப்படித்தான் நாலைஞ்சு நாளைக்கு சுற்றுவாங்கள் சரிவராது எண்டு தெரிஞ்சா பிறகு தன்பாட்டில் போய் விடுவாங்கள் அவள் தனது அனுபவப் பாடத்தைச் சொல்லுவாள் அது உண்மையென்று எனக்குத் தெரிந்த போதிலும் அவளை அடிக்கடி சீண்டிக் கொண்டேயிருப்பேன் அவள் பின்னால் சுற்றியவர்களில் பெரும் பாலானோர் வேறொரு பிள்ளையைக் காதலித்து பீச், பார்க் என சுற்றுவது சகஜமாகிவிட்டிருந்தது அவர்களை எங்காவது நாங்கள் காணும் போது ஒருவரை யொருவர் பார்த்துச் சிரித்துக் கொள்ளுவோம்.

அவள் எல்லாவற்றையம் என்னிடம் ஒளிவு மறைவின்றி சொல்லிவிடுவதால் எதைப்பற்றிய யோசனை அவளை சஞ்சலப்படுத்துகின்றது என்று நானும் சஞ்சலப்பட வேண்டியதாயிற்று

அவளது மனநிலையை மாற்றும் முயற்சியின் முதற் கட்டமாய், "காயா! வாவன் நாங்க றூமுக்குப் போய் சூடாய் ஒரு ரீ குடிப்பம்" அவள் மறுப்போதும் சொல்லாமல் தனது புத்தகங்களை எடுத்துக் கொண்டு நடக்கலானாள். நேரம் 4 மணியைத் தாண்டியிருந்தது வீதியெங்கும் வாகனங்கள் போய்க் கொண்டிருந்தது. வேலை முடித்து வீடு திரும்புபவர்களும் விரிவுரை முடித்து தத்தம் அறையை நோக்கி விரையும் மாணவர்களுமாய் வீதி நிறைந்திருந்தது. எங்கள் "பக்கல்ரியில்" இருந்து நாம் இருக்கும் வாடகை வீடு அருகில் இருப்பதனால் நாம் நடைபாதையினில் நடக்கத் தொடங்கினோம். இருமருங்கிலும் நின்ற வானக மரங்களிலிருந்து வீசும் காற்றில் பூக்கள் உதிர்ந்து விழுந்து கொண்டிருந்தன.

அவள் வெறுமையை மட்டும் முகத்தில் அப்பியபடி என்னுடன் நடந்து கொண்டிருந்தாள் எதையாவதைப் பற்றி அவளுடன் அலற்றியபடியே எப்போதும் வரும் எனக்கு இந்தப் பயணம் புதியதாகவே பட்டது நானே கதை கொடுத்தேன் "காய! வீட்டில் ஏதும் பிரச்சனையா? எனக்குத் தெரியாம அன்ரியோட ஏதும் சண்டையா? அவள் பதில் ஏதும் சொல்லவில்லை திரும்பவும் நானே "காயா உன்னத்தான் கேக்கிறன் ஏதாவது பிரச்சனையா? கொஞ்சம் தொனியை உயர்த்தியே கேட்டேன், "இல்லை தனு என்னை கொஞ்ச நேரம் பேசாம விடு" விரக்தியாய் பதில் சொன்னாள் இவளுக்கு என்னதான் நடந்திருக்கும் பேசாம அன்ரியிட்ட போன் பண்ணிக் கேட்பமோ? இல்லையில்லை அவ பிறகு பயந்திடுவா நிலாவிட்ட கேட்டுப் பார்ப்பம் என் மனம் சொன்ன வழியில் நிலாவிற்கும் போன் பண்ணினேன். அவளுடைய தொடர்பை அடைய முடியவில்லை.

றூமுக்கு வந்ததும் காயா முகங் கழுவி விட்டு வந்து கட்டிலில் புரண்டாள் நான் ரீ போடுவதற்காய் தண்ணியை எடுத்து கீற்றரில் கொதிக்க வைத்துக் கொண்டே நீ நித்திரை கொள்ளுறதெண்டா ரீயைக் குடிச்சிட்டுப் படு இல்லாட்டி நான் உன்னை நித்திரை கொள்ள விட மாட்டேன் என்றேன்" என்ன நினைத்தாளோ தெரிய வில்லை கட்டிலில் இருந்து எழும்பி என்னருகில் வந்து என் கையைப் பற்றியவாறு "தனு உன்னிட்ட நான் ஒண்டு சொல்லணும்" என்றால்.

"ஆ... சொல்லு நீ சொல்லுறத கேக்கிறத்துக்காக தானே நான் இருக்கிறன் சொல்ல வந்ததை சொல்ல நினைப்பதை இந்தப் பேதை அறியும் படியாக, புரியம் படியாக எடுத்தியம்புவாயாக மகளே! என நாடகப்பாணியில் சொன்னேன்.

உனக்கு எப்பவும் விளையாட்டுத்தான் என சிணுங்கிவிட்டு எனக்கு வீட்டில மாப்பிள்ளை பாக்கினம் எனக்கு கலியாணம் செய்ய இப்ப விருப்பமில்லை அதை யோசிச்சு யோசிச்சு என்ன முடிவெடுக்கிறதெண்டே தெரியவில்லை நீயே சொல்லு தனு எனக்கு இப்ப கலியாணம் செய்யிற வயசோ அவள் என்னைப் பார்த்தாள்.

ஏன் காயா நீ என்ன இப்பவும் குழந்தைப் பிள்ளை எண்டு நினைக்கிறியோ? வயசு வந்துட்டுத்தானே அது சரி யாரு மாப்பிள்ளை? உனக்குப் பொருத்தமாய் வடிவாய் இருப்பாரோ?

என்ன வேலை செய்யிறார்? எனக்குத் தெரிஞ்சவரோ... என அடுக்கடுக்காய் ஆவலில் கேள்விகளைக் தொடுத்தேன் "எல்லாம் உனக்குத் தெரிஞ்சவர்தான் எங்கட சின்ன மாமா இருக்கிறாரல்லோ லண்டனில அவரோட பையன் தான் "அட அஜந்தன் அண்ணாவோ... அவர் உனக்குப் பொருத்தமானவர்தானே லண்டனில சொப்ற்வெயார் கம்பனியில வேலை செய்து கை நிறைய சம்பாதிக்கிறார் போன லீவுக்கு வரும்போது அது தான் உன்னைச் சுற்றிச் சுற்றி வந்தவர் நான் அப்பவே நினைச்சனான் அவருக்கு உன்னில ஒரு கண் எண்டு உன்ன கஷ்டப்படாமல் வச்சிருப்பார் எண்டு நான் நினைக்கிறன் உனக்கு என்ன விருப்பமோ நீ அதைச் செய்ய அதுக்காக இப்படி மூஞ்சய தூக்கிப் போட்டுக் கொண்டு எதையோ பறி கொடுத்தவள் போல இருக்காதே.

"தனு உனக்கே தெரியும் நான் நிறையப் படிக்கோணும் எண்டு ஆசைப்படுறன் இப்ப கலியாணம் கத்தரிக்காய் எண்டா இவ்வளவு நாளாய்ப் படிச்சது பிரயோசனமில்லாமல் போயிடும்" "ஏன் காயா, பிரயோசனமில்லாமல் போகணும் இன்னும் ரெண்டு வருஷந்தானே அஜந்தன் அண்ணாவா வெயிற் பண்ணச் சொன்னா வெயிற் பண்ணிடப் போடார். இவ்வளவு நாளா வெயிற் பண்ணினவர் இந்த கொஞ்சக் காலத்துக்கு ஒத்துக்க மாட்டாரா?"

"அடிப்பாவி! அவருக்கே என்னைக் கட்டிக் கொடுக்கிறதாய் முடிவெடுத்திட்டியா...?" "நான் என்னெண்டு காயா முடிவெடுக்கிறது உன்னோட வாழ்க்கை நீ ததானே முடிவெடுக்கணும் நீ கெட்டிக்காரி உன்னோட வாழ்க்கை பற்றிய உனக்குத்தானே தெரியும் நீ தான் நிதானமாய் யோசிச்சு முடிவெடுக்கணும் என்றவாறே எனது கையிலிருந்த ரீ கப்பை அவனிடம் கொடுத்தேன் அவள் ரீயை ருசித்துப் பருகியவாறு தெளிவுடன் என்னை நோக்கிப் புன்னகைத்தாள்.





# மதுவாகிப் போன மானமிது



திருமதி.பி.வினுஜா
மொட்டையன் குளம்
கிராஞ்சி

மதுவுக்கு அடிமையாகிப் போன எம்மவரின்
மானமதனைத் தொலைத்த கதையாகுமிது
பிரச்சனைகளை மறக்க குடிக்கின்றோம் என்பார்கள்
பிரச்சனையாகியே நடை பிணமாவார் குடித்த பின்னால்

ஹீரோ என்றெண்னி புகைதனை உறுஞ்சிடுவார்
சீரோவாகி கருகிடுவார் உடலில் உணர்வுகளை
நித்திரை வருவதற்கு குடிக்கின்றோம் என்பார்கள்
நித்திரையின்றியே புலம்பிடுவார்கள் மது அருந்திய பின்னாலே

சந்தோஷ நிகழ்வுகளுக்கு சென்றாலும் குடித்திடுவார்கள்
சந்தோஷத்துக்கு தான் குடித்ததாக பொய்யுரைப்பார்கள்
சண்டை சச்சரவுகளிலே முன்னுக்கு நிற்பார்கள் - பின்னர்
நாடி நரம்பெங்கும் செயலற்று போக நடிங்கிடுவார்கள்.

வயிற்றுக் கோளாறாய் வாந்தி தானெடுப்பார்கள்
உடலிலே சோர்வுதனை கூட்டிக் கொள்வார்கள்
ஆண் பெருமைதனை குடித்தும் புகைத்தும் பேசுவார்கள்
ஆண்மை தனை இளப்பதனை மறந்தே போவார்கள்

துன்பத்தோடு, வேதனையும், நிதி நெருக்குதல் தனையும்
துணிவாக தொல்லையும் கொடுத்து விடுவார்கள்
இன்பங் கண்ட பெருமையால் மனதை கொண்டிங்கே
இளமையிலே அத்தனையும் தொலைத்திடுவார்கள்

உழைத்ததுக்கும் குடித்து கடன் வாங்கியும் புகைத்து
உணர்வுகளையும் இழந்து உன்னதத்தையும் மறந்து
காசுதனை கரியாக்கி பிள்ளைகளுக்கும் வழிகாட்டி
கடமைதனை தவறிட்ட குற்ற உணர்வுமின்றி

குடித்து, குடித்தே அழியும் எம்மவர் நிலைகண்டு
குழம்பிய என்னிதய வேதனை இதுவாகும்
குடிப்பாரையும், புகைப்பாரையும் திருத்துவது எப்படி
குடிவகைகளையும். புகைவகையும் உடனே நிறுத்துங்கள்

## அன்பின் ஆழம் அறியா அன்னைக்காக



செல்வி.செ.விஜித்தா
சிவபுரம்,
கிராஞ்சி பூநகரி.

ஈன்று புறம் தந்த என தருமை அன்னையே
ஈசனுக்கு நிகரானவளே

பச்சிழம் குழந்தைகளிற்கு பாரினை அறிமுகம் செய்பவளே
பகலிரவாய் பாடுபட்டு பாலூட்டி வளர்ப்பவளே

அன்புக் கடல் போன்ற அன்னையே
அன்புள்ளம் கொண்டவர் நீரே

வானுக்கு கிடைத்த நிலவாய் எம் வாழ்வுக்கு கிடைத்தவளே
வாழ்வனைத்தும் தம் சேவையை எமக்காக தந்தவளே

தன்னலமற்ற மனங் கொண்ட தாயே
தலையிடி என நாம் இருந்தால்
தலையணையாக நீர் இருப்பீர்

தோல்வி கண்டு தளராதே என தட்டிக் கொடுப்பவளே
பொறாமைப்பட்டு உன் பெறுமதியை நீயே இழக்காதே என உரைப்பவளே

வளையாமல் நதிகளும் இல்லை வலிக்காமல்
வாழ்க்கையும் இல்லை என்பதை உணர்த்தியவளே

கதிரவனைப் போன்ற தம் கடமை தவறாது
இயங்கிக் கொண்டிருக்கும் இயந்திரம் போன்றவளே

இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ளும் அன்புத் தோழி போன்றவளே
கண்டிப்புடனும் வழி நடத்தும் கதாநாயகியே

சுயநலம் இல்லாத அன்னையே
சுகம் உண்டு உம் வாழ்வில்

ஒவ்வொரு குழந்தைகளின் இதயத்தில் குடியிருக்கும் தேவதையே
பார் போற்றும் பராசக்தியே

நடமாடும் தெய்வம் நீரே
அன்னையே நீர் வாழ்க வாழ்க பல்லாண்டு

# கிறிஸ்தவர்வளின் மாணிக்கம்



திரு.ச.அன்ரனி
இரணைமாதாநகர்,
பூநகரி.

முத்தான முத்தொன்று
முதல் முதல் மண்ணில் விழுந்த
நேரம் அது
மந்தைகள் அழ
இடையர்கள் மகிழ
மன்னவன் யேசு
மண்ணில் பிறந்த காலம் அது

மனிதர்கள் இன்பம் கொள்ள
இயற்கை தனை அன்புடன்
படைத்தான் இறைவன்
அதனையும் தொலைத்தான் மனிதன்
மண்ணால் பிறந்த மனிதனை
மாண்புடன்காக்க
மனிதனாய் பிறந்தான்

காவேரி ஆற்றில்
பறவைகள் குளிப்பதை போல்
யோர்தான் ஆற்றில்
எம் மன்னவன் போல குளித்தாரே
எம் பாவங்கள் குறைத்தாரே

முள் முடி முகத்தை முக்காடு போட
கசையடி கண்ணத்தை காயத்தால் நிறைக்க
இருத்த வெள்ளம் கண்ணீர் வெள்ளம்
கல்வாரி மலை வரை
வற்றாத நீரோடையாய் பாய
பாவங்கள் அற்ற பாமரன் யேசு
கழுமரம் தனில் கன்னித்தாய் அருகில்
கண் மூடினாரே

மூன்றாம் நாள் தனிலே
முளைகள் முனைத் தெடி
விண்ணுக்கு சென்றாரே
மண்ணில் இருந்த காயமதில்
கிறிஸ்தவம் பர
உவமைகள் சொன்னாரே
மக்களை மன மாற்றியும் சென்றாரே

மலைகள் குன்றுகள் மேல் அமர்ந்தாரே
அறிவுரை பலவும் சொன்னாரே
மனமாறுக்கள் என்றும் மாண்புடன் சொன்னாரே
மனமாற்றியும் மாண்பினை பரப்பியும்
கிறிஸ்தவம் பரவ
சீடர்கள் மத்தியில் சிந்தனை கொண்டாரே

சீடர்கள் சென்றபின்
கிறிஸ்தவம் மலர
திருச்சபை அதனை
பாறையில் அமந்தாரே
தன் அன்பு சீடனாம் பேதுரு அவரை
மகிழ்வுடன் தெரிந்தாரே

அவரை தொடர்ந்து
கிறிஸ்தவம் மலர
திரு தந்தையை தெரிந்தாரே
திருச்சபையின் இன்றைய தந்தையாம்
பிரான்சிசை போல
கிறிஸ்தவம் பரவ

சிறப்புடன் பணி புரிவோமே
சிந்தனை அதனை வளர்ப்போமே
திருச்சபை வளர கிறிஸ்தவம் பரவ
என்றுமே வாழ்க

# ஆலமரம்



செல்வி.க.தமிழரசி
கிளி/ கறுக்காய்த்தீவு, மகாவித்தியாலயம்.
பூநகரி.

"குப்" பென்று மருந்து நெடி நாசியைத் தாக்கியதும் உறக்கமென்னும் திரை விரைவாய் விலகியது. கண்களைத் திறந்து பார்த்தேன். சுற்றிவர இருந்த மற்றைய எல்லா "வார்ட்டுகளிலும் கும்பல் கும்பலாய் இளசுகளும் பெரிசுகளுமாய் கூடியிருந்தனர் வெறுமைக் கடல் சூழ்ந்த தீவாகத் தோன்றும் என்னுடைய வார்ட்டைப் பார்த்து வரட்சியாய் சிரித்துக் கொண்டேன். சிரித்தேன் என்பதை விட சிரிக்க முயன்று தோற்றேன் என்பதே மெய் வயிறு பசித்தது.

அருகில் மேசையிலிருந்த "பிளாஸ்க்" கிலிருந்து ஏற்கனவே நான் கரைத்து வைத்திருந்த "ஹோர்லிக்ஸை" ரம்ளரில் ஊற்றிக் குடிக்கத் தொடங்கினேன். குடித்துக் கொண்டே நோயாளிகளைக் குசலம் விசாரிப்போர் மீது பார்வையைச் செலுத்தினேன்.

"எனக்கும் எத்தினை சொந்தக்காரர் இருக்கினம் ஆனா ஒருத்தரும் ஒருத்தர் கூட எட்டியும் பார்க்கிறேலை என்ர அவர் எப்ப செத்தாரோ அதோட எல்லாம் போட்டுது.

மனதில் சிந்தனை துளிர்த்தது. சிந்தனையை பக்கத்து வார்டில் எழுந்த ஒரு குரல் சிதறடித்தது.

அசரந்தக் கிழவி? தனிய இருந்து இஞ்சையே உத்துப் பார்த்துக் கொண்டு நிக்குது.

"பாவமந்த மனுசி! அது வந்த நாள் தொடக்கம் ஒருத்தரும் வந்து பார்க்கிறேலை மனுசிக்குச் சொந்தக்காரர் ஒருத்தரும் இல்லைப் போல"

"பிள்ளையளுமில்லாத மலடியாயிருக்க வேணும். வீட்டை போய் பிள்ளைக்குச் சுத்திப் போட வேணும் இல்லாட்டி உதின்ர கண்பட்டு பிள்ளை காய்ச்சலெண்டு படுத்திடும் பக்கத்து வார்டில் இன்னும் சம்பாஷணை தொடர்ந்து கொண்டிருந்தது ஆனால் நான் மலடியா? தலையணை உரைக்குள் ஒளிந்திருந்த அந்தத் தபால் உறையை வெளியே எடுத்தேன். அதற்குள்ளிருந்து வழ வழப்போடு புகைப்படங்கள் வெளியே நழுவின ஆங்காங்கே கண்ணீர்க் கறைகள் திட்டுத் திட்டாய்ப் பரவிக் காய்ந்திருந்த படங்களில் என் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் கனடாவில் நாலுசுவர் அறைக்குள் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

சட்டென்று வழமைபோல நெஞ்சம் கனத்தது கண்ணீர் என் அனுமதியைக் கேட்காது வெளியேறத் தொடங்கியது.

“எடி! நான் பிள்ளையில்லாதவளில்லை இஞ்சை பார்! என் சிங்கக்குட்டிகளையம் அதுகள் பெத்த பிள்ளையளையும் என்று கத்திக் கொண்டே என்னை நோக்கிச் சொல்லம்புகளை ஏவி விட்டுக் கொண்டே பக்கத்து “வார்ட்டில்” குசலம் விசாரித்துக் கொண்டிருந்தவளை நோக்கி அந்தப் படங்களை எறிய வேண்டும் போல இருந்தது.

“வேண்டாம்! பிறகு பக்கத்து “வார்ட் காரியின் விரோதியாக நான் மாறி விடக்கூடும்.

படங்களை எடுத்து “என்வலப்” புக்குள் போட்டுக் கொண்டு திரும்பிய போது ஒரு பெண் என்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. இருபத்தைந்து வயதுள்ள மெல்லிய பெட்டை

“அம்மா! உங்கட பிள்ளையளின்ரை படமோ? அவள் வாயிலிருந்து தான் இந்தச் சொற்கள் உதிர்ந்தன.

“ஓம் பிள்ளை” ஒற்றைச் சொல்லில் அவளுக்கு விடை பகர்ந்தேன் அவள் ஒன்றும் பேசாமல் கையை நீட்டினாள் “என்வலப்” என்னிடமிருந்து அவள் கைக்கு மாறிக் கொண்டது. படங்களைப் பார்த்துக் கொண்டே என்னருகில் மெதுவாய் வந்தமர்ந்து கொண்டாள்.

“இது என்ர மூத்த மேன் மற்றது இளையவள் இஞ்சாலை நிக்கிறது மூத்தவன்ர மனிசி கதிரையில பிள்ளையை வைச்சுக் கொண்டு நிக்கிறது இளையவன்ர மனுசி அங்கால சிரிச்சுக் கொண்டு நிக்கிற சின்னன் ரண்டும் மூத்தவன்ர பிள்ளையள்” என விளக்கத்தோடு அவள் படங்களைப் பார்த்து முடித்து விட்டு என்னைப் பார்த்தாள்.

“பிள்ளை நீர் இண்டைக்குத்தானோ “அட்மிட் ஆளனீர்” உம்மட பேர்?”

“மைதிலி! அப்பிடித்தான் மற்றவை என்னைக் கூப்பிடுறவை” “பிள்ளை மைதிலி நீரும் என்னை மாதிரி தனியத் தானோ? இல்லாட்டி ஆரம் இருக்கினமோ?

“உங்களுக்கொண்டாலும் வெளிநாட்டிலயாவது சொந்தமெண்டு சொல்ல ஆக்களிருக்கினம் ஆணா எனக்கு நான் மட்டும் தான் சொந்தம்.

தொடர்ந்து அவளது வார்த்தைகள் துக்கமேலீட்டால் சிக்குண்டு போனதை உணர்ந்தேன்.

“மைதிலி! பார்த்தால் உமக்க ஒரு வருத்தமும் இருக்கிறதாத் தெரியேலை பேந்தேன் “வார்டில்” இருக்கிறீர்?

“அம்மா நான் உங்களை விடச்சின்னப்பிள்ளை தானே? நீ நானெண்டே என்னைக் கூப்பிடுங்கோ மற்றது என்ன கேட்டனியள்? ஆங்! வருத்தமென்னவோ? அது வந்து தொண்டையில

ஒரு கட்டி அதை ஒப்பறேசன் பண்ணி எடுக்க வேணும்.

"எனக்குப் பிள்ளை! வாதம் இப்ப அடிக்கடி வந்து விழுந்தது அதுதான் வடிவாக் காட்டி மாத்துவமெண்டு வந்திருக்கிறன் கொஞ்ச நேரத்துக்குள்ளேயே எனக்கும் மைதிலிக்குமிடையே வார்த்தைகளாலேயே ஒரு உறவுப்பாலம் பின்னப்பட்டு விட்டது.

நானெண்டாலும் சொந்த மொண்டும் பக்கத்தில் இல்லாட்டியும் பிள்ளையவள் அனுப்பின காசில வசதியாய் இருக்கிறன் ஆனால் இவள்.

பிளாஸ்டிக் தோடு அறுந்து போய் விடத் துடிக்கின்ற பழைய செருப்பு "சொப்பிங்" பையில் அடைக்கப்பட்ட ஓரிரு சட்டைகள் கறுப்பாய் அமுக்கேறிப் போயிருந்த மூடியில்லாத சுடுதண்ணிப் போத்தல் இவைதான் அவளது உடைமைகள்.

பணம், பாசம் இரண்டுமே இவளுக்கு எட்டாக்கனி தான் இதுவரை என் நிலையை நினைத்து எனக்காகவே பரிதாபப்பட்டுக் கொண்டிருந்த என் மனம் முதல் முறையாக அவளுக்காகக் கவலைப்பட்டுக் கொண்டது

அது என் மனத்தளையினை அறுத்து விட வார்த்தைகள் கரை புரண்டோடின.

என்ர அவர் செத்தது
பிள்ளையள் வெளிநாடு போனது
கடிதங்கள் குறைஞ்சு காசு மட்டும் வரத் தொடங்கினது சொந்தக்காரரெல்லாம் ஒட்டுண்ணிகளாய் இருப்பதை உறிஞ்சிக் கொண்ட பின் உதறிச் சென்றது.

எல்லாம் எல்லாமே மூச்சு வாங்குமட்டும் கூறினேன் அலுப்பில்லாத முகத்தோடு ஆர்வமாய் மைதிலி கேட்டுக் கொண்டிருந்தாள்.

இரவு பதினொரு மணி "கள்" ளென்ற வலி காலில் திடீரெனக் கிளம்ப தூக்கம் கலைந்து எழுந்தேன் உள்ளங்காலில் தோன்றிய வலி வதந்தி போல என்னுடம்பின் மூலை முடுக்கெங்கும் வெகு வேகமாய் பரவத் தொடங்கியது.

வலி! வலி! வலி! அதைத்தவிர வேறெதுவும் என் உணர்வில் இல்லை வேதனை தாங்க முடியாமல் வார்ட் "கம்பியை இறுகப் பிடிக்க நினைத்த போது கைகள் என்கட்டுப்பாட்டுக்குள் வரமுடியாது ஒரு பக்கம் இழுத்துக் கொண்டு முரண்டு பண்ணின.

கத்த முயன்றேன் வார்த்தைகள் வெளியே வரப்பயந்து தொண்டக்குழிக்குள் பதுங்கிக் கொண்டன நான் போட்டிருந்த சோட்டி கூடத் தெப்பமாய் நனையுமளவிற்கு வியர்வை போட்டு போட்டுக் கொண்டு வெளியேறிக் கொண்டிருந்தது மெல்ல மெல்ல என் நினைவுகள் குழப்பமடைவதை உணர முடிந்தது. இறுதி முயற்சியாக மூச்சை உள்ளிழுத்து முழுப்பலத்தையும் பிரயோகித்து என் வேதனையின் தீவிரத்தை உணர்த்த முயன்று வாயைக்

கஷ்டப்பட்டுத் திறந்தேன் "ஐயோ! ஓ! ஓ! ஓ! அ...ம்...மா... ஆ! ஆ!!...

அதற்குப் பிறகு எல்லாமே எனக்கு இருண்டு போனது தலை கனைத்தது கண்ணைத் திறந்தவுடன் வெளிச்சம் பட்டுக் கண் கூசியது என்னெதிரே வெள்ளையுடையில் டொக்டரும் நேர்சும் நின்று கொண்டிருந்தனர் டொக்டரின் மணிக்கூடு பத்துமணி என்பதைப் பல்லிளித்துக் காட்டிக் கொண்டிருந்தது.

கடவுளே! இரவு முழுக்க மயக்கமாயிருந்திருக்கின்றேன். டொக்ரர்! கண் முழிச்சிட்டா

மைதிலியின் குரல்
டொக்டர் எதுவுமே பேசாமல் ஸ்டெதஸ் கோப்பை என்மீது வைத்து இதயத்துடிப்பினைக் கணக்கிட்டுக் கொண்டார்

"பயப்பிட ஒண்டுமில்லை! வாதந்தான் இப்ப ஒரு இன்ஜெக்ஷன் போடுறன் இன்னும் ரண்டு கிழமைக்கு இதைத் தொடர்ந்து போட்டால் உங்கட வாதத்தை வடிவாய் மாத்திப் போடலாம். யோசிக்காமல் இருங்கோ.

சருக் கென்று ஒருமுறை ஊசி முனை என் கைமூட்டுத் தசைக்குள் ஊடுருவித் துளைத்து மருந்துக் கலவையை நாளத்துக்குள்ளே துப்பிவிட்டு மீண்டும் வந்தது

கை கடுத்தது நேர்ஸ் பஞ்சால் அந்த இடத்தைத் தேய்த்து விட்டாள் வலி வந்த இடத்தைத் தடவ இடது கையைத் தூக்கிய போது கைவர மறுத்தது மைதிலி பரிதாபமாக என்னைப் பார்த்தாள் "அம்மா! உங்களுக்குக் கொஞ்ச நாளைக்குக் கையும் காலும் வளங்காமல் இப்படி இழுத்தபடி தான் கிடக்குமாம்."

டொக்டர் ஆறுதலாய் மருந்துகளை எடுத்துக் கொண்டு நகர்ந்து சென்றார்.

அந்த நிமிஷத்திலிருந்து உயிர் இருக்கின்ற ஜடப் பொருளாய் மாறிப் போனேன் நடைப்பிணத்தை விடவும் செயலியக்கம் அற்றவளாயானேன்

ஆனாலும் பசி வயிற்றைக் கிள்ளும் "ஆங் அம்மா! மெதுவாய்! வாயை ஆவெண்டுங்கோ"

மைதிலி தாயைப் போல் ஊட்டி விடுவாள் க்கும் ... க்கும்" புரைக்கேறி இருமல் எழும்.

என் கையாக அவள் கைமாறி ஆதரவாய் தலையைத் தட்டிவிடும் ரம்ளரில் இருந்த தண்ணீரைக் குடிக்கச் செய்யும் என் கைகளாகவும் கால்களாகவும் மைதிலி மாறி நின்றாள் நான் பெத்த பிள்ளை கூடச் செய்வதற்கு அருவெருக்கும் பணிவிடைகளைப் பரிவோடு செய்தாள் மைதிலியின் கவனிப்பிலும் டொக்டரின் மருந்தினாலும் இரண்டு கிழமைகளில் முன்னரைப் போல எழுந்து நடமாடத் தொடங்கினேன்.

அன்று மைதிலிக்கு ஒப்ரேசன் செய்ய வேண்டிய நாள் அத்தோடு அன்று தான் நானும் துண்டு வெட்டி விடு போக வேண்டும் இந்தாங்கோம்மா! இதிலயிருக்கிற மருந்துகளை ஒழுங்காய்ப் போட்டுக் கொண்டு வந்தால் வாதம் எட்டியும் பார்க்காது? டொக்டர் தைரியம் சொல்லி சாப்பாடு போல குளிசைகளைத் தந்துவிட்டுப் போனார்.

"ஸ்ரேச்சரில்" மைதிலி ஒப்பிரேசன் தியேட்டருக்குள் கொண்டு செல்லப்பட்டாள் நான் வெளியே வந்து அமர்ந்து கொண்டேன் காலடியோசை கேட்க நிமிர்ந்து பார்த்தேன்.

"இஞ்ச செல்லம்மா எண்டுறது…?"
"வழுக்கைத் தலையோடு "சென்ட்" மணம் கமகமக்க வந்தவன் விசாரித்தான்

"நான் தான்"

"நீங்களோ?! உங்களை "வார்ட்" முழுக்கத் தேடி அலுத்துப் போட்டுது"

"தம்பி ஆரெண்டு எனக்கு விளங்கேலை"

"அன்ரி நான் உங்கடை மகன் முகுந்தனோடை கனடாவில் இருக்கிறனான் இதை முகுந்தன் தந்து விட்டவன்"

"கையில் தயாராய் வைத்திருந்த கடிதத்தை தட்டினான் பிரித்தேன் படித்தேன்.

அம்மா,

இந்தக் கடிதத்தையும் சில விண்ணப்ப படிவங்களையும் நிமலனிட்டைக் குடுத்திருக்கிறன் நீங்கள் இதைப் படிச்சிப் போட்டு "போமில" கையெழுத்துப் போட்டுக் குடுங்கோ.

இப்படிக்கு
முகந்தன்

அவசரமாய் தந்திபோல் சிக்கனமான வார்த்தைகளோடு சம்பிரதாயமான "நலம், நலமா?" என்ற விசாரிப்புக் கூட இல்லாது மகன் எழுதிய கடிதத்தைப் படித்து விட்டு வந்திருந்தவனை நிமலனை நிமிர்ந்து பார்த்தேன்.

"இந்தாங்கோஅன்ரி "போம்" சைனை" வைச்சிட்டுத் தாங்கோ" சில விண்ணப்ப பத்திரங்களை என் முன் நீட்டினான்

"இதெல்லாம் என்ன தம்பி"
"அன்ரி தெரியாமத்தானோ கேக்கிறியள் இல்லாட்டி"

"ஓம் தம்பி எனகெண்டா ஒண்டும் விளங்கேலை எட்டு வரிசமா என்ர பிள்ளையளிட்டயிருந்து

காசைத் தவிர வேற ஒண்டுமே வாறேலை இப்ப கடிதம் “போம்” கையெழுத்து அது இதெண்டு ஒரே குழப்பமாய்க் கிடக்குது.

“அன்ரி உங்களைக் கனடாவுக்கு கூப்பிடுறதுக்குவிசா எடுக்கத்தான் இந்தப் “போம்”

“நான் வெளிநாடு போறதோ? என்ன தம்பி விசர்க் கதை கதைக்கிறாய்?” ஆச்சரியமாய்க் கேட்டேன்.

“ஆமன்ரி” பேரண்ட்ஸ்” இருந்தா கனடாவில் கன சலுகைகள் கிடைக்குது அவன்ர பிள்ளையளோட நீங்கள் சந்தோசமாய் கொஞ்சிக் குலாவலாமல்லோ”

மனம் இறக்கை கட்டிக் கொண்டு என் இஷ்டமில்லாது எங்கெல்லாமோ பறந்தோடியது எட்டு வருஷத்துக்குப் பிறகு என் பிரசவத்தில் பிறந்த குஞ்சுகளைப் பார்க்கப் போகின்ற சந்தோஷம் நெஞ்சுக் கூட்டுக்குள் கரை புரண்டது.

“அன்ரி எதுக்கும் நாளைக்கு நீங்கள் நான் சொல்ற “அட்ரசுக்கு” வந்தால் முகுந்தனோட வடிவாய்க் கதைக்கலாம்.”

முகுந்தன் இஞ்சதான் யாழ்ப்பாணத்தில் தான் இருக்கிறானோ? சீச்சி, அப்படியிருக்காது”

“தம்பி முகுந்தனோட கதைக்கிறதெண்டால் போனில் தானே?”

“இல்லையன்ரி முகுந்தன் “ஜப்னாவில்” தான் ரவுனில தான் இருக்கிறான் நானும் அவனும் ஒண்டாய்த் தான் வந்தனாங்கள் ரண்டு பேருக்கும் வாற அஞ்சாந் திகதி பிளைட்

பிள்ளையைப் பார்த்துவிட வேண்டுமென்று பெற்ற மனம் தவித்தாலும் சுய கௌரவம் அதைத் திரையிட்ட மறைத்தது.

“அப்ப அவனே வந்திருக்கலாம் தானே!”
“.......................................”

ஒன்றும் பேசாமல் எச்சிலை மென்று விழுங்கி என்ன பதில் சொல்லலாம்மென்ற நிமலன் ஒரு ஒத்திகை பார்த்துக் கொண்டிருப்பதை உணர முடிந்தது வீணாய் அவன் சங்கடப்படுவது எனக்குப் பிடிக்கவில்லை.

“சரி தம்பி! நீர் போட்டு வாரும் நாளைக்கு வரேக்க இந்தப் “போனையும்” கொண்டு வாறன்”

நிமலன் போய் விட்டான் அவன் போகும் திசையைப் பார்த்தபோது அந்தமரம் என் கண்ணிற்பட்டது கொஞ்ச நாளுக்கு முந்திப் பெய்த மழையால் வேரோடு ஒரு ஆலமரம் சாய்ந்திருந்தது அதன் விழுதுகள் அரைவாசியோடு முறிந்து ஆலமரத்தைக் கைவிட்டிருந்தன எனினும் அது கீழே விழவில்லை.

இன்னொரு சிறிய மரம் அதைத் தாங்கிக் கொண்டு நின்றது. "பேரன்ஸ்" இருந்தா கனடாவில் கன சலுகைகள் கிடைக்கும்.

"அவன்ர பிள்ளையளோட நீங்கள் கொஞ்சிக் குலாவலாமல்லோ"

"முகுந்தன் "ஜப்னாவில" ரவுனில தான் இருக்கிறான் நிமலனின் வார்த்தைகள் மனதில் நிழலாடின சுயநலம் சலுகைகள் கிடைக்குமெண்டதுக்காண்டியும் தானும் மனுசியும் வேலைக்குப் போகேக்க தன்ர பிள்ளையளைப் பிராக்காட்டுறதுக்காண்டியும் தான் என்னைக் கனடாவுக்குக் கூப்பிடுறான் பாசத்தில இல்லை"

"இஞ்ச பக்கத்திலிருந்து கொண்டே பெத்த தாயைப் பார்க்க வராமல் ஆளனுப்பி வரச் சொல்றான்"

மனதுள் முடிவொன்று பிறந்தது நிமலன் கொண்டுவந்த தந்த "போம்" கிழிக்கப்பட்டு நானூறு துண்டுகளாய் காற்றில் சிதறிப் போனது "பிளாஸ்கில்" சுடுதண்ணி எடுத்துக் கொண்டு மைதிலியை, என் வாழ்நாளெல்லாம் என் கூடவே இருக்கப் போகின்ற துணையை என் வயிற்றில் பிறக்காத மகளைப் பார்க்க ஒப்பிரேசன் தியேட்டரடிக்குச் செல்லத் தொடங்கினேன்.

தூரத்தே சிறிய மரத்தில் சாய்ந்தபடி வேரும் விழுதும் முறிந்திருந்த ஆலமரம் சுகமாய் தலையை அசைத்து மகிழ்ந்தது.



# அன்றும் இன்றும்



செல்வி.ர.தமிழ்நிலா
கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை,
முழங்காவில்

மல்லிகை வாசனை கமகமக்க
மங்கையர் உள்ளம் மன மகிழ
வண்ணச் சேலை உடுத்து
வந்தாள் மங்கை அன்று

தங்கையோ தம்பியோ என
சந்தேகம் தான் கொள்ள
தன் உடை மறந்து
தங்கையவள் வந்தாள் இன்று

ஐயகோ ஐயகோ கொடுமை
அழகான கலாசாரம்
அதை மறந்ததால் இன்று
அலங்கோலம் அலங்கோலம்

விஞ்ஞானத்தின் விந்தையென்று
விதவிதமாய் கலாசாரம்
வீட்டுக்குள்ளே வீண்வார்த்தை
நாடு படும் பாடு இன்று

கலைகள் எல்லாம் கருத்துடனே
கண்டு வந்தோம் அன்று
பரதமுனிவர் படைத்தாரே நடனக்கலை
பார்த்தாலே மனம் மகிழும் அன்று

அரைகுறை ஆடையிலே
ஆலமா டோலுமா இன்று
அர்த்தம்புரியவில்லை
ஆரிடத்தில் போயுரைப்போம்.

மனக் கண்ணில் இறைவனை
மகிழும் ஓவியனும்
வரைந்திடுவான் ஓவியத்தை
வருங்காலம் மகிழ்ந்திடவே - அன்று

ஆன்மீகம் அது சொல்லும்
அன்புடனே நாம் உயர
கலையெல்லாம் கடவுளையே
காணவழி தான் சொல்லும் அன்று

இன்று இந்த நிலை மாற
இதயம் நல்லது வேண்டும்
நல்ல உள்ளம் நாம் கொண்டு
கொள்ள இன்பம் சேர்த்திடுவோம்.

ஒன்று பட்டு ஒழுக்கமதாய்
ஒற்றுமையாய் தேசமதில்
சிறந்த மனிதர்களை
வெற்றி கொண்டு பெற்றிடுவோம் - இன்று

# தோற்றத்தில் உண்மையில்லை



திருமதி.கோ.டிசாந்தினி
குமுழமுனை,
பூநகரி.

தாய் எலி : சுண்டு சுண்டு.... எங்கையடா வெளிக்கிடுறாய்?

தந்தைஎலி : யார் வெளிக்குடுறது? சுண்டுவோ?

தாய் எலி : ஓய்

தந்தை எலி : இங்க பார் காலம் கெட்டுகிடக்குது பிள்ளையள கண்டபடி வெளியில திரிய விடாதை.

தாய் எலி : நானேன் விடுகிறன்?

தந்தை எலி : அதுகள் உனக்கும் சுத்திப் போடுங்கள் கவனம் நானொருக்கா வயற்பக்கம் போட்டு வாறன்.

தாய் எலி : சரி சரி போட்டு வாங்கோ (சுண்டெலியை துரத்தியபடி மற்ற இரு எலிகளும் ஓடிவருதல்)

சுண்டு எலி : அம்மா .... அம்மா .... என்னை காப்பாத்துங்கோ!

தாய் எலி : என்ன... தொடங்கிற்றியளா உங்கட பாரதப் போரை

சுண்டு எலி : நான் வெளிக்கிட்டா உவையளுக்கு என்ன எனக்கு அடிக்க வரியினம்

அக்கா எலி : அம்மா உவன் வெளியால போறானாம்

அண்ணா எலி : ஓமம்மா விளையாடவாம்!

தாய் எலி : நல்ல கதை! விளையாடுறது என்டால் இங்க அக்கா அண்ணாவோட விளையாடன்

சுண்டு எலி : என்ன அம்மா கொம்பியூட்டர் காலத்தில இருந்து கொண்டு பயப்படுறியளே

அண்ணா எலி : கொம்பியூட்டரோ ஏன் கடலைக் கொட்டையை எப்படி கொறிக்கிறது என்று பாடம் படிக்கவோ

அக்கா எலி : அதெல்லாம் மனிதரின் கதை

சுண்டு எலி : எடி ஞான சூனியமே கொம்பியூட்டர்லயும் நாங்கதான் அங்கயும் மௌஸ் தெரியுமோ!

தாய் எலி : கதைய விடு வெளியில போக வேண்டாம் சொல்றதக் கேள்

சுண்டு எலி : வெயில் கொடுமையம்மா மேனி வியர்க்கும் பைய உலாவிவர பரிந்து விடை தாருமம்மா

**காட்சி - 2**

இடம் : வெளி முற்றம் (மரம் இல்லை பூக்கன்றுகள்)

பாத்திரங்கள் : சுண்டு எலி வேறு எலிகள், 2 சேவல்கள் 2 கோழிகள், 3 குஞ்சுகள், வண்ணத்துப் பூச்சிகள், வண்டுகள், 2 பூனை

எலி : அப்பப்பா என்ன அழகான இடம்! பார்கவே ஆசையாகக் கிடக்குது! (பூனைகள் இரண்டும் ஒரு இடத்தில் பதுங்கி இருக்க ஏனையவை சந்தோசமாய் நடனமாடல்) பூனைகளும் சிறிதாக சேர்ந்து ஆடலாம்)

லல்லால லலலாலா லல்லால லலலாலா லல்லால லலலாலா லல்லால லலலாலா எங்களின் உலகமே புதிதாக மலரும் எமக்கிங்கு குறைகள் என்று ஏதும் இல்லையே உலகமதை எங்களது கைகளில் ஏந்தி என்றுமே ஆடுவோம்(ஆனந்த நடனம்) எல்லாமே புதிதாக இருக்கின்றதம்மா. எல்லாமே அழகாக தெரியுதம்மா அங்கே பார் பூக்களிலே வண்டுகளின் நடனம் இங்கே அடடா இது என்ன இயற்கையின் சிரிப்போ அம்மா.

ஆடுவோம் பாடுவோம் அழகாக சிரிப்போம் நாடுவோம் தேடுவோம் நாளெல்லாம் ஆடுவோம் நாம் எமக்கிங்கு எல்லாரும் நண்பர்கள் அம்மா இனி ஒரு கவலை எமக்குண்டோ அம்மா - 2 இங்கு

(பூனைகள் இரண்டும் முன்னால் வர ஏனையவை பின்னால் தள்ளி நிற்க பூனைகள் வருவதை சேவல் காணுதல்)

சேவல் : சுண்டு சுண்டு இங்கவா அங்கால போகாத

சுண்டு எலி : ஏன் கூப்பிடுறியள்? நான் அவசரமாக போக வேணும்

வண்ணத்துப் பூச்சி : சுண்டு சுண்டு உனக்கு உலகம் தெரியாது கன நேரம் இங்க நிக்காத

கோழிக்குஞ்சு 1 : ஓய் ஓய் கெதில வீட்ட போ

சுண்டு எலி : என்ன நீங்கள் எல்லோரும் என்னை துரத்தி போட்டு என்ன செய்யபோறீங்க?

சேவல் : உன்ன துரத்தேல்ல இங்க நீக்கிறது உனக்கு ஆபத்து சுண்டு

சுண்டு எலி : எனக்கு ஒரு ஆபத்தும் இல்லை விடுங்கோ (சுண்டெலி ஓடி முன்னால் வருதல்)

சுண்டு எலி : அப்பா! அங்க பாரன் என்ன அழகான உருவங்கள்! அடடா பஞ்சுப் பொட்டி மாதிரி தொட்டுப்பாக்க வேணும் போல ஆசையா கிடக்கு! (பூனைகள் முன்னால் எலியின் பக்கமாகி வருதல்)

பூனை 1 : சுண்டு இங்க வா ராசா!

பூனை 2 : என்ன நல்ல பிள்ளை நீ என்ன வடிவாய் இருக்கிறாய்

வண்டு : பறந்து ஓடிவந்து கூறிவிட்டு ஓடுதல் வேண்டாம் சுண்டு உடனே ஓடிப்போ! ஆபத்து!

பூனை 1 : அதுகளுக்கு உன்னில பெறாமை சுண்டு அதுதான் துரத்துதுகள்.

பூனை 2 : நீ வடி வெண்டு

எலி : அப்பிடியே நான் வடிவே

பூனை : வேற என்ன

சுண்டெலி : இல்லை நீங்கள் என்ன வடிவு பஞ்சுப் பெட்டி மாதிரி இருக்கிறிங்கள்

பூனை : அப்படியே!

பூனை : தொட்டுப்பார்க்க ஆசையாய் இருக்குதே!

சுண்டெலி : ஓ! உண்மைதான்

பூனை : பின்ன ஏன் அங்கயே நிக்கிறாய் இங்க பக்கத்தில வாவன்

சுண்டெலி : இருங்கோ வாரன் (இந்த வேளையில் சேவல்கள் இரண்டும் ஓடி வருதல்)

சேவல் : போச்சு போச்சு எல்லாம் போச்சு ஓடு ஓடு நிக்காத ஓடு சுண்டு ஓடு

## காட்சி - 3

இடம் : வீடு

பாத்திரங்கள் : தாய், அக்கா, அண்ணா சுண்டு (சுண்டெலி அலறி அடித்து ஓடிவருதல்)

சுண்டெலி : ஐயோ அம்மா அம்மா! ஐயோ

தாய் எலி : என்னடா என்னப்பு நடந்தது.

சுண்டு : அம்மா... அம்மா... அங்க அங்க

அண்ணா எலி : அப்பா கடவுளே கொம்பியூட்டர் மௌஸ் பயப்படுமே!

அக்கா எலி : அதானே!

தாய் எலி : அய்யா இருங்கோ அவளே பயந்து போய் இருக்கிறாள் என்னப்பு நடந்தது.

சுண்டு எலி : அம்மா... அங்க... பஞ்சுப் பொட்டி மாதிரி அடிக்கிர ரெண்டு பேர் இருந்திச்சினம் என்னில அவைக்கு சரியான நேசம். அவை என்னை கிட்டவா கதைப்பம் என சொன்ன நேரம் தாய் எலி : சொல்லேக்க என்ன நடந்தது.

சுண்டு எலி : அப்பா முகத்தில ரெண்டு கத்தி வைச்சுக் கொண்டு தலையில் பெரிய சிவந்த கொண்டயும் போர் வீரனைப் போல இருந்த ரெண்டு பேர் என்னை பயமுறுத்தி ஐயோ அம்மா!

தாய் எலி : எனக்கு விளங்குது கடவுள் தான் காப்பாற்றின

சுண்டு எலி : என்னம்மா சொல்லுறியள்

தாய் எலி : அந்த பஞ்சுப் பொட்டி போல இருந்தது பூனை. அது சுண்டுவ பிடிக்கப் போயிருந்தது அந்த நேரத்தில் சேவல் அண்ணா தாய் காப்பாற்றி இருக்கிறார்.

சுண்டு எலி : என்னை பிடிக்கவோ சாப்பிடவோ அவை நல்ல வடிவு

தாய் எலி : வடிவில என்ன இருக்கு? பாத்தியே அம்மா சொன்னதை கேட்காமல் போனதால் வந்த விளைவ


சுண்டு எலி : ஓய் அம்மா

தாய் எலி : பாக்க பயங்கரமாக இருந்தாலும் சேவல் தான் உன்ன காப்பாற்றியது.

அக்கா எலி : அது தான் சொல்லுறது தாய் சொல்லை தட்டாதே எண்டு

சுண்டெலி : உண்மைதான் நீங்கள் சொல்வது. நான் இனி மேலும் அம்மாவின் சொல்லை தட்ட மாட்டேன்.

எல்லோரும் : தந்தன தந்தன தந்தன தந்தன தந்தன தந்தன தந்தன தானேனான பரந்து விரிந்து உலகிலே பணிகள் செய்து வாழ்திடுவோம் - 2 பலருக்கும் பயனளிக்கும். பகலவனாய் மாறிடுவோம் ஓராயிரம் வார்த்தையால் நன்றிகள் கூறிடுவோம் - 2



# ஆரோக்கியமான சமூகத்திற்காக..!



வீட்டில் இருத்தல்



சந்திப்புக்களை தவிர்த்தல்



முகக்கவசம் அணிந்திருத்தல்




சமூக இடைவெளியை பேணுதல்



சுகாதார பழக்கவழக்கங்களை பேணல்



சுத்திகரிப்பு திரவங்களை பயன்படுத்தல்



அடிக்கடி கைகளை கழுவுதல்

ISBN 9 786245 308002

Print By : Sri Maruthi Printers 0777917680